
முத்துலட்சுமி ராகவன்
ஆரண்யம் அழகானது...
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ ஆரண்யம் அழகானது... ★ முத்துலட்சுமி ராகவன்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்


முத்துலட்சுமி ராகவன்
ஆரண்யம் அழகானது...
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ ஆரண்யம் அழகானது... ★ முத்துலட்சுமி ராகவன்

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய 'ஆரண்யம் அழகானது...'

# 1

வனத்தில் தொலைந்திட
விரும்பியே வந்தேன்..

ப்ரீதிக்கு உற்சாகமாக இருந்தது.. இறக்கைகள் இருந்திருந்தால் வானில் சிறகடித்துப் பறந்திருப்பாள்.. எத்தனை நாளைய கனவு இது.. நாள்கள் என்பதை விட வருடங்கள் என்று சொல்லலாம்.. விசாகா அத்தை பூனாவை விட்டுக் கிளம்பிய போது தானும் அவளுடன் கிளம்ப வேண்டும் என்று கை கால்களை உதைத்துத் தரையில் புரண்டு அழுதாளே.. அன்று ஆரம்பித்த அடம் இது.. அப்போது அவளுக்கு எட்டு வயது.. அவள் பிறந்ததிலிருந்து அவளுடன் இருந்த விசாகா அத்தை அவளைப் பிரிந்து தன் கணவருடன் கிளம்பி விட்டாள்..

"நானும் அத்தையுடன் போவேன்.."

ப்ரீதி உதட்டைப் பிதுக்கித் தரையில் உருண்டு புரண்டு அழுது ஆகாத்தியம் செய்தாள்.. இறுக்கமான முகத்துடன் இருந்த அவளது அப்பா கங்காதரன் மகளின் முதுகில் ஒரு போடு போட்டு..

"வாயை மூடு.." என்று அதட்டினார்..

"யார் மேலேயோ இருக்கிற கோபத்தை குழந்தை மேல காட்டறிங்களே.." ப்ரீதியின் தாய் பார்கவி பதறிப் போனவளாக ப்ரீதியை தன் பக்கம் இழுத்துக் கொண்டதினால் ப்ரீதி தப்பித்தாள்.. இல்லையென்றால் அன்று கங்காதரன் இருந்த கோபத்திற்கு ப்ரீதி ஒரு வழியாகியிருப்பாள்..

"உன் அத்தையே உரிமையில்லாத இடத்தில் வாழப் போகிறாள்.. இதில் நீயும் கூடப் போகிறாயா..? அங்கே ஆரத்தி எடுத்து.. 'வா'ன்னு சொல்ல யாரிருக்காங்கன்னு நினைத்த..?"

விசாகா தமையனுக்கும் குறையாத இறுக்கத்துடன் நின்றாள்.. ஒரேயொரு வித்தியாசம்தான்.. கங்காதரனின் கண்களில் கோபம் மண்டியிருந்தது.. விசாகாவின் விழிகளில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது..

"போகலாமா விசாகா..?" மாறனின் அழைப்பில் கங்காதரன் வெடித்தார்..

"எந்த தைரியத்தில் கூப்பிடறிங்க மாறன்..? நீங்க உழைத்து சம்பாதித்து வைத்திருக்கும் சொத்துக்களை என் தங்கையின் பெயருக்கு எழுதி வைக்கப் போகிறதாய் சொல்லிக் கூப்பிடறிங்களா..? இல்லை நீங்கள் கட்டி வைத்திருக்கும் அரண்மனையில் என் தங்கையை ஊஞ்சலாட வைக்கக் கூப்பிடறிங்களா..?"

"அது உங்களுக்குத் தேவையில்லாதது அண்ணா.."

கணவருக்குப் பதில் விசாகா பேசினாள்.. மாறன் மைத்துனரின் முகம் பார்க்கவில்லை.. துயரம் பூசியிருந்த அவரது முகத்தைப் பார்க்க ப்ரீதிக்குப் பாவமாக இருந்தது.. அன்பான மாமா.. அப்பா ஏன் மாமாவைக் கண்டாலே துப்பாக்கியைத் தூக்கிச் சுட்டுப் பொசுக்கி விடத் துடிக்கிறார்..?

"இவரை நான்தான் காதலித்தேன்.. என் காதலை கௌரவித்துக் கல்யாணமும் செய்து கொண்டார்.. எதைக் கேட்பதாக இருந்தாலும் என்னிடம் கேளுங்கள்.."

கணவருக்காக வரிந்து கட்டிக் கொண்டு பரிந்து வந்த தங்கையை இமைக்காமல் பார்த்தார் கங்காதரன்.. அவரது உதடுகள் துடித்தன.. தமையனின் மௌனப் பார்வையைத் தாங்க முடியாமல் மௌனக் கண்ணீர் வடித்தாள் விசாகா..

"இன்னும் எத்தனை நாளைக்குத்தான் உன் கணவனின் துரோகத்தைத் தாங்கிப் பிடித்துப் பரிந்துக்கிட்டு இருப்பாய் விசாகா.."

"என் உயிர் இருக்கிற வரைக்கும் அண்ணா.."

விசாகா கணவரைப் பின் தொடர்ந்து போய் விட்டாள்.. அவளுடன் அவளுடைய மகனும் மகளும் சென்று விட்டதில் ப்ரீதியும் அவளது அண்ணன் பிரசாத்தும் ஏகத்துக்கும்

வருத்தப் பட்டார்கள்.. அவர்களுடன் சேர்ந்து விளையாடிய நண்பர்கள் பிரிந்து சென்று விட்டார்களே..

கணவரின் பின்னால் சென்று விட்ட விசாகா பூனாவுக்குத் திரும்பாமல் இல்லை.. வருடாவருடம் பிள்ளைகளின் விடுமுறை தினங்களுக்கு பூனாவுக்கு வந்து செல்வாள்.. ஆதவனும், ஆர்த்தியும்.. ப்ரீதி, பிரசாத்துடன் அரட்டையடிப்பார்கள்.. சேர்ந்து விளையாடுவார்கள்.. பிரசாத் ப்ரீதியை விட நான்கு வயது பெரியவன்.. விசாகாவின் மகன் ஆதவனை விட இரண்டு வயது சிறியவன்.. ஆர்த்தி ப்ரீதியின் வயதுதான்.. ஆதவன் ப்ரீதியை விட ஆறுவயது பெரியவன்.. கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாவே ஆதவன் ப்ரீதியிடம் பழகும் விதத்திலும், பார்க்கும் பார்வையிலும் வித்தியாசம் தெரிய ஆரம்பித்திருக்கிறது.. கண்களில் மின்னலுடன் ஆர்வமாகப் பார்க்கிறான்.. அதை பிரசாத்திடம் உணர்ந்த ஆர்த்தி, ப்ரீதியிடம்.

"ஏய்... உன் அண்ணன் என்னை சைட் அடிக்கிறாண்டி.." என்று இமை சிமிட்டிச் சொல்லிச் சிரித்தாள்..

உன் அண்ணன் மட்டும் என்ன.. அவனும்தான் என்னை சைட் அடிக்கிறான் என்று ப்ரீதி சொல்லவில்லை.. அது ஏனென்றும் தெரியவில்லை.. ஆதவனுக்கு அவள்மீது ஈர்ப்பு இருக்கிறது.. அவளுக்கு..? அவன்மீது பாசமிருப்பது நிச்சயமாகத் தெரியும்.. ஈர்ப்பு..? அது தெரியவில்லையே..

அதற்காகத்தான் கங்காதரன் மகளை விசாகாவின் ஊருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.. இல்லையென்றால் அத்தனை வருடங்களாக விசாகா கெஞ்சியும் பிள்ளைகளை தங்கையின் ஊருக்குச் செல்ல அனுமதிக்காதவர் இப்போது 'போய் வா' என்று அனுப்பி வைப்பாரா என்ன..?

"ஆதவன் காட்டுப்பகுதியில் இருக்க விரும்பவில்லை.. ஃபாரின் போய் படித்திருக்கிறான்.. பூனாவில் ஐ.டி கம்பெனி ஆரம்பிக்கும் பிளானில் இருக்கிறான்.. பிரசாத்தும் ஆர்த்தியும் விரும்புகிறதைப் போல இருக்கிறது.. நீ ஓகேன்னு சொன்னா இரண்டு

கல்யாணத்தையும் ஒரே மேடையில் பண்ணி வைத்து விடுவேன் ப்ரீதி.. என் கண் முன்னால் நீயிருப்பாய்.. என் தங்கையைத்தான் தடுத்து நிறுத்த முடியவில்லை.. தங்கையின் பிள்ளைகளை என்னிடம் இழுத்துக் கொண்டு விட்ட மனநிம்மதி எனக்குக் கிடைக்கும் மகளே.. உன் அப்பாவுக்காக உன் அத்தை மகனை கல்யாணம் பண்ணிக் கொள் ப்ரீதி.."

கங்காதரன் மகளை அழைத்துப் பேசிய போது ப்ரீதி கலவரமடைந்தாள்.. அதற்கென்னப்பா.. உங்கள் மனம் போல ஆகட்டும் என்று ஏன் அவளால் சொல்ல முடியவில்லை..?

"எனக்கு இப்போதைக்கு மேரேஜ் வேண்டாம்ப்பா.." என்று ஏன் அவள் மறுத்தாள்..?

தெரியவில்லை.. அவளுக்கே அது தெரியவில்லை.. அவள் மனம் ஆதவனை விரும்புகிறதா இல்லையா என்று அவளால் கண்டுணர முடியவில்லை.. எவ்வளவு யோசித்தாலும் ஆதவனின் மீது அவளுக்கு நேசம் வந்து தொலைக்கவில்லை.. பாசம்தான் வந்து தொலைத்தது..

"பிரசாத் ஆர்த்தியை விரும்புகிறான்ம்மா.."

"அண்ணன் மேரேஜை டிலே பண்ணாம நடத்தி வைத்து விடுங்கப்பா.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்சன்.."

"ஆதவனும் உன்னை விரும்புகிறானே ப்ரீதி.."

'அதுதான் எனக்குத் தெரியுமே..'

ப்ரீதி சங்கடமடைந்தாள்.. ஆதவனின் மீது அவளுக்கு எந்தவிதமான ஈர்ப்பும் ஏற்படவில்லையே.. என்ன செய்வாள்..?

"அப்பா.. அத்தானின் மீது எனக்கு எந்த விதமான அட்ராக்சனும் ஏற்படலையே அப்பா.." ப்ரீதி சொல்லி விட்டாள்..

கங்காதரனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.. மகளிடம் கோபம் கொள்ளவும் முடியவில்லை.. மனதிலிருப்பதை மறைக்காமல் சொல்லி விட்ட மகளின் மீது அவர் மனதில் பாராட்டுதல் வந்தது..

'என் வளர்ப்பு..' என்று பெருமிதம் கொண்டார்..

ஆனால் ஆதவன்..? அவன் மீதான அவரது அக்கறை.. பரிவு... பாசம்... இவற்றையும் நினைத்துப் பார்க்க வேண்டுமல்லவா..? அவரது உயிருக்குயிரான தங்கை விசாகா பெற்ற மகன் அவன்.. காட்டுப் பகுதியில் பொருந்தி வாழ அவனால் முடியாது.. பூனாவில் பிறந்து வளர்ந்தவன் அவன்... பதினைந்து வயதில் தாயைத் தொடர்ந்து சென்றாலும் அவனது மனம் முழுவதும் பூனாவில்தான் இருந்தது என்பதை கங்காதரன் அறிவார்..

"காடு மாமா அது.. இங்கே விடிய விடிய கலகலன்னு இருக்குமில்ல.. அங்கே அப்படியில்ல மாமா.. ஈவினிங் மூன்று மணிக்கெல்லாம் இருட்டிரும்.. ஆறு மணிக்கெல்லாம் அவங்கவங்க வீட்டில் அடைந்துக்கிறாங்க.." என்று புலம்பிக் கொண்டே இருப்பான்..

எந்தக் காரணத்தினால் கங்காதரன் கணவரைப் பின் தொடர்ந்து தங்கை போவதை ஆட்சேபித்தாரோ.. அதே காரணத்தினால் ஆதவனும் அந்த ஊரை வெறுத்தான்.. பிளஸ் ஒன், பிளஸ் டூ படிப்பிற்கு ஊட்டி கான்வென்டில் ஹாஸ்டல்.. கல்லூரிப் படிப்புக்கு சென்னை.. ஹாஸ்டல் வாசம்.. எம்.பி.ஏ படிப்பிற்கு வெளிநாடு என்று ஊர் தங்காமல் பறந்து கொண்டிருந்தான்.. பணத்திற்கு குறைவில்லை.. அவன் கேட்டது கிடைத்தது.. பூனாவில் ஐ.டி கம்பெனி ஆரம்பிக்கவும் பணம் கிடைத்து விடும்.. கோடிக் கணக்கில் அள்ளிக் கொடுத்து விடுவார்கள்.. அப்படியே ஒதுங்கிக் கொள்ளலாம் என்பது அவன் எண்ணம்..

ஆர்த்தியின் மனதில் என்ன இருக்கிறது என்று கங்காதரனுக்குத் தெரியவில்லை.. எது இருந்தால் என்ன என்பது கங்காதரனின் எண்ணம்.. பிரசாத்தும் ஆர்த்தியும் ஒருவரையொருவர் விரும்புகிறார்கள்.. அது போதும் அவருக்கு..

"ரொம்ப நாள்களாக நீ அத்தையின் ஊருக்குப் போக வேண்டுமென்று ஆசைப்பட்டாய்.. இப்போது போய் வா.. ஆதவனும் அங்கேதான் இருக்கிறான்.. ஐ.டி கம்பெனி

ஆரம்பிக்க அத்தையின் குடும்பத்தில் பெர்மிசன் வாங்கனுமே.. ஆதவனுடன் பேசிப் பழகு.. பதினைந்து வயது வரை நம் வீட்டில் உன்னுடன் வளர்ந்தவன்.. அந்த நினைவில் நீ தயங்குகிறாய்ன்னு நினைக்கிறேன்.. இப்ப இருக்கும் ஆதவனே வேறு.. விசாகா வரும் போது ஆர்த்திதான் கூட வருவாள்.. ஆதவன் அடிக்கடி வந்து போனதில்லை.. அத்தை மகன் என்பதினால் அவனுடைய அருமை உனக்குத் தெரியவில்லை.. அவனிருக்கும் ஊருக்குப் போய்ப் பார்.. நிச்சயம் உனக்கு அவனைப் பிடிக்கும்.." நம்பிக்கையுடன் சொன்னார்..

"இப்போதும் அத்தானை எனக்குப் பிடித்திருக்கிறதே அப்பா.. அவரை நான் வெறுக்கவில்லையே.."

"இந்தப் பிடித்தம் வேறு ப்ரீதி.. அவனைக் கல்யாணம் பண்ணிக்க உனக்குப் பிடிக்கனுமே.."

ப்ரீதி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. சுற்றிச் சுற்றி பேச்சு ஆதவனை அவள் மணக்க வேண்டும் என்று முடிவதில் அவளுக்கு என்னவோ போல இருந்தது.. நிர்பந்தம் இல்லாத பந்தத்தைத்தான் மனம் ஏற்கும்.. இதை அவளது தந்தையிடம் யார் சொல்வது..?

எது எப்படியோ.. அவளுக்கு அவளுடைய அத்தை இருக்கும் வால்பாறைக்குப் போக அனுமதி கிடைத்து விட்டது.. அதுவரை மகளை அவர் தனித்து அனுப்பி வைத்ததில்லை.. இப்போது வேறு வழியில்லை.. கங்காதரன் விசாகா இருக்கும் ஊருக்கு வர விரும்பவில்லை..

"கோயம்பத்தூருக்குப் பிளைட் டிக்கெட் புக் பண்ணியாச்சு.. ஏரோடிராமில் உன்னை அழைத்துக் கொண்டு போக விசாகா காருடன் வந்து விடுவதாக சொல்லியிருக்கிறா.. தனியாக டிராவல் பண்ணப் போற.. பத்திரம்.."

ஆயிரம் முறை மகளை எச்சரித்து அனுப்பி வைத்தார்.. பார்கவிக்கு மகளுடன் போக ஆசைதான்.. கங்காதரன் விட வேண்டுமே..

"உன் அப்பாவுடன் யார் பானிபட் யுத்தம் பண்ணுவது..? என்றைக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்தாங்களோ.. அன்றைக்கு என் அடிமை வாழ்க்கை ஆரம்பிச்சாச்சு..

ஆசைப்பட்ட ஊருக்குப் போக முடியுதா..? எப்படியோ.. விசாகா மகனைக் கல்யாணம் பண்ணிக்க

நீ சம்மதிக்கனும் என்கிறதினால உனக்கு பர்மிசன் கிடைச்சிருக்கு.. காட்டுப் பக்கம் தன்னந்தனியாப் போய் மாட்டிக்காதே.. ஆர்த்தியுடன் சேர்ந்து போ.."

தாயின் கவலையோடு சொன்னாள் பார்கவி.. தாய்மையின் மனது நுணுக்கமானது.. பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு நேரப் போகும் சின்னஞ்சிறு நிகழ்வையும் அது அறிந்து விடும்..

ப்ரீதி போகப் போகும் காடு எப்படிப்பட்டது.. அங்கே அவள் எப்படியெல்லாம் போராடப் போகிறாள் என்பதை அந்தத் தாயின் மனம் உணர்ந்து சொன்ன சொற்களா அவை..?

ப்ரீதி பூனாவிலிருந்து விமானத்தில் கிளம்பி கோவை வந்து இறங்கி விட்டாள்.. அவளுக்காக கார் காத்திருந்தது.. அழைக்க வந்தது விசாகா இல்லை.. ஆதவன்..

'இவனா..?'

மனதில் சலிப்பை மறைத்துக் கொண்டு புன்னகைத்தாள் ப்ரீதி.. "வாட் எ சேன்ஜ்..! நான் பார்த்து வளர்ந்த ப்ரீதியா நீ..?"

ஆதவனின் பார்வை அவளது அங்கம் முழுவதும் ஊர்ந்ததில் அருவெறுப்புத்தான் வந்து தொலைத்தது..

'இப்போது இருக்கும் ஆதவனே வேறு..'

கங்காதரனின் குரல் அவளது காதுகளில் ஒலித்தது.. அவன் வெளிநாடு போய் வந்ததில் மாறிப் போயிருக்கிறானாம்.. பெண்கள் வட்டமிடும் கட்டழகனாம்..

ஆதவன் கட்டழகனாகத்தான் இருந்தான்.. ப்ரீதியின் மனம் கவர்ந்த கட்டழகனாக அவன் இல்லை.. அவனது விழிகள் மேய்ந்த மேய்ச்சலில் அவள் உடல் கூசிப் போனாள்.. அவனது பார்வை பெண்களின் மீதான அவனது மோகத்தையும் முன் அனுபவங்களையும் பட்டவர்த்தனமாக அறிவித்தது..

'உண்மைதான் அப்பா.. இப்போது இருக்கும் ஆதவன் அத்தான் வேறுதான்.. சின்னஞ்சிறு வயதில் நான் பார்த்த

அத்தானாக இல்லை..'

காரின் முன்சீட்டில் அவனருகில் அமர்வதைத் தவிர்த்து அவள் பின்சீட்டில் ஏறியபோது அவனது முகம் மாறிவிட்டது..

"நானென்ன உனக்கு டிரைவரா..?" காட்டத்துடன் கேட்டான்..

"லாங் ஜர்னி அத்தான்.. அசதியாக இருக்கிறது.. பின் சீட்டுன்னா எனக்கு சாய்ந்து கால்களை நீட்டிக்க கன்வினியண்டா இருக்கும்.."

வாய்க்கு வந்ததைச் சொல்லித் தப்பித்தாள் ப்ரீதி..

# 2

**நான் யமுனையின் கரையினில் பிறந்தவள்..**
**ஆரண்யத்தின் அதிபதியே..!**
**எனது காத்திருத்தல் உனக்கானதா..?**

"40 கொண்டை ஊசி வளைவுகள்.. 50க்கும் மேல் சிறு வளைவுகள்.. மனிதன் கார் ஓட்டுவானா இந்தக் காட்டுப் பாதையில்..?" வெறுப்புடன் சொன்னான் ஆதவன்..

அவன் அலுத்துக் கொண்டதைப் போல அந்த மலைப்பாதை இல்லை.. ப்ரீதிக்கு அது 'பூலோக சொர்க்கம்..' போல கண் முன் விரிந்தது..

யாருமற்ற வனாந்தரம் அச்சுறுத்தும் என்று யார் சொன்னது..? யாருமற்ற புல்வெளிகளும் அருவிகளும் வனத்துக்குள் வா என்று ப்ரீதியை அழைப்பதைப் போல இருந்தது.. பரபரப்பான நகர வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட ப்ரீதி சொக்கிப் போனாள்.. யாருமற்ற புல்வெளியாக..

மரங்கள் அடர்ந்த அற்புத ஆரண்யம் மலைச் சரிவில் ஆத்மார்த்தமாக அவளை வரவேற்றது.. மலையை வெட்டிப் போடப்பட்டிருந்த சாலைகளில் கார் வளைந்து வளைந்து மேலே ஏறியபோது ப்ரீதியின் கண்கள் மின்னின..

காடு அவளைக் கவர்ந்தது.. எங்கு பார்த்தாலும் காபித் தோட்டம்.. தேயிலைப் பாத்திகள்.. பச்சைப் பசேலென மனம் முழுவதும் புத்துணர்ச்சியை நிரப்பும் பூலோக சொர்க்கம்..

பனித்துளிகள் சில்லிட புலிகளும், யானைகளும் பளிங்கு பாறைகளும்.. இருந்த வனத்தில் கொட்டும் அருவிகளும்... துள்ளியோடும் நதிகளும்.. ஓடைகளும்.. நீல நிற ரிப்பன்கள் போல பச்சைக் கம்பளம் விரித்ததைப் போல கானகத்தின் ஊடே தெரிந்ததில்..

"ஆஹா.." என்று மகிழ்ந்து போனாள் ப்ரீதி..

"புதிதா வர்றவங்க ஆஹான்னுதான் சொல்லுவாங்க.. முதன் முதல் பார்க்கும் மயக்கம் அது.. இருந்து பார்த்தாத் தெரியும்.. இது எவ்வளவு இம்சைன்னு.." கடினமான குரலில் சொன்னான் ஆதவன்..

'ஆஹான்னு ஒரு வார்த்தைதானேடா சொன்னேன்.. அதுக்கு ஏண்டா சண்டைக்கு வர்ற..' ப்ரீதியின் உற்சாகம் வடிந்து விட்டது..

ஆதவனின் கோபம் எதன்மீது..? ஊர் மீதா..? இல்லை அவன் பக்கத்தில் அவள் உட்கார மறுத்து விட்டாள் என்பதற்காக அவள் மீதா..?

மலைப் பாதையிலிருந்து பார்க்கும் போது வானமும் பூமியும் தொட்டுக் கொண்டதைப் போல இருந்தது.. அற்புத வானம் மேலே தெரிந்தது.. அது முத்தமிட்ட பசும்புல்வெளி தொடுவானாய் விரிந்தது.. ப்ரீதியை ஆகர்ஷித்த அற்புத வனம் பக்கவாட்டில் பிரிந்தது..

"காட்டுக்குள் போய் பார்க்கலாமா..?" ஆவலை அடக்க முடியாமல் கேட்டு விட்டாள்..

"என்னது..???" அவள் கேட்கக் கூடாத ஒன்றைக் கேட்டு விட்டதைப் போல ஆதவன் முகம் சுளித்தான்.

"ஸாரி அத்தான்.. காபித் தோட்டமும், தேயிலைத் தோட்டங்களும் நிறைய இருக்கா.. பார்க்க ஆசையா இருக்கு.." தவறு செய்து விட்டவளைப் போல அவள் விளக்கம் சொன்னாள்..

அவள் தணிந்து பேசியதில் அவனது கர்வம் செருக்குக் கொண்டது.. போனால் போகிறது என்று மன்னிப்பைத் தந்தருளினான்..

மழை பெய்து கொண்டிருந்தது.. எப்போதும் மழை பொழியும் இடமென்று விசாகா சொல்லியிருந்ததினால் அது பற்றி ஆதவனிடம் அவள் கேட்கவில்லை... குதூகலத்தையும் அடக்கிக் கொண்டாள்.. இயற்கையை ரசிக்கத் தெரியாதவனிடம் அதன் அழகைப் பற்றிக் கேட்பதைப் போல அபத்தம் வேறு ஒன்றுமில்லை..

தேயிலைச் செடிகளின் பசுமை அவளை மயக்கியது.. பெய்யும் மழையெல்லாம் பச்சயம் செய்யும் மாயத்தை அங்கு அவள் கண்டாள்.. மலையும் மலை சார்ந்த வாழ்வும் இறைவன் கொடுத்த வரமென்று அவளுக்குத் தோன்றியது.. அப்பேற்பட்ட வரம் கிடைக்கப் பெற்ற பாக்கியசாலி ஆதவன்.. அந்த வாழ்வை வெறுக்கிறான்..

'கழுதைக்குத் தெரியுமா.. கானகத்தின் அழகு..?'

அவள் மனதில் நினைத்த நினைவை மட்டும் ஆதவனும் அவளைப் பெற்ற தந்தையும் தெரிந்து கொண்டால் என்னவெல்லாம் ஆகும் என்று நினைவுப் பறவை சிறகை விரிக்க யத்தனித்தது.. வேண்டாம் என்று மறுத்து விரட்டி விட்டாள்..

ஆரண்யத்தின் அழகை அள்ளிப் பருகும் அப்போதைய பரவச நிலையை அவளால் கட்டுப் படுத்திக் கொள்ள முடியவில்லை.. அள்ளிப் பருகி விடும் துடிப்போடு சுற்றிலும் தெரிந்த இயற்கையின் அழகை ஆவலுடன் பார்த்தாள்.. பார்க்கப் பார்க்க பரவச நிலைக்குள் மூழ்கும் இன்பத் தினறல்.. வேகமாக ஊஞ்சலில் ஆடுவதைப் போன்றதொரு அற்புத நிலை..

எத்தனை விதமான மரங்கள்.. பூக்கள்.. விலங்குகள்.. ஓடைகள்.. அருவிகள்.. என்று சொர்க்கத்தின் நுழை வாயிலைப் போலவே இருந்தது.. குறுக்குப் பாதைகளும், குதிரைப் பாதைகளும் பக்கவாட்டில் பிரிந்து ஓடியதைப் பார்க்கத் திகில் படம் போலவே இருந்தது.. அவள் பக்கம் அடிக்கடி திரும்பி முறைத்த ஆதவனைப் பார்க்க நேரும் போதெல்லாம் திகில் அதிகமானது..

வாகன இரைச்சல்கள் இல்லாமல் மாசில்லாத குளிர்காற்று.. சுத்தமான தேங்காய் தண்ணீரின் சுவை

கொண்ட நீர்.. என்று மலைவாழ் மக்களுக்கான இயற்கையின் கொடைகளைப் பற்றி ஆதவன் என்றேனும் நினைத்துப் பார்த்திருப்பானா..?

அவள் ஏன் அதை நினைத்துப் பார்க்க வேண்டும்.. பெரிய இவன் போல அவன் பேசுவதை வாங்கிக் கட்டிக் கொள்வதற்கா..?

இதுபோன்ற ஆரண்யத்தில் ஓர் அங்கமானால் தொடுவானம் என்பது தொட்டு விடும் தூரம்தான்.. அதைப் புரிந்து கொள்ளாத ஞான சூன்யத்திடம் மனதின் உணர்வுகளை பகிர்ந்து கொள்வது வெகு சிரமம்.. அதோ.. அந்த மேட்டுக்குப் பின்னால் ஏதோ புலியொன்று பதுங்கி நிற்பதைப் போன்ற பிரமை உண்டாகிறதே.. இதுதான் வனம் தரும் உணர்வா..? ஒவ்வொரு திருப்பத்திலும் உடல் முழுவதும் குளிர் பரவும் இதம்தான் வனம் தரும் உணர்வா..? சொப்பனக் காவியமாய் கண்ணெதிரே விரியும் ஆரண்யத்தின் அழகு அவளை அடிமை கொள்கிறதே.. இந்த மயக்கம்தான் வனம் தரும் உணர்வா..? வரமென வந்ததைப் போல வனத்தை துதிக்கிறாளே.. ஏன்..? இதுவும் வனம் தரும் உணர்வா..?

எதுவென்று தெரியாத இனம் புரியாத மயக்கம் அவளை ஆட்கொண்டது.. ஆரண்யத்தில் காத்திருப்பது யார்..? அவளது கந்தவர்னா..? இந்தக் கேள்வி அவள் மனதில் எழுந்தது விந்தையிலும் விந்தைதான்.. யாரைப் பார்த்து அவள் பேசிப் பழக வேண்டும் என்று அனுப்பி வைக்கப் பட்டாளோ அந்த ஆதவன் காருக்குள் இருக்கிறான்.. அவனன்றி எவரை அவள் தேடி வந்திருக்கிறாள்..?

ப்ரீதி வனத்தைப் பார்த்தாள்.. அந்தக் காட்டில் பறக்கும் பட்டாம்பூச்சியாக மாற ஏனோ அவள் மனம் விழைந்தது.. சரிவில் இறங்கினால் காடு.. எங்கே.. வில்லாதி வில்லனாக அவளது அத்தை மகன் காருக்குள் உட்கார்ந்திருக்கிறானே.. என்னடா.. பூனாவில் இருந்து மாமன்மகள் விருந்தாளியாய் வந்திருக்கிறாள்.. அவளுக்குக் காட்டைச் சுற்றிக் காட்டுவோம் என்று நினைக்கிறானா..? அதை விட்டுவிட்டு இங்கே மனிதன் இருப்பானா என்று புலம்பித் தள்ளுகிறான்..

'இவன் இருக்க மாட்டான்னு வேணும்னா சொல்லலாம்..'

ப்ரீதியின் மனது பொங்கிய பொங்கல் வேலை செய்து விட்டதோ என்னவோ.. சம தரையில் ஓட ஆரம்பித்த கார் சட்டென நின்று விட்டது..

"என்ன ஆச்சு..?"

"தெரியலை.. இப்பத்தான் வாங்கிய புதுக்கார்.. ஜெர்மன் கம்பெனி.."

தேவையில்லாத விளக்கம் சொன்னான் ஆதவன்.. இறங்கிப் போய் காரின் பானட்டைத் திறந்து பார்த்தான்.. இதுபோல அந்தக் கால சினிமாக்களில்தான் வரும் என்று அவனுக்குத் தெரியாமல் தலையில் அடித்துக் கொண்டாள் ப்ரீதி.. ஜெர்மன் கம்பெனிக் காரில் லேசர்தான் வேலை செய்யும்.. பானட்டைத் திறந்து பார்த்து என்ன செய்வது..?

கிடைத்த வாய்ப்பை இறுகப் பற்றிக் கொண்டு கார் கதவைத் திறந்து இறங்கினாள் ப்ரீதி.. ஆதவன் உதட்டைப் பிதுக்கிய வண்ணம் காரை ஆராய்ந்து கொண்டிருக்க இவள் காரை விட்டு விலகி நின்று இயற்கையின் அழகை தன் செல்போனின் கேமராவில் படம் பிடிக்க ஆரம்பித்தாள்.. ஆராய்ச்சி செய்து ஓய்ந்து போன ஆதவன் செல்போனை எடுத்து மெக்கானிக்கை அழைத்தான்.. இவள்..

"நேரமாகுமா அத்தான்..?" என்று பவ்யமாகக் கேட்டாள்..

"மெக்கானிக் வந்து பார்த்தாத்தான் தெரியும்.." எரிச்சலுடன் சொன்ன ஆதவன்..

"காருக்குள்ளே அடங்கி உட்காரு.." என்று அதட்டினான்..

"ஓடாத காரில உட்கார்ந்து என்ன பண்ண..?" ப்ரீதியின் கிண்டலில் அவன் முகம் விழுந்து விட்டது.

மெக்கானிக் பக்கத்தில்தான் இருந்திருப்பான் போல.. ஐந்தே நிமிடங்களில் வந்து விட்டான்.. அவனும் ஆதவனும் காரில் கவனமாக.. ப்ரீதி நழுவிச் சரிவில் இறங்கி காட்டுக்குள் நடந்து விட்டாள்..

எத்தனை விதமான பறவைகள்.. அனைத்தும் பச்சைப் பசேலென்ற மரங்களில் கூடுகட்டி சிறகடித்துக் கொண்டிருந்தன.. எங்கோ கேட்கும் குயிலின் பாடல்..

நீரோடையில் உடல் நனைத்து ஆட்டி மயக்கிய வாலாட்டிக் குருவி.. கழுத்தை வளைத்துப் பார்த்த மைனா என்று

அழகான பறவைகளின் கூட்டம்.. சலசலத்து ஓடும் நீர்.. கரையோர கூழாங்கற்கள் என்று கண்களில் பட்ட காட்சிகளை எல்லாம் படம் பிடித்துக் கொண்டே போனாள்.. அவளது காலடியோசையில் நீரருந்திக் கொண்டிருந்த பறவைகளின் கூட்டம் 'குபிர்' என வானில் பறந்ததில் ஓர்நொடி அசையாமல் நின்றாள்..

"இது பறவைகளோட இடம்.. பயமில்லாம தண்ணீர் குடித்துக்கிட்டு இருந்தவைகளை விரட்டி விட்டுட்டு அதுக என்னவோ உனக்கு அநியாயம் செய்து விட்டதைப் போல விழித்துக்கிட்டு நிற்கிற..? யார் நீ..?"

அதட்டலும், அதிகாரமும் நிறைந்திருந்த ஆண்குரலில் பயந்து போனவளாக திரும்பிப் பார்த்தாள்.. நீண்டு வளர்ந்திருந்த மரத்தில் ஓர் காலை மடக்கி ஊன்றிக் கைகளை முன்புறமாக மடித்துக் கட்டி சாய்ந்து நின்றிருந்தான் 'அவன்..'

மாநிறம்.. ஆறடிக்கும் மேல் உயரம்.. அடர்ந்த மீசை.. தீர்க்கமான நாசி.. கட்டுக்குள் அடங்காமல் காற்றில் கலையும் தலைமுடி.. செவ்வரி ஓடிய கண்கள் என்று அவன் பார்த்தவுடன் மனிதல் பதிந்து விடும் கம்பீரத் தோற்றத்துடன் இருந்தான்..

'யார் இவன்..?'

சொன்னால் மட்டும் தெரிந்து விடுமா என்று தனக்குத்தானே மானசீகமாக குட்டிக் கொண்டாள் ப்ரீதி.. அவன் அவளை 'யார் நீ..' என்று கேட்டால் அதில் ஓர் அர்த்தம் இருக்கிறது.. அவள் அவனை 'யார் நீ..' என்று கேட்டால் அடிக்க வந்துவிட மாட்டானா..?

இருந்தாலும் அவனது அதிகார தோரணைக்கு அடி பணிய மறுத்தது அவள் மனம்.. அப்படி அவள் என்ன தவறைச் செய்துவிட்டாள்.. பறவைகளை செல்போனில் படம் பிடித்தாள்.. அவளது காலடி சப்தத்தில் அவை நீரருந்தாமல் ஓடிவிடும் என்று கண்டு வைத்திருந்தாளா..? என்னவோ ஸ்கெட்ச் போட்டு அவள் பறவைகளை விரட்டி விட்டு

விட்டதைப் போல அதட்டுகிறானே.. அவனென்ன அந்த ஆரண்யத்தின் அரசனா..?

"பறவைகளோட இடத்துக்கு நான் வந்தது தப்பு.. நீங்க வந்தது மட்டும் சரியா..? என் காலடி சத்தத்திலதான் அதுக பறந்துச்சுன்னு உங்களுக்கு எப்படி தெரியும்..? உங்க காலடி சத்தத்தில கூட பறந்திருக்கலாமில்ல..? ஆக்சுவலி.. நான் மெதுவா நடப்பேன்.. காலடி சப்தமே கேக்காதுன்னு என் அம்மா சொல்வாங்க.."

ரோசத்துடன் அவள் கையைக் கையை ஆட்டிப் பேசியதில் அவனது விழிகளில் சுவராஸ்யம் வந்ததோ..? அவள் ஊன்றிப் பார்த்த போது அவன் முகம் உணர்வுகள் துடைக்கப்பட்டு நிச்சலனமாக ஆகியிருந்தது..

'இப்பல்லாம் ஆம்பளைகதான் அழுத்தக்காரங்களா இருக்காங்க.. பாட்டு மட்டும் பாடி விடறாங்க.. ஆறு அதும் அழமில்ல.. அது சேரும் கடலும் ஆழமில்ல.. ஆழம் எது ஐயா.. அது பொம்பளை மனசுதான்ய்யான்னு.. அத்தனையும் ஆம்பளைகதான்..'

ப்ரீதியின் முகத்தில் நவரசமும் வந்து போனதை அவன் ரசித்துப் பார்த்ததைப் போல இருந்தது.. உண்மையா என்று ஊன்றிப் பார்த்தால் அவன் நிச்சலனமாக முகத்தை வைத்துக் கொண்டு அவளை சோதிப்பான்.. தேவையா..?

"காலடி சத்தமே கேட்காதுன்னா.. எப்படி..? பூனை போல நடப்பியா..?"

அவனது ரசனை மிக்க பார்வை அவள் பூனை போல நடந்தால் எப்படியிருக்கும் என்பதை கற்பனை செய்து பார்ப்பதைப் போல இருந்ததில் அவள் பல்லைக் கடித்தாள்.

"என் நடை பூனை நடைதான்.. உங்க நடை யானை நடை..! இல்லேன்னு சொல்ல முடியுமா..?"

"முடியாதுன்னு சொன்னா என்ன சொல்வதாக உத்தேசம்..?"

"பறவைகளை பற்றி விட்டது நீங்கள்தான்.. நானில்லைன்னு சொல்கிறதாக உத்தேசம்.."

பட்டென்ற அவளது பதிலில் அவன்..

"ஊஹீம்..?" என்று புருவங்களை உயர்த்தி இறக்கினான்..

ஓர்நொடி மயங்கிப் போனவள் திடுக்கிட்டாள்.. என்ன இது.. ஆளில்லாத ஆரண்யத்தில்.. அறிமுகமில்லாத ஒருவனுடன் பேசிக் கொண்டு நிற்கிறாளே.. அதிலும் அவனது மேனரிசத்தில் மயங்கியும் தொலைக்கிறாள்..

"நான் போகனும்.." அவள் திரும்பி வேகமாக நடந்தாள்..

"எங்கே போகனும்..?" அவனது கேள்வி அவளைத் தடுத்து நிறுத்தியது..

"காருக்கு.. எங்க கார் திடிர்ன்னு நின்னுருச்சு.. அத்தான் மெக்கானிக்குக்கு போன் பண்ணி வரச் சொல்லி சரி பண்ணிக்கிட்டு இருக்கிறார்.. அங்கே போகனும்.."

அவள் நின்று பதில் சொன்னாள்.. அவள் சொல்லச் சொல்ல அவன் முகம் கடுப்பானதில் துணுக்குற்றாள்..

'யார் இவன்..?' இந்தக் கேள்வி அவளைக் குடைந்தது..

# 3

**காதல் இனிது என் மன்னவா..!**
**காதலிக்க வா..**
**உன் மன ரணம் ஆற..**
**என் மன தீரம் சேர..**

"அத்தானா..? அப்படின்னா..?"

அவனது கேள்வி அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது.. அவன் தெரிந்து கேட்கிறானா.. இல்லை தெரியாமல் கேட்கிறானா என்ற சம்சயத்துடன் அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள்.. கல்லுளி மங்கன்.. பாறை போல முகத்தை வைத்துக் கொண்டிருந்தான்.. இப்படி எவ்வித உணர்வையும் பிரதிபலிக்காத முகத்துடன் இருந்தால் அவன் என்ன நினைவில் இருக்கிறான் என்பதை எப்படித்தான் அவள் கண்டு பிடிப்பது..?

அவளது பதிலுக்காக அவன் காத்திருப்பதைப் போல அவனது விழிகள் அவளை ஊடுறுவியதில் அவளுக்குள் வீம்பு வந்தது..

'இவனே யாருன்னு தெரியாது.. இவன் கேட்கிற கேள்விக்கு நான் எதுக்கு ஆன்சர் பண்ணிக்கிட்டு நிற்கனும்..'

போடா என்று நாக்கைத் துருத்திக் காட்ட ஆசைதான்.. ஆனால் ஆளே இல்லாத அத்துவானக் காட்டில் அவனும் இவளும் மட்டும் நின்று பேசிக் கொண்டிருக்கையில் இவள் அழகு காட்டி வைத்தால் அதன் பின் விளைவுகள் என்னவாக இருக்கக் கூடுமோ..

'நல்ல விதமா இருக்காது.. அது மட்டும் கன்பர்ம்..' அவளது அறிவு எச்சரித்தது..

"அதுவா சார்.. அத்தை மகனை எங்க ஃபேமிலியில் அத்தான்னு அழைப்பாங்க சார்.. போதுமா சார்.."

கைகட்டி வாய் பொத்தாத குறையாக அவள் பவ்யம் காட்டியதில் சின்னதாக ஓர் சிரிப்பின் இழை அவனது இதழ்களில் வந்து போனதைப் போல இருந்தது..

இருந்ததுதான்.. நிச்சயமாக சொல்வதற்குத்தான் அவன் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறானே.. அளந்து வைத்த பேச்சு.. அளவிடும் பார்வை.. என்று எல்லாவற்றுக்கும் அளவுகோல் வைத்திருக்கிறானே..

"நான்..? உனக்கு..? சார்..?"

'வேறு யார்..?'

விசித்திரமாக அவனைப் பார்த்தாள்.. முன்பின் தெரியாதவனை எப்படி அழைப்பது..?

'அத்தான் அப்படின்னா கூப்பிட முடியும்..?'

மனதில் எழுந்த கேள்வியில் திடுக்கிட்டாள் ப்ரீதி.. இவன் யாரோ எவரோ.. இவனைப் போய் 'அத்தான்' என்ற வார்த்தையோடு எப்படி இணை சுட்டினாள்..?

அவளது தடுமாற்றத்தை அவன் கண்டு கொள்வான் என்பதில் ப்ரீதி சமாளிப்பாக பதில் சொல்ல முயன்றாள்..

"உங்களைப் பார்த்தா இந்தக் காட்டுக்கே ராஜா போல தோணுச்சா.. அதான்.. முன்ஜாக்கிரதையா சார்ன்னு கூப்பிட்டுடேன்.."

"இல்லேன்னா எப்படிக் கூப்பிட்டிருப்ப..? வாடா, போடான்னா..?"

"வாட்..?!"

ப்ரீதி வாயடைத்துப் போனவளாக அவனைப் பார்த்தாள்.. அவன் விழிகளில் சிரிப்பு வந்து போனதைப் போல இருந்தது.. எல்லாமே 'போல' தான் எந்த உணர்வையும் அவன் தங்க விடுவதில்லையே..

"உங்களைப் போய் வாடா, போடான்னு கூப்பிடுவதா..? அம்மாடியோவ்.. யாரு நீங்க.."

ப்ரீதி இயல்பாக சொன்னாள்.. அவனது தோற்றமும், தோரணையும் வெகு உயரத்தில் இருப்பவன் என்பதைச் சொல்லாமல் சொல்லின என்றாலும்.. அறியாத ஊரில், புதிதாக அறிமுகம் ஆகும் நபரை 'வாடா, போடா' என்று அழைப்பதா..? ப்ரீதியினால் அது முடியாது

என்பதோடு அவள்தான் அவனிடம் தனித்து சிக்கிக் கொண்டிருக்கிறாளே.. மரியாதை இல்லாமல் பேசிவிட்டு மாத்து வாங்க அவளென்ன முட்டாளா..?

"நான் யார்ன்னு உனக்குத் தெரியுமா..?" நிதானமாக அவன் கேட்டான்..

'நீ பெரிய தேசிங்கு ராஜா..! போவியா..' ப்ரீதிக்கு வண்டை வண்டையாக வாய் வரை வந்தது.. அதற்கு மேல் வர திராணியில்லாததால் ஓடிப் போய் விட்டது..

"தெரியாது சார்.. சொன்னாக் கேட்டுக்கறேன் சார்.."

மறுபடியும் பவ்யம்.. சிரிக்காமல் சிரிக்கும் வித்தையைக் கற்று வைத்திருந்த அந்த ஜெகஜால கில்லாடி அவளை ஊன்றிப் பார்த்தான்.. ப்ரீதி மயங்கிச் சரிந்து விடாமலிருக்கப் பக்கத்திலிருந்த மரத்தில் சாய்வதைப் போலப் பாவனை செய்தபடி மரத்தைக் கெட்டியாக இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்..

'எங்கப்பா அத்தானுடன் பேசிப் பழகி ஓர் முடிவைச் சொல்லுன்னா அனுப்பி வைத்தா.. வழியில் ஓர் ஆள் மயக்கி என்னை மயக்கப் பார்க்கிறானே.. குதிரை மேலத் தூக்கிப் போட்டுப் பறந்திருவானோ..'

குதிரை மறைந்திருக்கிறதா என்று பார்வையால் துழாவினாள் ப்ரீதி... பறவைகள்தான் இருந்தன.. அப்போதைக்கு அந்தப் பக்கம் விலங்குகள் வர வேண்டாமென்று முடிவு கட்டி வைத்திருந்தன போல.. வேறு விலங்குகளைக் காணோம்..

"என்ன.. ஓடிப் போன பறவைகள் தேடி வந்திருக்கே.. மறுபடி அதை ஓட்ட என்ன வழின்னு தீவிரமா பிளான் பண்றதைப் போல இருக்கு..?"

லேசாக உதட்டை வளைத்தபடி வினவினான் அவன்..

'ஐயா என்னைக் கிண்டல் பண்றாராமாம்...' ப்ரீதி பதிலுக்கு லேசாக இல்லாமல் தெளிவாக உதட்டை வளைத்தாள்.. அதில் அவனது புருவங்கள் உயர்ந்து இறங்கி அவளைக் கிறங்கடித்தன..

'நிஜமாவே இவன் அழகாய் இருந்து தொலைக்கிறானே..'

எங்கே உன் குதிரை என்று ஏறிப் போய் விடலாமா என்றுகூட அவளுக்குத் தோன்றித் தொலைத்து விட்டது.. கம்பீரமும் முகலட்சணமுமாக இப்படியும் ஓர் ஆணழகன் இருப்பானா..?

'வசீகரன்..!' அவள் மனம் ஜொள்ளியது..

"இதுவரைக்கும் அப்படியாப்பட்ட பிளான் எதுவும் இல்லை சார்... இப்போ சார் பிளான் போட்டுக் கொடுத்துட்டிங்க.. கையை ஆட்டிக் குதியாட்டம் போட்டு இதுகளை கலைத்து விட்டுத்தான் வேறு வேலை பார்க்கிறதாய் இருக்கேன்.."

"ஓ.. அப்படியா.. நான் ஒருத்தன் இங்கே இருக்கிறதை மறந்துட்டு ஸ்கெட்ச் போடுவியா..? எங்க காட்டுக்கு வந்து என் முன்னாடியே பறவைகள் கூட்டத்தைக் கலைக்கப் போகிறதாய் சவால் விடறியே.. உனக்கு எவ்வளவு தைரியம்..!"

"அப்படியெல்லாம் அவசரப்பட்டு என்னை தைரியசாலின்னு முடிவு கட்டி விடாதீங்க சார்.. ஒரு நிழல் அசைஞ்சாக்கூட நான் அம்பேல்.."

"நம்ப முடியலையே.."

அவனது பார்வை அவள் சொல்வதை நம்பலாமா, வேண்டாமா என்பதைப் போல அவளை பாதாதிகேசம் பார்த்து வைத்து சோதித்தது..

'டேய்.. நீ சும்மா பார்த்தாலே நான் க்ளீன் போல்டாகிருவேன்.. இதில வேற ஆராய்ச்சிப் பார்வை பார்த்து வைக்கறியேடா.. அடுக்குமா..? உனக்கு ஆணழகன்ங்கிற ஆணவம்டா..'

ப்ரீதிக்கு என்னென்னவோ ஆகித் தொலைத்தது.. பூனாவை விட்டுக் கிளம்பும் போது காடும், காடு சார்ந்த இடமும்ன்னு சுற்றிப் பார்த்து விட்டு வரலாம் என்ற உல்லாச மனதோடுதான் அவள் கிளம்பி வந்தாள்.. இங்கே என்னடாவென்றால் காட்டுக்குள் கால் பதித்தவுடன் கந்தர்வன் ஒருவன் வந்து நிற்கிறானே..

"நம்புங்க சார்.. நம்பிக்கைதான் வாழ்க்கைன்னு நம்ம தேவர் மகன் சொல்லியிருக்கார்.."

"ஹூ இஸ் தட்..?"

"வேறு யார்..? எல்லாம் நம்ம பிரபு சார்தான்.."

"பிரபு சாரா..?"

"போச்சுடா.. இவரையும் தெரியலையா..? இவரைத் தெரியாம எப்படி நீங்க வால்பாறை பக்கத்தில வாழ்ந்துக்கிட்டு இருக்கீங்க..?"

ப்ரீதி கை குவித்து கேள்வி கேட்டதை அவன் ரசனையோடு பார்த்தான்.. மின்னல் போல அந்த ரசனை வந்து போய் விட்டது என்பது வேறு விசயம்.. துடிப்பான யுவதி ஒருத்தியை சந்தித்திருக்கும் சந்தோசம் அவனிடம் மெலிதாக தெரிந்தது..

"வால்பாறைக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்..?"

"வால்பாறைக்கும் சினிமாவுக்கும் சம்பந்தம் இருக்கில்ல.. இங்கே நிறைய சினிமா ஷீட்டிங் நடக்குமாமே.. நம்ம மால்குடி சுபா வால்பாறை வட்டப்பாறைன்னு செமத்தியா ஒரு பாட்டு பாடியிருக்காங்களே.. வாவ்.. எப்பேற்பட்ட பாட்டு தெரியுமா அது.. சச் எ லவ்லி சாங்..!"

"லவ்வ்வ்....லி சாங்.."

அவன் 'லவ்'வை மட்டும் அழுத்தி உச்சரித்தான்.. அவளை ஊன்றிப் பார்க்க வேறு செய்தான்.. ப்ரீதியின் முகம் முதன் முறையாக சிவந்தது.. அவன் கண்களிலும் முதல் முறையாக வெளிப்படையான மின்னல் வந்தது..

ப்ரீதி தடுமாறினாள்.. அதை மறைக்கக் கோர்வையாகப் பேசினாள்.

"யெஸ் சார்.. அந்த சாங் படு சூப்பரா இருக்கும்.."

"ம்ம்ம்.. இத்தனை இன்பர்மேசனுக்கும் நீ கேட்ட கேள்விக்கும் என்ன கனெக்சன்..?"

"சார்.. நடிகர் திலகம் சார் நடித்த படம் தேவர் மகன்.. சினிமாவில அந்த தேவரோட மகன் கமலஹாசன்.. நிஜ லைஃபில அவரோட மகன் பிரபு சார்.. அதனால அப்படிச் சொன்னேன்.."

"நல்லாத்தான் பேசற.."

அவனது பார்வை அவள் மீது ஊர்ந்து.. 'நல்லாவும் இருக்கிற..' என்று சொல்லாமல் சொன்னது.. ப்ரீதிக்கோ இன்று வந்த இந்த மயக்கம் என்னை எங்கெங்கோ கொண்டு செல்லுதம்மா என்று பாடி ஆட வேண்டும் போல இருந்தது..

"ஆமாம்.. இவ்வளவு பெரிய தைரியசாலி.. இந்தக் காட்டைப் பார்த்து பயப்படாம செல்போனில் படம் பிடிச்சுக்கிட்டு இருக்கிற.. இது எப்படி..?"

"கூட நீங்க இருக்கீங்களே சார்.. உங்க பக்கத்தில் இருக்கும் போது பயம் என்னிடம் வர பயப்படுமே.."

"ஓ..."

கண்கள் இடுங்க.. உதடுகளைக் குவித்து ஒரு மார்க்கமாக அவன் 'ஓ' போட்ட அழகிற்கு.. அந்த அழகான ஆரண்யத்தை அவனுக்கே அவனுக்கென்று எழுதிக் கொடுத்து விடலாம் போல இருந்தது.. அதை அவனிடம் சொன்னால் என் ஆரண்யத்தை எனக்குப் பட்டாப் போட்டுக் கொடுப்பதற்கு நீ யார் என்று கேட்டாலும் கேட்பான்.. அவளைப் பார்த்த நொடியிலேயே 'யார் நீ' என்று கேட்டவன் தானே அவன்.. அவனது கேள்விக்கு இந்த மணித்துளி வரை அவள்

யாதொரு பதிலும் தரவில்லை.. அதை அவன் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை..

அவளும் அவனைப் பார்த்து 'யாரு நீங்க..' என்று வியந்தாள்.. நான் யாரென்று உனக்குத் தெரியுமா என்று கேட்டவனும் அவன் யாரென்று சொல்லவில்லை.. தாங்கள் சொன்னால் கேட்டுக் கொள்கிறேன் என்று பவ்யம் காட்டியவளும் அதுபற்றி அறிய ஆர்வம் காட்டவில்லை..

அது எப்படி என்று ப்ரீதிக்குப் புரியவில்லை.. அத்துவானக் காட்டில் அறிமுகமில்லாத இளைஞனுடன் நெடு நாள்கள் பழகியதைப் போல எப்படி வெகு இயல்பாகப் பேசத் தோன்றுகிறது..? அவனுடன் பேசுவது இனிமையாக இருப்பதெப்படி..?

'என்ன, என்ன' என்பதற்குப் பதிலாக 'எப்படி, எப்படி..' என்ற வினாக்கள் அடுக்டுக்காக வந்தன.. அதைப் பற்றித் துளியும் கவலைப்படாமல் இதழ் வளைத்துக் கள்ளச் சிரிப்பொன்றை சிந்தியபடி அவன் முகத்தைப் பார்த்தும் பார்க்காமல் வாயடித்துக் கொண்டிருந்தாள் ப்ரீதி.. அவன் யாரோவாகவே இருந்து விட்டுப் போகட்டுமே.. அதுவரை அவள் பார்த்திராத ஹீரோ ஒருவனைப் பார்த்திருக்கிறாள்.. மறுபடியம் பார்ப்பாளோ என்னவோ தெரியவில்லை.. அவனுடன் பேச அவளுக்குப் பிடித்திருக்கிறது என்றால் பேசி விட்டுப் போக வேண்டியதுதானே..

'இவன் யாரோ.. இவன் யாரோ..

வந்தது எதற்காக..?'

மனது பாடியது.. இதை அவன் பாடவேண்டும் என்று அறிவு இடித்துரைத்தது.. அவள்தான் அவன் இருக்கும் இடத்திற்கு வந்திருக்கிறாள்.. அவன் ஒன்றும் பூனாவிற்கு வந்து நிற்கவில்லை..

அறிவும் மனதும் என்றுமே எதிரெதிர் துருவங்களாக இருப்பதற்கான தாத்பர்யம் யாதென்று பிடிபடவில்லை.. மனது எப்போதுமே அறிவு சொல்வதைக் கேட்காமல் தன் போக்கில் பயணிப்பதையே விரும்புகிறது.. இரும்பினால் செய்யப் பட்டதல்ல நம் இதயம்.. இயந்திரம் போல வாழ முடியாதே.. அதிலும் பெண் மனம் மென் மனம் அல்லவா..

"கெட்டிக்காரர் சார் நீங்க.. கடைசி வரைக்கும் நீங்க யார்ன்னு சொல்லவே இல்லையே.."

ப்ரீதி புறப்படத் தயாரானாள்.. தாமதித்தால் ஆதவன் அவளைத் தேடி வந்து விடக் கூடும்.. அறிமுகமில்லாத வாலிபன் ஒருவனுடன் அவள் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு விட்டால் காண்டாகி விடச் சாத்தியக் கூறுகள் உள்ளன.. அத்தை மகனான அவனருகில் அமர்வதை

அவள் தவிர்த்து விட்டாள்.. அந்தக் காண்டில் இருப்பவனுக்கு இந்தக் காண்டும் சேர்ந்து விட்டால் கட்டுப் படுத்துவது என்பது மிகவும் கடினம்.. கங்காதரனுக்கு செல்போனில் செய்தி போகும்.. அவர் மகளை கடிந்து பேசி விடுவார்..

'அந்தத் துன்பம் எதற்கு..?'

அவளது துன்பம் புரியாமல் அவன் மரத்தை விட்டு விலகி நின்று தாடையைத் தடவியபடியே அவளைப் பார்த்தான்..

'இந்த போஸ் கூட நல்லாத்தான் இருக்கு.. இவன் மரத்தில் ஒற்றைக் காலை ஊன்றி விவேகானந்தர் கைகளைக் கட்டியிருப்பதைப் போலக் கைகளை முன்பக்கமாக மடித்துக் கட்டியிருந்தாலும் நல்லாத்தான் இருக்கான்.. இப்படித் தாடையைத் தடவிக்கிட்டே உத்துப் பார்த்தாலும் நல்லாத்தான் இருக்கான்.. டேய்.. யாருடா நீ.. சின்னப் பொண்ணு மனசை சலனப் படுத்தறயேடா..'

"கடைசி வரைக்கும்ன்னா..?" அவனது கேள்வியில் அரண்டு விட்டாள்..

"அந்தக் கடைசியை சொல்லலை சார்.. நான் ரொம்பச் சின்னப் பொண்ணு.." அவசரமாக அவள் சொல்ல அவன்..

"ஆமாமாம்.." என்று அவளை ஊன்றிப் பார்த்து முகம் சிவக்க வைத்தான்..

"இன்னும் ரொம்ப வருசம் நான் வாழனும் சார்.."

"தோராயமா எத்தனை வருசம்..?"

"ஒரு நூற்றைம்பது வருசம் சார்.."

"போதுமா..?"

"இன்னும் கிடைத்தாலும் ஓகேதான் சார்.."

"ஹா.. ஹா.."

முதன் முறையாக அவன் வாய் விட்டுச் சிரித்தான்.. அவன் சிரிக்கும் போது அவனது கவர்ச்சி கூடியதில் ப்ரீதி தான் என்ன சொல்கிறோம் என்பதை மறந்து போனவளாக..

"சூப்பரா இருக்கீங்க சார்.. இப்படியே சிரித்துக்கிட்டே இருந்தால்தான் என்ன..? உம்மணாம் மூஞ்சியா இருக்கனுமா..?" என்று சொல்லி விட்டாள்..

அவனது சிரிப்பு நின்று விட்டாலும் முகத்தில் மென்மை படறக் கனிவுடன் அவளைப் பார்த்தான்..

அழகான மலர் ஒன்றைப் பார்க்கும் மிருதுவான பார்வை அது..

# 4

## வாழ வேண்டும் உன்னோடு..
## இந்த மந்திரம் மட்டுமே என்னோடு

கொட்டும் அருவியில் உடல் நனைத்தால் உண்டாகும் சிலிர்ப்பை ப்ரீதி உணர்ந்தாள்.. தாலாட்டும் அவன் பார்வையில் இவள் மனம் தள்ளாடியது.. ஏதோ ஓர் குளிர் நதியில் தள்ளப்பட்டதைப் போல உணர்ந்தாள்..

"யார் நீ..?"

வெகு பிரியத்துடன் அவன் கேட்டான்.. காதலோ, காமமோ கலக்காத அரிதான பிரியம் அது.. பிடித்தவர்களிடம் காட்டும் பிரியம்.. அது ப்ரீதிக்கும் பிடித்திருந்தது..

"ப்ரீதி.."

"ப்ரீதி. அழகான பெயர்.."

அவனது பார்வை 'உன் பெயர் மட்டுமல்ல.. நீயும் அழகுதான்..' என்று சொல்லாமல் சொன்னது.. ப்ரீதியின் மனதுக்குள் பட்டாம் பூச்சிகள் பறந்தன.. பெயர் தெரியாத பறவையொன்று பாடியபடி நதிநீரில் நீர் குடித்தது.. சலசலத்து ஓடிய நதியின் பாடலும் பறவையின் பாடலுடன்

சேர்ந்து கொண்டது.. குளிர் நிரம்பிய மலைக்காற்றும்.. சன்னமாகத் தெறித்த மழையின் சாரலும் அவளை மாய உலகொன்றுக்குள் ஈர்க்க முயன்றன..

"எங்கேயிருந்து வர்ற..?"

அடுத்த கேள்வி.. ப்ரீதிக்கு அவன் முகம் பார்த்துப் பேச வேண்டும் போல இருந்தது.. முடியவில்லை.. லேசாக அவன் முகம் பார்ப்பதும்.. அவனது பார்வையைச் சந்தித்தால் பதறிப் போய் வான் மேகங்களையும், மலை முகடுகளையும் பார்ப்பதுமாக பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்..

"பூனாவிலிருந்து.."

நடுக்கத்துடன் சொல்லி விட்டாள்.. அவளது நடுக்கத்தை உணர்ந்தவன் மெல்லச் சிரித்தான்..

"வெறும் வாய்தான் போல.."

எதற்காக இதைச் சொல்கிறான் என்று அவள் கேட்கவேயில்லை.. அதைக்கூட அறியாத அப்பாவியா அவள்..? கானகத்தில் கண்டவனைக் 'கந்தர்வன்..' என்று ஜொள்ளி 'சைட்..' அடிக்கும் படுபாவி அல்லவா அவள்..

"நான் போகனும்.."

"எங்கே போகனும்..?"

"அத்தை வீட்டுக்கு.."

"தெளிவாகத்தான் பேசற.. இவ்வளவு தெளிவு ஆகாது.. மொட்டையா அத்தை வீடுன்னு சொன்னால் எப்படி..?"

"உன் அத்தை வீடு எங்கே இருக்கு..?"

"யாருக்கு சார் தெரியும்..? நான் இதுவரைக்கும் என் அத்தையின் வீட்டுக்கு வந்ததே இல்லை.. இதுதான் பர்ஸ்ட் டைம்.."

"ஏன்..? அவங்க உன் சொந்த அத்தைதானே.."

"சரியாப் போச்சு போங்க.. நீங்க கேட்டதை மட்டும் என் அப்பா கேட்டிருக்கனும்.. சண்டைக்கு வந்திருப்பார்.. அவங்க என் அப்பாவுடன் பிறந்த சொந்தத் தங்கை சார்.."

"அவ்வளவு பாசமா உங்க அத்தை மேல..?"

"ம்ம்ம்.."

"இவ்வளவு பாசக்காரங்க ஏன் அத்தையின் ஊருக்கு வந்து போகலை..? குடும்பச் சண்டைய்யா..?"

"சண்டையா..? அத்தை கூடவா..? அப்பாவா..? நெவர்.. அத்தைக்காக அப்பா எதையும் செய்வார்.."

"அப்படிப்பட்டவர் தங்கையின் வீட்டுக்கு வந்து போயிருக்கலாமே..?"

"அந்தக் கதையை ஏன் சார் கேட்கறிங்க.. அத்தை கல்யாணம் ஆன நாளில் இருந்து எங்க வீட்டில்தான் இருந்தாங்களாம்.. அத்தையின் கல்யாணம் முடிந்து ஆதவன் அத்தான் பிறந்த பின்னால்தான் எங்கப்பாவுக்கும், அம்மாவுக்கும் கல்யாணம் நடந்ததாம்.."

அவள் பேசுவதையே ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தவனின் முகம் கடுமையானது.. ப்ரீதி திகைத்தாள்..

'நான் தப்பா ஏதும் சொல்லிட்டேனா..?'

"என்ன பெயர் சொன்ன..?"

"யாரோட பெயரைக் கேட்கறிங்க சார்..? அப்பா பெயரா.. இல்லை அத்தையின் பெயரா..? இரண்டு பேரின் பெயரையும் நான் சொல்லவே இல்லையே.."

"உன் அத்தான்னு எவனோ ஒருவன் பெயரைச் சொன்னியே.."

"ஆதவன் அத்தான்.."

"ஆதவன்..?"

"ம்ம்ம்.. அவர்தான் என்னை கோயம்பத்தூர் ஏரோடிராமில் இருந்து பிக்-அப் பண்ணிக்க வந்தார்.. நாங்க வந்த கார் வழியிலேயே நின்று விட்டது.. மெக்கானிக்கிற்குப் போன் பண்ணினார்.. மெக்கானிக்கும் வந்தாச்சு.. அவங்க காரைப் பார்த்துக்கிட்டு இருந்த கேப்பில நான் ஃபாரெஸ்டைப் பார்க்க இந்தப் பக்கமா எஸ்கேப் ஆகிட்டேன்.."

அவள் சொன்னதை சிந்தனையுடன் கேட்டுக் கொண்டிருந்தவனின் முகத்தில் சினம் படர்ந்தது..

"ஃபாரின் கார் வாங்கினா மட்டும் போதாது.. அதை எப்படி மெயின்டெயின் பண்ணணும்னும் தெரிந்து வைத்துக்கனும்.."

எதற்காக அவனுக்கு இத்தனை கோபம் என்று புரியாமல் அவன் முகத்தையே குறுகுறு என பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு ஆச்சரியமாகி விட்டது.. ஆதவனின் கார் ஃபாரின் கார் என்று இவனுக்கு எப்படித் தெரியும்..? சரியாகச் சொல்கிறானே..

"அத்தானின் கார் ஃபாரின் கார்ன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..? அத்தானை உங்களுக்குத் தெரியுமா..?"

அவன் பதில் சொல்லவில்லை.. கடுகடுவென இருந்தான்.. ப்ரீதிக்கு வருத்தமாகி விட்டது.. பாறாங்கல் முகத்துடன் அவளிடம் பேச வந்தவன் அப்போதுதான் இளகி ஒரு சிரிப்புச் சிரித்தான்.. பிரியமாக சில வார்த்தைகளைப் பேசினான்.. புரியாமல் எதையோ பேசி ப்ரீதி அதற்கும் வேட்டு வைத்து விட்டாளே.. பிரியப் போகும் நேரத்தில் இப்படியா நிகழ வேண்டும்..

"கோபமா இருக்கீங்களா..?"

தழதழத்த அவளது குரலில் என்ன நினைத்தானோ.. ஓர் பெருமூச்சுடன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.. வானத்தை அண்ணாந்து பார்த்தான்.. அங்கே என்ன இருக்கிறது என்று ப்ரீதியும் பார்த்தாள்.. அவள் பார்த்த போது மேகங்கள்தான் இருந்தன.. புதிதாக எதுவும் இல்லை..

அவளது செய்கையைக் கவனித்தவனின் முகத்தில் மென்மை மீண்டது.. சிறு குழந்தையை ரசிப்பதைப் போல அவளைப் பார்த்தான்..

"வெல்கம்.." என்றான்..

"எதற்கு..?" புரியாமல் கேட்டாள் ப்ரீதி..

அவன்தான் எந்த நேரம் எதைப் பேசுகிறான் என்று தெரிய மாட்டேன் என்கிறதே.. வரவேற்கிறானே என்று நன்றி சொல்லி வைத்தால் அதற்கும் ஏதாவது சொல்லி வைப்பான்.. தற்காத்துக் கொள்வதே உசிதமானது..

"இதுகூடத் தெரியாத மக்கா நீ..?"

அவன் விமரிசித்ததில் அவளுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது..

"காலேஜில் கோல்டு மெடல் வாங்கியிருக்கிறேன் சார்.. அவசரப் பட்டு வார்த்தையை விட்டு விடாதீங்க.."

"விட்டா..?"

"அள்ள முடியாது.."

"அப்படின்னு யார் சொன்னது..? உன் பாட்டியா..?"

ஆமாம் என்பதில் ப்ரீதியின் முகம் விழுந்து விட்டது.. லேசாக அசடு வழிகிறதோ என்று கூட சந்தேகம்.. செல்போனை பார்ப்பதைப் போல அதன் கண்ணாடி திரையில் முகம் பார்த்துக் கொண்டாள்..

'நல்லாத்தான் இருக்கேன்..'

நிம்மதியாகி நிமிர்ந்து பார்த்தவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. ஒரு குறுஞ்சிரிப்புடன் அவன் அவளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.. ப்ரீதிக்கு முகத்தை எங்கே வைத்துக் கொள்வது என்று தெரியவில்லை.. இப்படியா மாட்டித் தொலைப்பாள்..?

"என்ன படிச்சிருக்க..?"

"பி.ஈ. கம்யூட்டர் என்ஜினியரிங்..."

"எங்கள் ஊருக்கு வந்திருக்கிறாய்.. அதற்காகத்தான் வெல்கம்.."

நன்றி சொல்லத்தான் நினைத்தாள்.. அவன் அவளை வாரிய வாரல் நினைவுக்கு வந்ததில்..

"நல்ல வேளை.. இப்போதாவது சொன்னிங்களே.." என்று அவனைப் போலவே குறுநகை புரிந்தாள்..

அவள் வம்புக்கு இழுக்கிறாள் என்பதில் அவனது கண்கள் ரசனையுடன் மின்னின.. அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி..

"வேறு எப்போது சொல்வேன்னு நினைத்தாய்..?" என்று கேட்டான்..

"நான் பூனாவுக்குப் போக பிளைட்டில் ஏறும்போது சொல்வீங்கன்னு நினைத்தேன் சார்.." பவ்யமான பதில்..

"வால் ஒன்றுதான் இல்லை.." பல்வரிசை தெரிய சிரித்தான்..

"என்னை குரங்குன்னு சொல்கிறீங்களா..?" சண்டைக்கு வருவதைப் போல கேட்டவள்..

"எங்க வீட்டிலேயும் இதைத்தான் சொல்றாங்க.." என்று வாய் விட்டு விட்டாள்..

"சொல்லாம எப்படி இருப்பாங்க..?"

"போதும் சார்.. நான் போயாகனும்.."

"அத்தானைப் பார்க்க அவசரமா..?"

ஒரு தினுசான குரலில் அவன் வினவினான்.. ஆதவன் என்றால் அவனுக்கு ஆகாது போல என்று நினைத்துக் கொண்ட ப்ரீதி..

"அத்தையைப் பார்க்க அவசரம்.." என்றாள்..

"அடேங்கப்பா.. அத்தையின் மீது கொள்ளைப் பாசம் போல.."

இப்போதும் இடக்கான குரல்.. அவளுடைய அத்தையின் மீது அவளுக்குப் பாசம் இருப்பதில் இவனுக்கென்ன இத்தனை ஆட்சேபனை..?

"இருக்காதா பின்னே..? என்னையும் பிரசாத்தையும் தூக்கி வளர்த்தவங்க அவங்க.."

"பிரசாத்தா..? யாரது..?"

"என் அண்ணன்.. பூனாவில் இருக்கிறான்.."

"ஓ..."

"ஆதவன் அத்தானும் ஆர்த்தியும் பூனாவில் பிறந்து வளர்ந்தவங்கதான்.. அத்தை எங்க கூடத்தான் இருந்தாங்க.."

"உன் அத்தையின் ஹஸ்பெண்ட் எங்கே இருந்தாராம்..?"

அவனது குரலில்தான் எத்தனை குரோதம்.. ஆத்திரம்.. ஆங்காரம்..

'வொய் திஸ் கொலைவெறி..?'

ஆதவனின் மீது இவனுக்கு விரோதம் இருக்கலாம்.. ஆதவனின் அலட்டல் அப்படிப்பட்டதுதான்.. ஆனால் மாறன் மாமா அமைதியின் சிகரம் ஆயிற்றே.. அவரை ஏன் இவனுக்குப் பிடிக்கவில்லை..

"இங்கேதான் இருந்திருக்கனும்.."

"யூகமா..?"

"இல்லைன்னு சொல்ல மாட்டேன்.. என் நினைவு தெரிந்த நாளில் இருந்து அத்தையும் ஆதவனும், ஆர்த்தியும் எங்ககூட பூனாவில்தான் இருந்தாங்க.. மாதத்திற்கு ஒர்முறை மாமா வந்து விட்டுப் போவார்.. அப்பாவுக்கு மாமாவைக் கண்டாலே ஆகாது.. அவர் ஏன் வருகிறார்ன்னு சத்தம் போடுவார்.. அத்தை அழுவாங்க.."

அவனது முகம் பார்க்காமல் விவரித்துக் கொண்டிருந்தாள் ப்ரீதி.. அறிமுகமில்லாத எவனோ ஒருவனிடம் தன் அத்தையைப் பற்றிய விவரங்களை விவரித்துக் கொண்டிருப்பதை அவள் உணரவில்லை.. பொதுவாக ப்ரீதி இப்படி மனதில் உள்ளதையெல்லாம் கொட்டி விடும் ரகமல்ல.. கலகலவென்று பேசினாலும் எதைப் பேச வேண்டும்.. எதைப் பேசக்கூடாது என்ற வரைமுறை அவளுக்குத் தெரியும்.. அந்த புத்திசாலி ப்ரீதிதான் தன்னை மறந்து அவனிடம் பேசிக் கொண்டிருந்தாள்.. அது என்னவோ.. அவன் எதைக் கேட்டாலும் மறைக்காமல் சொல்லிவிட வேண்டும் போல இருந்தது.. ஏனென்றுதான் தெரியவில்லை..

"அப்போ ஆதவன் அத்தானுக்கு பதினைந்து வயதிருக்கும்.. எனக்கு எட்டு வயது.. மாமா திடிர்ன்னு வந்து அத்தையையும் அவருடைய பிள்ளைகளையும் அவரோட ஊருக்குக் கூப்பிட்டுக் கொண்டு போகப் போவதாகச் சொன்னார்.. அப்பா அனுப்ப மாட்டேன்னு சத்தம் போட்டார்.. அத்தை மாமாவுடன் கிளம்பிட்டாங்க.."

"உன் அப்பா எதற்காக உன் அத்தையைத் தடுக்கனும்..? அவங்களோட ஹஸ்பெண்ட் ஊருக்குத்தானே கிளம்பினாங்க.."

"அதுதான் எனக்கும் தெரியலை.. உனக்கு உரிமையில்லாத வீட்டுக்கு நீ போகக்கூடாதுன்னு அப்பா கோபப் பட்டார்.. மாமா சுயமா சம்பாதிச்சு அத்தைக்காக சொத்து சேர்த்து வைத்துக் கொண்டு கூப்பிடுகிறாரான்னு ஆத்திரப்பட்டார்.. யாரோ ஒருத்தங்களோட நிம்மதிக்காக அத்தை தன்னோட சுயமரியாதையைத் தொலைக்கனுமான்னு கேட்டார்.."

"ஓ.."

அவனது கண்கள் சிவந்தன.. ரௌத்ரமான அவனது 'ஒ' வில் அதிர்ந்து அவன் முகம் பார்த்தவளுக்குப் பயமாக இருந்தது.. எதற்காக இந்த கோபம்..? யார் மீது கோபம்..?

"உன் அத்தை சுயமரியாதையைத் தொலைத்ததுதான் உன் அப்பாவின் கண்களுக்குத் தெரிந்திருக்கிறது.. ஏன்னா உன் அத்தைதானே உன் அப்பாவுடன் பிறந்தவங்க.. மன நிம்மதியைத் தொலைத்து விட்ட வேறு எந்த ஆத்மாவைப் பற்றியும் ஏன் அவர் நினைத்துப் பார்க்கப் போகிறார்..?"

ப்ரீதி திருதிருத்தாள்.. அவளுடைய அப்பா தன் தங்கையின் மீது பாசம் வைத்தால் இவனுக்கு என்ன வந்தது..?

"அன்றைக்குக் கிளம்பிய அத்தையுடன் நானும் போவேன்னு அழுதேன்.. அப்பா முதுகில் நாலு சாத்து சாத்தி ரூமுக்குள் தள்ளிக் கதவைச் சாத்திட்டார்.."

"உன் அத்தையின் மீது இருந்த கோபத்தை உன்னிடம் காட்டியிருப்பார்.." அவன் முகத்தில் சிரிப்பு விரிந்தது..

"நான் மாத்து வாங்கினதில சாருக்கு இவ்வளவு சந்தோசமா..?" ப்ரீதிக்குத் தாங்கவில்லை..

"மனதில் பட்டதைச் சொன்னேன்.. ஹா.. ஹா.."

"போதும் சார்.. வாய் வலிக்கப் போகுது.."

பேசியபடியே அவர்கள் காட்டைக் கடந்து சரிவில் ஏறி விட்டார்கள்.. மேடான சாலையில் கார் நின்றிருந்தது..

"வாங்க சார்.. அத்தானை உங்களுக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறேன்.." என்றாள் ப்ரீதி..

"அவனை நீ எனக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறயா..? குட் ஜோக்.." அவன் காட்டுக்குள் நடக்க ஆரம்பித்தான்..

"அவ்வளவுதானா..?"

அவளது கேள்வியில் நின்று விட்டான்.. ப்ரீதி நாக்கைக் கடித்துக் கொண்டாள்.. அவன் போகிறானே என்ற வேகத்தில் அவளது ஆர்வத்தை வெளிப்படுத்தி விட்டாளே..

"வேறு என்ன வேண்டும்..?"

தோரணையாக அவன் கேட்ட விதத்தில்..

"இந்தக் காடு வேண்டும்.. கொடுக்கறிங்களா..?" என்று கேட்டு விட்டாள்..

"காடு, மலை, செடி, கொடி, கடல் ன்னு நாம சொந்தம் கொண்டாட முடியாத கடவுளின் கொடைகளை விட்டு வைப்போம்.. நதிகளைக் கூட விட்டு வைக்கலை.. இந்தக் காடு என்னோட அடையாளம்.. நீயும் இதை அடையாளப் படுத்திக்கலாம்.. பொதுவான எதையும் உரிமைப் படுத்திக்க நினைக்காதே.."

அவன் போய் விட்டான்.. ப்ரீதி அசையாமல் நின்றாள்.. அவனைப் பார்க்க முடியாதா என்ற ஏக்கம் அவளுக்குள் எழுந்தது.. அவனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது..

அந்த நொடியில் அவளுடைய அப்பா தன் தங்கையிடம் உரிமை இல்லாத இடத்துக்குப் போகாதே என்று தடுத்தது நினைவுக்கு வந்தது..

# 5

## எனைத் தொலைப்பது நீயெனில்..
## ஆரண்யத்தில் தொலைதலும் எனக்குச் சுகமே..

அந்த நொடியில் அந்த நினைவு ஏன் வந்தது.. புயல் போல வந்து சென்றவன் எவனோ.. பூனாவிற்குத் திரும்புவதற்கு முன்னால் அவளால் அவனைச் சந்திக்க முடியுமோ என்னவோ.. ஆரண்யத்தின் அரசனைப் போல வந்து சென்றவன் சொல்லி விட்டுப் போன வார்த்தைகளின் பொருள் தேடுவது நேர விரயம்..

"அங்கே என்ன பண்ணற..?"

சாலையிலிருந்து ஆதவன் கையாட்டி அழைத்தான்.. நல்லவேளை.. அவன் போய் விட்டான் என்று ஆறுதலானாள் ப்ரீதி.. இல்லாவிட்டால் எவனோ ஒருவனிடம் உனக்கென்ன பேச்சு என்று பாட்டு வாங்க வேண்டியிருக்கும்.. அவனைக் காட்டினில் சந்தித்தாள் என்று தெரிந்து விட்டால் அவ்வளவுதான்.. பூனாவுக்குப் போன் செய்தி பறக்கும்..

ஆதவனின் முகம் சிடுசிடுவென இருந்தது.. அவன் அழகானவன்.. விசாகாவின் சிகப்பு நிறத்தைக் கொண்டிருப்பவன்.. அவன் மீது ஏன் அவளுக்கு ஆசை வரவில்லை..? அவனது கோபத்திற்கான காரணமும் இதுதானே..

ப்ரீதி சரிவிலிருந்து சாலைக்குச் செல்ல மேட்டுப் பகுதியில் ஏறினாள்.. கை கொடுத்து அவளைச் சாலையில் ஏற்றிவிட கை நீட்டினான் ஆதவன்.. நாசுக்காக அவள் அதைத் தவிர்த்ததில் அவனது முகம் சிறுத்து விட்டது.. அருகில் மெக்கானிக் இருக்கிறான் என்ற நினைவில் பல்லைக் கடித்தான்.. அவனது கோபத்தைக் கவனிக்காததைப் போல ப்ரீதி தானாக சாலையில் ஏறி விட்டாள்..

"உன்னை இங்கேதானே இருக்கச் சொன்னேன்.. காட்டுப் பக்கம் ஏன் போன..?" குற்றவாளியை விசாரிப்பதைப் போல அதட்டினான் ஆதவன்..

ப்ரீதியின் முகம் சிவந்து விட்டது.. வேற்று மனிதனை அருகில் வைத்துக் கொண்டு ஆதவன் அவளை அதட்டிய தொனி அவளை பாதித்தது..

"ஜஸ்ட் எ வால்க்.." முணுமுணுத்தாள்..

"தனியாப் போகலாமா..?" ஆதவன் விடுவதாக இல்லை..

அவன் நீட்டிய கையை இறுக்கிப் பிடிக்காத குற்றத்திற்காக அவளை தாளித்துக் கொட்டுவதிலேயே குறியாக இருந்தான்..

"ஐயய்யே.. என்ன சார் நீங்க..? வால்பாறைப் பக்கம் வர்றவங்க அட்டகட்டி காட்டோட அழகை ரசிக்காம

இருப்பாங்களா வெளியூரில இருந்து வந்திருக்கிற விருந்தாளி.. நம்ம ஊர் காட்டைச் சுத்திப் பாக்க ஆசைப்பட்டா அதை ஒரு குத்தம் போலப் பேசிக்கிட்டு இருக்கீங்களே.. அம்மணிக்கு நம்ம பக்க காடுகளைச் சுத்திக் காட்டுவிகளா.. அத விட்டுட்டு கோபப்படறிக.."

மெக்கானிக் பரிந்து கொண்டு வந்தான்..

'கொடுமை..' ப்ரீதிக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது..

'அப்பா சொன்னார்ன்னு இங்கே வந்ததுக்கு வழியிலேயே நல்ல பரிசு கிடைக்குது.. அவரோட தங்கை மகன் காய்ச்சுகிற காய்ச்சலுக்கு மெக்கானிக்கெல்லாம் சப்போர்ட்டுக்கு வர்றான்..'

"காட்டைச் சுத்திக் காட்டறதா..?" ஆதவன் முகம் சுளித்தான்..

'அதானே.. இவனே ரசனை கெட்டவன்.. தேயிலை தோட்டத்தோட பசுமையில் வாழறதை விட்டு விட்டு ஐ.டிக் கம்பெனியைக் கட்டிக்கிட்டு அழப் போகிறவன்.. இவனுக்கு வனத்தோட அருமையைப் பத்தி என்ன தெரியும்..?'

ஆரண்யத்தின் அழகைத் தெரிந்தவனை நினைத்துப் பார்த்தாள்.. சுகமாக இருந்தது.. அவனைப் பார்க்க வேண்டும் போல ஏக்கம் மனதில் எழுந்தது..

மாமன் மகள் மனதில் எழுந்துள்ள மயக்கம் பற்றி அறியாமல் காட்டைப் பற்றி வழக்கடித்துக் கொண்டிருந்தான் ஆதவன்..

"இந்தக் காட்டில இருந்து தப்பிச்சு ஓடறதுக்கு நாள் குறிச்சுக்கிட்டு இருக்கேன்.. நீ என்னடான்னா இவளுக்கு காட்டைச் சுற்றிக் காட்டச் சொல்கிற.. மனுசன் போவானா அந்தப் பக்கம்..? செடியும், கொடியும், அருவியும், ஆறுமா நசநசன்னு இருக்கும்.. சிட்டி லைஃபில இருந்தவங்களுக்கு காடுன்னா ரொம்பக் கஷ்டம் .. உன் ஃபீஸ் என்னன்னு சொல்லி வாங்கிக்கிட்டு போய்க்கிட்டே இரு.. தேவையில்லாம பேசாதே.."

'எனக்கு காடுன்னா ரொம்ப இஷ்டம்..'

ப்ரீதி காரில் ஏறி சாய்ந்து ஜன்னல் கண்ணாடிக்கு அப்பால் தெரிந்த வனப் பகுதியில் அவளது மனம் கவர்ந்த வனராஜன் இருக்கிறானா என்று பார்த்தாள்.. கார் நகர்ந்தது.. அவன் எதிர்பார்த்த மயக்கத்தை ப்ரீதி பிரதிபலிக்காத கோபத்தில் வேகம் கூட்டிப் பறந்தான் ஆதவன்.. அவனது ஹீரோயிசத்தைக் காட்டுகிறானாம்.. ப்ரீதி பயப்பட வேண்டுமாம்..

'போடா..' என்று ஜன்னல் கண்ணாடியின் மீது சாய்ந்து கொண்டாள் ப்ரீதி..

'இவன் காட்டறது ஹீரோயிசமாம்.. ஹீரோவோட ரேஞ்சே வேறடா..'

மரத்தின் மீது தோரணையாக ஒரு காலை மடித்து ஊன்றி சாய்ந்து நின்றிருந்தவனின் கம்பீரம் நினைவுக்கு வந்தது..

'அவனில்ல ரியல் ஹீரோ..'

மலைப் பாதையில் கார் ஏறியது.. தொலைவில் தெரிந்த வெள்ளை மாளிகையை அவள் வேடிக்கை பார்த்தாள்.. பச்சைப் பசேலென்ற மரங்களுக்கு நடுவில் வெண்ணிற கடைசலாகத் தெரிந்த அந்த மாளிகை பார்ப்பதற்கு வெகு அழகாக இருந்தது.. அரச வம்சத்தினரின் அரண்மனையைப் போல அது செருக்குடன் நின்றதில் ப்ரீதி ஆவலுடன் ஆதவனுக்கு அதைக் காட்டினாள்..

"வாவ்..! மலைமேல் அரண்மனையா..? ராஜாக்களோட மாளிகை போலவே இருக்கில்ல அத்தான்..?"

அவளது கேள்விக்குப் பதில் சொல்லாமல் காரை ஒடித்துத் திருப்பினான் ஆதவன்.. சிவந்த அவனது முகம் கருத்து விட்டது..

'இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு உர்ருன்னு ஆகிட்டான்..'

ப்ரீதிக்கு ஏன்தான் அங்கு வந்தோமோ என்று ஆகிவிட்டது..

'காட்டைக் காட்டினாலும் பிடிக்கலைங்கிறான்.. பேலஸைக் காட்டினாலும் பேஸ்தடிக்கிறான்.. மியுஸியத்தில் இருக்க வேண்டிய பிறவி.. இவனுடன் நான் பழகிப் பார்க்கனுமாம்..

அப்பா சொல்கிறார்.. பழகுகிற மாதிரியா இவன் இருக்கான்..?'

ஆதவன் சின்ன வயதிலிருந்தே அப்படித்தான்.. சிடுசிடுவென இருப்பான்.. தகப்பன் வீட்டில் வளராமல் தாய்மாமன் வீட்டில் வளர வேண்டிய நிலைமை அவனுக்குக் கோபத்தைக் கொடுத்திருந்தது என்பதை வளர்ந்த பின்னால் புரிந்து கொண்டாள் ப்ரீதி.. சிறு வயதில் ஆதவனை சிடுமூஞ்சி அத்தான் என்றுதான் கூப்பிடுவாள்.

"இது என்ன பேலஸ் அத்தான்.. டூரிஸ்ட் ஸ்பாட்டா..?"

"கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு வர்றியா..?"

"எதுக்கு அத்தான் சண்டைக்கு வர்றிங்க..? உங்களுக்கு காட்டைத்தானே பிடிக்காது..? அரண்மனையையுமா பிடிக்காது..?"

ஆதவன் திரும்பிப் பார்த்து முறைத்ததில் ப்ரீதிக்கு பயம் வந்து விட்டது.. கண்கள் இரண்டும் ரத்தம் போல ஜிவுஜிவுத்திருந்தது..

'இவன் ஏன் இப்படியிருக்கான்..?'

அவனது கோபத்துக்கு பயந்து வாயை மூடிக் கொண்டு இருக்கக் கூடாது என்று தீர்மானித்தாள் ப்ரீதி.. அது என்ன அவள் எதைக் கேட்டாலும் முறைப்பது..? அவன் இருக்கும் இடத்திற்கு அவள் வந்திருக்கிறாள் என்ற ஆணவமா..? இப்போதுதானே இங்கு இருக்கிறான்..? அவனுடைய பதினைந்து வயது வரை எங்கு இருந்தானாம்..? அவளுடன் பூனாவில் ஒரே வீட்டில் வளர்ந்தவன்தானே அவன்.. புதிதாக என்ன அதிகாரம் வேண்டியிருக்கிறது..?

"எனக்கு அந்த அரண்மனையைப் பார்க்கனும் அத்தான்.."

"பார்த்து என்ன செய்யப் போகிற..? விலைக்கு வாங்கப் போகிறாயா..?"

"ஏனாம்.. நான் கேட்டால் அந்த பேலஸை விலைக்கு வாங்கிக் கொடுக்க மாட்டிங்களா..?"

விளையாட்டாகத்தான் கேட்டாள் ப்ரீதி.. அத்தை மகன் என்ற உரிமையுணர்வில் சீண்டிப் பார்க்கத்தான் கேட்டாள்..

அதுபோல அவனிடம் அவள் பேசியதுண்டு.. புதிதாக வந்த பணக்கார வாழ்வில் அவன் பந்தாக் காட்டும் போது..

"மைசூர் அரண்மனையை எனக்கு வாங்கித் தந்தா நீங்க படா பிக் மேன்னு நான் ஒப்புக்குவேன்.." என்று கிண்டலடிப்பாள்..

அதுபோல இதையும் நினைத்துக் கேட்டு விட்டாள்..

"உன்னை வாயை மூடுன்னு சொன்னேன்.."

உரத்த குரலில் கத்தியபடி காரை நிறுத்தி விட்டான் ஆதவன்.. அவளைத் திரும்பிப் பார்த்தவனின் முகத்தில் கட்டுக்கடங்காத ஆத்திரம் தெரிந்தது..

"அந்த அரண்மனையைப் போல ஒரு அரண்மனையைக் கட்டிக் கொள்ள என்னால் முடியும்.. நான் கேட்டால் பணம் கிடைக்கும்.. ஆனால் நீ கை காட்டற அந்த அரண்மனையை மட்டும் என்னால் வாங்க முடியாது... இது பரம்பரை அரண்மனையாம்.. இதுக்கு உரிமை கொண்டாடறவன்

இந்த அரண்மனையை ஆண்ட அரச வம்சத்தில் பிறந்ததிருக்கனுமாம்.. எங்கப்பாவும் ராஜ வம்சமில்ல.. எங்கம்மாவும் ராஜவம்சமில்ல.. நான் எப்படி அந்த அரண்மனைக்குச் சொந்தக்காரனாக முடியும்..?"

"இதுக்கு ஏன் இவ்வளவு சீரியஸாகிட்டிங்க..? மைசூர் அரண்மனையைப் பார்க்கத்தான் முடியும்.. விலைக்கு வாங்க முடியுமா..? அதைப் போலதானே இதுவும்.. விளையாட்டாக் கேட்டேன் அத்தான்.."

"விளையாட்டுக்குக் கூட இனி இப்படிப் பேசாதே.."

ஆதவன் கோபம் குறையாமல் காரைக் கிளப்பினான்.. அடுத்த பிளைட்டைப் பிடித்து பூனாவிற்குத் திரும்பி விட வேண்டும் என்ற முடிவிற்குப் ப்ரீதி வந்தாள்.. இப்படி எந்த நேரம் எதற்காக கோபப் படுவான் என்று பிடிபடாத குணத்துடன் இருப்பவனிடம் என்னத்தைப் பழகிப் பார்ப்பது..?

'அது என்ன தேவைக்கு..?'

ப்ரீதிக்கு மூச்சு முட்டுவதைப் போல இருந்தது.. ஒரே காரில் அவன் முன் சீட், இவள் பின் சீட் என்று ஒரு மணி நேரம்

பயணிக்க முடியவில்லை.. வாழ்க்கைப் பாதையில் எப்படி சேர்ந்து பயணிக்க முடியும்..?

வந்ததுதான் வந்தோம்.. அத்தையைப் பார்த்து அவள் மடியில் படுத்து செல்லம் கொஞ்சி விட்டு.. ஆர்த்தியைப் பார்த்துத் துரத்திப் பிடித்து விளையாடி விட்டுக்கிளம்பி விடலாம்.. அவள் அவர்களைப் பார்க்கத்தானே வந்திருக்கிறாள்.. ஆதவனுடன் பேசிப் பழகவா வந்திருக்கிறாள்..?

வேகமாக சென்ற கார் ப்ரீதி சுட்டிக் காட்டிய அரண்மனையை அணுகியது.. வெள்ளை மாளிகையைப் போல அது ஆளை மயக்கியதில்.. உள்ளே போய்த்தான் பார்க்கக் கொடுப்பினை இல்லை.. வெளியில் இருந்தாவது ஆசை தீரப் பார்த்துக் கொள்ளலாம் என்று கண்கள் விரியப் பார்த்தாள் ப்ரீதி.. அவள் பார்த்துக் கொண்டிருந்த போதே அரண்மனையின் கோட்டைக் கதவுகளைப் போல உயர்ந்திருந்த கேட் இரண்டும் திறந்தன.. பெரிய இரும்புக் கேட் தங்க வர்ணம் பூசப்பட்டு தகதகத்தன.. கேட்டின் அருகே சிறிய ரூம்.. உள்ளே நாற்காலி, மின்விசிறி என்று உட்கார்ந்திருந்த செக்யூரிட்டிகள்தான் ஓடி வந்து கதவைத் திறந்து விட்டார்கள்.. அரண்மனையை நோக்கிப் போன சலவைக்கற்கள் பதிக்கப்பட்ட சாலையில் கார் ஓடியதில் ப்ரீதி சிலையாக சமைந்து போனாள்..

'அத்தானுக்குத்தான் இந்த அரண்மனைக்கு வரப் பிடிக்கலையே.. எனக்காக வந்தாரா..?'

அவள் நெகிழ்ந்து போனாள்.. அவளுக்காக ஆதவன் விட்டுக் கொடுக்கிறானா..? அது எதற்கு..? அவன் மனதை நோகடித்து அந்த மாளிகையை அவள் சுற்றிப் பார்க்கத்தான் வேண்டுமா..?

"வேண்டாம் அத்தான்.." உறுதியுடன் மறுத்தாள்.

"என்ன.. வேண்டாம்..?" விசித்திரமாக அவளைப் பார்த்தான் ஆதவன்..

"உங்களை ஏதோ ஓர் விதத்தில் இந்த பேலஸ் டிஸ்டர்ப் பண்ணுதுன்னு நினைக்கிறேன் அத்தான்.. எனக்காக இந்த பேலஸை சுத்திக் காட்டத்தானே கூப்பிட்டுக்கிட்டு

வந்திருக்கீங்க.. வேண்டாம்.. உங்க மனதைக் கஷ்டப்படுத்திக்கிட்டு இந்த பேலஸை சுற்றிக்காட்ட வேண்டாம்.. வாங்க போகலாம்.."

"எங்கே..?"

"அத்தை இருக்கிற வீட்டுக்கு.."

"கொஞ்சம் உளராம முன்னாடி பார்க்கிறயா.. உன் அத்தை இங்கேதான் இருக்காங்க.."

வெறுப்புடன் கை காட்டினான் ஆதவன்.. அங்கே வெள்ளை மாளிகையின் பளிங்குப் படிகளில் இறங்கி ஓடி வருவது யார்..? விசாகாவும், ஆர்த்தியுமா..?

நம்ப முடியாமல் இமைகளைக் கொட்டி விழித்தாள் ப்ரீதி.. வெள்ளை மாளிகையின் முன்னால் இருந்த போர்டிகோவே மாளிகையைப் போலதான் இருந்தது.. நூறு கார்கள் வரிசை கட்டி நிற்கலாம்.. அவ்வளவு பெரிய போர்டிகோ.. கரும்பச்சை வண்ண சலவைக் கற்களும்.. கடைசலுடன் கூடிய பெரிய பெரிய தூண்களுமாக பிரமிக்க வைத்தது..

"அ..அ..அ..அத்தை.." ப்ரீதி தந்தியடித்தாள்..

"நான் அப்போதே சொன்னேனில்ல.. அண்ணனை ஏரோடிராமுக்கு அனுப்பாதீங்க.. இங்கே வருவதற்குள் ப்ரீதியை அரள வைச்சிருவான்னு.. பாருங்க.. இவ பே.. பே.. பேங்கிறா.. ஏன் அண்ணா.. இவளை என்ன சொல்லி மிரள வைச்சே..?" ஆர்த்தி இடுப்பில் கை வைத்து ஆதவனிடம் சண்டைக்குப் போனாள்..

"உன் மாமன் மகள் அரளுகிற ஆளா..? நான் அரளாமல் உருப்படியாய் வீடு வந்து சேர்ந்தேனேன்னு சந்தோசப்படு.."

அங்கு வந்த வேலையாளிடம் கார் சாவியை விட்டெரிந்து விட்டு படிகளில் வேகமாக தாவியேறினான் ஆதவன்.. காரின் பின்சீட்டில் இருந்த ப்ரீதியின் பெட்டிகளை வேறு இரு வேளையாள்கள் தூக்கிக் கொண்டு போனார்கள்.. ஆச்சரியத்தில் வாய் பிளந்து விடாமல் இருக்க வெகுவாக பிரயத்தனப்பட்டாள் ப்ரீதி... பூனாவில் கங்காதரன் வசதியானவர்தான்.. சொந்தபங்களா, கார், வீட்டு வேலைக்கு வேலையாள்கள்.. அவருடைய டிபார்ட்மெண்டல்

ஸ்டோர்.. ஆட்டோமொபைல் ஷாப் இதுதான் அவர்களது வாழ்க்கை.. அந்த அரண்மனையின் போர்டிகோவில் பாதியளவுகூட அவர்களின் வீடு இருக்காது..

'அத்தை இவ்வளவு பெரிய அரண்மனையில் ராஜவாழ்வு வாழ்கிறாங்கன்னு ஏன் அப்பா என்னிடம் சொல்லலை..?'

ப்ரீதிக்கு எதுவும் புரியவில்லை... புதிர் போல இருந்தது.. அந்த புதிருக்கே அயர்ந்து போய் நிற்கிறவளுக்கு அடுத்தடுத்த புதிர்களை வாழ்க்கை தரப்போகிறது என்பது அப்போது தெரியாது..

# 6

**களவு செய்யும் உன் காதல்..**
**கற்றுக் கொடுத்த பாடங்களில்**
**இற்று விழுந்ததடா என் நாணம்..**

அண்ணாந்து பார்த்து.. கன்னங்கள் உப்ப.. விழிகள் விரிய.. உள்ளங்கைகளை விரித்து இரு கன்னங்களிலும் வைத்து..

"ப்ப்ப்..பா.." என்று பிரமிக்க வைக்கும் மாளிகை.. பிரமிக்க வைக்கும் அந்த மாளிகையில் வசிக்கும் உணர்வு துளியளவும் இல்லாமல் விட்டேற்றியாக ஆதவன் நின்ற விதம் ப்ரீதிக்கு ஆச்சரியத்தை அளித்தது..

ஆதவன் அப்படியொன்றும் தன்னடக்கம் கொண்டவனல்ல.. புதிதாக ஓர் உடையை உடுத்தினாலே கெத்து காண்பிப்பவன்.. கர்வி.. அப்பேற்பட்ட ஆட்டக்காரன் இப்பேற்பட்ட மாளிகையில் வசிப்பதைப் பற்றிப் பீற்றிக் கொள்ளாமல் இருப்பது பேராச்சிரியம் என்றால்.. இந்த மாளிகையை விட்டு வெளியேறி பூனாவில் காலை ஊன்ற விரும்புவது பேராச்சிரியத்திலும் பேராச்சிரியம்..

"என்னடி.. இப்படி மலைச்சுப் போய் நிற்கிற..?"

ப்ரீதியைக் கிள்ளி விட்டாள் ஆர்த்தி.. எட்டு வயது வரை ஒன்றாக வளர்ந்தவர்கள்.. ஆறுமாத இடைவெளியில் ஒரே வருடத்தில் பிறந்தவர்கள்.. ஒரே வயது, ஒன்று பட்ட சிந்தனையென்பதில் எட்டு வயதில் பிரிந்தாலும் வருட

இறுதி விடுமுறை நாள்களில் சந்திக்கும் போது மாறாத அன்புடன் கை கோர்ப்பவர்கள்.. என்று வரிசைப்படுத்தப் படும் பல காரணங்களினால் ப்ரீதியும் ஆர்த்தியும் ஒருவரையொருவர் 'வாடி, போடி..' என்றுதான் அழைத்துக் கொள்வார்கள்..

"ஏய்ய்.. கற்பனையில் கூட இப்படிப்பட்ட பேலஸை நான் பார்த்தில்லை ஆர்த்தி.."

"நானும்தான் பார்த்ததில்லை.. எட்டு வயதுக்கு மேலேதானே இந்த ஊரும், மாளிகையும் எங்களை 'வா'ன்னு அழைச்சது..?" இலகுவாகச் சொன்னாள் ஆர்த்தி..

"வெற்றிலை, பாக்கு வைத்து அழைக்கலை.." இறுக்கமான முகத்துடன் சொன்னான் படியில் நின்றிருந்த ஆதவன்..

"இவன் இருக்கானே.."

ப்ரீதி மனதில் நினைத்ததை வெளிப்படையாகச் சொல்லி.. ப்ரீதி மானசீகமாக தலையில் அடித்துக் கொள்ள நினைத்ததை வெளிப்படையாகச் செய்து ப்ரீதியின் அதீத.. ப்ரீதிக்கு ஆளானாள் ஆர்த்தி..

"தங்கம்டி நீ.. நான் நினைத்தேன்.. நீ சொல்லிட்ட.. எப்படிடீ.."

"ரொம்பவும் சீன் காட்டாதே.. இவன் இப்படித்தான்னு உனக்குத் தெரியாதாக்கும்.. வாடி உள்ளே.."

ஆர்த்தி ப்ரீதியின் கையைப் பிடித்து இழுத்தபடி வீட்டுக்குள் இல்லையில்லை.. அரண்மனைக்குள் அழைத்துச் சென்றாள்.. ஒரு பக்கம் விசாகா, இன்னொரு பக்கம் ஆர்த்தி, நடுவில் ப்ரீதி என்று மூவரும் ஹாலில் கால் வைத்தார்கள்..

"அதுவா அத்தை.. அது பெரிய கதை.. அம்மா உங்களிடம் போனில் சொல்லியிருப்பாங்கன்னுல்ல நினைச்சேன்.." பூனாவில் அவர்கள் இருந்த தெருவில் அக்கம் பக்கத்து வீட்டினரின் கதைகளை அள்ளி வீசியபடி உள்ளே வந்த ப்ரீதி ஹாலின் பிரம்மாண்டத்தில் மிரண்டு திரும்பி ஓடப் போனாள்..

"காமெடி பண்ணாதடி.." ஆர்த்தி ரகசியமாக கடிந்தபடி ப்ரீதியின் கையை இறுக்கிப் பிடித்து நிறுத்தி வைத்தாள்..

தரையில் விவரிக்கப்பட்டிருந்த காஷ்மீர் கம்பளம்.. அதன்மேல் போடப்பட்டிருந்த விலையுயர்ந்த சோபாக்கள்.. சுவரோர அலமாரிகளில் தெரிந்த வெங்கலச் (ப்ரிதீக்கு அது தங்கமாக இருக்குமோ என்ற சந்தேகம் இருந்தது..) சிலைகள்.. சுவரில் மிளிர்ந்த அழகு மிக்க ஓவியங்கள்.. ஹாலின் மேற்கூரையிலிருந்து தொங்கிய லஸ்தர் விளக்குகளின் அழகு என்று அரண்மனையின் வரவேற்பறை அவளை அயர வைத்தது..

'இந்த மாளிகையில் அத்தையா..?'

இதுதான் அவளது மனதில் ஓடிய கேள்வி.. இவ்வளவு செல்வச் செழிப்பான மாளிகையில் தங்கை வசிக்கிறாள் என்று ஓர்நாளும் கங்காதரன் சொல்லிக் கொண்டதில்லையே.. பூனாவிற்கு வருடத்திற்கு ஓர்முறை வந்து போன அத்தையும், ஆர்த்தியும் இதைப்பற்றி மூச்சு விட்டதில்லையே.. இவ்வளவு ஏன்.. பிறக்கும் போதே தங்க ஸ்பூனைக் கவ்விக் கொண்டு பிறந்ததைப் போல அலட்டிக் கொள்ளும் ஆதவனும் வாய் திறந்ததில்லையே.. ஏன்..?

"வாம்மா ப்ரீதி.."

வரவேற்றபடி வந்த மாறன் அவ்வளவு பெரிய மாளிகையின் அதிபதியைப் போல இல்லாமல் வெகு எளிமையாக இருந்தார்.. எப்போதும் போல சாந்தம் தவளும் கண்கள்.. விட்டால் மலையில் இருக்கும் ஏதேனும் ஓர் பாறைமீது அமர்ந்து தவம் செய்ய ஆரம்பித்து விடுபவரைப் போன்ற தோற்றம்..

'இருக்கிறதும் மலைப் பிரதேசம்தான்.. இவருக்கு எப்படி காதல் வந்தது..?'

இன்றுவரை ப்ரீதியின் மனதைக் குடைகிற சந்தேகம் இதுதான்.. தபஸ்வியைப் போல இருக்கும் மாறன் விசாகாவைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார் என்கிறார்களே.. அது உண்மையா..?

விசாகாவும் மாறனும் ஒரே கல்லூரியில் படித்தவர்களாம்..

"வால்பாறை பக்கத்திலே இருக்கிறவன் கோயம்பத்தூரில படிக்கிறதை விட்டு விட்டு பூனாவுக்கு ஏன் வந்து

தொலைத்தான்.." என்று சமயம் கிடைக்கும் போதெல்லாம் மாறனை திட்டித் தீர்ப்பார் கங்காதரன்..

பூனாவில் படிக்க வந்தவர் காதலித்தார்.. சரிதான்.. காதலிக்கிற வயதில் காதல் வந்திருக்கிறது.. காதலித்து விட்டார்.. காதலித்த விசாகாவை முறைப்படி கோவிலில் வைத்துத் திருமணமும் செய்து கொண்டார்.. அதுவும் சரிதான்.. காதலுக்கு அடுத்து கல்யாணம்தானே.. இதுவரை சரியாகப் போய் கொண்டிருந்தது இடையில் ஏன் பிசகியது..?

அதுதான் ப்ரீதிக்கு இதுநாள்வரை தெரியாத ரகசியமாக இருந்தது.. காதலியைக் கைவிடாமல் முறைப்படி திருமணம் செய்து கொண்ட மாறன் எதற்காக மனைவியைத் தன்னுடன் அழைத்துச் செல்லாமல் மைத்துனரின் வீட்டில் விட்டார்.. இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பன் ஆன பின்பும் ஏன் வந்து வந்து போனார்.. இதனால் மனைவி எந்த அளவுக்கு மன உளைச்சலுக்கு ஆளாவாள் என்று புரிந்து கொள்ள முடியாத முட்டாளா அவர்..? மெத்தப் படித்தவர்.. மேதாவி.. சாந்த சொரூபி.. அந்த மகான் தன் மனைவிக்குச் செய்தது அநியாயம்.. என்னதான் திருமணமாகி பதினாறு வருடங்கள் கழித்து மனைவியைத் தன்னுடன் அழைத்துச் சென்றாலும் அவர் விசாகா அத்தைக்கு இழைத்தது அநீதிதானே..

அந்த வகையில் தன் அப்பாவின் கோபத்தில் நியாயம் இருப்பதாகவே ப்ரீதி நினைத்தாள்.. எந்த அண்ணன்தான் தங்கைக்கு அநியாயம் நடந்தால் பார்த்துக் கொண்டு இருப்பான்..?

சின்னஞ்சிறு வயதிலிருந்து பருவ வயதுக்கு மாறிய காலகட்டத்தில் ஆதவனின் பார்வையும் மாறத் தொடங்கி விட்டதைப் ப்ரீதியின் பெண்மைக்கே உரிய நுண்ணறிவு உணர்ந்து கொண்டது.. அதன்பின் ஆதவனிடம் அதிகமாக பேச மாட்டாள்.. அனைத்து அரட்டையும் ஆர்த்தியிடம்தான்.. அவளிடம் மாறனைப் பற்றி ப்ரீதி கேட்டிருக்கிறாள்.. ஏன் அவர் விசாகாவை அழைத்துச் செல்லாமல் பூனாவிலேயே இருக்க வைத்திருந்தார் என்று தூண்டித் துருவியிருக்கிறாள்.. ப்ரீதி எதைக் கேட்டாலும் பதில்

சொல்லும் ஆர்த்தி அதற்கு மட்டும் பதில் சொல்ல மாட்டாள்.. மௌனமாகி விடுவாள்..

மௌனம் என்பது தப்பிக்க விரும்புபவர்க்கு பாதுகாப்பு கேடயமாகி வருகிறது.. மௌனத்தை உடைத்து உள்புகுதல் என்பது சிரமமான ஒன்று..

அந்த அரண்மனைக்குச் சற்றும் பொருந்தி வராத மாறன்தான் அரண்மனையின் அதிபதி என்பதை ஏற்றுக் கொள்வது ப்ரீதிக்குச் சிரமமான ஒன்றாக இருந்தது..

"விசாகா ப்ரீதிக்கு குடிக்க ஏதாவது குடுத்தாயா..? ஆர்த்தி உன் மாமா மகளுக்கு ரூமைக் காட்டும்மா.. ரெஸ்ட் எடுக்கட்டும்.."

அவ்வளவுதான்.. தன் வேலை முடிந்தது என்று கைகள் இரண்டையும் பின்பக்கமாக கோர்த்துப் பிடித்தபடி மாறன் மலையிறங்கி.. அதாவது படியிறங்கி விட்டார்.. அந்த அரண்மனைதான் குன்றின் மீது அமர்ந்திருப்பதைப் போல உயரமாக அமைந்திருக்கிறதே.. படியேறுவதற்குள் மூச்சு முட்டி விட்டதே..

"என்னடி.. அப்பாவையே பார்த்துக்கிட்டு நிற்கிற..?"

"ஆஹா..! என்னருமை மாமா இவ்வளவு நீளமாய் பேசிட்டாரேன்னு 'ஷாக்' ஆகிட்டேன் ஆர்த்தி.."

"ஜோக்கு..?"

"சிரிப்பு வரலையா..?"

"நிறைய வருது.. உன் ஊமை மாமா இவ்வளவு நீளமாப் பேசினா உனக்கு ஷாக் வரத்தான் செய்யும்.."

"தெரியுதில்ல.."

"ஊம் தெரியுது.."

"என்ன தெரியுது..?"

"உன் ஷாக்கும் தெரியுது.. வனிதாமணி கொண்டு வர்ற காப்பியும் தெரியுது.. குடி, குடி.."

"வனிதா மணியா..? அது யாருடி..?" திரும்பிய ப்ரீதியிடம்..

"ஹி.. ஹி.. நான்தாம்மா அது.." என்று வாய் நிறைய சிரித்தபடி காபி கப்பை நீட்டினாள் வனிதாமணி..

இதழின் இந்தக் கடைசியிலிருந்து அந்தக் கடைசி வரை 'ஈ'யென சிரிக்கும் சிரிப்பைப் பார்த்து பயந்து போன ப்ரீதி 'கப்-சிப்' என அமைதியாகி கப்பைக் கைப்பற்றிக் கொண்டாள்.. வனிதாமணி அந்தப் பக்கம் நகர, இவள் இந்தப் பக்கம் ஆர்த்தியிடம் குனிந்து..

"யாருடி இவ..?" என்றாள்..

"இந்த மாளிகையில் சேவகி.."

"வேலை செய்கிற பெண்ணா..?"

"அஃதே.."

"இவ ஏண்டி இப்படிச் சிரிக்கிறா..? சரியான மணிபர்ஸ் வாய்.."

"அதுதான் அவளோட டிரேடு மார்க்.. வால்பாறையின் லேடி மதன்பாப்... எதுக்கெடுத்தாலும் சிரிப்பா.."

"கொடுமைடி.."

"நமக்குத்தான் கொடுமை.. அவளுக்கு என்ஜாய்மெண்ட்.."

விசாகா ஊர்க்கதைகளைக் கேட்க.. சோபாவில் கால் மடக்கி சம்மணம் போட்டு அமர்ந்தபடி சளைக்காமல் கதை பேசியபடி காபியைக் குடித்து முடித்தாள் ப்ரீதி..

"ஹி..ஹி.. காபிக் கப்பை.. ஹி.. ஹி.. தாங்க.. ஹி..ஹி.."

வனிதாமணியின் வரவில் ப்ரீதியின் கையிலிருந்த காபிகப் தவறி விழ இருந்து..

"இப்படிக் கொடு.." என்று ஆர்த்தி வாங்கிக் கொண்டதால் மயிரிழையில் உடையாமல் தப்பித்தது..

"அம்மா.. ஹி..ஹி.. யாருன்னு ஹி..ஹி.." வனிதாமணி நகர்வேனா என்று அடம் பிடித்தாள்..

"வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளியை முதல் நாளிலேயே ஓட வைத்து விடாதே வனிதா.."

"வனிதா மணிங்கம்மா.. ஹி ஹி.."

"இதையெல்லாம் மணிமணியாய் பேசு.. சிரிக்கிறதை மட்டும் நிப்பாட்டி விடாதே.."

"ஹி..ஹி.. என்னங்கம்மா.. ஹி..ஹி.. இப்படிச் சொல்கிறீங்க.."

"அதோ.. அங்கே வர்றது யாரு..? வண்டாற்குழலியா..?"

ஆர்த்தி கேட்டு வாய் மூடியிருக்க மாட்டாள்.. வனிதாமணி 'டிஷ்' என்று மாயமாய் மறைந்து விட்டாள்..

"என்னடி இவளைக் காணோம்.." ப்ரீதி சோபாவுக்கு அடியில் எல்லாம் குனிந்து பார்த்தாள்..

"வண்டாற்குழலி வர்றான்னு சொன்னதுமே இவ வண்டா மாறிப் பறந்து போயிருப்பா.. விட்டுத்தள்ளு.."

"வண்டாற்குழலியா..? யாருடி அது..?"

"நமக்குச் சமையல் வேலை செய்கிறவங்க.. நம்ம வனிதாமணிக்கோ அண்ணி.. எப்பவும் சிரிச்ச மூஞ்சியா இருக்கிற வனிதாமணியோட மூஞ்சிய அழுவாச்சி மூஞ்சியா ஆக்கற சக்தி நம்ம வண்டாற்குழலிகிட்ட மட்டும்தாண்டி இருக்கு.."

"வண்டாற்குழலி.. வனிதாமணி.. பெயரே அழகாய் இருக்கில்ல.."

"இதுகளும் அழகாய்த்தான் இருக்கும்ங்க.. மலைவாழ் ஜனங்க.. மனதில் இருக்கிற கோப தாபத்தை அப்படியே கொட்டித் தீர்த்து விடுவாங்க.. சூதுவாது இல்லாத மனது.."

ஆர்த்தி சொல்வதை உன்னிப்பாக செவி மடுத்தாள் ப்ரீதி..

"நானென்ன லெச்சராடி கொடுக்கிறேன்..?" ஆர்த்தி செல்லமாக கோபித்தாள்..

"இங்க இருக்கறவங்கதான் சூதுவாது இல்லாதவங்க.. பூனாவில் பிறந்து வளர்ந்த நாம எல்லாம் மனதில் சூது வாது வைத்திருக்கிறவங்க.. அப்படித்தானே.." நிஷ்டூரமாகக் கேட்டான் ஆதவன்..

"இவன் ஒருத்தன்.. யதார்த்தமாப் பேசினாக்கூட வில்லங்கமா எடுத்துக்கிட்டு சண்டைக்கு வருவான்.." அலுத்துக் கொண்ட ஆர்த்தி..

"ஏய்.. நீ வாடி.. உன் ரூமைக் காட்டறேன்.. ஏரோடிராமில இருந்து இவன்கூட காரில வந்திருக்கிற.. முறைச்சு

முறைச்சு உன்னைக் கடுப்படிச்சுருப்பான்.. கடுப்புப் போக சுடுதண்ணீரில குளிச்சுட்டு தூங்கி எழுந்திரு.. பிரஷ்ஷாகிருவ.." என்றபடி ப்ரீதியை எழுப்பினாள்..

"களைப்பு போகத்தானே சுடு தண்ணியில் குளிப்பாங்க..?" விசாகாவிற்கு சந்தேகம் வந்து விட்டது..

"அது மத்தவங்களுக்கு.. உங்க மகன்கூட டிராவல் பண்ணினா கடுப்பு களைப்பை மிஞ்சிரும்.."

தாய்க்கு விளக்கம் கொடுத்து விட்டு ப்ரீதியுடன் பேசியபடி மாடிப் படிகளில் ஏறினாள் ஆர்த்தி.. ப்ரீதியின் பெட்டி ஏற்கனெவே வனிதாமணியின் கைவரிசையால் மாடியேறி விட்டதாம்.. கலகலத்துப் பேசியபடி ஏறிட்டுப் பார்த்த ஆர்த்தியின் பேச்சு நின்று விட்டது.. படு அமைதியாகி விட்ட அத்தைமகளை விசித்திரமாகப் பார்த்த ப்ரீதி தானும் ஏறிட்டாள்.. எதிரே கண்டிப்பான பார்வையும் கடுமையான முகமுமாக ஆஜானுபாகுவாக ஓர் மனிதர் இறங்கி வந்து கொண்டிருந்தார்.. எண்பது வயதிற்கு மேலிருக்கும்.. மலைவாழ் மக்களுக்கே உரிய உறுதியான உடல்வாகு.. ஓங்கி உயர்ந்த நெடுமரம் போன்ற உருவம்.. இவ்வளவு உயரமா என்று ஆச்சரியப்பட்டுப் போனாள் ப்ரீதி.. இவர் யார்..? எதற்காக ஆர்த்தி அவரைக் கண்டதும் அமைதியாகி விட்டாள்..?

# 7

**என் ஆன்மாவின் அந்தரங்கம்**
**உனக்காக உருகுவதை**
**இந்த ஆரண்யம் சொல்லவில்லையா..?**

நெடுநெடுவென உயரமாக இருந்த அந்த மனிதரின் பார்வை ப்ரீதியை அளவிட்டது.. துளைக்கும் பார்வை என்று கூடச் சொல்லலாம்.. அளவிட்ட அந்தப் பார்வையில் சினம் கொண்டாள் ப்ரீதி.. அவளுடைய அத்தையின் வீட்டிற்கு வந்திருக்கிறாள்.. இவர் யார் அவளை லேசர் பார்வை பார்க்க..?

'யார் நீங்கள்..?' ப்ரீதி கேள்வி கேட்க வாய் திறப்பதற்குள்..

"இவள் எங்க மாமா மகள்.. பூனாவிலிருந்து வந்திருக்கிறா.." என்ற குற்றம் செய்து விட்டவளைப் போல தழைந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தாள் ஆர்த்தி..

'இது ஆர்த்திதானா..?' ப்ரீதிக்கு நம்ப முடியவில்லை..

அவளறிந்த ஆர்த்தி துணிச்சலானவள்.. எவருக்கும் அஞ்சாதவள்.. மனதிலிருப்பதை அப்படியே போட்டு உடைத்து விடுபவள்..

அவளா.. எவரோ ஒரு நெடியவரின் பார்வை கேட்ட கேள்விக்குப் பம்மிப் பதில் சொல்கிறாள்..? இந்தப் பதவிசு எதற்கு..?

"ம்ம்ம்.."

ஒற்றை வார்த்தை கூட உதிர்க்காமல் அனுமதிக்கும் பாவனையில் முணுமுணுத்து விட்டு அவர் இறங்க ஆரம்பிக்க.. அவசரமாக ப்ரீதியை கீழே தள்ளி விடாத குறையாக படியின் ஓரத்துக்குத் தள்ளி விட்டு வழி விட்டாள் ஆர்த்தி.. ப்ரீதிக்குப் பற்றிக் கொண்டு வந்தது.. என்னடி நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்று சுடச்சுட நான்கு கேள்விகளைக் கேட்டு விட வேண்டும் என்று வாயைத் திறந்தால் அதை எதிர்பார்த்திருந்தவளைப் போல ப்ரீதியை வாயை இறுக்கிப் பொத்தி இழுத்துக் கொண்டு படியேறினாள் ஆர்த்தி.. மாடிஹாலில் அவர்கள் கால் வைத்த பின்னால்தான் ப்ரீதிக்கு விடுதலையே கிடைத்தது..

வேக வேகமாக மூச்சு வாங்கியபடி இடுப்பில் இரு கைகளையும் வைத்து சண்டைக்கோழியானாள் ப்ரீதி..

"தெரியாத்தனமா உங்க வீட்டுக்கு கெஸ்ட்டா வந்து விட்டேன்ங்கிறதுக்காக நீ இப்படியெல்லாம் செய்வியா..?"

"இல்லடி ப்ரீதி.. நீ எதையாச்சும் பேசிருவியோன்னுதான்.."

"பேசினால் என்ன..? பேசத்தான் வாய் திறந்தேன்.."

"அது தெரிந்துதான் உன் வாயைப் பொத்தினேன்.."

இப்படிச் சொல்பவளை என்ன செய்வது என்ற கொலை வெறியோடு வெறித்துப் பார்த்தாள் ப்ரீதி.. கண்கள் கலங்க.. உதடுகள் துடிக்க.. வேறு திசை பார்த்தாள் ஆர்த்தி..

ப்ரீதிக்கு மனம் தாங்கவில்லை.. அவளுடைய அன்புத்தோழியா இப்படி அலைபாய்கிறாள்..?

"யாருடி இவர்..?" மனம் தாளாமல் விசாரித்தாள்..

"தொண்டைமான்.."

"தொண்டைமானா.. இப்படியும் பெயர் வைப்பாங்களா..?"

"ராஜவம்சத்தில் வைப்பாங்க.."

"ஓ... இவர் ராஜா வம்சமா..?"

"ம்ம்ம்.. ராஜா தொண்டைமான்.."

"இவர் ஏன் உங்க வீட்டில் தங்கியிருக்கிறார்..?"

"என்னடி சொன்ன..?"

கண்களில் வழியும் கண்ணீரோடு சிரிக்க யாரால் முடியும்..? ஆர்த்தியால் முடியும் என்பதை அன்று அறிந்தாள் ப்ரீதி.. கண்களில் பொங்கி வழியும் கண்ணீரோடு வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள் ஆர்த்தி..

"நீ இருக்கியே.. கேட்கிற கேள்விகளிலேயே ஆளை சிரிக்க வைச்சிருவ.. போடி போ.. அவர் எங்க வீட்டில் தங்கியிருக்கிறாரா..? குட் ஜோக்.. வெளியில் சொல்லிராதே.. மொத்து வைச்சிருவாங்க.."

"இது உங்க வீடுதானேடி ஆர்த்தி.."

ஆர்த்தி முகத்தைத் துடைத்துக் கொண்டு மாமன் மகளை வாத்சல்யத்துடன் பார்த்தாள்.. ப்ரீதியின் முடிகோதி கன்னத்தில் தட்டினாள்..

"பல வருச கதையை ஒரே நிமிசத்தில் சொல்லிவிட முடியாது ப்ரீதி.. உன் கேள்விக்கு நிச்சயம் பதில் கிடைக்கும்.. இப்போது இல்லை.. வா.. உன் ரூமைக் காட்டறேன்.."

ப்ரீதி நின்று நிதானமாக மாடி ஹாலை பார்வையிட்டாள்.. இதுவும் பெரிதுதான் என்றாலும்.. தரைத்தளத்தில் இருந்த ஹாலைப் போல பெரியது அல்ல.. அதில் பத்தில் ஒரு பங்குதான் இருக்கும்.. இதுவே பிரம்மாண்டமாக இருந்தது.. தரைத் தளத்தில் சுவர்.. அதில் ஓவியங்கள் என்று இருந்தால் இங்கே சுவருக்குப் பதில் கண்ணாடிக்

கதவுகளுடன் கூடிய ஜன்னல்கள் இருந்தன.. கனத்த திரைச்சீலைகள் ஒதுக்கி, ஓரம் கட்டி விடப் பட்டிருந்ததில் தெரிந்த மேற்கு தொடர்ச்சி மலைகளின் பசுமையும்.. மலை முகடுகளில் மையம் கொண்டிருந்த மேகங்களும்.. சரிவில் யாரோ பச்சை வண்ணத்தில் கட்டம் கட்டி வைத்திருப்பதைப் போன்ற தேயிலைப் பாத்திகளும்.. அடர்ந்த காடுகளும்.. செடி கொடிகளும்.. அருவிகளும்.. நீரோடைகளும் என புதியதோர் உலகம் ப்ரீதியை ஈர்த்ததில் பரவசப் பட்டு அப்படியே நின்று விட்டாள்..

"வாவ்.. உங்க ஊர் ரொம்பவும் அழகுடி ஆர்த்தி.."

நொடிப்பொழுதில் கேள்விகளை மறந்து இயற்கையின் அழகில் லயித்து விட்ட ப்ரீதியின் குழந்தைத்தனத்தில் கரைந்த போன ஆர்த்தி..

"நாளையில் இருந்து ஊரைச் சுற்றிப் பார்க்கலாம்.." என்றாள்..

"காடு.."

"காடில்லாத ஊரா..?"

"அப்பச்சரி.."

ப்ரீதி உற்சாகத்துடன் ஆர்த்தியின் பின்னால் போனாள்.. அவளுக்கான அறையின் கதவு திறந்து விடப் பட்டது.. மறுபடியும் ஒரு 'வாவ்..' கன்னங்களில் கை வைத்து விழி விரித்தல்..

"உலக அழகி பட்டத்த ஜெயிச்சவ கூட இப்படி ரியாக்ட் பண்ண மாட்டாடி.." தலையில் அடித்துக் கொண்டாள் ஆர்த்தி..

அழகாக விரிந்து பரந்த அறையில் கனத்த திரைச்சீலைகள் மறைத்த கண்ணாடி ஜன்னல்கள்.. அதன் பக்கத்தில் சதுரம் கட்டிப் போடப்பட்டிருந்த சோபாக்கள்.. நடுவில் கண்ணாடி டீப்பாய்.. தரை முழுவதும் காஷ்மீர் கம்பளம்.. இந்தப் பக்கமாக சுவரில் பெரிய டி.வி. அதற்கு நேர் எதிரே பெரிய கட்டில்.. நுரை மெத்தை.. அருகே கண்ணாடி டீப்பாய்.. அறையின் நடுவே இருந்த கதவைத் திறந்தால் உடை மாற்றும் அறை.. சுவர் முழுவதும் அலமாரிகள்..

நடுவே டிரஸ்ஸிங் டேபிளும், ஆளுயுயரக் கண்ணாடியும்.. அதையொட்டிக் குளியலறை..

"செம.. செம.. செமடி.."

ஆர்த்தி பதிலேதும் சொல்லவில்லை.. இப்படி வியக்கும் ப்ரீதி பங்களாவாசி.. பூனாவில் கங்காதரன் சொந்தமாக ஆட்டோமொபைல் ஷாப்பும், டிபார்ட்மெண்டல் ஸ்டோரும் நடத்தி வந்தார்.. வி.ஐ.பி ஏரியாவில் பங்களா, கார் என்று இருப்பவரின் மகள்தான் ப்ரீதி.. அவளே வாய் பிளக்கிறாள் என்றால் அது மிகையல்ல.. அரண்மனை போன்ற அந்த மாளிகையின் அழகும், செல்வச் செழிப்பும், நேர்த்தியும் அப்படிப்பட்டதுதான்.. அதன் அருகே கூட கங்காதரனின் வசதி வந்துவிட முடியாது..

"ரசித்தது போதும்.."

"எனக்குப் போதாதே ஆர்த்தி.."

"இங்கேதானே இருக்கப் போகிற.. கொஞ்சம் கொஞ்சமாய் ரசித்துக்கலாம்.."

ஆர்த்தி கதவை அடைத்து விட்டுப் போனாள்.. உள்ளே தாழிட்ட ப்ரீதி.. ஜன்னலை மறைத்திருந்த கனத்த திரைச்சீலையை விலக்கினாள்.. ஹாலில் பார்த்த அதே இயற்கை காட்சி.. கானகத்தின் மத்தியில் அவள் இருப்பதைப் போன்ற உணர்வு.. சற்றுநேரம் அப்படியே நின்றவள் மூட மனமின்றி திரைச்சீலையை இழுத்து மூடினாள்..

வனிதாமணி கொண்டு வந்து வைத்திருந்த பெட்டிகளை உடை மாற்றும் அறைக்குள் இழுத்துச் சென்றவள அங்கிருந்த சுவர் அலமாரியில் பெட்டியிலிருந்த உடைகளை எடுத்து சீராக அடுக்கி வைத்தாள்.. காலி பெட்டிகளை மூடி அலமாரியின் அடித்தட்டில் வைத்தவள் வெட்டி முறித்து விட்டதைப் போல கைகளை நெட்டி முறித்தாள்.. குளியலறைக்குள் எட்டிப் பார்த்தவள் மயங்கி விழாத குறைதான்.. மிகப் பெரிய அறையொன்றை குளியலறையாக மாற்றி அமைத்திருந்ததைப் போல அது பெரிதாக இருந்தது.. நீண்டு அகன்ற பாத்-டப்பில் வெந்நீரை நிரப்பிக் கை - கால்களை நீட்டிப் படுத்தவளுக்கு

அலுப்பெல்லாம் ஓடி விட்டது.. சடுகுடு விளையாடாத குறைதான்.. குளித்து உடை மாற்றிக் கட்டிலில் விழுந்தவளைக் கனவுகளற்ற தூக்கம் ஆக்ரமித்துக் கொள்ள.. இமைகள் செறுக சரிந்தவள் தூங்கி விட்டாள்.. அறையின் காலிங் பெல் அலறி அவளை எழுப்பி விட்டது.. ப்ரீதிக்கு எழுந்து கொள்ள மனமில்லை.. அவளது ஆழ்ந்த தூக்கத்தைக் கலைத்தது யார் என்ற கோபத்தோடு போய் கதவைத் திறந்தால்..

"ஹிஹி.. அம்மா.." என்று லேடி மதன்பாப்பாக வனிதாமணி நின்றிருந்தாள்..

அலறாத குறையாக தன்னையுமறியாமல் பின் வாங்கிய ப்ரீதிக்குத் தூக்கம் பறந்து விட்டது..

"வ...வ.. வனிதா.." என்றாள்..

"ஹி..ஹி.. என் பேரு.. ஹி..ஹி.. வ.. வ.. வனிதா இல்லம்மா.. ஹி..ஹி.. வனிதாமணி.."

"என்னவோ ஒன்று.. இப்போ எதுக்கு என் தூக்கத்தை விரட்டின..?"

"நான் எங்கேம்மா விரட்டினேன்..?"

தன்மீது சுமத்தப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டில் சிரிக்க மறந்த வனிதாமணி ஓடி விட்ட தூக்கத்தைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து விடவேண்டும் என்ற தீவிரத்தோடு அறைக்குள் எட்டிப் பார்த்தாள்..

"இங்கே ஒன்றுமேயில்ல.." தூக்கம் கலைந்த எரிச்சலுடன் சொன்னாள் ப்ரீதி..

"ஹி..ஹி.. நீங்க இருக்கீங்களேம்மா.."

"அதுக்கு..?"

"ஒன்றுமேயில்லைன்னு.. ஹிஹி.. சொல்கிறீங்களேம்மா.. ஹிஹி."

சிரிக்கும் போது வனிதாமணி வேறு விதமான அழகோடு மிளிர்ந்தாள்.. சிரிப்பு என்பது மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்வைத் தரும் அருமருந்து..! சிரிக்கத் தெரிந்தவர்கள் பாக்கியசாலிகள்..! வனிதாமணியின் சிரிப்பைப் பார்த்து பயந்து பூனாவுக்கு ஓடிவிடாமலிருக்க

இப்படியெல்லாம் நினைத்துத் தன்னைத் தேற்றிக் கொண்டாள் ப்ரீதி..

வேறு வழியில்லை.. விசாகா அத்தை இருக்கும் அந்த அரண்மனையில் கொஞ்ச காலம் தங்க வேண்டுமென்றால் வனிதாமணியின் சிரிப்பை ரசிக்கக் கற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்..

"பரவாயில்லையே.. நீ கூட ஜோக் அடிக்கிறயே.."

"நிஜமாவாம்மா..?"

பாராட்டைக் கேட்ட பரவசத்தில் சிரிக்க மறந்தாள் வனிதாமணி.. அவளை திசை திருப்ப இப்படியொரு வழியுண்டு என்று கண்டு பிடித்து விட்டதில் தன்னை கொலம்பஸ் போல உணர்ந்து புளகாங்கிதப்பட்டுப் போனாள் ப்ரீதி.. இல்லையென்றால் வனிதாமணி சிரித்துச் சிரித்தே ப்ரீதியை ஒருவழியாக்கி பூனாவிற்கு ஓட்டி விட்டு விடுவாளே..

'இதை இப்படியே விட்டு விடக் கூடாது.. ப்ரீதி.. கோழியை அமுக்கிறயோ இல்லையோ.. இவளை அமுக்கிருடி..'

ப்ரீதி வனிதாமணியை உற்றுப் பார்த்ததில் உவகை கொண்டாள் வனிதாமணி.. வடக்கத்திய ஊரிலிருந்து வந்திருக்கும் அழகி அவளை உற்றுப் பார்ப்பது பெருமையல்லவா..

"என்னம்மா.. அப்படிப் பார்க்கறீங்க.. ஹிஹி.."

"ஆரம்பிச்சுட்டியா.. இந்த 'ஹிஹி' யை கொஞ்ச நேரம் ஏறக்கட்டேன்.."

"எப்படிம்மா..? ஹி..ஹி.."

"ஆக்சுவலா வனிதாமணி.. நீ சிரித்தா.."

"நான் சிரித்தா..?"

ப்ரீதி என்ன சொல்லி பாராட்டப் போகிறாள் என்ற எதிர்பார்ப்பில் வனிதாமணியின் கண்கள் மின்னின..

'பாராட்டைக் கேட்டா மட்டும் சிரிக்க மறந்து விடறா..'

அப்படியே வனிதாமணியின் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைக்க ப்ரீதியின் கை பரபரத்தது.. அடக்கிக் கொண்டாள்..

குட்டு வைப்பது தற்காலிகத் தீர்வு.. ப்ரீதி நிரந்தரத் தீர்வைக் கண்டு பிடித்தாக வேண்டும்.. தற்காலிகத் தீர்வு வேலைக்கு ஆகாது..

நீ சிரித்தால் தீபாவளி என்ற பாராட்டைக் கேட்கக் காத்திருந்த வனிதாமணியின் காதுகளில்..

"நீ சிரித்தா அச்சு அசல் லூசு போலவே இருக்கு.." என்ற வார்த்தைகள் வெந்நீர் போல பாய்ந்தன..

"அம்மா.." அலறினாள் அவள்..

"அதிகமாப் பேசற ஆம்பளையையும் அதிகமாச் சிரிக்கிற பொம்பளையையும் பார்க்கச் சகிக்காதுன்னு சொல்வாங்க வனிதாமணி.."

"யாரும்மா சொல்லுவாங்க..?"

'யார் சொல்வாங்க..?' ப்ரீதிக்கும் தெரியவில்லை..

வனிதாமணியின் சிரிப்பை (இளிப்பை) நிறுத்த அவள் வாய்க்கு வந்த எதையோ சொன்னால் வனிதாமணி குறுக்குக் கேள்வி கேட்பாளா..? இப்போது யார் சொன்னது என்பதை சொல்லியாக வேண்டுமே..

"ஆ.. பெரியவங்க சொல்வாங்க.." ப்ரீதி கண்டு பிடித்துச் சொல்லி விட்டாள்..

"அப்படிங்களாம்மா..?" பெரியவர்கள் என்றதும் வனிதாமணி அடங்கி விட்டாள்..

"ஆமாம் வனிதாமணி.. நீ பார்க்க அழகா இருக்கிற.."

"அப்படிங்களா..?"

வனிதாமணி வாயெல்லாம் பல்லானாள்.. இந்த சந்தோசத்தில் சிரித்துத் தொலைத்து விடப் போகிறாளே என்று ப்ரீதிக்கு 'பக்.. பக்' என இருந்தது.. அவள் பயந்ததைப் போல எதுவும் நிகழ்ந்து விடவில்லை.. ஆன்றோரின் வாக்கிற்குக் கட்டுப்பட்டவளாய் வனிதாமணி சிரிப்பைத் துறந்திருந்தாள்.. அப்பாடி என்ற மன நிம்மதியுடன்..

"அப்படித்தான் வனிதாமணி.. அமைதிதான் பெண்களுக்கு அழகு.." என்றாள் ப்ரீதி..

'நீ மட்டும் ஏன் வாயடிக்கிற..?' ப்ரீதியின் மனச்சாட்சி குறுக்கிட்டது..

'நீ வாயை மூடு..' ப்ரீதி மனச்சாட்சியை அடக்கி வைத்தாள்..

"நீங்க சொன்னா சரிங்கம்மா.. கீழே உங்களை சாப்பிட வரச் சொன்னாங்கம்மா.." கதவைத் தட்டிய காரணத்தைச் சொன்னாள் வனிதாமணி..

"இதை அப்பவே சொல்லியிருக்கலாமே.."

"மறந்துட்டேன்.."

"இனி மறக்காதே.."

துள்ளி ஓடிய வனிதாமணியைப் பார்த்தபடி அறைக்கதவை மூடிய ப்ரீதியின் வாய் தன்னிச்சையாக பாடி வைத்தது..

"வனிதாமணி.. வனமோகினி..

வந்தாடு...."

பாடியபடியே திரும்பியவள் அப்படியே நின்று விட்டாள்..

ஹாலில் ஜன்னலோரமாக நின்று நெடிய பெரியவருடன் பேசிக் கொண்டிருப்பது யார்..? அவனா..?

## 8

**காயாத கானகத்தில்**
**மேயாத மான் மனதில்**
**நர்த்தனமிடுவது உன் நினைவுகள் மட்டுமே..**

'நான் காண்பது கனவா.. இல்லை நனவா..?'

இமை கொட்டி விழித்தாள் ப்ரீதி.. அவன் நின்ற இடத்திலேயே நின்றிருந்தான்.. இமைகளைக் கசக்கி விட்டு விழித்துப் பார்த்தாள்.. அவன் உருவம் மறையவில்லை.. ஆரண்யத்தில் அவளை அதட்டியவன் அந்த அரண்மனையின் சொந்தக்காரனைப் போல வெகு சுவாதீனமாக தொண்டைமானுடன் பேசிக் கொண்டிருந்ததில் இவள் திகைத்துப் போனாள்..

'இவன் எப்படி இங்கே..?'

அவளுக்குப் புரியவில்லை.. அடிமேல் அடியெடுத்து வைத்து நடந்தாலும் அவள் அவர்களை நெருங்கி விட்டாள்.. பேசியபடியே அவன் அவளைத் திரும்பிப் பார்த்து விட.. இவளுக்கு 'திக்'கென்று ஆகி விட்டது.. அவனை மறுபடி பார்ப்போமா என்று நினைத்தவள்தான்.. இப்படியொரு அரண்மனையில் சந்திப்பாள் என்று நினைக்கவில்லையே..

அவளைக் கண்டதும் அவனது பார்வையில் வந்து போனது என்ன..? மின்னலா..?

எங்கே.. அவன்தான் நொடிப் பொழுதிற்கு மேல் உணர்ச்சிகளை முகத்தில் தக்க வைத்துக் கொள்ள மாட்டானே.. அவன் திரும்பிப் பார்த்ததில் தொண்டைமானும் திரும்பிப் பார்த்து விட்டு..

"இந்தப் பெண் நம் அரண்மனைக்கு விருந்தாளியாக வந்திருக்கிறாள் சித்தார்த்.. விசாகாவின் அண்ணன் மகளாம்.. ஊர் பூனாவாம்.." என்று அவனிடம் சொன்னார்..

'இவன் பெயர் சித்தார்த்தா.. ஆளைப் போலவே பெயரும் நல்லா இருக்கு..' அவள் மனம் ஜொள்ளியது..

"ஓ.." அப்போதுதான் அவளைப் பார்ப்பதைப் போல அவன் பாதாதி கேசம் முதல் பார்வையிட..

'ஆரம்பிச்சுட்டாண்டி.. ஆரம்பிச்சுட்டான்..' என்று அவளது மனம் குதூகலமடைந்தது..

'எதுடா சாக்குன்னு இருப்பான் போல.. சைக்கிள் கேப்பில பிளேனையே ஓட்டிடறான்..'

அவள் அவனைக் குறும்பாக பார்த்த பார்வை உன்னை நான் அறிவேன் என்றது.. ஆரண்யத்தில் அவளை அறிந்திருந்தவனோ.. அவளை முன்பின் பார்த்திராதவன் போல..

"ஆர்த்தியின் மாமன் மகளா..?" என்றான்..

ப்ரீதிக்கு அவனை வம்பிழுக்க வேண்டும் போல இருந்ததில்..

"ஆதவனுக்கும் மாமன் மகள்.." என்றாள்..

சட்டெனத் திரும்பிப் பார்த்தவனின் கண்கள் தீக்கங்குகள் போல ஜொலித்ததில் அவளது முதுகுத் தண்டு ஜில்லிட்டது.. சீற்றத்துடன் அவன் முறைத்த முறைப்பில் பூனாவுக்கு ஓடிப் போய் விடலாம் போல நடுங்கி விட்டாள்..

'ஆர்த்தியை மட்டும் கேசுவலா பேசறான்.. ஆதவனைச் சொன்னா மட்டும் துப்பாக்கியைத் தூக்கறான்.. ஆடு பகை.. குட்டி உறவுன்னுதானே பாட்டி பழமொழி சொல்வாங்க.. இவன் என்னடான்னா.. ஆட்டுக்குட்டிகளிலேயே ஆண்குட்டி பகை, பெண்குட்டி உறவுங்கிறதைப் போல பிஹேவ் பண்றானே..'

"கேட்டேனா..?" அவன் உறுமினான்..

'என்ன கேட்கிறான்..?' அவள் திருதிருத்தாள்..

"ஆதவன் உனக்கு மாமனா, மச்சானான்னு நான் கேட்டேனா..?"

'இவன் அதை விட்டு நகரவே மாட்டான் போல..'

ப்ரீதி அழ மாட்டாத குறையாக தொண்டைமானைப் பார்த்தாள்.. அவரும் இவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.. சித்தார்த்தனைப் போலவே உணர்ச்சிகள் துடைத்த முகம்.. ஒரு வித்தியாசம் என்னவென்றால் அவ்வபோது அவன் கண்களில் மின்னல் வந்து போகும்.. இவரோ ஒட்டும் இல்லாமல் உறவும் இல்லாமல் கண்டிப்பாக பார்த்து வைத்தார்..

தொண்டைமானைப் பார்ப்பதற்கு சித்தார்த்தனைப் பார்ப்பதே சாலச்சிறந்தது என்று அவன் பக்கமாக திரும்பிக் கொண்டாள் ப்ரீதி.. அவனாவது முறைப்பதில் சிறிதளவு சொந்தத்தைக் காண்பிக்கிறான்.. இந்த மனிதர் 'யார்.. நீ..?' என்று தள்ளி நிறுத்துகிறாரே..

'ஆர்த்தி.. இவங்களிடம் என்னை மாட்டி விட்டுட்டு எங்கேடி போய் தொலைஞ்ச..? சாப்பிடக் கூப்பிட அந்த லேடி மதன்பாய் வனிதாமணியைத்தான் அனுப்பித் தொலைக்கனுமா..? நீ வந்து தொலைத்திருக்கக் கூடாதா..?'

"என்ன..? பதிலைக் காணோம்.."

"தெரியலை சார்.. நானும் தேடிக்கிட்டுத்தான் இருக்கேன்.. இது மலைப்பிரதேசம் பாருங்க.. ஏதாச்சும் பறவை வந்து என் பதிலைத் தூக்கிக்கிட்டுப் போயிருச்சோ என்னவோ.."

கையை விரித்து அவள் பதில் சொன்ன பாணியில் அவனது உக்கிரம் குறைந்ததைப் போல இருந்தது.. தொண்டைமானைப்பற்றி அவள் கவலை கொள்ளவில்லை.. அவர் கண்களை விரித்தால் அவளுக்கென்ன.. கண்களை இடுக்கினால் அவளுக்கென்ன..?

"அப்ப.. பதில் சொல்ல மாட்ட..?"

"என்னத்தைப் பதில் சொல்றது..? ஆதவன் எனக்கு அத்தான்.. நீங்க என்னடான்னா மாமனா, மச்சானான்னு கேட்கறிங்க.."

வேண்டுமென்றே சொன்னாள்.. ஆதவனை அவள் அத்தான் என்று சொன்னால் அவனுக்கு மிளகாயைக் கடித்ததைப் போல இருக்கும் என்று தெரிந்து கொண்டேதான் சொன்னாள்.. அவள் எதிர்பார்த்தைப் போலவே அவன் உக்கிரமூர்த்தியாக இவள் சிட்டாகப் பறந்து படிகளில் இறங்க ஆரம்பித்தாள்..

"இந்தப் பெண்ணை உனக்குத் தெரிந்திருக்கிறது போல.."

தொண்டைமான் சித்தார்த்தனிடம் கேட்டுக் கொண்டிருந்தது இவள் காதில் விழுந்தது.. அவன் என்ன பதிலைச் சொல்கிறான் என்று கேட்க வேண்டுமென்றால் நிற்க வேண்டும்.. அப்போதைக்கு அது முடியாது.. நில்லாமல் ஓடி விடுவதே நல்லது என்பதினால் அவர்களது உரையாடலைக் கேட்காமல் அவள் ஓடி விட்டாள்..

மூச்சிரைக்க டைனிங் ஹாலுக்கு வந்தவளைப் பார்த்த விசாகா பதறிப் போனாள்..

"ஏன் கண்ணு.. இப்படி ஓடி வர்ற..?" என்று தாங்கிப் பிடித்துத் தோளில் சாய்த்துக் கொண்டாள்..

"அத்தையும், மருமகளும் கொஞ்சியாகிறதா..?"

ப்ரீதியைத் தின்று விடுவதைப் போல பார்த்தபடி ஆதவன் வந்தான்.. விசாகாவின் முகம் விகசித்தது..

"உனக்கு ஏண்டா பொறாமை..?" செல்லமாக அதட்டினாள்..

ப்ரீதி குற்ற உணர்வுடன் விலகிக் கொண்டாள்.. விசாகாவின் மனதிலிருந்த ஆசை வெளிப்படையாகவே தெரிந்தது.. அவள் ப்ரீதியை அண்ணன் மகளாக மட்டும் பார்க்காமல் ஆதவனின் வருங்கால மனைவியாக.. அவளது வருங்கால மருமகளாகப் பார்க்க ஆரம்பித்து விட்டதை ப்ரீதியால் உணர முடிந்தது.. அவளுக்குச் சங்கடமாக இருந்தது.. இயல்பான சொல்லாடல்கள் கூட இனி மறைமுகமாக இந்த உறவை உணர்த்த ஆரம்பிக்கும்..

'இங்கே வந்தது சரிதானா..?'

சஞ்சலப்பட்டபோது சித்தார்த்தனின் முகம் மனதில் வந்தது.. நெருஞ்சி முள்ளாய் நெருடிய வேதனை மறைவதைப் போல இருந்தது.. இது என்ன புது வேதனை என்று அவன் முகத்தை ஒதுக்க முயன்றாள் ப்ரீதி.. அவன் யாரோ, எவரோ.. ஆரண்யத்தில் பார்த்தவன் அவளது அத்தையின் வீட்டில் இருக்கிறான்.. அறியாத ஒருவனைப் பற்றிய நினைவுகள், அவளது மன வேதனைக்கு மருந்தாகி விடுமா..? ஒட்டுறவு இல்லாதவனின் நினைவு அவளது மன வலிக்கு ஒத்தடம் கொடுத்திட முடியுமா..?

"உட்காரும்மா.."

மாறனின் குரலில் உடல் தூக்கிப் போட்டது.. அவர் டைனிங் டேபிளின் முன் இருந்த நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்திருந்தார்.. இவர் எப்போது வந்தார் என்று திகைப்பாக இருந்தது.. அந்த அளவிற்கா அவள் சிந்தனையில் இருந்தாள்..?

"இங்கே உட்கார்.."

மாறனுக்கு எதிரே உட்கார்ந்திருந்த ஆதவன் அவனுக்குப் பக்கத்தில் இருந்த நாற்காலியைக் காட்டினான்.. பேசாமல் பசிக்கவில்லை என்று சொல்லிவிட்டு ஓடி விடலாமா என்று யோசித்தாள் ப்ரீதி.. அவன் பக்கத்தில் உட்கார்ந்தால் ஓர் விள்ளல் கூடத் தொண்டையில் இறங்காதே..

"என்னடி கும்பகர்ணி.. இப்பத்தான் தூக்கம் கலைந்ததா..?" துள்ளிக் குதித்தபடி ஆர்த்தி வந்து சேர்ந்தாள்.

இவள் மட்டும் எப்படிக் கவலையில்லாமல் கன்றுக் குட்டியைப் போலத் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறாள் என்று ப்ரீதிக்குப் பொறாமையாக இருந்தது.. ஆர்த்திக்கு என்ன.. மனம் போல வாழ்வு அமையப் போகிறது.. ப்ரீதியின் அண்ணனான பிரசாத்திற்கு ஆர்த்தியைப் பிடிக்கும்.. அதைவிட, ஆர்த்திக்குப் பிரசாத்தை ரொம்பவும் பிடிக்கும்..

'எனக்கு மட்டும் ஏன் ஆதவன் அத்தானைப் பிடிக்கலை..?'

ப்ரீதி ஆதவனைப் பார்த்தாள்.. அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்ததில் அரண்டு போனாள்... யதேச்சையாகப் பார்வையைத் திருப்பியவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. டைனிங் ஹாலுக்கு அடுத்து இருந்த அறையில் சித்தார்த்தன் நின்றிருந்தான்.. நின்றிருந்தவன் இவர்களின் பார்வைப் பரிமாற்றத்தைக் கவனித்து விட்டானோ என்னவோ.. உர்ரென்று அவளை உறுத்துப் பார்த்தான்..

'போங்கடா டேய்..'

ப்ரீதிக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது.. மேற்கு தொடர்ச்சி மலைகளில் அருவி கொட்டும், அழகான வனப்பகுதியில் குடில் போட்டு தவம் செய்யப் போய்விட வேண்டுமென்று உத்தேசித்தாள்..

'ஆண் வாடையே அங்கிருக்கக் கூடாது.. ஆரண்ய வாடை மட்டும் போதும்.. செடியும் கொடியும் நதியும் அருவியும்ன்னு பசுமையா இயற்கையோடு இயற்கையாக் கலந்து வாழ்ந்து விட்டுப் போயிடனும்..'

சுற்றிலும் நிசப்தமாக இருந்ததில் ஏனிந்த பேரமைதி என்று திகைத்துப் போனாள் ப்ரீதி.. சுற்றிலும் பார்த்தாள்.. தவறு செய்து விட்டவரைப் போல மாறன் தலைகுனிந்து அமர்ந்திருந்தார்.. அங்கே நிற்கலாமா வேண்டாமா என்று யோசிப்பதைப் போல விசாகா புடவைத் தலைப்பின் முனையைத் திருகிக் கொண்டிருந்தாள்.. ஆதித்தன் கடுகடுவென டைனிங் டேபிளை வெறிக்க.. ஆர்த்தி உதட்டைக் கடித்தபடி டைனிங் டேபிளின் மீது விரலால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்..

'இவங்கள்ளாம் ஏன் இப்படி பேஸ்தடித்ததைப் போல முழிக்கிறாங்க..' ப்ரீதிக்கு மண்டை காய்ந்தது..

இது என்ன அத்தையின் வீடா.. இல்லை மர்ம தேசமா..?

ப்ரீதியை முறைத்துக் கொண்டிருந்த சித்தார்த்தன் அங்கிருந்து அகன்றதும் அனைவரின் முகத்திலும் ஆசுவாசம் வந்தது..

"வாடி சாப்பிடலாம்.."

ஆர்த்தி குதித்தபடி மாறனின் பக்கத்தில் உட்கார்ந்து ப்ரீதியைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்.. அப்பாடி என்றிருந்தது ப்ரீதிக்கு.. இனி நிம்மதியாகச் சாப்பிடலாம்..

சிரித்த முகத்துடன் விசாகா பரிமாறத் தயாரான போது மெதுவான குரலில் மாறன் வினவினார்..

"அவன் சாப்பிட்டானா..?"

ஆதவன் பல்லைக் கடித்தபடி தகப்பனை முறைத்தான்..

"அவனும் அவனுடைய தாத்தாவும் சாப்பிடாமல் நாம் சாப்பிட முடியுமா..? எந்தக் காலத்தில் அவங்க சமபந்தி போஜனத்துக்கு வந்திருக்காங்க..? உரிமைப் பட்டவங்க முதலில் சாப்பிட்டு விடுவாங்க.. உரிமையில்லாதவங்க அடுத்த பந்தியிலதான உட்கார்ந்தாகனும்..? இத்தனை வருசங்களா இப்படித்தானே நடந்துக்கிட்டு இருக்கு.. புதிதா என்ன கேள்வி கேட்கறிங்க..?"

திக்குத் தெரியாத கானகத்தில் மாட்டிக் கொள்வது என்பது இதுதானா..? ப்ரீதிக்கு கண்களைக் கட்டிக் கொண்டு வந்தது.. எதுவும் புரியவில்லை.. எதுவும் இயல்பாகவும் இல்லை.. அனைத்தும் விந்தையாகவும் விசித்திரமாகவும் இருக்கிறதே..

"உஸ்ஸ்.. ப்ரீதி இருக்கிறா.." விசாகா மகனை அடக்க முயன்றாள்..

"இருக்கட்டுமே.. அவளும் தெரிந்துக்கட்டும்.. எத்தனை நாளைக்குத்தான் அவளிடம் மறைப்பீங்க..? பூனாவில் அவள் இருந்தவரை இது ரகசியம்.. இப்போது நாம் வாழும் வாழ்வின் லட்சணத்தைப் பார்க்க நேரில் வந்திருக்கிறாள்..

இன்றைக்கு உங்க அண்ணன் மகள், எனக்கு மாமன் மகள்.. நாளைக்கு எனக்கு மனைவி.. உங்களுக்கு மருமகள்.. எத்தனை நாளைக்குத்தான் அவளிடமிருந்து உண்மையை மறைப்பீங்க..? சொல்லுகிற நேரம் வந்தாச்சு சொல்லித்தானே ஆகனும்..?"

ப்ரீதிக்கு ஆதவன் பேசியது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.. அந்த மாளிகையில் என்னதான் நடந்து கொண்டிருக்கிறது என்று அறிய அவளுக்கும் ஆவலாகத்தான் இருந்தது.. அதிலும் சித்தார்த்தனை ஏன் ஆதவன் வில்லனைப் போலச் சித்தரிக்கிறான் என்று தெரிந்து கொள்ள மிகவும் விரும்பினாள்.. அதற்காக ஆதவனின் வருங்கால மனைவி என்ற அடையாளத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் அந்த விவரங்கள் அவளுக்குத் தெரியவே வேண்டாம்..

"நேரம் வரும்போது அதைப் பார்த்துக்கலாம் அத்தான்.. எதையும் தெரிந்துக்கனும்னு எனக்கு இண்ட்ரெஸ்ட இல்லை.. பசி வயிற்றைக் கிள்ளுது.. டைனிங் டேபிளில் வேற வெரைட்டிஸ் நிறைய இருக்கா.. என் இண்ட்ரெஸ்ட் எல்லாம் இதுமேல்தான் இருக்குது.." ப்ரீதி தன் முன் இருந்த பிளேட்டில் தாளம் போட..

"இவ இருக்காளே.." என்று சிரித்தாள் ஆர்த்தி..

விசாகாவும் சிரித்து விட்டாள்.. மாறன் மெலிதான புன்னகையுடன் மைத்துனன் மகளைப் பார்க்க.. ப்ரீதி வெள்iயாக சிரித்து வைத்தாள்.. கலகலப்பாக அவர்கள் சாப்பிட ஆரம்பிக்க ஆதவன் மட்டும் கடுகடுவென இருந்தான்.. அவனது முகம் இருண்டிருந்தது.. ப்ரீதியின் மறைமுகமான விலகலை அவன் மனம் புரிந்து கொண்டிருந்தது.. எந்தச் சூழலிலும் அவள் அவனை வருங்காலக் கணவன் என்று குறிப்பிடவே இல்லை.. விசாகாவை அத்தை என்று அழைத்தாள்.. மாமியார் என்று ஒப்புக் கொள்ளவில்லை..

அவள்மீது அவனுக்கு ஈர்ப்பு இருக்கிறது.. அவன்மீது அவளுக்கு பாசம் மட்டும்தானே இருக்கிறது..? ஈர்ப்பு ஏன் வரவில்லை..? அவனுக்கு என்ன குறை..?

# 9

## உன் மன ஓரத்தில் எனைப்பற்றி
## ஓர் துளி நினைவிருந்தால் போதும்..
## என் ஜென்மம் சாபல்யமாகும்..

"ம்ஹா.."

உள்ளங்கைகளைத் தேய்த்துக் கன்னத்தில் வைத்து அதன் இதமான வெம்மையை அனுபவித்து இமைகளை மூடித் திறந்தாள் ப்ரீதி.. காலைப் பொழுதில் சாலைக்கு வந்து சூழ்ந்திருக்கும் பனிப் பொழிவில் நனைந்தபடி நடக்கும் நொடிகள் அற்புதமானவையென்று அவளுக்குத் தோன்றியது.

அவளும் விருந்தாளியாக வந்து இரண்டு நாள்களாகி விட்டன.. அரண்மனையின் தோட்டத்தைத் தாண்டி வெளியே செல்ல முடியவில்லை.. அரண்மனைத் தோட்டம் ஆரண்யத்தை விட அழகானதாக இருந்தது என்பது வேறு விசயம்.. பாறையின் மீது சின்னதாக அருவி கொட்டி வழிந்து நீரோடையாக ஓடிக் கொண்டிருந்தது.. அதன் இரு கரைகளிலும் மலர்ச்செடிகள்.. சின்னதாக ஒரு நீராளி மண்டபம்.. மண்டபத்தின் தூண்கள் நான்கிலும் படர்ந்திருக்கும் மலர்க் கொடிகள் அதை கொடி மண்டபமாக காண்பித்தன.. நீச்சல் குளத்தைக் கூடப் பொய்கை போல அமைத்திருந்தார்கள்.. இரண்டு நாளும் ப்ரீதி அந்த தோட்டத்தின் அழகில் மயங்கிச் சுற்றிச் சுற்றி வந்தாள் தான்.. திடிரென தான் இருப்பது அமைக்கப்பட்ட ஆரண்யம்.. உண்மையான ஆரண்யம் அரண்மனைக்கு வெளியே இருக்கிறது என்ற உண்மை அவள் மனதில் உறைத்து விட்டது..

அந்தக்காலத்தில் அந்தப்புர மாந்தர்கள் வெளியுலகைப் பார்க்க விரும்பி விடக் கூடாது என்று அவர்கள் விரும்பியதையெல்லாம் அரண்மனைக்-குள்ளேயேயே அமைத்துத் தந்து விடுவார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறாள்..

'என்ன ஒரு தந்திரம்..! இதற்குப் பெயர்தான் ராஜ தந்திரம் என்பதுவோ..'

ப்ரீதி என்ன அந்தக்காலத்து அந்தப்புரத்து ராணியா..?

'நெவர்..'

சூளுரைத்த ப்ரீதி காலையில் எழுந்து கொள்ளும் போதே முடிவு செய்து விட்டாள்.. வீட்டில் உள்ள மற்றவர்களின் கண்களில் படாமல் ஓர் உலாவலுக்குப் போய் வந்துவிட வேண்டும்..

போட்டு வைத்திருந்த உலாவல் திட்டப்படி இவள் பூனை போல சமையலறைக்குப் போனாள்.. பாலைக் காய்ச்சிக் கொண்டிருந்த வண்டாற்குழலி இவளைப் பார்த்ததும்..

"வாங்கம்மா.. வெள்ளன எழுந்துருச்சுட்டிங்களா..? வீட்டில எல்லோரும் மெதுவாத்தான் எந்திரிப்பாக.. அதனால டிக்காசனை இப்பத்தான் போட்டேன்.. காபி கலக்கித் தரட்டுங்களா..?" என்று பேசியபடி காபி கலக்கித் தந்தாள்..

படுவேகமாக காபியை உறிஞ்சிக் குடித்தவள் சூடான காலைக் காபிக்கு வண்டாற்குழலிக்கு நன்றி சொல்லி விட்டு வாசல் பக்கமாக வந்தால், அங்கே பெருக்கிக் கொண்டிருந்த வனிதாமணி..

"ஹி..ஹி.." என்று பிடித்துக் கொண்டாள்..

"வண்டாற்குழலி உன்னைக் கூப்பிடறாங்களே.. காதில் விழுகலையா வனிதா.." என அவளையும் பற்றி விட்டு, அவள்

"எங்கேம்மா..?" என்று சமையலறைக்கு ஓடியதும் இந்தப் பக்கமாக கேட்டை நோக்கி விரைந்து நடந்தாள்..

அரண்மனைக்கும் காம்பவுண்டு கேட்டிற்கும் இடையில் உள்ள பாதை பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டு படுமென்மையாக இருந்தது..

'ராஜ வாழ்க்கைன்னா இப்படித்தான் இருக்கும் போல..'

தூரத்தில் நான் கண்ட காம்பவுண்டு கேட் என்று பாடாத குறைதான்.. தூரமென்றால் தூரம்.. அவ்வளவு தூரம்.. அதையும் கடந்து வந்தால் கேட்டருகே இருந்த செக்யூரிட்டி வழி மறித்தான்.. வீட்டில் உள்ளவர்களிடம் சொல்லி

அனுமதி வாங்கிய பின்னால்தான் ப்ரீதி கேட்டருகே வந்திருக்கிறாள் என்று சத்தியம் பண்ணாத குறையாக சொன்ன பின்னால்தான் கேட்டை திறந்து விட்டான்..

'ம்ஹீம்.. அரண்மனை வாழ்க்கைங்கிறது சிறைதான் போல..'

இப்படி பல 'போல' களை சிந்தித்தபடி சாலையில் இறங்கி நடந்தவளுக்கு மனப்புகைச்சல் எல்லாம் மறைந்தோடி விட்டன.. மனித நடமாட்டம் இல்லாத சாலையில் பனியின் பொழிவில் நனைந்தபடி நடக்கும் அற்புதமானதொர் ஆனந்தத்தை அனுபவித்தபடி குதூகலமாக நடக்க ஆரம்பித்து விட்டாள் கைகளை முன்னால் கட்டினால் குளிர் குறைவதைப் போலவே இருந்தது.. ப்ரீதிக்கு சித்தார்த்தனை சந்தித்தபோது அவன் கைகளை முன்னால் மடித்துக் கட்டியிருந்தது நினைவுக்கு வந்தது.. அது என்ன மாயமோ தெரியவில்லை.. அவள் எதை நினைத்தாலும் அந்த நினைவைக் தொடர்ந்து சித்தார்த்தனின் நினைவும் வந்து விடுகிறது..

இருபுறமும் மரங்கள் அடர்ந்த சாலையில் நடக்கப் பயமாகக் கூட இருந்தது.. சின்னச் சின்ன சிற்றருவிகள் கண்களில் பட்டுக் கொண்டே இருந்ததில் பயம் மறந்து விட்டது. மனிதக் காலடிகள் படாத இடங்கள் சுத்தமானதாகவும் அழகு குறையாமலும் இருக்கின்றன.. எங்கு மனிதர்கள் கால் பதிக்கிறார்களோ அங்கே இயற்கை மாசடைந்து விடுகிறது என்றால் மனிதப்பிறவி என்பது எத்தனை மோசமான பிறவி..!

தானும் மனிதப் பிறவிதான் என்று நினைத்துச் சிரித்துக் கொண்டாள் ப்ரீதி.. இதோ அவளது காலடித் தடங்கள் பதியும் இடங்கள் இதற்கு முன் மாசுபடாமல் இருந்தது.. அவள் காலடி பட்டதில் மாசடைந்து விட்டது..

சற்றுத் தொலைவில் அடிவானம் தெரிந்தது.. தொடுவானம், தொட முடியாமல் தொலைந்து போகும் தூரம்.. வால்பாறையின் இயற்கை அழகில் அவளுக்கே தொலைந்து போக வேண்டும் போல இருந்தது.. சரிந்து சென்ற மலைப் பாதையை ஒட்டி இருந்த பெரிய

பாறையொன்றின் மீது ஏறி நின்று கைகளை விரித்துத் தட்டாமாலை சுற்றிய ப்ரீதிக்குப் பாட வேண்டும் போல இருந்தது..

"வால் பாறை.. வட்டப் பாறை..

மயிலாடும் பாறை.. மஞ்சப்பாறை..

நந்திப்பாறை சந்திப்பாக - அவுக

என்னை மட்டும் சிந்திப்பாக..

பாறை.. என்ன பாறை..!

பாறை.. என்னைப் பாரேன்.."

சாலையில் வந்து கொண்டிருந்த காரிலிருந்த சித்தார்த்தன் அவளைப் பார்த்தான்.. அடர் சிகப்பில் பூப்போட்ட நைட்டி.. காப்பிக் கொட்டை வண்ணத்தில் ஸ்வெட்டர்.. தலைமுடி பின்னலிடப்பட்டிருந்தாலும் முன்புறம் முடி கற்றையாகப் பிரிந்து தொங்கிக் கொண்டிருந்தது.. தூங்கி எழுந்து வந்த தோற்றத்துடன் இருந்தாள்.. எவ்வித ஒப்பனையுமில்லாமல் அதைப் பற்றிய பிரக்ஞை துளியும் இல்லாமல் கைகளை விரித்துப் பாடிக் கொண்டிருந்தவள் தேவதையை நினைவு படுத்தினாள்.. சித்தார்த்தனுக்குப் 'பூங்காற்று, புதிதானது..' என்று பாடத் தோன்றியது.

'யார் இவள்..? தேவதை..!'

பாறை போன்ற இறுக்கமான முகத்துடன் இருப்பவனின் முகம் கனிந்து மென்மையானது.. அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலத் தோன்றியதால் காரை மரத்தின் பின்னால் ஓரம் கட்டி நிறுத்தி விட்டு இறங்கினான்.. மரத்தின் மறைவில் நின்று அவளைப் பார்த்தான்.. அவள்தான் 'பாறை.. என்னைப் பாரேன்..' என்று அழைப்பு விடுக்கிறாளே.. பார்க்காமல் இருக்க முடியுமா..?

எட்டியிருக்கும் மரத்தின் பின்னால் நின்று அவன் எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை அறியாமல் ஓடிக் கொண்டிருந்த நீரோடையின் மத்தியிலிருந்த கற்களில் கால் பதித்து புள்ளி மான் போலத் துள்ளி ஓடினாள் ப்ரீதி..

"எட்டிப் பார்த்து நிப்பாக..

ஏங்கி ஏங்கிப் பார்ப்பாக..
ஏரிக்கரை ஓரத்திலே காத்திருப்பாக..
ரெண்டு கன்னம் தேய்ப்பாக..
விண்டு விண்டு திம்பாக..
வால்பாறை வட்டப் பாறை..
மயிலாடும் பாறை.. மஞ்சப் பாறை..
பாறை.. என்னைப் பாரேன்.."

ஓடையில் ஓடிய தண்ணீரில் கைவைத்து அள்ளி வீசியவளின் கை ஜில்லிட்டுப் போனதில் இமைகளைச் சுருக்கி "ஸ்ஆ.." என்றாள்.. சித்தார்த்தனுக்கு அவளை இழுத்து நிறுத்திக் கன்னங்களைத் தேய்த்துச் சூடேற்றி விட வேண்டும் போல இருந்தது.. அவளை விண்டு தின்ன ஆசைதான்.. ஆனால்..?

பெருமூச்சுடன் அவளைப் பார்த்தான்.. அவனது மனவோட்டத்தை அறியாமல் நீரோட்டத்தில் கைவிட்டு நீரை அள்ளி வீசி விளையாடிக் கொண்டிருந்தாள் ப்ரீதி.. அவள் வீசிய நீர் சித்தார்த்தனின் முகத்தில் தெறித்ததில் அவனது முகம் மேலும் மென்மையானது..

"செம்பருத்தி நெஞ்சார
சம்மதத்தைக் கேப்பாக..
சாதி சனம் சேர்ந்திருக்க..
கைப்பிடிப்பாக..
வம்பளக்கும் ஊர் வாய
வாயடைக்க வைப்பாக..
வால்பாறை வட்டப் பாறை..
மயிலாடும்பாறை மஞ்சப்பாறை..
பாறை..! என்னைப் பாரேன்.."

சித்தார்த்தன் இதழை மடித்துக் கடித்துக் கொண்டான்.. அவளை அவன் முதன் முதலாக இரு தினங்களுக்கு முன்னால் பார்த்த போதும் இப்படித்தான் இயற்கையைக் கொண்டாடிக் கொண்டிருந்தாள்.. இதுபோல காரில் போய்க்

கொண்டிருந்தவன் தன்னந்த தனியாக ஓர் இளம்பெண் காட்டிற்குள் போவதைப் பார்த்து விட்டு யார் என்று அறிய காரை விட்டு இறங்கிப் பின் தொடர்ந்தான்.. வால்பாறை மக்கள் மற்றவர்களுக்கு மனதாலும் கெடுதல் நினைக்காதவர்கள்.. சுற்றுலா வாசிகளைப் பற்றி அப்படிச் சொல்லிவிட முடியாதே.. அவர்களில் நல்லவர்கள் அதிகமிருந்தாலும் கெட்டவர்கள் ஒன்றிரண்டு பேர் ஊடுறுவி இருக்கக் கூடுமே.. தனித்துச் செல்லும் பெண் ஆபத்தில் சிக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறதே.. அத்துடன் பழக்கமில்லாத கானகத்தில் வழி தெரியாமல் மாட்டிக் கொண்டால் என்ன செய்வது..?

இத்தனைக்கும் மேல் ஒன்றிருந்தது.. தனித்துச் செல்லும் பெண்ணின் மனதில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் ஏதேனும் இருந்தால்..?

சித்தார்த்தன் இந்த நினைவில் அவளைப் பின் தொடர்ந்து கண்காணித்தான் என்பது மட்டும் ப்ரீதிக்குத் தெரியவேண்டும்..

'அவ்வளவுதான்..' அவன் முகம் விகசித்தது..

"தொட்டா மணப்பாக..
நெய்முறுக்கு கேப்பாக..
நெய் முறுக்கு சாக்கில
என் கை கடிப்பாக..
பாலிருக்கும் செம்பாக
பசிதாகம் தீர்ப்பாக..
வால்பாறை.. வட்டப்பாறை..
மயிலாடும் பாறை.. மஞ்சப்பாறை..
பாறை.. என்னைப் பாரேன்.."

பாடியபடி தாவிக் குதித்துக் கரையேறிய ப்ரீதி, மரத்தின் பின்னாலிருந்து வெளிப்பட்ட சித்தார்த்தனைக் கண்டதும் ஸ்தம்பித்து நின்று விட்டாள்.. பாறை போன்ற முகம் மிருதுவாக இருந்ததில் அவளது கண்கள் விரிந்தன.. இதழ்

வளைத்து அவன் சிந்திய சின்னச் சிரிப்பில் அவளது கன்னி மனம் சிக்கித் தத்தளித்தது..

"எங்கே.. எனக்குக் கொஞ்சம் குடு.." அவன் கைநீட்டினான்..

"என்ன..?" அவளுக்கு ஒன்றும் புரியவில்லை..

"நெய்முறுக்கு..! இப்பப் பாட்டில சொன்னியே.."

அவளுக்கு வெட்கமாகி விட்டது.. யாருமில்லை-யென்ற சுதந்திர உணர்வோடு அவள் பாடிய பாடலை அவன் கேட்டு விட்டான் என்ற நினைவில் முகம் சிவந்தவள்..

"அது என்ன.. நான் எங்கே போனாலும் என்னை ஃபாலோ பண்றீங்க..?" என்று கேட்டாள்.

"அதை இப்படியும் சொல்லலாம்.."

"எப்படி..?"

"நான் எங்கே போனாலும் அங்கே நீ இருக்கிற.."

"ஆஹா..! இவர் போகிற இடமெல்லாம் எனக்கு எப்படித் தெரியுமாம்..? கண்டு பிடித்து வந்து நிற்கிறேனா..?"

"அது எனக்கு எப்படித் தெரியும்..? எப்படிக் கண்டு பிடிக்கிறாய் என்பதை நீதான் சொல்லனும்.."

'இவன் இப்படியெல்லாம் கூட விளையாடுவானா..?'

ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள் ப்ரீதி.. கடுமை இல்லாத முகத்தைப் பார்க்க வெகு அழகாக இருந்தது.. அதை அவள் வாய் விட்டுச் சொல்லி விட்டதில் அவனது கண்கள் ஜொலித்தன.. இந்த முறை கண்களில் வந்த மின்னலை அவன் மறைக்க யத்தனிக்கவில்லை என்பதை கண்டு கொண்டாள் ப்ரீதி..

'என்னடா இது..? ஒரு சிங்கம், மானிடம்
உறுமாம உருப்படியா உரையாடுது..'

"ஸோ.. நீ சைட் கூட அடிப்ப.."

அவன் உல்லாசமாக சிரித்ததில் அவளது மனம் ஊஞ்சல் கட்டி ஆட விழைந்தது.. அவனுடன் பேசிக் கொண்டிருப்பது பிடித்தமானதாக இருந்ததில் ப்ரீதி பாறையில் உட்கார்ந்து கால்களை ஆட்டியபடி..

"இப்பத்தான் காலேஜை முடிச்சு வெளியே வந்திருக்கிறேன் சார்.. சைட் அடிக்கிறதைப் பத்தி உங்களுக்கே டியூசன் எடுப்பேன்.. என்னை என்னன்னு நினைச்சீங்க..?" என்று உதட்டைச் சுழித்தாள்..

அவளது சுழித்த உதடுகளை ஒரு மார்க்கமாக பார்த்தபடி

"ஒன்றும் தெரியாத சின்னப் பெண்ணுன்னு நினைத்தேன்." என்று விசமமாகச் சொன்னான் சித்தார்த்தன்.

"நினைப்பீங்க.. நினைப்பீங்க.."

அவள் தலையை ஆட்டி.. ஒற்றை விரலை உயர்த்தி அவனை எச்சரித்ததில் அவனது விழிகள் மறுபடியும் மின்னின..

அவன் யார் என்பதை அவள் அறிவாளா..?

# 10

## மாறும் இவ்வுலகில் மாறாதது

## என் காதல் மட்டுமே ..

வால்பாறையை விட்டுச் சற்று தள்ளியிருக்கும் 'கானவயல்' அழகான ஊர்.. அங்கும் அதைச் சுற்றியிருக்கும் மற்ற ஊர்களிலும் அவனை அறியாதவர்கள் இல்லை.. அவன் முன் நின்று பேச தயங்குவார்கள்.. ஓர் சிறு பார்வையில் எவரையும் எட்டி நிறுத்தி விடும் பாரம்பர்யமும் பணபலமும் கொண்டவன் அவன்.. நட்சத்திரப் பிம்பம் கொண்டவன்.. சித்தார்த்தன்..!

அவன் பெயரைக் கேட்டால் எவராக இருந்தாலும் எழுந்து நின்று விடுவார்கள்.. அப்படிப்பட்டவனைப் பார்த்து ஒரு சிறுபெண் விரல் உயர்த்தி எச்சரிக்கிறாள்..

அவனை அவனாக உணரச் செய்தவளை உற்றுப் பார்த்தான் சித்தார்த்தன்.. அவன் பார்வையில் லஜ்ஜை கொண்டு முகம் சிவந்தாள் அவள்.. சித்தார்த்தன் உல்லாசம் கொண்டான்.. இதுபோன்ற உணர்வு இதற்கு முன் அவன் மனதில் குடியேறியதில்லை.. எங்கிருந்தோ வந்த ஒருத்தி..

அவனது பின்புலம் அறியாமல் பேசிச் சிரிக்கிறாள்.. அவளது சிறு பார்வையில் அவனது இரும்பு மனம் இளகுகிறதே.. எப்படி..?

'ஒருவேளை என் பேக்ரவுண்ட் தெரியாமல் இவள் பேசிப் பழகுவதால் நான் ஸாப்ட் ஆகிறேனா..?'

அதுவாகத்தான் இருக்கும் என்று உறுதிபடத் தெரிந்தது.. வால்பாறை வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவன் உச்சாணிக் கொம்பு.. ப்ரீதி பூனாவில் இருந்து வந்தவள்.. அவனது பெயர் கூடத் தெரியாத போதே இயல்பாகப் பேசியவள்.. அவனைக் கண்டதும் அவளது விழிகளில் தெரியும் மயக்கம் அவனுக்கானது.. அவனது பின் புலத்திற்கானதல்ல..

அவன் யார் என்பதை இன்னும் ப்ரீதிக்கு எவரும் சொல்லி இருக்க மாட்டார்கள் என்பதை அவன் அறிவான்.. சொல்ல வேண்டிய உறவுகள் அதைச் சொல்லச் சிரமப்படுவார்கள்..

"காலையில் எழுந்ததும் காபி குடிப்பாங்கன்னு கண்டிருக்கேன்.. இப்படிக் காட்டைத் தேடி வருவாங்கன்னு கண்டதில்லை.. இரண்டு நாளுக்கு முன்னாடியும் இப்படித்தான்.. காட்டுக்குள்ளே தனியா சுத்திக்கிட்டு இருந்த.. அப்படியென்ன உனக்கு காட்டின் மேல் இவ்வளவு காதல்..?"

கேட்டவனின் மனம் 'நானும் காடுதான்..' என்றது.. அவன் மனதிலும் ஈரம் உண்டு.. பசுமை உண்டு.. வெளியே தெரியாது.. தெரியவும் விடமாட்டான்.. அடர்ந்த கானகத்தில் புதைந்துள்ள ரகசியங்களை யாரால் அறிய முடியும்..?

"ம்ம்ம்.." குழந்தையாக அவள் தலையை ஆட்டினாள்..

"ஆச்சரியம்தான்.. சிட்டிப் பொண்ணுக்கு காட்டைப் பிடிச்சிருக்கு.."

"என்ன.. இப்படிச் சொல்லிட்டிங்க.. இது இயற்கைங்க.. சுத்தமான காற்று, நீர்ன்னு கடவுள் கொடுக்கும் கொடை.. சிட்டியிலே அப்படியில்லைங்க.. பொல்லுசன்.. நிலத்தடி நீர் குறைவுன்னு மனுசங்க பூமியைப் போட்டுப் பாடாய் படுத்திக்கிட்டு இருக்காங்க.."

படு தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு அவள் பேசியதில்..

"பாருடா.. நீ கூட சீரியஸா பேசுவியா..?" என்றான் அவன்..

அவளுக்கு ரோசம் வந்து விட்டது.. அது என்ன அவளைப் பார்த்து இப்படிக் கேட்டு விட்டான்.. அவள் சீரியஸாகப் பேசக் கூடாதா..? பேசினால் ஆகாதா..?

"ஏன் ஆகாது..?" படு கூலாகச் சொன்னான் சித்தார்த்தன்..

"உன்னைச் சின்னப் பெண்ணுன்னு நினைச்சிருந்தேனா.. அதுதான்.. சீரியஸாப் பேசினதில கொலாப்ஸ் ஆகிட்டேன்.."

"ஆவிங்க.. ஆவிங்க.. காலேஜ் முடித்து விட்ட பெண்ணைப் பார்த்து இவர் சின்னப் பெண்ணுன்னு நினைத்தாராம்.."

"பின்னே.. நீயென்ன நூற்றுக் கிழவியா..?"

"இல்லை சார்.. எல்.கே.ஜி படிக்கிற பப்பா.."

"பப்பா..?"

சித்தார்த்தன் பலமாக சிரித்தான்.. ப்ரீதி கோபித்துக் கொண்டு தாம், தூம் எனக் குதித்துவிட்டு வீட்டுக்குச் செல்லப் போவதாக அறிவித்தாள்..

"தனியாகவா..?" என்றான் அவன்..

"தனியாத்தான் வந்தேன் சார்.." என்றாள் அவள்..

"காட்டில் சிங்கம், புலி, கரடியெல்லாம் இருக்குமே.."

ஒற்றை வரிதான் சொன்னான்.. அவள் ஓடியே வந்து விட்டாள்.. பயமென்றால் பயம்.. அப்படியொரு பயம்.. கண்களில் கிலி வழிய சுற்றுமுற்றும் பார்த்தபடி அவனருகில் ஒண்டி நின்றபடி கிசுகிசுப்பான குரலில்..

"இங்கேயும் இருக்குமா..?" என்று வெடவெடத்தாள்.

"இது காடுதானே..?" அவனும் கிசுகிசுத்தான்..

"பக்கத்து காடுதானே..?" அவள் விளக்கம் சொன்னாள்.

"காட்டிலே பக்கத்து காடு, தூரத்து காடுன்னு இருக்குதா..? அறிவாளி..! ஆமாம் ஏன் கிசுகிசுக்கிற..?"

"நீங்களும்தான் கிசுகிசுக்கறீங்க.."

"நீ பேசினதால அதே டோனில நானும் பேசினேன்.."

"சத்தமாப் பேசினாக் கேட்டு விடுமே.."

"யாருக்கு..?"

"சிங்கம், புலி, கரடிக்கு.."

அவன் உரத்த குரலில் சிரிக்க ஆரம்பிக்க அவள் அவசரமாக அவனது வாயைப் பொத்தினாள்.. சித்தார்த்தனின் சிரிப்பு நின்று விட்டது.. அவனது இதழ்கள் உணர்ந்த மலர்கரங்களின் ஸ்பரிசம் அவனை எங்கோ கொண்டு சென்றது.. மெலிதாக இதழ் குவித்து அவளது வளைக் கரத்தில் முத்தமொன்றைப் பதித்தான்.. அவள் சட்டென கையை இழுத்துக் கொண்டாள்.. எதிர்பாராத முத்தத்தின் குளிர்ச்சியை அவளது உள்ளங்கை உணர்த்திக் கொண்டிருந்தது.. உணர்வின் வேகம் தாளாமல் அவளது கண்கள் கலங்கி விட்டன.. அவனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.. அதிகமாக உரிமை எடுத்துக் கொண்டு விட்டானா..?

"ஸாரி.." முணுமுணுத்தான்..

"வீட்டுக்குப் போகனும்.." அவன் முகம் பார்க்க முடியாமல் நிலம் பார்த்தபடி அவளும் முணுமுணுத்தாள்..

"வா.. போகலாம்.."

அவன் முன்னால் நடக்க பின் தொடர்ந்தவள் அவனது வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் மூச்சிரைக்க அவனது கைபற்றி நிறுத்தினாள்.. அவளது கைபட்ட இடம் தேனாக இனிக்க..

"என்ன..?" என்றான் சித்தார்த்தன்..

"இவ்வளவு வேகமாப் போனா எப்படி சார்..? அதிலயும் பின்னாடி திரும்பிப் பார்க்க மாட்டேன் என்றீங்க.. சிங்கம், புலி, கரடி துரத்தினா என்னத்தைச் செய்வேன்..?" ப்ரீதி அங்கலாய்த்தாள்..

சித்தார்த்தனுக்குள் பிரியம் முகிழ்ந்தது.. ஆரண்யத்தின் அழகை ரசித்துக் கொண்டிருந்தவளை, அச்சுருத்தி விட்ட குற்றஉணர்வு எழுந்தது..

"பயப்படாதே.. இந்தப் பக்கம் சிங்கம், புலி, கரடியெல்லாம் வராது.. யானை வேண்டும்ன்னா வரலாம்.." என்று

சொன்னான்..

"சிங்கம், புலி, கரடியும் இருக்கும்ன்னு சொன்னீங்களே.."

"அது சும்மா விளையாட்டுக்கு சொன்னது.. கொஞ்சூண்டு உண்மையும் இருக்கு.. காடுகள்ன்னு இருந்தா அங்கே விலங்குகளும் இருக்கும்தானே.. அது இருக்கும் இடத்துக்குத்தான் நாம வந்திருக்கிறோம்.."

"எதுக்கும் என்னைத் தனியா விட்டு விடாதீங்க.. ப்ளீஸ்.."

மருண்ட அவள் விழிகளை உற்றுப் பார்த்தான் அவன்.. அவளது விழிகளின் கலக்கத்தில் அவனது புருவங்கள் சுருங்கின..

"பயமா இருக்கா..?"

"ம்ம்ம்.."

"இந்தக் காடு வேண்டாம்.. பூனாவிற்கேப் போய் விடலாம்.. இனி இந்தப்பக்கம் வரவே கூடாதுன்னு தோணுதா..?"

ப்ரீதி நின்று கானகத்தைச் சுற்றிப் பார்த்தாள்..

மனித கால் தடங்களே படாத கானகம்.. கொட்டும் அருவி.. கொஞ்சும் அடிவானம்.. முகடுகளின் மேகம்.. பொழியும் மழைத்தூறல்.. ஆதியிலும் ஆதி கொண்ட அந்தம் இந்தக் கானகம்.. இதன்மீது பயமா..?

'இல்லை' என்பதைப் போல இடம் வலமாக தலையை அசைத்தாள்.. சித்தார்த்தனின் முகம் மலர்ந்து விட்டது.. எதனால் அந்த மலர்ச்சி என்று தெரியாவிட்டாலும் ப்ரீதியின் மனம் லேசானது..

"கையைப் பிடிச்சுக்க.."

சித்தார்த்தன் நீட்டிய கையை தயக்கமில்லாமல் அவள் இறுக்கிப் பிடித்துக் கொண்டதில் அவனது மனம் நிறைந்தது.. இருவரும் பேசியபடி சாலையை நோக்கி நடந்தார்கள்..

"அதிகமான டூரிஸ்ட் இங்கே வருவதில்லை போல... இப்பேற்பட்ட அருமையான டூரிஸ்ட் ஸ்பாட்டை மிஸ் பண்ணிட்டு மக்கள் கொடைக்கானல், ஊட்டின்னு அலைகிறாங்களே.." ப்ரீதி ஆதங்கப்பட்டாள்..

"பெரும்பாலான சுற்றுலா விரும்பிகளின் கண்களில் எங்கள் ஊர் படவில்லை என்பதில் எனக்குச் சந்தோசம் அதிகம்.." சித்தார்த்தன் சொன்னான்..

"ஏனாம்..?"

"ஏன்னா.. மனிதர்களின் காலடி பட்டால் இதன் இயற்கையழகு குறைந்து மாசு நிரம்பி விடும்.. இப்பக் கொடைக்கானலுக்கும், ஊட்டிக்கும் அந்தக் கதிதான் வந்திருக்கிறது.. அது வால்பாறைக்கும் வர வேணடாம்.."

"இப்படி விரட்டினா எப்படி சார்..? ஹாலிடேஸ்க்கு இந்தப் பக்கம் வந்து போகிற டூரிஸ்ட்டுகளால உங்க ஊரின் அழகு ஒன்றும் கெட்டுப் போய் விடாது சார்.."

"எங்கள் ஆரண்யத்தின் சாலைகளில் தனித்து நடை பயிலும் ஒற்றைக் காட்டு யானையின் தனிமையைக் கலைத்து அதை ஓட ஓட விரட்ட இங்கே யாரும் வந்து விடக் கூடாது... அதன் தும்பிக்கையில் தொற்றியிருக்கும் தும்பிகளின் வாழ்க்கைச் சுழல் பற்றி ஆராய்கிறேன் பேர்வழியென்று எந்த அறிவாளியும் எங்கள் காட்டுப்பக்கம் வந்து விடக் கூடாது.."

கவிதை போலப் பேசினான் சித்தார்த்தன்.. அவனது பேச்சு நயத்தில் மனதை பறி கொடுத்தாள் அந்த மாது.. என்னவொரு தெளிவு.. என்னவொரு நிதானம்.. செதுக்கி வைத்த சிலை போல இருந்தவனின் முகவடிவும், உயரமும் அவளை மயக்கின.. அவன் பேசப் பேசக் கேட்டுக் கொண்டிருக்கலாம் போல இருந்தது..

கற்றோரை கூற்றோரே காமுறுவர்.. இயற்கையை ஆராதிப்பவள் ப்ரீதி.. அந்த இயற்கையோடு இயற்கையாக கலந்து வாழ்ந்து காத்து வருபவன் சித்தார்த்தன்.. அவன்மீது அவள் மனதில் ஆதர்சம் வருவதும் இயற்கைதானே..

சடசடவென மழைத்துளிகள் விழுந்ததில் அவர்கள் ஒரே ஓட்டமாக காரை வந்தடைந்தார்கள்.. காரில் ஏறி அமரவும் பெருமழை கொட்டவும் சரியாக இருந்தது.. காரின் முன்பக்க கண்ணாடியில் சாரை சாரையாக வீழ்ந்த மழைத் தாரைகளைப் பார்த்தவள்..

"வீட்டில் இருந்து கிளம்பறப்ப மழை வருகிற அறிகுறியே தெரியலை தெரியுமா.." என்று புலம்பினாள்..

"இதுக்கு ஏன் அப்செட் ஆகிற..?"

"உங்களுக்கென்ன.. ஈஸியாச் சொல்லிட்டிங்க.. நீங்க வரப் போய் ஆச்சு.. இல்லேன்னா காட்டுக்குள்ள தன்னந்தனியா மாட்டியிருப்பேனில்ல.."

"மாட்டியிருக்க மாட்டாய்.."

தீர்மானமாக அவன் சொன்னதில் வியப்புடன் அவன் முகம் பார்த்தாள்..

"எப்படி..?"

"எப்படியும் நான் வந்திருப்பேன்.. ஏன்னா.. இந்தக் காடு வேறு.. நான் வேறு இல்லை.. இந்த வனம் எனக்கு இன்னொரு அம்மா.."

சித்தார்த்தனின் நாத்தளுதளுத்தது... ப்ரீதி துணுக்குற்றாள்.. கம்பீரமான சித்தார்த்தனைப் பார்த்துப் பழகியிருந்தவளுக்கு நெகிழ்ச்சியான சித்தார்த்தன் புதியவனாகத் தெரிந்தான்.. ஓர் நொடிக்குள் நெகிழ்ச்சியி-லிருந்து மீண்டு பழைய சித்தார்த்தனாகி அவன் காரைக் கிளப்பினான்... அடர்த்தியான மழைத்தாரைகளினூடே தெரிந்த பாதையில் கார் ஊர்ந்தது..

"இங்கே எந்த நொடியிலும் மழை வரும்.."

"சிரபுஞ்சி போலவா..?"

"ஆமான்னு வைத்துக்கலாம்.. இந்தப் பக்கம் மனிதர்கள் வாழும் பகுதி இருக்கிறதுன்னு யாருக்குமே தெரியாமல் இருந்தது.. வழக்கம் போல இதையும் ஒரு இங்கிலிஸ்காரர் தான் கண்டு பிடித்தார்.. அவர் பெயர் கார்வர் மார்ஷ்.. எப்போதும் மிதமான வானிலை.. மலையும், மழையும் சூழ லத்தின் அமெரிக்க ஊரான 'சிலி'யைப் போல இருந்த மலைப் பிரதேசம் இது.. ஆனைமலைக் காடுகளுக்கு அப்பால் ஓர் ஊர் இருப்பதைக் கண்டு பிடித்த கார்ல் மார்ஷ் சிலியின் முக்கிய ஊரான 'வால் பாறைகோ..' என்று பெயர் வைத்தார்.. மெல்ல, மெல்ல அது 'வால்பாறை'ன்னு ஆனது.."

"இங்கே பழங்குடிகள் இருக்கிறாங்களா..?"

"அவங்க கம்மிதான்.. மெஜாரிட்டி பீப்பிள்.. 'வந்தேறிக' தான்.. அப்படிச் சொன்னாத்தானே எல்லோருக்கும் பிடிக்கும்."

அவன் இமைசிமிட்டிச் சிரித்த சிரிப்பில் அவளது உள்ளம் கொள்ளை போனது.. சிலுசிலுவென மலைக்காற்று.. மழைக் காற்றும் சேர்ந்து கொண்டதில் அவனோடு ஒன்றிக் கொள்ள வேண்டும் போல உள்ளம் கிளர்ந்தது.. ப்ரீதி பயந்து போனாள் இப்படிப்பட்ட பலவீனமான மனதுடையவளா அவள்..?

"பழனி, திருநெல்வேலி, கோவை, ஈரோடு, மைசூர், தர்மபுரின்னு பல ஊர் மக்கள் குடியேறியிருக்கிற ஊர் வால்பாறை.."

அவளது மனப் போராட்டத்தை அறியாமல்.. அவள் பக்கம் திரும்பாமல் கண்ணியமாக கதை சொல்லிக் கொண்டிருந்தவனின் மீது காதல் வந்ததோ இல்லையோ.. மரியாதை வந்தது.. அவளது தனிமையையும் அந்தச் சூழலையும் அவன் பயன்படுத்திக் கொள்ள நினைக்க வில்லையே..

'இதுவே ஆதவனா இருந்திருக்கனும்..'

அருவெறுப்புக் கலந்த பயத்தில் அவளது முகம் வெளிறிப் போனது.. சந்தர்ப்பம் கிடைத்து விட்டால் ஆதவன் தொட்டுப் பேசத் தயங்கியதே இல்லை.. அதுவே ப்ரீதியின் மனதில் வெறுப்பை வளர்த்துவிட்டது.

# 11

**யாரென்ன சொன்ன போதும்..**
**நீ மட்டும்..**
**என் வாழ்விற்குப் போதும்..**

சித்தார்த்தனின் காரை தொலைவில் கண்டதும் மாளிகையின் காம்பவுண்டு கேட்டுக்கள் திறக்கப்பட்டன.. காருக்குள் ப்ரீதியும் இருந்ததில் செக்யூரிட்டியின் முகத்தில்

மாற்றம் வந்ததைப் போல இருந்தது.. இந்த வீட்டில் சித்தார்த்தன் யார் என்று யோசித்தாள் ப்ரீதி.. இவ்வளவு நேரமும் அவனுடன்தான் பேசிக் கொண்டிருந்தாள்.. இது பற்றிக் கேட்கவில்லையே..

"வீட்டில் ஓர் பெரியவர் இருக்கிறாரே.. கெண்டை மீனோ என்னவோ.." அவசரமாக அவள் ஆரம்பிக்க..

"அவர் பெயர் தொண்டைமான்.. கெண்டை மீனில்லை.. இனியொரு தடவை இப்படிச் சொல்லாதே.. நான் பொறுத்துக் கொண்டு தன்மையாக பதில் சொல்லிக் கொண்டிருக்க மாட்டேன்.." கடுமையாகச் சொன்னான் சித்தார்த்தன்..

'அந்த மனிதரைச் சொன்னால் இவனுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது..?'

காரணம் எதுவாக இருந்தாலும் சித்தார்த்தனின் கோபத்திற்கு ஆளாக அவள் விரும்பவில்லை..

"ஸாரி.." இறங்கிய குரலில் சொன்னாள்..

"ம்ம்ம்.." அதற்கு மேல் அவன் பேசவில்லை..

"அவர் யார்..?"

அவன் திரும்பி அவளை உன்னிப்பாக பார்த்து விட்டு..

"உன் அத்தையிடம் கேள்.." என்றான்..

போர்டிகோவில் கார் நின்றது.. சித்தார்த்தன் இறங்கி அவள் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காமல் அவள் யாரோ, அவன் யாரோ என்பதைப் போல படியேற.. ப்ரீதியின் உள்ளங்கை அவனது முத்தத்தின் ஈரத்தை நினைவு படுத்தியது..

"அம்மா.."

காரை ஓட்டிக் கொண்டு போய் வரிசை கட்டி நின்றிருந்த மற்ற கார்களுக்கு இடையில் நிறுத்திப் பூட்டி விட்டு வருதற்காக காத்திருந்த வேலையாள் தயக்கத்துடன் அழைத்தான்.. ப்ரீதி காரை விட்டு இறங்கினாள்.. தோட்டத்திலிருந்து வந்த ஆர்த்தி..

"ப்ரீதி.." என்று பதட்டமாக அழைத்தாள்.

"என்னடி..?"

"எங்கேடி போன..? அரண்மனை முழுக்க உன்னைத் தேடியாச்சு.. தோட்டதிலும் இல்லை.. இப்ப என்னடான்னா காரில் வந்து இறங்குகிற.. இவரை எங்கே பார்த்த..?"

"நான் பார்க்கலை.. அவர்தான் என்னைப் பார்த்தார்.."

"எங்கே..?"

"காட்டைச் சுற்றிப் பார்க்க போயிருந்தேனா..? அங்கே இவர் வந்தார்.. ஆமாம்.. இவர் யாருடி..? உங்க வீட்டில் இருக்காரே.."

ஆர்த்தியின் உதடுகள் துடித்தன.. எதையோ சொல்ல வந்தவள் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு..

"இனி இப்படிக் கேட்காதே ப்ரீதி.." என்றாள்..

"ஏண்டி..?"

"அது அப்படித்தான்.. கேள்விகளை அவாய்டு பண்ணு.."

அவர்கள் வீட்டுக்குள் போன போது ஆதவன் கோபமாக காத்திருந்தான்.. ப்ரீதியைக் கண்டதும் வீட்டை விட்டுக் காதலனுடன் ஓடிப் போய் திரும்பி வந்திருப்பவளைப் பார்ப்பதைப் போல கனல் கக்கப் பார்த்தான்..

'ஒரு வாக்கிங் போனது குற்றமாடா..' ப்ரீதி பல்லைக் கடித்தாள்..

"எங்கே போன..?"

ஆர்த்தியும் இதே கேள்வியைத்தான் கேட்டாள்.. ஆனால் அவள் கேட்ட தொனி வேறு.. ப்ரீதியைக் காணோமே என்ற பதட்டம் அதில் தெரிந்தது.. அறியாத ஊரில் தனியாக எங்கே போய் விட்டாய்.. உன்னைக் காணாமல் நாங்கள் தவித்து விட்டோமே.. நல்லவேளை.. திரும்பி வந்து விட்டாய் என்ற உணர்வுகளை உள்ளடக்கி அவள் கேட்டாள்.. இவனோ அடிமையை விசாரிப்பதைப் போல விசாரிக்கிறான்.

"வாக்கிங்.."

ஒற்றை வார்த்தையில் ரத்தின சுருக்கமாக பதில் சொல்லிவிட்டு மாடியேறப் போனாள் ப்ரீதி.. அவளுடைய

நைட்டியையும், கலைந்திருந்த முடியையும் உறுத்துப் பார்த்த ஆதவன்..

"காலையில் எழுந்தவுடன் வெளியே ஓடிட்ட.. அவனை மீட் பண்ண அவ்வளவு அவசரம்.. ம்ம்ம்..?" என்று பல்லிடுக்கில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்.

"அத்தான்.." அலறி விட்டாள் ப்ரீதி..

அவள் சித்தார்த்தனைக் காட்டில் பார்த்தது உண்மைதான்.. அது தற்செயலாக நிகழ்ந்த சந்திப்பு.. திட்டமிட்டு.. பேசிவைத்து சந்தித்த சந்திப்பல்ல.. இவன் வீட்டுக்கு விருந்தாளியாக வந்தால் எதை வேண்டுமானாலும் சொல்லி விடுவானா..?

"நீ என் வீட்டுக்கு வந்திருக்கிறாய்.. நினைவில் இருக்கட்டும்.. உன் அப்பா என்னை நம்பி உன்னை அனுப்பி வைத்திருக்கிறார்.. அதுவும் நினைவில் இருக்கட்டும்.. உன் அப்பாவுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது.." ஆதவன் கத்தினான்..

"பொறுமையாப் பேசுடா.." விசாகா மன்றாடினாள்..

"வீட்டில் இருக்கிறவங்க காதுகளில் விழுந்து விடப் போகுது.."

"விழட்டும் அம்மா.. அதற்காகத்தான் சத்தம் போடுகிறேன்.. அடுத்தவரின் உறவை உரிமை கொண்டாடுவதே இவர்களுக்கு வழக்கமாகப் போய் விட்டது."

"ஆதவா.."

விசாகா வாய் பொத்தி பின்வாங்கினாள்.. அச்சம், கோபம், ஆற்றாமை என்று பலதரப்பட்ட உணர்ச்சிக் கலவைகளில் கலங்கிப் போயிருந்தது அவளது முகம்..

ஆர்த்தி தலையில் அடித்துக் கொண்டு சோபாவில் உட்கார்ந்து விட்டாள்.. பேப்பரும் கையுமாக இருந்த மாறன் ஓர் ஆழ்ந்த பெருமூச்சுடன் மகனைப் பார்த்து..

"இப்போது என்ன ஆகிவிட்டது ஆதவா..? ப்ரீதி ஜஸ்ட் எ வால்க் போயிருக்கிறாள்.. இதையேன் பெரிது படுத்துகிறாய்..?" என்று நிதானமாக கேட்டார்..

இந்த மனிதர் ஏன் இவ்வளவு நிதானமாக இருக்கிறார் என்றிருந்தது ப்ரீதிக்கு.. அவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து மாறன் இப்படித்தான் இருந்தார்.. எதற்கும் பதட்டம் கொள்ளாமல் படு நிதானமாக.. ஓர் யோகியைப் போல..

'தவம் செய்ய வேண்டிய இடத்தில் தவம் செய்ய வேண்டும்.. யுத்த களத்தில் தவம் செய்யலாமோ..?'

"வாக்கிங் போனவள் அவனுடன் காரில் திரும்பி வந்திருக்கிறாள்.. வசதியாக அதை மறந்துவிட்டு, மறைத்து விட்டுப் பேசுகிறீங்களே அப்பா.. அதுதானே... மறைப்பது உங்களுக்குப் புதிதா என்ன..? பதினாறு வருசங்களாக வீட்டின் சூழ்நிலை சரியில்லைன்னு கட்டின பெண்டாடியையும் பெற்ற பிள்ளைகளையும் மைத்துனர் வீட்டில் விட்டுவிட்டு இந்தக் காட்டுக்குள் மறைந்திருந்தவர்தானே நீங்க..?" ஆதித்தன் போட்ட சத்தத்தில் மாறன் மௌனமாகி விட..

"ஆதவன்.." என்ற கம்பீரமான சித்தார்த்தனின் குரல் மாடிப்படியிலிருந்து கேட்டது..

மாடிக்குப் போனவன் ஆதவன் போட்ட சப்தத்தில் அப்படியே நின்றிருந்திருப்பான் போல.. அண்ணாந்து ப்ரீதி அவனைப் பார்த்த கண்ணீர் பார்வையில் அவனது விழிகளில் சினம் வந்தது.. காக்க வந்த ரட்சகனைப் பார்ப்பதைப் போலச் சித்தார்த்தனை அவள் பார்த்தாள்.. ஆதவன் பேசிய பேச்சில் அவள் துடித்துப் போயிருந்தாள்.. கடுமையான சித்தார்த்தனின் முகம் மேலும் கடுமையானது..

"எங்கே நின்று.. என்ன பேசிக் கொண்டிருக்கிறாய் என்பதை நினைவில் வைத்துப் பேசு.. அதை விட்டு விட்டு மற்றவர்களிடம் நினைவில் இருக்கட்டும்ன்னு குதிக்காதே.."

"ப்ரீதி மற்றவள்ங்கிறது உங்களுக்குத்தான்.. எனக்கு அவள் உற்றவள்.. தட் மீன்ஸ் ரிலேட்டிவ்.."

சித்தார்த்தனின் இமையோரம் துடித்ததைக் கண்டாள் ப்ரீதி.. அவனது கோபம் பெருகுவதில் விசாகா நடுக்கம்

கொண்டாள்.. ஆர்த்தியோ தலையைப் பிடித்தபடி ஆதவனை முறைத்தாள்..

ஒன்றைக் கவனித்தாள் ப்ரீதி.. ஆதவனும், சித்தார்த்தனும் ஏறக்குறைய ஒரே வயதுடன்தான் இருந்தார்கள்.. சித்தார்த்தனிடம் இளமைப் பொழிவு அதிகமிருந்தது.. ஆனாலும் அவன் ஆதவனை 'வா.. போ..' என ஏகவசனத்தில் பேசினான்.. ஆதவனோ எண்ணையில் போட்ட கடுகாக துள்ளிக் குதித்தாலும் சித்தார்த்தனை 'வாங்க... போங்க..' என்று மரியாதையுடன்தான் அழைத்தான்..

"ஸோ.. வாட்..? அதற்காக நீ என்ன வேண்டுமானாலும் பேசுவாயா..? ஆர்த்தி உன் கூடப் பிறந்த தங்கை.. அவளைவிட ப்ரீதி உனக்கு நெருங்கிய உறவில்லை.. மாமன் மகள்தான்.. ஆர்த்தியிடம் இப்படிப் பேசி விடுவாயா..?"

'நறுக்குன்னு கேட்கிறான்..' ப்ரீதிக்கு திருப்தியாக இருந்தது..

இந்தக் கேள்வி அவள் மனதில் தத்தளித்துக் கொண்டுதான் இருந்தது.. கேட்கத்தான் முடியவில்லை.. அத்தை, ஆர்த்தி என உறவுகளின் மனங்கள் புண்பட்டு விடுமே என்று வாய்க்குப் பூட்டுப் போட்டிருந்தாள்..

"இந்த வீட்டுக்கு கெஸ்ட்டாக ப்ரீதி வந்திருந்தா நீ என்ன செய்திருக்கனும்..? ஊரைச் சுற்றிக் காட்டியிருக்கனும்.. அதை விட்டு விட்டு அரண்மனைக்குள்ளே அடைத்து வைத்திருந்தா சிட்டியில் பிறந்து வளர்ந்த பெண் என்ன செய்வா..? இயற்கையை ரசிக்கும் ஆசையில் தனியாக வாக்கிங் கிளம்பத்தான் செய்வா.. காட்டில் ஆபத்து வரலாம்.. தெரியாத ஊரில் தனியாகப் போகலாமான்னு பதட்டப் பட்டிருந்தா பாராட்டியிருக்கலாம்.. ஆனால் நீ..? கேட்கக் கூடாத கேள்விகளைக் கேட்கிற.. மைண்ட் யுவர் டங் ஆதவன்.. மாமன் மகளாக இருந்தாலும் மரியாதை கொடுக்கக் கற்றுக்கொள்.. அப்போதுதான் அது உனக்குத் திருப்பிக் கிடைக்கும்.. வெளிநாட்டில் போய் இதைத்தான்

கற்றுக் கொண்டாயா..? இப்படிப் பேச உனக்கு வெட்கமாக இல்லை..?"

'ஆஹா..' ப்ரீதிக்கு ஆனந்தமாகி விட்டது..

எப்படியெல்லாம் போட்டுத் தாக்குகிறான்.. ப்ரீதியின் முன்னால் வாங்கிக் கட்டிக் கொண்டிருப்பதில் ஆதவனின் முகம் சிறுத்துப்போய் விட்டது.. அதை ஓரக்கண்ணால் ரசித்துப் பார்த்தாள் ப்ரீதி..

"அது என்ன..? ப்ரீதி உன் வீட்டுக்கு வந்திருக்கிறாளா..?"

சித்தார்த்தனின் அழுத்தமான கேள்வியில் ஆதவன் மட்டுமல்ல.. விசாகாவும் ஆர்த்தியும் சேர்ந்து தலை குனிந்தார்கள்.. ஏன் என்றுதான் ப்ரீதிக்கு பிடிபடவில்லை..

'என்னவாக இருக்கும்..?'

"அடுத்தவரின் உறவை உரிமை கொண்டாட வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.. ப்ரீதி தனி மனுஷி.. யாரிடம் பேச வேண்டும், பழக வேண்டும் என்பதை அவள்தான் முடிவு செய்ய வேண்டும்.. காட்டில் தனியாக இருந்தாள்.. வீட்டுக்கு வரும் வழியில் பார்த்தேன்.. மழை.. அவளைக் காரில் கூப்பிட்டுக் கொண்டு வந்தேன்.. அதற்கு இவ்வளவு பெரிய ரகளை செய்வாயா..? இந்த வீட்டில் வேலை செய்யும் வேலையாள்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்..? இதையெல்லாம் நினைத்துப் பார்க்க மாட்டாயா..? ராஜ வாழ்க்கை வாழ்ந்தால் மட்டும் போதாது.. அதற்குத் தகுந்தாற்போல பிஹேவியரும் இருக்கனும்.. மைண்ட் இட்.."

ஆதவன் குன்றிப் போய் விட்டான்... மாறன் பேப்பரிலிருந்து பார்வையைத் திருப்பவே இல்லை.. வீட்டு நடப்பை விட நாட்டு நடப்பில் அப்படி என்னதான் இருக்கிறதோ என்று ப்ரீதிக்குக் கோபம் கூட வந்தது.. என்னதான் யோகியாக இருந்தாலும் பெற்ற மகனை ஒருவன் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் போது காதிருந்தும் செவிடாக பேப்பர் படித்துக் கொண்டிருக்கக் கூடாது..

"ப்ரீதியை நான் மீட் பண்ணனும்னு நினைத்தா மறைவாக ஏன் மீட் பண்ணனும்..? சொல்லி அடிப்பவன் நான்.. மறைவுக்கும் எனக்கும் சரி வராது.. என் அம்மாவின்

வளர்ப்பு அப்படி.. நீ என்ன செய்வ..? உன் உடம்பில் ஓடும் உன் அப்பாவின் ரத்தம் இப்படி பேச வைக்குது.. கணவன் என்ன செய்தாலும் தட்டிக் கேட்காத உன் அம்மாவின் வளர்ப்பு இப்படி.. இப்போக் கேட்டுக்க.. ப்ரீதி உன் வீட்டுக்கு வரலை.. இந்த ஊருக்கு விருந்தாளியாக வந்திருக்கிறா.. அவளுக்கு ஊரைச் சுற்றக் காட்டுவேன்.. எஸ்டேட்டைச் சுற்றிக் காட்டுவேன்.. பேசிப் பழகுவேன்.. இதில் ஒளிவு மறைவுக்கு அவசியமில்லை.. இனியொரு முறை இதைப் பற்றி யாராவது ஓர் வார்த்தை பேசினீங்க.. நடக்கிறதே வேற.."

சித்தார்த்தன் ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்து விட்டுப் போய் விட்டான்.. குண்டூசி விழுந்தாலும் கேட்கும் அளவிற்கு அமைதி அங்கு நிலவியது.. விசாகாவின் துயரம், ஆர்த்தியின் வருத்தம், ஆதவனின் குன்றல், மாறனின் மௌனம் என்று எதையும் கவனத்தில் கொள்ளாமல் மாடிப் படிகளை பார்த்தபடி ப்ரீதி பேசினாள்.. அவள் பேச நினைப்பதை பேசித்தான் தீரவேண்டும்.. மற்றவர்களுக்காக என்று மௌனமாக இருந்தால் இதுவே தொடர்கதையாகி விடும்.. அத்துடன் அவளுக்காக சித்தார்த்தன் குரல் கொடுக்கும் போது அவள் மட்டும் பேசாமல் இருந்தால் எப்படி..?

"அத்தை.. நான் அத்தான் வீட்டுக்கு விருந்தாட வரலை.. அத்தை வீட்டுக்கு வந்திருக்கிறேன்.. எனக்கு நீங்கதான் பொறுப்பு.. அத்தான் இல்லை.. அப்பாவுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பும் உங்களுக்குத்தான்.. அத்தானுக்கு இல்லை.. இனி எது கேட்பதாக இருந்தாலும் நீங்க கேளுங்க.. நான் பதில் சொல்கிறேன்.. அத்தான் கேட்கக் கூடாது.."

ஆணித்தரமாக அவள் அறிவுறுத்தியதில் வெகுண்டு தலை நிமிர்ந்தான் ஆதவன்..

"ஏன் கேட்கக் கூடாது..? எனக்கு அந்த உரிமையிருக்கு.." என்று சீறினான்..

"இல்லை அத்தான்.. உங்களுக்கு அந்த உரிமையில்லை..."

அதற்கு மேலும் அங்கே நின்று வாதிட்டுக் கொண்டிருக்க முடியாமல் பசி வயிற்றைக் கிள்ளியதில் ப்ரீதி மாடிக்குச் செல்லப் படியேறி விட்டாள்.. கீழே

"கேட்டிங்களாம்மா.. அவ பேசறதை.." என்று ஆதவன் கத்துவதும்..

"விடுடா.. மெதுவாப் பேசிக்கலாம்.." என்று விசாகா மகனைச் சமாதானப் படுத்துவதும் காதில் விழுந்தது..

'மெதுவாக என்ன பேசுவாங்க..?'

ப்ரீதிக்கு அலுப்பாக இருந்தது.. அத்தையின் வீட்டுக்கு வந்திருக்கும் உற்சாகம் காணாமல் போயிருந்தது.. பூனாவுக்குத் திரும்பி விடலாமா என்று யோசித்தபடி படியேறியவள்..

"அவனுடன் சரிக்குச் சரியாக நின்று நீ பேசியது தவறு சித்தார்த்தா.. அந்தப் பெண்ணுடன் நீ காரில் வந்து இறங்கியதும் தவறுதான்.. உன் உயரம் என்ன சித்தார்த்தா..? உன் அம்மா அதை மறந்ததினால் வந்த விளைவுகளைப் பார்த்தவன்தானே நீ.. பாரம்பர்யம்ன்னு ஒன்று இருக்கிறது சித்தார்த்தா.. மதன்பூர் ராஜவம்சத்தில் உனக்காக பெண் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.. தகுதியில்லாத சாதாரணப் பெண்ணிடம் நீ பேசிப் பழகுவதை நான் விரும்பவில்லை.." என்ற தொண்டைமானின் கடுமையான பேச்சுக் காதில் விழுந்ததில்.. அப்படியே நின்று விட்டாள்..

# 12

**எனைத் தேடும் உன் பார்வை..**
**எனக்கான உன் நேசத்தை**
**நீ ஒளித்து வைத்தாலும்**
**வெளிச்சம் போட்டுக் காட்டிக்**
**கொடுப்பதென்ன..?**

"இவர்தான் கார்வர் மார்ஷ்"

ஆர்த்தி சுட்டிக் காட்டினாள்.. ஸ்வெட்டரை மீறித் துளைத்த பனியில் வெடவெடத்தபடி பார்த்தாள் ப்ரீதி.. வெண்மையான ஐஸ்கிரீம் சிதறல்கள் போலக் கொட்டும் பனிக்குள் சிலை தெரிந்தது.. பனிக்கு அஞ்சாத ஓர் சிங்கமென நிமிர்ந்து நின்று தான் உருவாக்கிய ஊரை கர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் அந்த வெள்ளைக்காரர்.. உண்மையிலேயே ஓர் ஆங்கிலேயர் நிற்பதைப் போலத் தெரிந்ததில் மெய்சிலிர்த்துப் பின் வாங்கினாள் அவள்..

அச்சம் கூட மெய்சிலிர்க்க வைக்குமா..?

"பயந்தாங்குளி.. சிலையைப் பார்த்தாப் பயப்படுவ..?" கேலி செய்தாள் ஆர்த்தி..

"உனக்கென்ன.. உன் ஊர் இது.."

"என் ஊரா..?"

ஆர்த்தியின் துயரம் தோய்ந்த பார்வை தொலைதூர மலை முகடுகளில் எதையோ தேடி அலைந்தது.. ப்ரீதி துணுக்குற்றாள்.. அவள் ஏதும் தவறாய் சொல்லி விடவில்லையே.. உள்ளதைத்தானே சொன்னாள்..

"ஆர்த்தி..?"

ப்ரீதியின் குரலில் ஆர்த்தி புன்னகைத்தாள்.. உயிர்ப்பில்லாத புன்னகை.. ஆர்த்தி அப்படிச் சிரிக்க மாட்டாள்.. மனம் விட்டுச் சிரிப்பாள்.. அவளது சிரிப்பு மற்றவர்களையும் தொற்றிக் கொள்ளும்..

இரண்டு நாள்களாக யாரும் உயிர்ப்புடன் இல்லை.. கடமைக்காக பேசி நடமாடிக் கொண்டிருப்பதைப் போல இருந்தது.. அதனால்தான் ப்ரீதி தான் பூனாவுக்குத் திரும்பிவிட உத்தேசித்திருப்பதை உடனடியாகச் சொல்ல முடியவில்லை.. ஆதவன் அவளைப் பேசியதுகூட அவளை அவ்வளவு பாதிக்கவில்லை.. அதற்குப் பதில் கொடுத்துப் போட்டுத் தாக்கி விட்டானே சித்தார்த்தன்.. பதில் சொல்ல வேண்டிய வேலையை ப்ரீதிக்கு அவன் கொடுக்கவே இல்லையே.. மிச்சம், சொச்சம் இல்லாமல் வைத்துச் செய்து விட்டானே.. அதற்கு மேலும் ப்ரீதி தன் பங்குக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டாள்..

'ஆனால்.. அந்தப் பெரியவர்.. தொண்டைமான் பேசியது..?'

ஆதவன் பேசியதற்குக் கொடுத்துக் கட்டிய சித்தார்த்தன் அந்தப் பெரியவரின் பேச்சுக்கு ஏன் எதிர் பேச்சைப் பேசவில்லை..? அமைதி காத்தானே.. அந்த அமைதியில் ப்ரீதி உடைந்து போனாளே.. சித்தார்த்தன் என்ன பெரிய இவனா..? அவனுடன் சரிக்குச் சரியாக உரையாடக்கூட அவளுக்குத் தகுதியில்லையா..?

'சாதாரணப் பெண்..' தொண்டைமானின் குரல் அவளைத் துரத்தியது.. காதுகளைப் பொத்திக் கொண்டு பூனாவுக்குப் பறந்துவிட வேண்டும் போல இருந்தது..

பெண் என்பவள் வேறு எப்படி இருக்க வேண்டுமாம்..?

தொண்டைமானும் சித்தார்த்தனும் பேசியபடியே மாடி பால்கனிக்குப் போய் விட்டார்கள்.. அதுவரை மூச்சை அடக்கிச் சுவரோடு சுவராக பதிந்திருந்த ப்ரீதி அவளுக்குக் கொடுக்கப் பட்டிருந்த அறைக்குப் பாய்ந்தாள்.. அறையை மூடித் தாழிட்டவுடன் படுக்கையில் விழுந்து கண்களை மூடியவள் எழுந்து கொள்ள ஒருமணி நேரத்திற்கும் மேல் ஆனது.. பசி மறந்து போயிருந்தது..

அடுத்த இரண்டு நாட்களும் ப்ரீதி சித்தார்த்தனின் கண்களில் பட்டுவிடாமல் ஒளிந்து மறைந்து இருந்தாள்.. அவ்வளவு பெரிய அரண்மனையில் ஒருவன் கண்களில் படாமல் ஒளிந்து மறைந்திருப்பது ஒன்றும் சிரமமானதாக இல்லை.. விசாகாவும் அதைத்தான் சொன்னாள்.. எதையோ தொலைத்து விட்ட ஏக்கத்துடன் அண்ணன் மகளிடம் இறைஞ்சினாள்..

"ப்ரீதி.. அவன் கூடப் பேசாதே.."

"எவன் கூட அத்தை..?"

விசாகா ஆதவனைத்தான் சொல்கிறாள் என்று நினைத்தாள் ப்ரீதி, மகன் பேசியதற்காக மனம் வருந்திய அண்ணன் மகளிடம் ஆதவனுடன் பேசாதே என்று ஆறுதல் சொல்கிறாள் என்று நினைத்தாள்.. இல்லை.. அப்படி இல்லை..

"சித்தார்த்தனுடன் பேசாதே.." என்று விசாகா சொன்னாள்..

"அத்தை.."

"ஆதவன் பேசிய தொனி வேண்டுமானால் தவறாக இருக்கலாம்.. அவனுடைய கோபத்தில் தவறில்லை.. நீ என்னுடைய அண்ணனின் மகள்.. நான் இருக்குமிடத்திற்கு விருந்தாளியாக வந்திருக்கிறாய்.. உனக்கு ஆதவன்தான் முக்கியமானவனாக இருக்க வேண்டும்.."

அவளுடைய விசாகா அத்தையா இப்படிப் பேசுவது..? அவள் நியாயவாதி ஆயிற்றே..

"வாழ்வின் போராட்டத்தில் நியாய, அநியாயங்கள் மாறிவிடும் ப்ரீதி.." ஆர்த்தி சொன்னாள்..

இரண்டு நாள்களாக அறையை விட்டு வெளிவராமல் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்த ப்ரீதியை..

"வா.. வெளியே போய்விட்டு வரலாம்.." என்று இழுத்துக் கொண்டு வந்தது ஆர்த்திதான்..

ப்ரீதிக்கும் அது தேவையாக இருந்தது.. பனியும், மழையும் பொழிவதைக் கண்ணாடிக் கதவுகள் வழியே பார்த்தபடி அறைக்குள் முடங்கியிருப்பது கொடுமையிலும் கொடுமை..

"ம்ம்ம்.."

ப்ரீதி ஆர்த்தியுடன் வெளியே வந்திருந்தாள். அது, இது என ஆர்த்தி பேசிக் கொண்டேதான் வந்தாள்.. ஆர்த்தியினால் பேசாமல் இருக்க முடியாது.. ஆனால்.. இந்தப் பேச்சு ஆர்த்தி பேசும் பேச்சைப் போல ஜீவனுள்ளதாக இல்லையே.. ஏன்..? விசாகாவைப் போலவே ஆர்த்தியும் எதையோ தொலைத்து விட்டதைப் போன்ற வெறுமை நிரம்பிய பேச்சைப் பேசினாள்..

"அவரவர்க்கு அவர் நியாயம்.. அதைத் தவறுன்னு சொல்ல முடியாது ப்ரீதி.. ஆதவனுக்கு நீ அவனோட மாமன் மகள்ங்கிற உரிமை கலந்த நியாயம்.. அம்மாவுக்கு நீ அவங்களோட அண்ணன் மகள், அதனால அவங்க மகனுக்குத்தான் இம்பார்ட்டன்ஸ் கொடுக்கனும் என்கிற நியாயம்.."

"நான் அத்தானுக்கு இம்பார்ட்டன்ஸ் கொடுக்காமல் இல்லையே.. வாட் இஸ் தி மீனிங் ஆஃப் தி இம்பார்ட்டன்ஸ்

ஆர்த்தி..? அடிமையைப் போல கைகட்டி வாய் பொத்தி நிற்பதா..? ஆதவன் அத்தான் என்னைக் கம்மாண்ட் பண்ணனும்னு நினைக்கிறார்.."

"நீ அவனோட வுட்-பி ங்கிறதினால அப்படி நினைக்கிறானோ என்னவோ.. அவனோட பாயிண்ட் ஆஃப் வியூவில் அது சரியாப் படுதோ என்னவோ.."

ப்ரீதி அதிர்ந்து போனாள்.. ஆர்த்தி ஆதவனை ஆதரிக்கிறாளா..? ப்ரீதி ஆதவனுக்கு வருங்கால மனைவியா..? அதை ப்ரீதி முடிவு செய்ய வேண்டாமா..? விசாகாவின் குடும்பத்தினர்தான் முடிவு செய்வார்களா..?

கங்காதரன் கூடப் பரவாயில்லை.. தன் விருப்பத்தை அவர் மகள்மீது திணிக்கவில்லை.. கான வயலுக்குப் போ.. ஆதவனுடன் பேசிப் பழகிப்பார்.. அதற்கு மேலும் உனக்கு அவனைப் பிடிக்கவில்லையென்றால் நான் உன்னை வற்புறுத்த மாட்டேன் என்று சொல்லித்தானே அனுப்பி வைத்திருக்கிறார்..

"எனக்குன்னு ஓர் மனசு இருக்கு ஆர்த்தி.."

கடினமாகச் சொல்லி விட்டாள் ப்ரீதி.. வேறு வழியில்லை.. ஓர் சிறுவார்த்தையில் கூட ஆதவனின் வருங்கால மனைவி என்ற வார்த்தையை அவள் அங்கீகரித்து விடக்கூடாது.. இவர்கள் அதையே பிடித்துக் கொள்வார்கள்..

'பூனாவுக்கு இம்மீடியட்டா ரிட்டர்ன் ஆகிரனும்..'

எப்போதும் மிதமான வானிலை கொண்ட வால்பாறையை அவள் ஏக்கத்துடன் பார்த்தாள்.. இன்னும் சில நாள்கள் இங்கு இருக்க முடியவில்லையே..

"உனக்குன்னு ஓர் மனசு இருக்குதான்.. ஷ்யூர்.. ஐ அக்ரி வித் தட்.. பட் ப்ரீதி.. உன் மனதில் ஆதவனுக்கு ஏன் நீ இடம் கொடுக்கக் கூடாது..?"

ப்ரீதியிடம் இதைப்பற்றிப் பேசு என்று விசாகாவும் ஆதவனும் சொல்லி அனுப்பியிருக்கக் கூடும் என்று யூகித்தாள் ப்ரீதி.. இல்லாவிட்டால் ஆர்த்தி சுற்றிச்சுற்றி ஆதவனை ப்ரீதி நினைத்துப் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்க மாட்டாள்.. வீட்டை விட்டுக்

கிளம்பியதிலிருந்து ஆர்த்தி எதைப் பற்றிப் பேசினாலும் அந்தப் பேச்சு ஆதவனிடம்தான் வந்து நிற்கிறது..

'ஆர்த்தி மாறி விட்டாளா..?'

ப்ரீதிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.. இழுத்த இழுப்பிற்கு வளைந்து கொடுக்கக் கூடியதா நம் மனம்..? ஒருவர் மனதில் இடம் பெறுவதும் பெறாததும் தன்னியல்பாய் நடக்கும் நிகழ்வு.. திட்டம் போட்டு ஒருவரை மனதில் திணித்து விட முடியுமா..?

ஆர்த்திக்கும் அவளுக்கும் இடையில் ஓர் நூல்வேலி விழுந்து விட்டதைப் போல உணர்ந்தாள் ப்ரீதி.. துயரமாக இருந்தது.. ஆர்த்தி அவளுக்குச் சிறுவயதிலிருந்து தோழி என்பதினால் மட்டுமல்ல.. ப்ரீதியின் அண்ணன் பிரசாத் ஆர்த்தியை விரும்புகிறான்.. ப்ரீதியின் திருமணம் முடிந்ததும் ஆர்த்தி - பிரசாத்தின் திருமணத்தை நடத்தி விடலாம் என்று கங்காதரனும் விசாகாவும் பேசி முடிவு செய்திருக்கிறார்கள்.. பிறந்தவீடு என்பது அண்ணி என்பவளின் வரவுக்கு முன், வரவுக்குப் பின் என்று மாறி விடும் இயல்புடையது.. பிரசாத்தின் பாசம் முழுமையாகக் கிட்ட வேண்டுமென்றால் அவனுடைய மனைவிக்கும் ப்ரீதிக்கும் இடையே நல்லுறவு நிலைக்க வேண்டும்..

அந்தப் பிரச்னையே தனக்கு இல்லை.. அண்ணியாக வருபவள் ஆர்த்திதானே என்று இலகுவாக நினைத்திருந்தாள் ப்ரீதி.. அந்த நம்பிக்கை ஆட்டம் காண ஆரம்பித்திருக்கிறது..

'ஒருவேளை.. என் மேரேஜ் லேட்டாச்சுன்னா.. இவளும் பிரசாத்தும் காத்திருக்கனும்னு நினைக்கிறாளோ..'

அதுவாகத்தான் இருக்க வேண்டுமென்ற உறுதியில் ப்ரீதியின் மனம் லேசானது.. அவளுக்காக ஆர்த்தி தன் திருமணத்தைத் தள்ளிப் போட வேண்டிய அவசியமில்லை என்பதைச் சொல்லி விட்டால் ஆர்த்தி பழைய ஆர்த்தியாக மாறி விட மாட்டாளா..?

"டோன்ட் வொர்ரி ஆர்த்தி.. நான் அப்பாவிடம் பேசுகிறேன்.. என் மேரேஜ் முடிவதற்காக நீயும் அண்ணாவும் வெயிட்

பண்ண வேண்டாம்.. உங்க மேரேஜை முதலில் நடத்திவிடச் சொல்கிறேன்.."

அவசரமாகச் சொன்னாள்.. நிமிர்ந்து அவளைப் பார்த்த ஆர்த்தியின் பார்வையிலிருந்த கோபம் அவளை திகைக்கச் செய்தது.. இது என்ன.. அவள் எதைச் செய்தாலும் இவர்கள் கோபப் படுகிறார்கள்..?

"ஆர்த்தி..?"

"முட்டாளாடி நீ..? நான் எதைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.. நீ எதைச் சொல்கிறாய்..? நாம் ஆதவனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம் ப்ரீதி.. அண்ணா உன் மீது ஆசைப்படுகிறான்.. அதை நீ கன்சிடர் பண்ணனும்.."

"ஆர்டரா..?"

ஒரு தினுசான குரலில் வினவினாள் ப்ரீதி.. புயலை உள்ளடக்கியிருக்கும் அவளது குரலில் ஆர்த்தி பெருமூச்சு விட்டாள்..

"உனக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைக்கிறதுன்னே தெரியலை ப்ரீதி.. உனக்கும் அண்ணாவுக்கும் மேரேஜ் நடந்தாகனும்.. இது அம்மாவுக்கும், அண்ணனுக்குமான தன்மானப் பிரச்னை.."

"ஏண்டி.. உனக்கு என்னைப் பார்த்தால் எப்படித் தெரியுது..? இந்தக் கேள்வியை ஆதவன் அத்தான்தான் கேட்க வைப்பார்.. வழக்கத்துக்கு மாறா நீ கேட்க வைக்கறியேடி.. கம்மாண்ட் பண்ணினா எனக்குப் பிடிக்காது ஆர்த்தி.. இது உனக்கே தெரியும்.. இருந்தும் எப்படிடீ கம்மாண்டிங் டோனில பேசற.. என்னை உரிமை கொண்டாடி அத்தையும் அத்தானும் தன்மானப் பிரச்னையை கொண்டு வருகிறதுக்கு நானென்ன புராப்பர்ட்டீயா ஆர்த்தி..? மனுஷிடி.. தனி மனுஷி.. எனக்கும் உணர்வுகள் இருக்கு.."

"நீ இப்படித்தான் பேசுவன்னு எனக்குத் தெரியும் ப்ரீதி.."

"அத்தைக்கும் அத்தானுக்கும் இது தெரியவை.."

"தெரிய வைத்து என்ன பிரயோசனம்..? இரண்டு நாள்களுக்கு முன்வரை உன்னை விட்டு விலகுவது

அண்ணனுக்கு ஈஸியா இருந்திருக்கலாம்.. அம்மாவுக்கும் அது சரின்னு தோணியிருக்கலாம்.. விருப்பமில்லைன்னு சொல்கிற பெண்ணைக் கட்டாயப்படுத்தக் கூடாதுன்னு நானும் உன் பக்கம் நின்றிருக்கலாம்.. இப்ப கதையே மாறிப் போச்சேடி.. சொல்லி அடிப்பவன் நான் அப்படின்னு சொல்லிட்டாரேடி.."

ஆர்த்தி 'அவர்..' என்று சொன்னது சித்தார்த்தனை என்பதில் ப்ரீதி புருவங்களை உயர்த்தினாள்.. ஆதவனை ஆர்த்தி அவன், இவன் என்றுதான் குறிப்பிடுவாள்.. அவர், இவர் என்பது சித்தார்த்தனை மட்டும்தான்..

"உன்னிடம் அண்ணா தனிப்பட்ட உரிமை கொண்டாட முடியாது.. உனக்கு அவர் ஊரைச் சுற்றிக் காட்டுவார்.. பேசிப் பழகுவார்.. அதில் ஒளிவு மறைவு கிடையாதுன்னு அவர் சொல்லிட்டாரே ப்ரீதி.."

"அதுக்கு..?"

"இது எப்பேற்பட்ட சவால்ன்னு உனக்குத் தெரியாது ப்ரீதி.. இதில் அண்ணன் தோற்றுவிடக் கூடாதுன்னு அம்மா நினைக்கிறாங்க.. உனக்கு அம்மாவின் குணம் தெரியும் ப்ரீதி.. அவங்க யாரையும் ஃபோர்ஸ் பண்ண மாட்டாங்க.. இன்னும் சொல்லப் போனா அண்ணாவா, ப்ரீதியான்னு கொஸ்டின் வந்தா அம்மா உன்பக்கம்தான் நிற்பாங்க.. ஆதவனுக்கு வேறு பெண்ணைத் தேடுவாங்க.. இப்போ அப்படியில்லைடி.. நீ அண்ணாவை மேரேஜ் பண்ணியே ஆகனும்னு அம்மா பிடிவாதமா இருக்காங்கடி.."

"அவங்க பிடிவாதமா இருந்தா எனக்கென்ன வந்தது ஆர்த்தி..?"

"அவங்க சூசைட் பண்ணிக்கிட்டா உனக்கொன்றும் இல்லையா ப்ரீதி..?"

ஆழ்ந்த குரலில் ஆர்த்தி கேட்டதில் அதிர்ந்து போனாள் ப்ரீதி.. இது என்ன..? பிளாக் மெயிலா..? அத்தையின் குடும்பம் அவளை பிளாக் மெயில் செய்கிறதா..? ஆர்த்தியும் சேர்ந்து கொண்டாளா..?

ப்ரீதியின் அதிர்ந்த பார்வையில் கண்கலங்கினாள் ஆர்த்தி..

"இப்படிப் பார்க்காதேடி.." மாமன் மகளின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்..

மௌனமாகக் கைகளை விடுவித்துக் கொண்ட ப்ரீதி காரை நோக்கி நடந்தாள்.. அதற்கு மேலும் ஊரைச் சுற்றிப் பார்க்க முடியுமா..? அதற்கான மனநிலை வேண்டாமா..?

பனியும், மழையும் நிற்காமல் பொழிந்து கொண்டிருக்கும் அந்தக் குளிர் பிரதேசத்தின் மிதமான சீதோஷ்ணம் ப்ரீதியின் மன வெம்மையை தணித்து விடுமா..?

டிரைவர் காரைக் கிளப்பினான், கிளப்பினான், கிளப்பிக் கொண்டே இருந்தான்.. கார் முரட்டுக் குதிரையாக சண்டித்தனம் செய்து இருந்த இடத்தை விட்டு நகர மறுத்தது..

"இங்கே இப்படித்தான்.. தினமும் ஓர் தடவை ஸ்டார்ட் செய்து வைத்தாகனும்.. இல்லேன்னா இப்படித்தான் மக்கர் பண்ணும்.."

ஆர்த்தி சொல்வது காதில் விழாமல் ப்ரீதி மலை முகடுகளை வெறித்துக் கொண்டிருந்தாள்.. மாமன் மகளின் அதிர்ச்சியை ஆர்த்தியால் புரிந்து கொள்ள முடிந்தது.. இதுபோல ஆர்த்தி பேசியிருக்கக் கூடாதுதான்.. வாழ்வின் சுழல்கள் விளைவிக்கும் நிர்பந்தங்களை ப்ரீதியால் புரிந்து கொள்ள முடியாது.. அவளைப் போன்ற வாழ்க்கை ஆர்த்திக்கும் ஆதவனுக்கும் கிடைக்கவில்லையே..

"என்ன ஆச்சு..?"

கம்பீரமான சித்தார்த்தனின் குரலில் ப்ரீதியின் உள்ளம் அணையுடைத்த வெள்ளமாகத் துள்ள ஆர்த்தியின் முகம் மாறியது..

# 13

**நீ வேண்டாம் என்ற போதும்..**
**விட்டு விலகும் நிலை வந்தபோதும்..**
**உனைத்தானே என் மனம் தேடும்..**

தப்பியோட வழியில்லாமல் மாட்டிக் கொண்டதைப் போல விழித்தாள் ப்ரீதி.. சித்தார்த்தனைப் பார்ப்பதைத் தவிர்த்து அறைக்குள் அடைந்து கிடந்தாளே.. ஒரே மாளிகையில்தான் இருவரும் இருந்தார்கள்.. ஆனாலும் அவன் பார்வையில் படாமல் அவளால் தப்பிக்க முடிந்தது.. இப்போதோ மாளிகைக்கு வெளியில் இருக்கிறாள்.. அவன் பார்வையில் பட்டு விட்டாளே..

கேள்வி ஆர்த்தியிடம்.. பார்வையென்னவோ ப்ரீதியின் மேல்.. அவனது துளைக்கும் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தவித்துப் போனாள் ப்ரீதி.. மனது குறுகுறுத்தது.

"கார் மக்கர் பண்ணுது.." தழைந்த குரலில் சொன்னாள் ஆர்த்தி..

சித்தார்த்தன் டிரைவரிடம் ஏதோ சொன்னான்.. அவர்கள் பக்கம் திரும்பி..

"கட்டபொம்மன் காரை சரி பண்ணி எடுத்து வரட்டும்.. நீங்க என் காரில் வாங்க.." என்று கட்டளையிடும் குரலில் சொன்னான்..

அவன் வரச் சொல்லி அழைக்கவில்லை... கட்டளையிட்டான் என்பதைக் கவனித்தாள் ப்ரீதி... அவனுடன் செல்வதில் ஆர்த்திக்குத் தயக்கம் இருந்ததை ப்ரீதியால் உணர முடிந்தது.. அதை மறைத்து அவள் காரை விட்டு இறங்கியது ஏன் என்றுதான் புரியவில்லை.. சித்தார்த்தன் யார்..? அவன் பேச்சுக்கு இவர்கள் எல்லாம் எதற்காக கட்டுப்படுகிறார்கள்..? மாளிகைக்குள்ளே

வந்து ஆதவனைச் சப்தம் போட்டு அடக்கும் அளவுக்கு சித்தார்த்தனுக்கு அதிகாரம் இருக்கிறதே... எப்படி..? தொண்டைமான் யார்..? மற்றவர்களை சித்தார்த்தன் கட்டுப் படுத்தினால்... அவர் சித்தார்த்தனையே கட்டுப் படுத்துகிறாரே.. எதனால் அந்த அதிகாரத்தை சித்தார்த்தன் அவருக்குக் கொடுத்திருக்கிறான்..? அவனுடைய தாத்தா என்பதினாலா..?

கேள்விகள்.. கேள்விகள்.. கேள்விகள்..

விடைதான் தெரியவில்லை.. அதைச் சொல்லாமல் ஆளாளுக்கு எதையெதையோ சொல்லி அவர்களின்

மனவோட்டப்படி அவளை திசை திருப்ப முற்படுகிறார்கள்.

"ஆர்த்தி.. நாம் சுற்றிப் பார்க்கத்தான் வந்தோம்.. கார் மக்கர் பண்ணினா என்ன..? பக்கத்திலே சுற்றிக்கிட்டு இருக்கலாம்.. கார் சரியானதும் போகலாம்.." சித்தார்த்தனின் முகம் பார்க்காமல் சொன்னாள் ப்ரீதி..

அவனுடன் போகாமல் மறுத்துப் பேச அவளுக்குச் சிரமமாகத்தான் இருந்தது.. இரண்டு முறை அவனுடன் கானகத்தில் தனித்து நின்று பேசியிருக்கிறாள்.. அதில் ஓர்முறை காரில் அவனுடன் தனித்துப் பயணித்திருக்கிறாள்.. இரண்டு தருணங்களும் அற்புதமான தருணங்கள்.. ஆழ்ந்த அறிவுடன் அவன் பேசிய பேச்சுக்களும்.. மின்னல் கீற்றுக்களாக அவன் பார்த்த பார்வைகளும்.. அவள் மனதில் பதிந்திருந்தன.. கூடவே அவளது உள்ளங்கை உணர்ந்த அவனது இதழ்களின் ஈர முத்தம்..!

இவற்றையெல்லாம் அவள் மறந்துதான் ஆக வேண்டும்.. அவன் யாரோ எவரோ.. தொண்டைமான் கேட்டாரே.. அவனது உயரத்தை அவன் மறந்து விட்டானா என்று..

அப்படியென்ன அவன் அவளால் தொடமுடியாத தொடுவானைப் போன்ற உயரத்தில் இருப்பவனா..? அப்படியே இருந்தாலும் அவளுக்கு அது முக்கியமில்லையே.. அவன் தனித்துத் தெரிந்தான்.. பெண்களின் மனம் கவரும் வசீகரனாக இருந்தான்.. ஈர்க்கப்பட்ட பெண் மனம்.. நின்று பேசி விட்டது.. அது பெரும் குற்றமா..?

"தகுதியில்லாத சாதாரணப் பெண்ணிடம் நீ பேசிப் பழகுவதை நான் விரும்பவில்லை.." தொண்டைமானின் குரல் அவளது செவிப்பறையில் அறைந்தது..

'ஆமாம்.. நான் சாதாரணப் பெண்தான்.. ஆனால் சுயமரியாதையை உயிராய் நினைக்கும் பெண்.. இந்த சித்தார்த்தனிடம் பேசிப்பழக விரும்பவில்லை.. நீங்கள் இவனைப் பிடித்து வைத்துக் கொள்ளுங்கள்..' ப்ரீதியின் முகம் கலங்கிச் சிவந்தது..

அவன் பக்கத்தில் நிற்பது சவாலாக இருந்தது.. அணையுடைந்த வெள்ளமாக ஆர்ப்பரிக்கும் மனதை அடக்க வெகுவாக பிரயத்தனப் பட்டாள் ப்ரீதி.. ஓடி விடவேண்டும்.. என்று மனது துடித்தது.. கால் நகர மறுத்தது..

ப்ரீதி சொன்னதைக் கேட்ட ஆர்த்தியின் முகம் மலர்ந்து விட்டது..

"அதுவும் சரிதான்.." அவள் குதூகலத்துடன் சொன்னாள்..

"எது சரி..?" ப்ரீதியை உறுத்துப் பார்த்தபடி கடுமையாகக் கேட்டான் சித்தார்த்தன்..

"அது.. வந்து.." ஆர்த்தி தடுமாறினாள்..

ப்ரீதிக்கு சினம் பொங்கியது.. தொண்டைமான் சொல்வதை மறுத்துப் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தவன் எந்த உரிமையில் அவளை அதட்டுகிறான்..? சொந்த அத்தையின் மகனுக்கே அவள் அந்த அதிகாரத்தைக் கொடுத்ததில்லை.. இவன் யார் அவளை அதட்ட..?

"நாம் ஊர் சுற்றிப் பார்க்க நினைப்பது சரின்னு சொல்லு ஆர்த்தி.." அவன் முகம் பார்க்காமல் பதிலடி கொடுத்தாள்..

"ஊர் சுற்றிப் பார்க்க ஏறிவந்த கார்தான் மக்கர் பண்ணுதே.."

"மக்கர் பண்ணினா சரி பண்ணிக்கலாம்ன்னு சொல்லு ஆர்த்தி.."

"அதுக்கு நேரமாகும்.."

"ஆனா ஆகட்டும் ஆர்த்தி.. ஊர் சுற்றிப் பார்க்க கிளம்பி வந்தவளுக்குத் திரும்பிப் போக வழி தெரியும்ன்னு சொல்லு ஆர்த்தி.."

"ஊஹீம்..?"

சித்தார்த்தனின் சிவந்த கண்களில் பயம் கொண்ட ஆர்த்தி..

"வால்பாறை சந்தையை இவள் பார்க்கனும்னு ஆசைப்பட்டா.. அதை இவளுக்குக் காட்டி விட்டுக் காய்கறிகளும் கொஞ்சம் மளிகை ஜாமானும்

வாங்கிக்கிட்டு வர்றதா அம்மாவிடம் சொல்லி விட்டு வந்தேன்.. அதனால கார் சரியானதும் நாங்க வந்துக்கிறோம்.. நீங்க போங்க.." என்றாள்..

"இதை நீதான் சொல்வியா..? உன் மாமன்மகள் என்னிடம் பேச மாட்டாளா..?" கோபமாக கேட்டான் சித்தார்த்தன்..

ஆர்த்தி மௌனித்தாள்.. ப்ரீதி சித்தார்த்தனுக்கு நேரடியாகப் பதில் சொல்லாததில் அவள் சந்தோச மடைந்திருந்ததை மற்ற இருவரும் உணர்ந்தார்கள்.. சினம் கொண்ட சித்தார்த்தனின் பார்வையை சந்திப்பதைத் தவிர்த்தாள் ப்ரீதி.. ஆத்திரத்துடன் காலடியில் இருந்த கல்லை அவன் ஓங்கி உதைத்ததில் கல்லானது மலைச் சரிவில் கடகடவென உருண்டோடியது.. கார்க்கதவை ஓங்கி அவன் சாத்தியதில் அவனது கோபத்தின் பரிணாமம் வெளிப்பட்டது.. சீறிப் பாய்ந்த காரின் வேகத்தைப் பார்க்க முடியாமல் ப்ரீதி விழிகளை மூடிக் கொண்டாள்..

"அண்ணா.. கேட்டாயா..?" ஆர்த்தி செல்போனில் ஆதவனிடம் நடந்த நிகழ்வைப் பற்றி உற்சாகமாக விவரிக்கத் தொடங்கினாள்..

ப்ரீதியின் மனம் கனத்தது.. எதையோ இழந்து விட்டதைப் போலத் தோன்றியது.. சரிவில் தெரிந்த கானகம் அவளை 'வா' வென அழைத்தது.. இறங்கி ஓடி, மரங்களுக்குள் புகுந்து, மரத்தின் மீது சாய்ந்து ஓவென அழுதால் நன்றாக இருக்கும்..

'பூனாவுக்குப் போய் விடவேண்டும்..'

"எவ்வளவு நேரம்டி கையை நீட்டிக் கொண்டிருப்பது..?"

ஆர்த்தியின் சிணுங்கலில் சிந்தனை கலைந்தவள்..

"என்ன..?" என்று விழித்தாள்..

"என்னவா..? எந்தக் கோட்டையைப் பிடிக்க இவ்வளவு யோசனை யோசிக்கிற..? அம்மா லைனில் இருக்காங்க.. உன்னிடம் பேசனுமாம்.."

அப்போதுதான் ஆர்த்தியின் கையில் இருந்த செல்போனை கவனித்தாள் ப்ரீதி.. வாங்கி காதுக்குக் கொடுத்தாள்..

"ப்ரீதி.. என் கண்ணே.. என் மனசே நிறைஞ்சு போயிருச்சு தங்கம்.. என் அண்ணன் மகள்ங்கிறதை புரூவ் பண்ணிட்ட.. ப்ரீதிக்கு ஊரைச் சுற்றிக் காட்டுவேன்.. எஸ்டேட்டைச் சுற்றிக் காட்டுவேன்.. உங்களால் என்ன செய்ய முடியும்ன்னு சவால் விட்டானே.. சித்தார்த்தன்.. இப்ப மூஞ்சியை எங்கே கொண்டு போய் வைத்துக்குவான்.."

இதே ரீதியில் விசாகா பேசிக் கொண்டேபோக.. அந்தக் கொடுமையைக் கேட்கச் சகிக்காமல்..

"யார் இந்த சித்தார்த்தன்..? உங்களுக்கும் அவருக்கும் என்ன சண்டை..? அவர் ஏன் உங்க வீட்டில் இருக்கிறார்..?" என்று கேட்டு விட்டாள் ப்ரீதி..

அவளுக்குத் தெரியும்.. அவளுடைய கேள்விகளுக்குப் பதில் கிடைக்காது என்று.. அவளும் வந்ததில் இருந்து ஆர்த்தியிடமும் விசாகாவிடமும் எப்படியெப்படியோ கேட்டு விட்டாள்.. பதில்தான் கிடைக்கவில்லை.. இப்போதும் அப்படித்தான்.. விசாகா பதில் சொல்லாமல் போனைத் துண்டித்து விட்டாள்..

'அப்பாடி..' காதுகளில் குருதி கொட்டுகிறதா என்று பரிசோதித்துப் பார்த்தாள் ப்ரீதி.. 'ஙொய்' என்ற சப்தம்தான் வந்தது.. வேறு சேதம் இல்லை..

"நானும் ப்ரீதியும் இப்படியே பொடி நடையா நடந்து வால்பாறை சந்தைக்குப் போகிறோம்.. நீங்க காரை சரி பண்ணிக் கிளப்பிக்கிட்டு அங்கே வந்து எங்களை பிக்-அப் பண்ணிக்கங்க.."

ஆர்த்தி கட்டபொம்மனிடம் சொல்லிவிட்டு ப்ரீதியின் கையைப் பிடித்துக் கதைகள் பேசியபடி நடக்க ஆரம்பித்தாள்.. சுற்றிலும் தேயிலை பாத்திகள்.. ப்ரீதிக்குத்தான் அவற்றின் அழகில் மனம் லயிக்கவில்லை.. மனம் முழுவதும் கோபமாகப் போன சித்தார்த்தனின்

மீதே இருந்தது..

'இது கூடாதே..' அவள் அரண்டு போனாள்..

இந்த ஏக்கத்தை வளர விடக் கூடாது.. முளைக்கும் போதே கிள்ளி எறிந்துவிட வேண்டும்.. அதற்கு அவள்

கானவயலில் இருக்கக் கூடாது.. பூனாவுக்கு ஓடிவிட வேண்டும்..

"ஆர்த்தி.."

"சொல்லுடி.."

"நான் பூனாவுக்குப் போகனும்.."

"பாருடா.. பாப்பாவுக்கு வீட்டு நினைவு வந்திருச்சு.. இப்படியாடி அம்மா கோண்டாய் இருப்ப.. வந்து ஒரு வாரம்தான் ஆகுது.. அதுக்குள்ளே பூனாவுக்கு போகனுமாம்.. உனக்கெல்லாம் எதுக்குடி ஊர் சுத்திப் பார்க்கிற ஆசை..?"

"ஏதோ தெரியாத்தனமாய் ஆசைப்பட்டுட்டேன்.."

தொண்டை அடைக்கப் பார்த்தது.. சமாளித்துக் கொண்டு பிசிறில்லாமல் தெளிவாகச் சொல்லி விட்டாள் ப்ரீதி.. மரங்களையும், செடிகளையும், கொடிகளையும், பனிப்புகை மறைக்கும் சாலைகளையும், மேகங்கள் சூழ்ந்த மலை முகடுகளையும், சரிவில் தெரியும் தேயிலைத் தோட்டங்களையும் விரக்தியுடன் பார்த்தாள்.. இவற்றுடன் கொஞ்சி மகிழ்ந்து, பனியில் நனைந்து, மழையில் ஆடி, அருவியில் குளித்து, பறவைகளிடம் கதை பேசி என்று காலம் கழிக்க எவ்வளவு ஆசையாசையாய் ஓடி வந்தாள்.. எதையும் நிறைவேற்றாமல் வந்த ஒரு வாரத்திலேயே ஓடுகிறாளே..

"விடுடி.. ஆதவனுக்கே இந்த ஊர் பிடிக்காது.. பூனாவில் செட்டில் ஆகனும்னு பிளான் பண்ணிக்கிட்டு இருக்கான்.. நானும் உன் வீட்டுக்கு மருமகளா வந்து விடுவேன்.. நாம அங்கே லூட்டி அடிக்கலாம்டி.. ஆதவன் உனக்காக பூனாவில் மாளிகை கட்டித் தருவான்.."

ப்ரீதி ஆதவைன மணக்கச் சம்மதித்து விட்டாள் என்ற தினுசிலேயே பேசித் தள்ளினாள் ஆர்த்தி.. ப்ரீதிக்கு தலையை வலித்தது.. இல்லை என்று கூவ வேண்டும் போல வெறிவெறியாக இருந்தது.. 'ப்ளீஸ்' என்று கத்த வாய் திறந்தவள் தன்னை அடக்கிக் கொண்டு..

"அங்கே என்னடி..? திருவிழாக் கூட்டமா இருக்கே.." என்று கைகாட்டினாள்..

"அதுதான் வால்பாறை சந்தைடி.."

பேச்சு திசை மாறியது.. ப்ரீதி நிம்மதியானாள்..

'பூனாவுக்குப் போனதும் அப்பாவிடம் கட் அண்ட் ரைட்டா எனக்கு ஆதவன் அத்தானை மேரேஜ் பண்ணிக்க விருப்பமில்லைன்னு சொல்லி விடனும்..' மனதுக்குள் தீர்மானித்தாள்..

இவர்களிடம் அவளது முடிவைச் சொல்ல முடியாது.. வீண் வாக்குவாதம் கிளம்பும்.. விசாகா அழுவாள்.. ஆதவன் கத்துவான்.. ஆர்த்தி கெஞ்சுவாள்.. இவற்றில் இருந்து தப்பிப் பிழைக்க வேண்டுமென்றால் இவள் எதுவும் பேசாமல் பூனாவுக்கு ஓடிவிட வேண்டும்.. அங்கே கங்காதரன் இருக்கிறார்.. மகளது விருப்பத்திற்கு மறுப்புச் சொல்ல மாட்டார்.. அவள் ஆதவனைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்த மாட்டார்.. விசாகா குடும்பத்தினர் வற்புறுத்துவதை அனுமதிக்கவும் மாட்டார்..

"எப்படி.. ஜேஜேன்னு திருவிழா போல இருக்குதில்ல.." ஆர்த்தி சிரித்தாள்..

வால்பாறை சந்தை அப்படித்தான் இருந்தது.. காய்கறிக் கடைகளும், மளிகைப் பொருள்கள் விற்கும் கடைகளுமாக களை கட்டியிருந்தது.. ஆர்த்தி வேண்டிய காய்கறிகளையும் மளிகை பொருள்களையும் வாங்கிக் கொண்டிருந்த போதே கார் வந்து விட்டது.. அவர்கள் காரில் ஏறி அமர்ந்ததும்..

"ஐயா போன் பண்ணினாரும்மா.." என்றான் கட்டபொம்மன்..

'சித்தார்த்தன் போன் பண்ணியிருக்கிறான்..' பெண்கள் இருவரும் இறுக்கமானார்கள்..

"நீங்க சந்தைக்குப் போயிருக்கிறதாச் சொன்னேன்.. கார் ரெடியாகிருச்சுன்னு சொன்னேன்.. சரின்னு சொல்லிட்டு கட் பண்ணிட்டார்.."

அவன் கோபமாகப் போனாலும் பெண்கள் இருவரும் தனியாக இருக்கிறார்களே என்ற பொறுப்புணர்வில் அவர்களைப் பற்றி விசாரித்திருக்கிறான் என்பதில் ப்ரீதியின் மனதில் இதம் பரவியது..

'இதுவே ஆதவனா இருந்திருக்கனும்.. எனக்கென்னன்னு இருந்திருப்பான்..' வெறுப்பு வந்தது..

அரண்மனையின் மேல்படியில் சித்தார்த்தன் நின்றிருந்தான்.. கால்கள் பின்னப் படியேறியவள் அவனை கடந்து போகும் போது லேசாகப் பார்த்தாள்.. கண்கள் இடுங்கத் தீர்க்கமாக அவன் பார்த்த பார்வையின் தீட்சண்யத்தில் அவளது இதயம் நடுங்கியது..

'ஏன் இப்படிப் பார்க்கிறான்..?'

# 14

## சலனமற்ற பெண் மனதில்
## கல்லெறிந்து கலக்கி விட்டு
## வியாக்கினமா பேசுகிறாய்..?

இந்த நொடிவரை அவன் யாரென்றே அவளுக்குத் தெரியாது.. அவன் பெயர் தெரியும்.. ஊர் இதுதான் என்று அவன் சொல்லியிருக்கிறான்.. அந்த அரண்மனையில் அனைத்து அதிகாரங்களுடன் தங்கியிருக்கிறான்.. ஆனால் அவன் யார் என்று தெரியாது.. தொண்டைமான் யாரென்றும் தெரியாது.. விசாகாவின் குடும்பத்திற்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியாது..

இப்படித் தெரியாத ஒருவனுக்காக அவள் மனம் துடிக்கிறது.. அவன் பார்வை முறைக்கிறது என்றால் இதை என்னவென்று சொல்வது..?

ஏதோ செய்யக்கூடாத தவறை செய்து விட்டவளைப் போலத் தலையைக் குனிந்தபடி ஓடி விட்டாள் ப்ரீதி.. உள்ளே போனால் கள் குடித்தவனைப் போல போதையுடன் நின்றிருந்தான் ஆதவன்.. சித்தார்த்தனை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் ப்ரீதி ஓடி வருகிறாளாம்.. அதில்

அவனுக்கு அவ்வளவு போதை.. சினத்துடன் உள்ளே வந்த சித்தார்த்தன் இதில் மேலும் உக்கிரமாக இவள் நடுங்கிப் போனாள்..

'ஏண்டா அத்தான் நீ வேற இப்படிப் படுத்தித் தொலைக்கிற.. நான் ஓடி வருகிறதுக்கான காரணமே வேறடா..' தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது..

"ப்ரீதி.. என் செல்லமே.." விசாகாவின் குரல் கேட்டது.

'ஹைய்யோ.. அடுத்த அட்டாக் ஆரம்பமாகிருச்சே..!'

ப்ரீதி பதறிப் போய் சித்தார்த்தனைப் பார்த்தாள்.. சிவந்த கண்கள் மேலும் சிவக்க ஆரம்பித்ததில் காபியும் வேண்டாம்.. டிபனும் வேண்டாம் என்று மாடிப் படிகளில் தாவியேற யத்தனித்தாள்..

'இவங்க ஒரு குறிக்கோளுடன்தான் இருக்காங்க.. இவங்க பகைக்குத் தொட்டுக் கொள்ள நான் என்ன ஊறுகாயா..? நல்லா இருக்கே.. நான் போறேன் பூனாவுக்கு..'

விசாகா அழைக்கும் குரல் காதில் கேட்காததைப் போல ப்ரீதி விரைவதைப் பார்த்தபடி நின்றிருந்த சித்தார்த்தனின் புருவங்கள் முடிச்சிட்டிருந்தன.. கண்கள் இடுங்க எதையோ ஆழமாக சிந்தித்துக் கொண்டிருந்தான்.. அதைக் கலைப்பதைப் போல

"நீ வேணும்னா உச்ச நட்சத்திரமா இருக்கலாம்... அதுக்காக நினைத்ததை எல்லாம் வாங்கிவிட முடியாது.. உன்னால் வாங்க முடியாததும் உலகத்தில் இருக்கும்.." என்று ஆதவன் செல்போனில் உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தான்.. சித்தார்த்தனின் பார்வை அவனைப் பொசுக்குவதை லட்சியமே பண்ணவில்லை.. தன் போக்கில் பேசித் தள்ளிக் கொண்டிருந்தான்..

"ஊரைச் சுற்றிக் காட்டுவியாம்.. எஸ்டேட்டைச் சுற்றிக் காட்டுவியாம்.. யாராலும் கேட்க முடியாதாம்.. இப்ப என்ன ஆச்சு..? சம்பந்தப்பட்டவளே உன் காரில் ஏற முடியாதுன்னு சொல்லியாச்சு.. ஊரை நீ சுற்றிக் காட்ட வேண்டாம்.. நான் சுற்றிப் பார்த்துக்குவேன்னு சொல்லியாச்சு.. யாரு அவ..? என்ன்ன் மாமன் மக.."

ஆதவன் 'என்ன்ன்' என்று கொடுத்த அழுத்தத்தில் சித்தார்த்தனின் இமைகள் துடித்தன.. ஆதவன் எதிர்பாராத நொடியில் அவன் கையிலிருந்த செல்போனை பிடுங்கி தன் காதில் வைத்தான்.. மறுமுனை நிசப்தமாக இருந்தது.. சித்தார்த்தனின் கண்களில் தீப்பொறி பறந்தது..

"நினைச்சேண்டா.." என்றான் எகத்தாளமாக..

ஆதவன் அகப்பட்டு விட்டதில் குன்றிப் போனாலும் அதை மறைத்துக் கொண்டு..

"என்ன நினைச்சீங்க..?" என்று எகிறினான்..

"ஆளே இல்லாத கடையில் டீ ஆத்தறதைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கேன்.. யாருமே பேசாத செல்போனில் தானாப் பேசிக்கிறதை இப்பத்தான் பார்க்கிறேண்டா.. இப்படி இன்டீசன்டா பிஹேவ் பண்ண உனக்கு சொல்லியா தரனும்..?"

"மைண்ட் யுவர் டங்.."

"இதை நான் சொல்லனும்.. எங்கே வந்து யாரை ஜாடை பேசற..? தைரியமிருந்தா நேருக்கு நேராப் பேசனும்.."

"அதுதான் பேசிட்டாள்ல.."

ஆதவனின் இதழ்கள் இகழ்ச்சியாக மடிந்தன.. சித்தார்த்தனின் ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது.. அவனிடம் நேருக்கு நேர் நின்று பேச அஞ்சும் ஆதவனின் விழிகளில் தெரிந்த ஏளனம் சித்தார்த்தனை பாதித்தது..

"என்ன சொல்கிற..?"

"நேருக்கு நேராய் நின்று பேசனும்னு சொன்னீங்கள்ல.. அதைச் சொன்னேன்.. என் மாமன் மகள்.. என் அம்மாவின் அண்ணன் மகள்.. நேருக்கு நேராய் நின்றுதானே பேசினாள்.. காரில் வான்னு கூப்பிட்டிங்களாமே.. அவள் வந்தாளா..? வரமாட்டா.. ஏன்னா அவ உடம்பில ஓடறது எங்க குடும்ப ரத்தம்.. என் மாமாவின் வளர்ப்பு அப்படி.."

ஆதவன் பழி தீர்த்துக் கொண்டிருந்தான்.. இப்படிப்பட்ட வாய்ப்புக் கிடைக்குமென்று அவன் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.. லட்டு போல வாய்ப்பு அவன் கையில் விழுந்திருக்கிறது.. அதை நழுவ விடாமல் கெட்டியாப்

பிடித்துக் கொண்டான்.. இதுபோன்ற இனிய வாய்ப்பு அவன் வாழ்நாளில் இனிக் கிட்டுமோ என்னவோ.. கிட்டாது என்பதே சர்வ நிச்சயம்.. சித்தார்த்தன் மன்னன்.. மன்னாதி மன்னன்.. அவன் நிழலை நெருங்கக்கூட ஓர் தகுதியிருக்க வேண்டும்.. ஆதவன் பெற்ற வரமோ இல்லை விசாகா பெற்ற வரமோ.. சித்தார்த்தனின் நிழலில் வாழும் பாக்கியம் கிடைத்திருக்கிறது.. இதில் சித்தார்த்தனை பழி தீர்ப்பது எப்படி..?

சித்தார்த்தனின் விழிகளில் வேட்டைப்புலியின் பளபளப்பு வந்திருந்தது.. வஞ்சம் தீர்க்கும் முனைப்பில் இருந்த ஆதவன் சித்தார்த்தனின் முகத்தில் தெரிந்த வன்மத்தைக் கவனிக்கவில்லை.. சிங்கம் புலியாகக் கூடாது.. நேருக்கு நேர் தாக்கும் சிங்கத்தைப் பதுங்கிப் பாயும் புலியாக்கிக் கொண்டிருந்தான் ஆதவன்..

"ஓ.."

சித்தார்த்தன் மௌனசாட்சியாக வீற்றிருந்த மாறனை ஓர் மௌனப்பார்வை பார்த்தான்.. மாடியேறி விட்டான்.. மாறன் ஓர் பெருமூச்சுடன் நிமிர்ந்தார்.. ஆதவனைப் பார்த்தார்..

"நீ செய்வது நல்லா இருக்கா..?" என்று கேட்டார்..

"நீங்கள் செய்ததை விட நன்றாகத்தான் இருக்கிறது.." ஆதவன் பதிலடி கொடுத்தான்..

மாறன் மறுபடியும் ஓர் பெருமூச்சுடன் மௌனியாகி விட்டார்.. எப்போதும் கணவர் மௌனமானால் ஏதேனும் ஓர் பேச்சைப்பேசி சூழ்நிலையை கலகலப்பாக்கும் விசாகா அன்று அவரது மௌனத்தைக் கண்டு கொள்ளவே இல்லை.. மகத்தான ஓர் செயலை செய்துவிட்ட மகனைப் பாராட்டுவதைப் போல் ஆதவனைப் பாராட்டிப் பாராட்டிப் பூரித்துப் போனாள்.. ஆர்த்தியும் கூடச் சேர்ந்து கொண்டதைத்தான் மாறனால் நம்பமுடியவில்லை.. அவரது மகள் நியாயவாதியாயிற்றே.. எப்போதிருந்து இப்படி மாறிப் போனாள்..?

மாடியறைக்குப் போன ப்ரீதி கட்டிலில் வீழ்ந்தாள்.. உடலும் மனமும் சோர்ந்திருந்தன.. ஊருக்குப் போய் விட வேண்டும்

என்ற எண்ணம் தீவிரமாக வலுத்தது.. அதுவும் உடனே போய்விட வேண்டும்.. செல்போனை எடுத்தவள்..

"அப்பா.." என்றாள்..

"என்னடா..? ஊருக்கு ரிட்டர்ன் ஆகனுமா..?" கனிவுடன் கேட்டார் கங்காதரன்..

"உங்களுக்கு எப்படித் தெரியும்..?" ப்ரீதி திகைத்தாள்.

"விசாகா சொன்னா.." ஒற்றை வரியில் பதில் வந்தது..

'அதற்குள் பூனா வரை விசயம் போய் விட்டதா..?'

எதற்காக இந்தக் கொண்டாட்டம்..? ப்ரீதி சித்தார்த்தனைத் தவிர்த்தது தன் சுயமரியாதைக்காக.. தனிப்பட்ட பிரச்னைக்காக.. தொண்டைமானின் வார்த்தைகள் அவளைக் காயப்படுத்தி விட்டதற்காக.. அதை விசாகாவின் குடும்பம் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு குதிப்பதில் ப்ரீதிக்குத் துளியளவும் விருப்பமில்லை.. அவளறிந்தவரை சித்தார்த்தன் ஓர் கண்ணியவான்.. கண்டிப்பானவன்.. தோரணையானவன்.. ஆனாலும் கனிவானவன்.. அவனுடன் பேச ப்ரீதிக்கு மிகவும் பிடித்திருந்தது.. எந்த ஒன்றையும் மேம்போக்காக சொல்லாமல் ஆழ்ந்து அலசி ஆராய்ந்து அவன் பேசும் விதம் அவளைக் கவர்ந்தது.. தொண்டைமான் பேசியதைக் கேட்க நேர்ந்து விட்டதினால்தானே அவள் அவனைத் தவிர்த்தாள்.. ஆதவனுக்காகவும், அத்தைக்காகவும் அல்லவே..

"இங்கே இருக்கவே எனக்குப் பிடிக்கலைப்பா.."

"ஊரைப் பிடிக்கலையா..?"

"ஊஹீம்.. ஊர் ரொம்ப அழகாயிருக்கு.. இங்கேயே இருந்து விடலாம்ன்னு தோணுது.. சில்லுன்னு காத்தும்.. கொட்டற மழையும்.. எங்கே பார்த்தாலும் அருவியும், பச்சைப் பசுமையுமா 'ஹப்பா..'ன்னு இருக்கு.. பட்.. இதையெல்லாம் என்ஜாய் பண்ண முடியாத சிச்சுவேசன் இங்கே இருக்குப்பா.."

ஓர்நொடி மௌனமாக இருந்த கங்காதரன்..

"விசாகாவோட வாழ்க்கை சிக்கலானதா ஆகிருச்சும்மா.. அது உன்னையும் பாதிக்கும்ன்னு நான் நினைக்கலை.. ஆதவனோட பேசிப் பழகத்தானே உன்னை அனுப்பினேன்..? நீ ஏன் அவனுடன் அவுட்டிங் போகக் கூடாது..?" என்று கேட்டார்..

"எனக்குப் பிடிக்கனுமேப்பா.." ப்ரீதி பட்டென்று பதில் சொல்லி விட்டாள்..

"சித்தார்த்தனுடன் அவுட்டிங் போக மட்டும் பிடித்திருக்கிறதா..? டோன்ட் மிஸ்டேக் மி மை சைல்டு.. நீ சித்தார்த்தனுடன் அவுட்டிங் போயிருக்கிறாய்.. அதிலிருந்துதான் பிராப்ளம் கிரியேட் ஆகியிருக்கிறது.. அதனால் கேட்டேன்.."

"இந்த சித்தார்த்தன் யாருப்பா..?"

"உனக்குத் தெரியாதா..?"

"உங்களுக்குத் தெரியுமா..?"

கங்காதரன் மகளின் கேள்விக்கான பதிலைச் சொல்லாமல்..

"அங்கே யாரும் உனக்குச் சொல்லவில்லையா..?" என்று கேட்டார்..

"இல்லைப்பா.. யாரும் சொல்லலை.. இன்க்ளூடிங் ஆர்த்தி.. என்னிடம் எதையும் மறைக்காதவள் இந்தக் கேள்விக்கு மட்டும் பதிலைச் சொல்லவே மாட்டேங்கிறா.."

"சொல்லலைன்னா விட்டு விடு.. அது நமக்குத் தேவையில்லாதது.."

"சித்தார்த்தனைப் பற்றி நீங்க கேட்ட கேள்விகான ஆன்சர் இதுதான்ப்பா.. எனக்கு அவனுடன் ஊர் சுற்றிப் பார்க்கப் பிடித்திருந்தது.."

"ப்ரீதி.."

"ஹி இஸ் எ பெர்பெக்ட் ஜென்டில்மேன்.. ஆதவனை விட இவன் பணக்காரன் போல.."

"ம்ம்ம்.. சித்தார்த்தனின் உயரம் ரொம்ப அதிகம்.. நீயும் நானும் நினைத்துப் பார்க்க முடியாத

உயரத்திலிருப்பவன்.."

"நினைத்துப் பார்க்கும் உத்தேசமும் எனக்கு இல்லைப்பா.. அவன் பெரிய இவனாவே இருக்கட்டும்.. ஐ டோன்ட் கேர்.. இந்த ப்ரீதி ஒன்றும் பணத்தைப் பார்த்துப் பல்லை காட்டும் ரகமில்லை.. என்னை ஈஸியா யாரும் நினைத்து விடவேண்டாம்.."

ப்ரீதியின் படபடப்பில் கங்காதரன் கவலையாகி விட்டார்..

"அப்பாவிடம் கோபமா கண்ணம்மா..?"

"தெரியலைப்பா.. உங்க மேலே, அத்தை மேலே, மாமா, ஆதவன், ஆர்த்தின்னு அத்தனை பேர் மேலேயும் கோபம்தான் வருது.. ஏன்னு தெரியலை.."

"அங்கிருக்கும் சிச்சுவேசனில நீ அபெக்ட் ஆகியிருக்கிறாய்ன்னு தெரியுது.. லீவ் இட்.."

"ம்ம்ம்.."

"ஆதவனுக்குப் போன் பண்றேன்.."

"எதுக்கு..?"

"உன்னை பூனாவுக்கு கூப்பிட்டுக்கிட்டு வரச் சொல்றேன்.. அவனும் இங்கே பிஸினெஸ் ஆரம்பிக்க பில்டிங் பார்க்கனும்னு சொன்னான்.. நீயும் அவனுடன் போய் உன்னோட ஒப்பினியனைச் சொல்லலாம்.. அப்படியே அவனுடன் பேசிப் பழகி உங்க மேரேஜ் பத்தி நல்ல டிசிசன் எடுக்கலாம்.."

"நல்ல டிசிசன்னா என்னப்பா..? நான் அத்தானை மேரேஜ் பண்ணிக்க ஓகே சொல்லனும்.. உங்களைப் பொருத்தவரைக்கும் தட்ஸ் ஒன்லி எ குட் டிசிசன்..! ஈஸிட்..?"

"பாருடா.. அப்பாவை நீ புரிந்துக்கனும்.."

"என்னையும் நீங்க புரிந்துக்கனும்.. அத்தான் மேல எனக்கு இண்ட்ரெஸ்ட் இல்லை.. எந்தக்காலத்திலும் அது வரவே வராது.. இதை மறந்து விடுங்க.. இதையும் மீறி ஃபோர்ஸ் பண்ணினீங்கன்னா நான் பூனாவுக்கு வராம வேற எங்கேயாச்சும் போயிருவேன்.."

அவள் பூனாவுக்குப் போகப் போவதில்லை.. என்பதை அறியாதவளாய் ப்ரீதி கோபப்பட்டாள்..

"கூல் டவுன் பேபி.."

"நான் பேபியில்லைப்பா.. என் வாழ்க்கை யாருடன் இருக்கணும்னு டிசைட் பண்ணுகிற அளவுக்கு பெரிய பெண்ணாகிட்டேன்.. ப்ளீஸ்.. அண்டர்ஸ்டாண்ட் இட்.. அத்தை மகள்தானே ஆர்த்தி.. அவளை அண்ணாவுக்கு மேரேஜ் பண்ணி வையுங்க.. ஆதவன் அத்தானுக்கு வேறு பெண்ணைப் பாருங்க.. என்னை விட்டுவிடுங்க.."

"ஓகே.. இதுதான் உன் டிசிசன்னா அப்பா உன்னை ஃபோர்ஸ் பண்ண மாட்டேன்.. ஐ ஆக்ரி வித் யு.. உனக்கு பூனாவுக்கு வர டிக்கெட் போட்டு விடுகிறேன்.. நீ தனியாகவே வா.."

கங்காதரனுடன் பேசி முடித்த களைப்பில் கண்மூடிப் படுத்துத் தூங்கி விட்டாள் ப்ரீதி.. செல்போன் அலறியது.. கண்விழித்தால் காலிங் பெல்லும் சேர்ந்து அலறிக் கொண்டிருந்தது.. செல்போனை காதுக்குக் கொடுத்தபடி கதவைத் திறந்து விட்டாள்..

"ஹி..ஹி.. அம்மா.." வனிதாமணி வந்தாள்..

"சொல்லுங்கப்பா.. டிக்கெட் கிடைச்சிருச்சா.. மார்னிங் பிளைட்டா..? அத்தையிடம் நீங்களே சொல்லிட்டிங்களா..? தேங்க்யு அப்பா.. தேங்க்யு வெரிமச்.."

மகளுக்கு வாக்களித்தபடி உடனடியாக பிளைட் டிக்கெட்டை புக் பண்ணியிருந்தார் கங்காதரன்.. அவளது செல்போனில் செய்தி வந்திருந்தது.. தந்தையின் துரித செயல்பாட்டில் மனம் நெகிழ்ந்திருந்தாள் ப்ரீதி.. கான வயலை விட்டுக் கிளம்ப வேண்டும் என்பதில் மனதில் மலைஏறி அமர்ந்தது..

"ஊருக்குப் போறீங்களா..?"

ப்ரீதி கிளம்புகிறாள் என்பதில் லேடி மதன்பாய் வனிதாமணி தன் உடன்பிறப்பான சிரிப்பை மறந்து போனாள்.. அவள் துளைத்துத் துளைத்துக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்ன ப்ரீதிக்குத் தெரியாது.. வனிதாமணி செய்திகளை சேகரிக்கிறாள் என்பது..

# 15

## தொலைதூர தொடுவானை நான்
## தொட்டு விட்டு வந்தது
## உன் மீதான காதலால் அல்லவா..?

"கட்டாயம் நீ போய்த்தான் ஆகனுமா..?"

விசாகா திரும்பத்திரும்பக் கேட்டு ஓய்ந்து போனாள்.. விருந்தாட வந்த பெண் பத்தே நாள்களில் ஊருக்குத் திரும்புவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அண்ணன் மகளைச் சரியான முறையில் சீராட்டவில்லையோ என்ற குற்ற உணர்வு அவள் மனதை வாட்டியது.. ப்ரீதி மலைப்பிரதேசத்துக்கு வருகிறாள் என்பதில் எவ்வளவு சந்தோசப்பட்டாள், எத்தனை ஆசையாக கிளம்பி வந்தாள் என்பதை விசாகா அறிந்தவளாயிற்றே.. ஊர் சுற்றிப் பார்க்காமல் அவள் உடனடியாக ஏன் கிளம்புகிறாள்..?

ஆதவனின் கதையே வேறு.. அவன் சித்தார்த்தனைக் கடுப்பேற்ற செமத்தியாக திட்டம் தீட்டி வைத்திருந்தான்.. சித்தார்த்தனின் கண் முன்னே ப்ரீதியுடன் அவன் கை கோர்த்து ஊர் சுற்ற வேண்டும்.. ப்ரீதி அவளது கைபிடிக்க விடுவாளா என்பதில் அவனுக்குச் சந்தேகம் இருந்தது.. என்று அவனது பார்வையில் மாற்றம் வந்ததை ப்ரீதி கண்டு பிடித்தாளோ அன்றிலிருந்தே ஆதவனின் முகம் பார்த்துப் பேச மாட்டாள்.. விரல் நகம் கூடப் பட்டுவிட முடியாத தொலைவில் தள்ளி நின்றுதான் பேசுவாள்.. காரில்கூட முன் சீட்டில் அவன் பக்கத்தில் உட்கார்ந்து வர மறுத்தவள் ஆயிற்றே..

'சித்தார்த்தன் பக்கத்தில் மட்டும் உட்கார்ந்து வந்தா..'

அந்தக் காண்டு ஆதவனின் மனதில் இருந்தது.. கொதித்துப் போயிருந்தான்.. கைகொடு என்று கேட்டால்தானே கொடுக்க மாட்டாள்.. அவளிடம் அனுமதி கேட்காமல் 'பச்சக்' கென பாய்ந்து பிடித்து விட்டால் என்ன செய்ய முடியும்..? ஆதவனுக்கு என்ன வேண்டும்..?

சித்தார்த்தன் அதைப் பார்க்க வேண்டும்.. அவ்வளவுதான்.. சித்தார்த்தன் கடுப்பேறி கண்சிவக்க.. அதில் ஆதவனின் மனம் குதிக்க.. ஆஹா..! நினைத்தாலே இனிக்கிறதே..

முன் எப்போதையும் விட ப்ரீதியின் மீது அவனுக்கு ஆர்வம் அதிகரித்தது... தாய் மாமனை அறிந்து வைத்திருப்பவன் ஆதவன்... மகளின் விருப்பம்தான் கங்காதரனுக்கு முக்கியம்... தங்கையின் மகன் ஆசைப்படுகிறான் என்பதற்காக இந்தா.. என் மகளைக் கல்யாணம் பண்ணிக் கொள் என்று கை பிடித்துத் தந்து விட மாட்டார்.. ப்ரீதியின் மனம் போல்தான் வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பார்.. அதனால்தான் ஆதவன் அதிகக் கனவுகளை வளர்த்துக் கொள்ளவில்லை.. அவன் சுயநலம் மிக்கவன்.. ப்ரீதி இல்லையெனில் ஒரு ஸ்ருதி என்றுதான் எண்ணம் வைத்திருந்தான்..

இப்போதுதான் கதை மாறிப் போய் விட்டதே.. இனம் இனமறியும்.. எவரிடமும் நின்று பேசாத தோரணை மிக்க சித்தார்த்தன் கோபம் கொள்கிறான்.. இது போதாதா ஆதவனுக்கு..? யாராலும் வெல்ல முடியாத சித்தார்த்தனைச் சீண்டிப் பார்க்க ஒரு வாய்ப்புக் கிடைத்திருப்பதை அவனால் நம்பவே முடியவில்லை..

சித்தார்த்தனை எப்படியெல்லாம் சீண்டலாம் என்று படு உற்சாகமாக மனக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தவனுக்கு ப்ரிதி பூனாவுக்குக் கிளம்பப் போகிறாள் என்பது பேரிடியாக இருந்தது.. கங்காதரனுக்குப் போன் போட்டான்..

"ஸாரி ஆதி.. ப்ரீதிக்கு விருப்பமில்லாத எதையும் நான் கட்டாயப் படுத்த மாட்டேன்.." என்று அவர் சொல்லி விட்டார்..

ஆதவன் துணுக்குற்றான்.. எதற்கான பதில் இது..? கங்காதரன் எதைச் சொல்கிறார்..? ப்ரீதி பூனாவுக்குக் கிளம்பி வருவதை அவளது விருப்பம் என்கிறாரா.. இல்லை.. ஆதவனை அவள் திருமணம் செய்து கொள்வது அவளது விருப்பம்.. அவர் அவளைக் கட்டாயப் படுத்த மாட்டார் என்கிறாரா..?

போனால் போகிறது என்று விட்டுவிட அவன் தயாராக இல்லை.. சித்தார்த்தனின் கண்ணெதிரில் ப்ரீதியை மனைவியாக்கி ஊர்வலம் வர வேண்டும்.. அதில் சித்தார்த்தனின் விழிகளில் தெரியும் தோல்வியில் இவன் களிக்க வேண்டும்..

"நீங்க சொல்லுங்கம்மா.. மாமா கேட்பார்.." விசகாவிடம் தூண்டினான்..

"நான் சொல்லலைன்னா நினைக்கிற..? சண்டை கூடப் போட்டுட்டேன்.. ஆனா அண்ணா கேட்க மாட்டேங்கிறாரே.. ப்ரீதிக்கு பிடிக்கலைன்னா அவர் ஃபோர்ஸ் பண்ண மாட்டேன்னு சொல்கிறாரே.." விசாகா அங்கலாய்க்க ஆதவன் திகிலடைந்தான்..

'அம்மா எதைப் பத்திப் பேசினாங்க..? மேரேஜைப் பத்தியா..?'

"எவ்வளவோ சொல்லிட்டேன்.. ப்ரீதி இப்போதுதான் வந்தா.. உடனே கூப்பிட்டுக்க வேண்டாம்.. இன்னும் அவளுக்குன்னு தனியா விருந்து சமைத்துப் போடலை.. நான்கு இடங்களைச் சுற்றிக் காட்டலைன்னு.. அதனால் என்னன்னு மறுத்துச் சொல்லிட்டார்.. இதுக்கு மேலே என்னை என்னடா செய்யச் சொல்கிற..?"

'அப்பாடி.. அம்மா ப்ரீதி பூனாவுக்குத் திரும்புகிறதைப் பற்றித்தான் சொல்கிறாங்க..'

ஆசுவாசமடைந்தான் ஆதவன்... அவனுக்கும் ப்ரீதிக்குமான திருமணப் பேச்சுவார்த்தை ஓர் முடிவுக்கு வருவதை அவன் விரும்பவில்லை.. கங்காதரனின் கால்களில் விழுந்தாவது ப்ரீதியை அவன் கைபிடித்தே தீருவான்.. அதில் எந்தவித மாற்றமும் வந்து விடக் கூடாது.. அதற்கு முன் ப்ரீதி இன்னும் சில தினங்கள் கான வயிலிலேயே இருக்க வேண்டும்.. சித்தார்த்தனின் கண் முன்னால் அவன் அவளுடன் ஊர் சுற்ற வேண்டும்.. நடக்குமா..?

"ஆர்த்தி.." தங்கையிடம் தஞ்சமடைந்தேன்..

அவள் நானிருக்கிறேன் அண்ணா உனக்கு என்று உடனே அபயமளித்து விடவில்லை..

"வேலையைப் பார்க்கிறயா..?" என்றாள் கறாராக..

"நீ சொன்னா ப்ரீதி கேட்பா.."

"யார் சொன்னாலும் கேட்க மாட்டா.. சில விசயங்களில் அவ முடிவெடுத்தா எடுத்ததுதான்.. யாராலும் அதை மாற்ற முடியாது.."

ஆர்த்தி பொடி வைத்துப் பேசுவதைப் போல இருந்தது.. ஆதவனுக்கு கோபம் வந்தது.. அடக்கிக் கொண்டான்.. ஆர்த்தியிடம் அவனது சினம் செல்லுபடியாகாது.. நியாயம் பேசியே கதறடித்து விடுவாள்..

"யோசி ஆர்த்தி.. உனக்கு நான்.. எனக்கு நீ.. நாம வேறவேற திசையில யோசிச்சா சித்தார்த்தன் ஜெயிச்சுட்டுப் போயிருவான்.. இத்தனை நாளா எந்தவிதக் காரணமும் இல்லாம நாம் அவனிடம் தோற்றுக் கொண்டிருக்கிறோம் ஆர்த்தி.."

"சித்தார்த்தன் ஜெயிக்கப் பிறந்தவர் அண்ணா.. அவருடன் ஏன் நம்மை இணை கட்டற..?"

'இந்த நியாயத்தையா உன்னை யோசிக்கச் சொன்னேன்..?' பல்லைக் கடித்தான் ஆதவன்..

இதுதான் ஆர்த்தி.. எந்த நேரம் எதைப் பேசுவது என்று இல்லாமல் சகட்டு மேனிக்கு நியாயம் பேசி உயிரை வாங்குவாள்.. அதனால்தான் ஆதவன் தங்கையிடம் அதிகமாக வாதம் செய்து தொலைக்க மாட்டான்.. அவனுடைய நேரம்.. ஆர்த்தியிடம் அவனை மாட்டிக் கொள்ள வைத்திருக்கிறது..

"அவன் உன்னையும் என்னையும் அடிமை போல நினைக்கிறான்.. ட்ரீட் பண்றான்.. அதை மறந்து விட்டுப் பேசாதே.."

"எந்த அடிமைக்கு அரண்மனை வாழ்வும், கோடிக் கணக்கில் சொத்துக்களும், ஃபாரின் படிப்பும் கிடைத்திருக்கிறது..? வசதியாய் அதையெல்லாம் மறந்துட்டுப் பேசாதே அண்ணா.."

"உரிமையில்லாதது யாருக்கு வேணும்..?"

"தோடா.. பெரிய ரோசக்காரன்தான் நீ.. இப்பேற்பட்ட ரோசக்காரன் இந்த அரண்மனையில் இருக்க முடியாதுன்னு வெளியேறியிருக்கனும்.. உன் பெயரில் இருக்கிற சொத்துக்களை வேண்டாம்ன்னு சொல்லித் திருப்பிக் கொடுத்திருக்கனும்.. ஃபாரின் படிப்பு, ஃபாரின் கார்ன்னு ஹை-சொசைட்டி லைஃபை என்ஜாய் பண்ணி உல்லாசம் கொண்டாடாமல் இருந்திருக்கனும்.."

"ஆர்த்தி.."

"அட போ அண்ணா.. இந்த சவுண்டையெல்லாம் அம்மாவிடம் வைத்துக்க.. என்னிடம் வேண்டாம்.. ஒரு வகையில் ப்ரீதி இங்கிருந்து கிளம்புவதை நான் என்கரேஜ் பண்றேன்.. பாவம்.. தேவையில்லாத இஷ்யூஸ் அவளுக்கு எதற்கு..?"

"என் வுட்-பி மேல அவ்வளவு பாசம்..!"

"ஊஹீம்.. என் வுட்-பி யின் தங்கை மேல அவ்வளவு பாசம்.."

ஆதவனின் மூக்கை உடைத்து விட்டு ஆர்த்தி போய் விட்டாள்.. என்ன செய்வது என்று தலையைப் பிய்த்துக் கொண்டு யோசித்தான் ஆதவன்.. மற்றவர்களிடம் கெஞ்சிக் கொண்டிருப்பதற்குப் பதில் அவனே போய் பேசிப் பார்க்கலாம்தான்.. அதன் விளைவு முன்னிலும் மோசமாகப் போய் விடக் கூடிய சாத்திய கூறுகள் அதிகமிருந்ததில் அந்த யோசனையைக் கைவிட்டு வேறு மார்க்கங்களை யோசிக்கலானாள்..

ப்ரீதி பூனாவுக்குக் கிளம்பப் போகிறாள் என்பது ஆதவனுக்குத் தெரியும்.. எப்போது கிளம்பப் போகிறாள் என்பதுதான் தெரியவில்லை.. அதைத் தெரிந்து கொள்ள வனிதாமணியை அழைத்தான்.. எப்போதும் வனிதாமணியை மதித்துப் பேசாதவன் ஆதவன்.. சித்தார்த்தன்கூட வீட்டில் வேலை செய்பவர்களிடம் இன்முகமாகப் பேசுவான்.. ஆதவன் அப்படியில்லை.. எனக்கெல்லாம் நீங்கள் நிகரா என்பதைப் போல தலைகனத்துடன் நடந்து கொள்வான்.. அப்படிப் பட்ட தலைக்கனம் மிகு ஆதவன் அழைத்ததில் 'லேடி மதன் பாப்'

வனிதாமணி வாயெல்லாம் பல்லாக அவன் முன் ஓடோடி வந்து நின்றாள்..

"ஹிஹி.. ஐயா.."

"முதலில் இந்தச் சிரிப்பை நிறுத்து.. இம்சையா இருக்கு.."

"ஆகட்டும்ங்க ஐயா.."

வனிதமாணியின் சிரிப்பு சட்டென மறைந்தது.. வண்டாற்குழலிக்கே அடிபணிபவள் ஆதவனின் கட்டளையை சிரமேற்கொள்ள மாட்டாளா..?

"நீ என்ன செய்கிற.."

ஆதவன் அவளுக்குச் சொல்ல வேண்டிய வேலையைச் சொல்வதற்காக ஆரம்பிக்க.. கூமுட்டை வனிதாமணியோ..

"சோபாக்களைத் துடைத்துக்கிட்டு இருந்தேங்.." என்றாள்.

இவளிடம் எப்படி வேலைவாங்குவது என்று ஆதவனுக்குத் தலை வேதனையாகி விட்டது.. வனிதாமணியின் அறிவின் எல்லை பூஜ்யம் என்பது அவனுக்குத் தெரியும்தான்.. அதுதானே அவனுக்கும் தேவை.

"நீ இப்ப என்ன செய்கிறன்னு கேட்டா செய்துகிட்டு இருக்கிற வேலையைக் கேட்டேன்னு அர்த்தமில்லை.. செய்ய வேண்டிய வேலையைச் சொல்கிறேன்னு அர்த்தம்.."

தான் சொன்ன விளக்கத்தை அவள் புரிந்து கொண்டாளா என்பதில் பெருத்த சந்தேகம் இருந்தது ஆதவனுக்கு.. அவள் பூம்பூம் மாட்டைப் போலத் தலையாட்டுவதினால் மட்டும் நம்பிப் பேசிவிட முடியாது.. நல்லவேளையாக வனிதாமணி அவன் வயிற்றில் பாலை வார்த்து..

"என்ன செய்யனுங்ய்யா.. ஐயாவோட ரூமை நான் காலையிலேயே பெருக்கித் துடைச்சு வைச்சிட்டேனுங்களே.." என்று பவ்யமாகச் சொன்னாள்..

"இது பெருக்கித் துடைக்கிற வேலையில்லை.."

"சரிங்.."

"ப்ரீதி இருக்காள்ல.."

"ஆமாங்.."

வனிதாமணி ப்ரீதியைப் பற்றிய பேச்சில் வாயெல்லாம் பல்லாகி.. ஆதவனின் முன்னால் சிரித்து வைத்தால் அவன் பல்லைப் பேர்த்து விடுவான் என்பதினால் அவசரமாக வாய் பொத்தினாள்..

"ப்ரீதி ஊருக்குப் போகப் போகிறதா சொல்லிக்கிட்டு இருக்கா.."

"அப்படிங்களாங்.."

வனிதாமணிக்கு வாய் பொத்த வேண்டிய அவசியமே இல்லாமல் சிரிப்பு பறந்து விட்டது.. ப்ரீதியை அவளுக்கு மிகவும் பிடிக்கும்.. மாதக் கணக்கில் அந்த அரண்மனையில் ப்ரீதி தங்கியிருப்பாள்.. அவளிடம் ஆசைதீரப் பேசலாம் என்று நம்பியிருந்த வனிதாமணியின் ஆசை ஆட்டம் கண்டது.. அந்த அரண்மனைக்கு விருந்தாளிகள் வருவது மிகவும் குறைவு.. அத்தி பூத்தாற்போல ஒரு அழகான விருந்தாளி வந்திருக்கிறாள்.. காவையல் காடும், காடு சார்ந்த இடமாக இருந்தது.. காட்டில் உள்ள அரண்மனைக்கு பூனாவைப் போன்ற நகரத்தில் வசிக்கும் நாகரிகப் பெண்ணொருத்தி வந்திருக்கிறாள் என்பதில் வனிதாமணிக்கு ஏகத்துக்கும் சந்தோசம்.. அந்த ப்ரீதி ஊருக்குப் போகப் போகிறாளா..?

"ஆமாம் வனிதாமணி.. இருன்னு சொன்னா இருக்க மாட்டேங்கிறா.. அவ ஊருக்குப் போகிறதை தடுத்து நிறுத்தனும்.."

"உங்களால் அது முடியுங்களா..?"

வனிதாமணியின் ஆவலில் தான் கட்டளையிட வேண்டிய அவசியமே இல்லை என்பதை கண்டு கொண்டான் ஆதவன்.. வனிதாமணியின் வேண்டு கோளுக்காக அவன் போனால் போகிறது என்று ப்ரீதியைத் தடுத்து நிறுத்தியதாக மாற்றி விடலாம்..

"முடியும்தான்.. எதுக்குன்னு யோசிக்கிறேன்.. அவ ஊருக்கு அவ போகிறா.. நான் ஏன் தடுத்து நிறுத்தனும்..?"

"என்னங்கய்யா இப்படிச் சொல்லிட்டிங்க.. ஒரு மாசமோ ரெண்டு மாசமோ இருப்பாங்கன்னு அம்மா சொன்னாங்க.. இப்புடிப் பொசுக்குன்னு பத்தே நாளில ஊரைப் பார்த்துக்

கிளம்பப் போகிறதா சொல்கிறாங்க.. அவங்களை இருக்க வைக்காம பட்டுக்காம பேசறிங்களே.."

"அப்படிங்கிற..?"

"ஆமாங்கய்யா.."

"ஓகே.. நீ இவ்வளவு தூரத்துக்கு கெஞ்சறதினால நான் ஏதாவது ஐடியா பண்ணி அவளை நிறுத்தி வைக்க முடியுமான்னு பார்க்கிறேன்.. இதை வெளியில் சொல்லி வைக்காதே.. உனக்கெதுக்கு இந்த வேலைன்னு வண்டாற்குழலி சாமியாடிரும்.."

"சொல்ல மாட்டேங்கய்யா.. சொல்லவே மாட்டேன்.. நீங்களும் பெரிய மனது பண்ணி எனக்காகத்தான் ப்ரீதி அம்மாவை நிப்பாட்டி வைச்சீங்கன்னு யாருகிட்டேயும் சொல்லிராதீங்கய்யா.. முக்கியமா என் அண்ணிகாரிகிட்ட சொல்லிராதீங்க.. அது என்னை ஆய்ஞ்சு கூடையில அள்ளிப் போட்டிரும்ங்க.. என்னவோ அந்த ப்ரீதி அம்மாவை ரொம்பப் பிடிச்சுப் போச்சுங்க.. அதனாலதான் கெஞ்சிக் கேக்கிறேன்.."

"ஓகே.. யாரிடமும் சொல்லலை.. நீ போய் ப்ரீதி எப்ப ஊருக்குக் கிளம்புகிறாள்ன்னு தெரிஞ்சுக்கிட்டு வா.."

வனிதாமணி தகவல் சேகரித்துக் கொண்டு வந்து கொட்டி விட்டாள்..

'மார்னிங் பிளைட்டா..'

ஓர் இரவுக்குள் என்ன செய்து விடமுடியும் என்று தலை காய்ந்த ஆதவன் தலைமுடியைப் பிய்த்து யோசித்து ஓர் வழியைக் கண்டு பிடித்தான்..

அதிகாலையில் எழுந்து விட்ட ப்ரீதி.. குளித்து உடைமாற்றி முதல் நாள் இரவே உடைகளை அலமாரியில் இருந்து எடுத்து அடுக்கி வைத்திருந்த பெட்டிகளை உருட்டியபடியே ஹாலுக்கு வந்தாள்.. விசாகாவிடம் சொல்லி விட்டுப் போக அவளுடைய அறைக்குப் போனால் அவள் சமையலறையில் ப்ரீதிக்குக் காபி கலக்கிக் கொண்டிருந்தாள்..

"அத்தை.." என்ற ப்ரீதியின் குரலில் திரும்பி இரண்டு எட்டு எடுத்து வைத்தவள் கையிலிருந்த காபிக் கப்பை நழுவ விட்டு மயங்கிக் கீழே சரிந்தாள்..

"அம்மா.."

ஆதவனின் சப்தத்தில் அரண்மனையே விழித்துக் கொண்டது.. விசாகாவை அள்ளிக் கொண்டு ஆதவன் மருத்துவமனைக்க ஓடினான்.. ப்ரீதியும் ஆர்த்தியும் மாறனுடன் வேறு ஒரு காரில் பின் தொடர்ந்தார்கள்.. மயக்கத்திலிருந்த விசாகா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள்.. ப்ரீதி பூனாவை மறந்து ஆர்த்திக்கு ஆறுதல் சொல்லியபடி கவலையுடன் மருத்துவமனையில் உட்கார்ந்து விட்டாள்..

# 16

## உன்னை விட்டு விலகாத
## உள்ளம் இது மன்னவனே..!
## உன் மீது ....என் மனது..

"இல்லைப்பா.. மயக்கத்தில்தான் இருக்காங்க.. கவலைப்பட வேண்டாம்ன்னு டாக்டர் சொல்லிட்டார்.. உடல் சோர்வும் ஸ்ட்ரெஸ்ஸஸீம்தானாம்.. நீங்க வர வேண்டாம்.. இந்த வீக் எண்டில் நான் கிளம்பி வர்றேன்.."

தோட்டத்தில் உலவியபடி பேசிக் கொண்டிருந்தாள் ப்ரீதி.. இமைகள் வீங்கி சோர்ந்திருந்தாள்.. பூனாவுக்குக் கிளம்ப வேண்டும் என்பதில் அன்று இரவு முழுவதும் தூங்கவில்லை.. மறுநாள் காலையில் விசாகா மயங்கி விழுந்ததில் பூனாவுக்குப் போகாமல் மருத்துவமனைக்கு ஓடி முதல்நாள் முழுவதும் உறங்காமல் கண் விழித்ததில் ப்ரீதி சாமியாட ஆரம்பித்திருந்தாள்..

விசாகாவைச் சேர்த்திருந்த மருத்துவமனை நவீனமானதாக இருந்தாலும் சிறிய அளவில் இருந்தது..

முன்னால் வரவேற்பறை.. அடுத்ததாக டாக்டர் பரிசோதிக்கும் அறை.. இரண்டே இரண்டு அறைகள் மட்டுமே..

அந்த மருத்துவமனையைக் கட்டியிருந்த டாக்டர் சரவணன் ஆதவனின் நண்பனாம்..

"இங்கே பிரைவேட் கிளினிக்கிற்கு ஆள் அதிகமா வரமாட்டாங்க.. கவர்ண்மெண்ட் ஹாஸ்பிடலில்தான் கூட்டம் குமியும்.. சொந்த ஊர்.. எஸ்டேட் இருக்கு.. படித்த படிப்பை ஹானர் பண்ணனும்ல்ல.. அதுக்காக இந்த கிளினிக்.."

ப்ரீதியை ஆர்வமாகப் பார்த்தபடி விவரம் சொன்னான் டாக்டர் சரவணன்.. ஆதவன் பக்கத்தில் இருந்தால் மட்டும் ப்ரீதியை யாரோ எவரோ என்று பற்றில்லாமல் பார்த்து வைத்தான்..

'ஆதவனின் பிரண்டு வேற எப்படி இருப்பான்..'

"லேசான அடிதான்.. பட்.. பெட் ரெஸ்டில் இருக்கனும்.. இங்கே டூ டேஸாவது அப்சர்வேசனில் இருக்கிறது பெட்டர்.."

அப்சர்வேசன் பண்ண என்ன இருக்கிறது என்று புரியவில்லை.. நண்பகலில் கண்விழித்த விசாகாவிற்கு சூடாக சாப்பாடைக் கொடுத்ததும் ஆதவன் பாலைச் சாப்பிடச் சொன்னான்.. வாங்கிக் குடித்த விசாகா தூங்க ஆரம்பித்து விட்டாள்.. தூக்க மாத்திரை கலந்த பாலைக் குடித்தால் தூக்கம் வராதா..?

ப்ரீதியைத் தடுத்து நிறுத்த ஆதவன் கையாண்ட யுக்தி அது.. யாருக்கும் பாதிப்பில்லாமல் ப்ரீதியின் பயணத்தை நிறுத்தி விட வேண்டும்.. இரவில் விசாகா சாப்பிட்ட பாலில் ஒன்றிற்கு இரண்டாக தூக்க மாத்திரைகளைக் கலந்து விட்டான்.. அதை ப்ரீதிக்குக் கொடுத்திருக்கலாம்.. ஏன் தனக்குத் தூக்கம் தூக்கமாக வருகிறது என்று அவள் யோசிக்க ஆரம்பித்து என்ன விவரம் என்பதைக் கண்டு பிடித்து விட்டால் காலா காலத்துக்கு ஆதவனை நம்ப மாட்டாள்.. திரும்பிப் பார்க்கவும் மாட்டாள்..

'அத்தை செண்டிமெண்ட்தான் இப்ப ஷீட் ஆகும்..'

தூக்க மாத்திரைகளின் உபயத்தால் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த விசாகாவை எழுப்பி ப்ரீதிக்குக் காபி போடச் சொன்னான்..

"வண்டாற்குழலி வர நேரமாகும் அம்மா.. ப்ரீதி பாவம்.. வெறும் வயிறோடு கிளம்புகிறா.. காபியாவது குடித்துட்டுப் போகட்டுமே.."

விசாகாவின் அத்தை பாசம் தூக்க மாத்திரைகளினால் வந்த மயக்கத்தை வெற்றி கொள்ள, அவள் தள்ளாடியபடியே எழுந்து சமையலறைக்குக் காபி போடப் போனாள்.. தூக்க மயக்கத்தில் இருந்தவளால் ஓர் அளவுக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை.. காபிக் கப்பை நழுவ விட்டுத் தூங்கிச் சரிந்தாள்.. அதற்காகவே காத்திருந்த ஆதவன் ஏற்கனெவே பேசி வைத்திருந்தபடி நண்பனின் கிளினிக்கில் கொண்டு வந்து சேர்த்து விட்டான்.. விசாகா கீழே விழும்போதே ஆதவன் தாங்கிப் பிடித்து விட்டதால் அடியேதும் படவில்லை.. ஆனால் அடி பட்டிருப்பதாக ஆதவன் சொல்ல வைத்தான்.. பிரியத்துக்குரிய அத்தை மயக்கத்தில் இருக்கும் போது ப்ரீதியால் எப்படி ஊருக்குக் கிளம்ப முடியும்..? ப்ரீதி பூனாவை மறந்து விசாகாவின் பக்கத்தில் உட்கார்ந்து வீட்டாள்..

பூனாவில் இருந்த கங்காதரன் மாமனார் ஊருக்குச் சென்றுவர வேண்டியிருந்தது.. ப்ரீதியின் அம்மா பார்கவி கொல்கத்தாவில் பிறந்தவள்.. அவளுடைய பெற்றோர் கொல்கத்தா வாழ் தமிழ்வாசிகள்.. அவளுடைய பாட்டனார் கொல்கத்தாவில் வேலை பார்க்க வந்து அந்த ஊர் தமிழ் குடும்பத்தில் பெண்கட்டி தானும் அவர்களுடன் ஐக்கியமானவர்.. பார்க்கவியின் தம்பி மகனுக்கு கொல்கத்தாவிலிருந்த கோவிலில் மொட்டையடித்துக் காது குத்துகிறார்களாம்.. ப்ரீதி வந்தவுடன் குடும்பமாகக் கிளம்பி கொல்கத்தா போவதாக இருந்தவர்களுக்கு விசாகா மயங்கி விழுந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்ட செய்தி வந்து சேர்ந்தது..

"நீங்க வர வேண்டாம் மாமா.. மனதில ஆயிரம் கவலைகளை வைத்துக்கிட்டு வெளியில் சொல்லாம

மருகிக்கிட்டு இருந்தா இப்படித்தான்.. எங்க தலைவிதி.. இரண்டு நாள் ஹாஸ்பிடலில் இருக்கனுமாம்.. ப்ரீதி வேற ஊருக்குக் கிளம்பினாளா.. ஸ்ட்ரெஸ்ஸஸ் அதிகமாகி மயக்கத்தில கொண்டு வந்து விட்டிருச்சு.. ப்ரீதி பக்கத்தில் இருந்தா பெட்டரா ஃபீல் பண்ணுவாங்கன்னு நினைக்கிறேன்.." உருக்கமாக சொல்லி வைத்திருந்தான் ஆதவன்..

தங்கையைப் பார்க்கக் கங்காதரன் வந்து விட்டால் அவர் போகும்போது ப்ரீதியும் கூடச் சென்று விடுவாளே.. அதற்காகவா இத்தனை மெனக்கெட்டிருக்கிறான்..

மனது கேட்காமல் மகளிடம் விசாரித்தார் கங்காதரன்.. அவளும் கவலைப்பட ஏதுமில்லை என்று சொல்லி விட்டதில் மனது லேசாக.. மாமனாரின் ஊருக்குப் புறப்படத் தயாரானார்.. மகளிடமும் அதைச் சொன்னார்..

"இந்த வீக் எண்டில் வர வேண்டாம் ப்ரீதி.. நாங்க எல்லாம் உன் மாமாமகன் காதுகுத்து பங்சனுக்கு கொல்கத்தா போகிறோம்.. நெக்ஸ்ட் வீக் எண்டில பிளைட் டிக்கெட் புக் பண்றேன்.. நீ கிளம்பி வந்துவிடு.. விசாகாவைப் பார்க்கன்னு எங்கே அந்த ஊரை மிதிக்க வேண்டி வந்து விடுமோன்னு மனசுக்குள்ளே ஓர் முள் நெருடுச்சு.. அது தேவையில்லங்கிறதில நிம்மதியா இருக்கு.. பார்கவியும், பிரசாத்தும் சத்தம் போட்டாங்க.. இப்படியே இருந்து விட முடியுமா..? ஏதாவதும் அவசரம், ஆத்திரம்ன்னா நாம போய்த்தானே ஆகனும்னு கேட்டாங்க.. அது வருகிறப்ப பார்த்துக்கலாம்ன்னு சொல்லிட்டேன்.. நீ அத்தையைப் பார்த்துக்க.."

"சரிப்பா.."

தந்தையிடம் பேசி முடித்துவிட்டுத் திரும்பிய ப்ரீதி, யார் மீதோ மோதி விழப் போனாள்.. தாங்கிப் பிடித்த சித்தார்த்தன்..

"பைக், காரில் போகிறப்ப மட்டுமில்லை.. கார்டனில் வாக் பண்றப்பவும் பக்கத்தில் ஆள் வர்றாங்களான்னு பார்த்துக்கிட்டேதான் செல்போனில் பேசனும்.." என்றான்..

அவளது முகத்திற்கு வெகு அருகாமையில் அவனது முகம் தெரிந்தது.. அவனது மூச்சுக் காற்றின் ஸ்பரிசத்தை அவளது முகம் உணர்ந்ததில் அவள் பதட்டம் கொண்டாள்.. அவனது வலிமையான இரும்புக் கரம் அவளது இடுப்பில் அழுந்திப் பதிந்திருக்க.. மறு கரத்தால் அவளது தோளைத் தழுவியிருந்தான்.. ஏறக்குறைய அவனை அணைத்த நிலையில் அவள்.. இவ்வளவு நெருக்கமாக எந்த ஆணும் அவளைத் தொட்டதில்லை என்பதில் அவள் தடுமாறி நிலைகுலைந்தாள்.. வேகமாக விலக நிமிர்ந்தவள் அவனது தோள்களை இறுகப் பற்றியதில் இடையிலிருந்த அவனது கரம் உயர்ந்து அவளது முதுகில் பரவிப் படர்ந்தது.. குளிர் உடலைத் துளைத்த அந்த சீதோஷ்ணத்தில் அவனது உடல் வெப்பம் இதமாக இருந்தது.. அவள் விலகுவதற்குள் அவன் அவளை இறுக்கி அணைத்து விட்டான்..

ப்ரீதியின் உடல் நடுங்கியது.. எதிர்பாராத அணைப்பில் அதிர்ந்து போயிருந்தாள்.. விடுபட வேண்டுமென்ற எண்ணம் கூடத் தோன்றாமல் ஸ்தம்பித்து நின்று விட்டவளின் முகம் நோக்கி அவன் குனிந்தான்.. என்ன நடக்கிறதென்று அவள் உணர்வதற்குள் அவளது இதழ்களில் அவனது சூடான இதழ்கள் படிந்து அழுந்திக் கவ்விக் கொண்டன..

'முத்தம் கொடுத்து விட்டான்..'

ப்ரீதியின் காலடியில் பூமி அதிர்வதைப் போல இருந்தது.. ஓங்கி உயர்ந்த ஓர் பேரலையில் அவள் அடித்துச் செல்லப் பட்டாள்.. சுழித்து இழுத்த சுழலில் மாட்டிக் கொண்டவளுக்கு மூச்சுத் திணறியது.. இதயம் தடதடத்தது.. உடல் வெடவெடத்தது.. கன்னத்தில் இதழ் பதித்த முத்தமல்ல அவன் முத்தம்.. ஆவேசம் காட்டாத ஆவேசம் கொண்ட அழுத்தமான முத்தம்.. அவளது இதழ்களை அவனது இதழ்கள் சுவைத்து உண்ட அமுதம் அருந்தும் முத்தம்.. நொடிகள் நிமிடங்களாகி நேரம் நீண்டு கொண்டே இருக்க.. அவள் மயக்க நிலையில் நின்றாள்.. நேரம் கடந்து கொண்டே இருக்க அவன் அவளைத் தழுவிக் கொண்டே இருந்தான்.. மழைத்தூறல் அவர்களை நனைத்தது.. மலைக்காற்று உடல் துளைத்தது.. பெயர் தெரியாத

பறவையொன்று பாடிக் கொண்டே பறந்தது.. ஏகாந்தம் அவர்களைச் சூழ்ந்து அரணாக நின்று காவல் காத்தது..

"வனிதா.. ஏ வனிதா.."

வண்டாற்குழலியின் குரலில் பதறிப் போய் விலகினாள் ப்ரீதி.

"அரண்மனைக்குள் சத்தம் கேட்குது.. இங்கே யாரும் வரலை.." அவளது கன்னம் வருடினான் சித்தார்த்தன்..

"ஷட் அப்.." அவனது கையைத் தட்டி விட்டுச் சீறினாள் ப்ரீதி.

"இப்பத்தானே இந்த கோபம் வருது.."

சற்று முன்வரை அவனது அணைப்பில் அடங்கி முத்தத்தில் கட்டுண்டு நின்றிருந்தாள் என்பதைச் சுட்டிக் காட்டினான் அவன்..

"ஆர் யு அசேம்டு எபெளட் இட்..? தனியாக மாட்டிக் கொண்ட பெண்ணின் தனிமையை யூஸ் பண்ணிக்கிட்டிங்கள்ல.. இப்படியொரு சீஃப் மெண்டாலிட்டி உங்களுக்கு இருக்கும்ன்னு நான் நினைத்துப் பார்க்கலை மிஸ்டர் சித்தார்த்தன்.."

"ஓ..."

அவனது உதடுகள் ஏளனமாக வளைந்தன.. மூச்சிரைக்க நின்றவளை ஏற இறங்க பார்த்த அவனது பார்வையில் முகம் சிவந்தாள் ப்ரீதி.. அவன்மீது ஏன் அவளுக்கு கோபம் வர மறுக்கிறது..?

"சீஃப் மெண்டாலிட்டியா..? எனக்கா..? குட் ஜோக்..! நீ தனியாக என்னிடம் மாட்டிக் கொண்டிருக்கிறாயா..? எங்கே மாட்டிக் கொண்டிருக்கிறாய்..? காட்டிலா..?"

சித்தார்த்தனின் கிண்டலான கேள்வியில் உதடுகளைக் கடித்தபடி சுற்று முற்றும் பார்த்தாள் ப்ரீதி..

"இது அரண்மனை.. நாம் தோட்டத்தில் நின்று கொண்டிருக்கிறோம்.. நீ வாக்கிங் போய்கிட்டே பேசிக் கொண்டிருந்தாய்.. நான் இந்தப் பக்கம் வந்தேன்.. தடுக்கி விழுந்தாய்.. தாங்கிப் பிடித்தேன்.. அப்புறம்.." சித்தார்த்தன் சொல்லிக் கொண்டே போக..

"போதும்.. போதும்.." என இடைமறித்தாள் ப்ரீதி..

"போதுமா..?" விசமமாக அவன் வினவியதில் அவள் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.. அவனது விழிகள் பளபளத்தன..

"இதற்கு முன்னால் இரண்டு தடவை காட்டில் நீ என்னுடன் தனிமையில் பேசியிருக்கிறாய்.. அப்போ தெல்லாம் உன் தனிமையைப் பயன்படுத்திக் கொள்ள நினைக்காதவனா இப்போது நினைத்திருப்பேன்..?"

ப்ரீதியால் பதில் சொல்ல முடியவில்லை.. அதே சமயம் சற்றுமுன் அவன் எல்லை மீறியதை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை.. விழிகள் கலங்க..

"இதற்குத்தான் நான் பூனாவுக்குப் போய் விட வேண்டும்ன்னு நினைத்தேன்.." என்று குமுறினாள்..

சித்தார்த்தனின் புருவங்கள் சுருங்கின.. இமைக்காமல் அவளைப் பார்த்தவன்..

"ஸோ.. எனக்குப் பயந்துதான் நீ பூனாவுக்குக் கிளம்ப டிசைட் பண்ணியிருக்க..?" என்று கேட்டான்..

"ஏன்..? உங்களுக்கு நான் ஏன் பயப்படனும்..?" ப்ரீதி படபடத்தாள்..

"இதோ.. இப்ப.. கொஞ்ச நேரத்துக்கு முன்னால்.." சித்தார்த்தன் எதையோ சொல்லவர..

"வேண்டாம்.." என்று பதறினாள் ப்ரீதி..

"எது வேண்டாம்..?"

"சொல்ல வேண்டாம்.."

"எதை..?"

சித்தார்த்தனின் விழிகள் கூர்மையாக அவளைத் தைத்தன.. எதையென்று சொல்ல முடியாமல் தவித்துப் போனாள் ப்ரீதி.. என்னவென்று சொல்லுவாள்..? நினைக்கும் போதே ஆழிப் பேரலை அவளை இழுக்கிறதே..

"வேண்டாம்.. விட்டு விடு.." மிருதுவாகச் சொன்னான் சித்தார்த்தன்.. ப்ரீதி விம்மினாள்..

"ஐ'ம் ஸாரி.. மனதார இதைச் சொல்கிறேன்.. வேண்டுமென்றே அதைச் செய்யவில்லை.. தடுக்கி விழுந்தாய்.. தாங்கித்தான் பிடித்தேன்.. அதற்கு மேல் நடந்ததெல்லாம் தானாக நடந்தது.. திட்டமிட்டு நடத்தலை.. பட் ஒன் திங்.. உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணை நான் தாங்கிப் பிடித்திருந்தாலும் சட்டென விலக்கி நிறுத்தியிருப்பேன்.. விலகி நின்றிருப்பேன்.. உன்னிடம் அப்படி விலக முடியவில்லை.. ஐ கான்ட் கண்ட்ரோல் மை ஷெல்ஃப்.."

ப்ரீதி தேம்பலுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.. அவளது விழிகள் விரிந்தன.. இவன் என்ன சொல்கிறான்..? என்ன சொல்ல வருகிறான்..?

"யெஸ்.. இதுவரை நான் பார்த்துப் பழகிய பெண்களில் உன்னைப் போல யாரும் என்னை இம்ப்ரெஸ் பண்ணலை.. பர்ஸ்ட் சைட்டிலேயே நீ என்னை இம்ப்ரெஸ் பண்ணிட்ட.. ஐ திங்க் ஐ லவ் யு.."

"பேத்தல்.." காட்டத்துடன் சொல்லி விட்டாள் ப்ரீதி..

"பேத்தலா..?" சித்தார்த்தனின் கண்கள் இடுங்கின..

"ஆமாம்.. பேத்தல்தான்.. பர்ஸ்ட் சைட்டிலேயே இம்ப்ரெஸ் ஆகி விடும் ஆளில்ல நீங்க.."

"ஐ ஸீ.. நான் எந்த மாதிரி ஆள்ன்னு என்னைவிட உனக்குத்தான் நல்லாத் தெரிஞ்சிருக்கு போல.. இதைப் போல உன்னைப் பற்றி எனக்குத் தெரிந்ததை நான் சொல்லவா..?"

ப்ரீதி சொல்லுங்கள் என்று கேட்கவில்லை.. சித்தார்த்தனை முறைத்துக் கொண்டிருந்தாள்.. அவளது பதிலை எதிர்பார்க்காமல் அவன் கண்சிமிட்டியபடி சொன்னான்..

"இப்போத் தடுக்கி விழுந்தியே.. அப்போது தாங்கிப் பிடித்தது ஆதவனா இருந்திருந்தா நீ ஒரு செகண்டு கூட லேட் பண்ணாம அவனைத் தள்ளி விட்டிருப்ப.. தள்ளி நின்னிருப்ப.. ஐ ஆம் ஷ்யூர் எபௌட் இட்.."

'என்னது..!'

ப்ரீதி அப்படியே அசைவற்று நின்று விட்டாள்.. அவளது பார்வை அதிர்ச்சியுடன் சித்தார்த்தனைப் பார்த்தது.. அவன் சொல்வது முற்றிலும் உண்மை என்பதில் அவள் மனம் அரண்டது..

ஆதவனின் விரல் நகம் அவள்மீது பட்டிருந்தாலும் அவள் நூறடி விலகி நின்றிருப்பாள்.. அப்படிப்பட்டவளை சித்தார்த்தன் இடையில் கைபதித்து அணைத்து நின்றிருந்தான்.. அவள் விலக நினைத்தபோது இழுத்து அணைத்தான்.. அவளுடைய இதழுடன் இதழ் பதித்து நீண்ட நேரம் முத்தமும் கொடுத்தான்..

ப்ரீதி ஏன் விலகவில்லை..? தன்னை மறந்த மோகத்துடன் அவனுடைய அணைப்பில் பாகாய் உருகி நின்றாளே.. அவனது முத்தத்தில் மூழ்கிப் போனாளே.. விலகிய பின்பும் அவனை அவளால் வெறுக்க முடியவில்லையே.. ஏன்..? ஏன்..? ஏன்..?

# 17

**ஆரண்யத்தில் தொலைந்தவளை**
**இருள் மருட்டுகிறது காதலனே...!**
**விளக்காக நீயெனக்கு..**
**எனை மீட்டு இருள்விலக்கு..**

"ஆதவன் அழகன்தான்.. என்னை விட சிவந்த நிறம்.. கவர்ச்சியான முகம்.. இத்தனைக்கும் மேலாக உன் அத்தை மகன்.. அது என்ன சொன்ன..? அத்தான்.. ம்ம்ம்.. உனக்கு அத்தான்.. இத்தனையிருந்தும் நான் உறுதியாகச் சொல்கிறேன் ப்ரீதி.. என்னைத் தொட அனுமதித்த நீ.. அவனை உன் விரல் தொடக்கூட அனுமதித்திருக்க மாட்ட.."

ப்ரீதி மிரண்டு விழித்தாள்.. சித்தார்த்தன் கண்டு சொன்ன உண்மையில் அவள் மனம் கிடுகிடுத்தது.. சற்றுமுன் நடந்த

நிகழ்வில் மயங்கி நின்றாளே.. அவளைத் தொட்டது ஆதவனாக இருந்திருந்தால் மயங்கியிருப்பாளா..?

"முந்தாநாள் என் காரில் வருவதை அவாய்டு பண்ணின.. எனக்கு வருத்தம்தான்.. தட் ஸேம் டைம்.. என்னை அவாய்டு பண்ணின பின்னாலே உன்னால் இந்த ஊரில் இருக்க முடியலை பார்த்தியா.. அப்பக்கூட உன் மனது உனக்குப் புரியலையா..?"

"ப்ளீஸ்.. எதுக்கும் எதுக்கும் கனெக்ட் கொடுக்கறிங்க..? உங்களுக்கும் என் அத்தையின் குடும்பத்திற்கும் ஏதோ ஒரு காரணத்தினாலே பகையிருக்குன்னு தெரியுது.. அது என்னன்னுதான் தெரியலை.."

"உன் அத்தையிடம் கேட்க வேண்டியதுதானே.."

"இதை பலமுறை நீங்கள் சொல்லி நான் கேட்டாகி விட்டது.. உங்களின் ரகசியம் உங்களோடு.. அதைத் தெரிந்துக்கிட்டு எனக்கு ஆகப் போகிறதென்ன..?"

"அவ்வளவு எளிதாக எதையும் தள்ளிவிட முடியாது ப்ரீதி.. அதைத் தெரிந்து கொண்டு உனக்கு ஆகவேண்டியது நிறைய இருக்கலாம்.."

"இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும்.. ஐ டோண்ட் கேர்.."

"என்னைக்கூட கேர் பண்ண மாட்டியா..?"

சித்தார்த்தனின் கேள்வியில் அவளையுமறியாமல் தவிப்போடு அவன் முகம் பார்த்தாள் ப்ரீதி.. அதற்காகவே காத்திருந்ததைப் போல அவளது பார்வையுடன் பின்னிப் பிணைந்தது அவனது பார்வை.. விடுபட முடியாத சுழல் மறுபடியும் அவளை ஆக்ரமிக்க அவசரமாக பார்வையை விலக்கிக் கொண்டாள்.. அவன் உரக்கச் சிரித்தான்.. அவளது மனம் படபடத்தது..

"உங்களுக்கும் அவங்களுக்கும் இடையே என்ன பகை இருந்தாலும் அதில் நான் இன்க்ளூடு ஆகறதில் எனக்கு சம்மதமில்லை.. நேற்று நான் உங்க காரில் ஏறாம அவாய்டு பண்ணியதற்கு என் பக்கம் காரணமிருக்கு.. பட்.. அதை வைத்து அத்தையும், ஆதவனும் சந்தோசப்பட்டதில் நான் கில்ட்டியா ஃபீல் பண்றேன்.. அதற்காகத்தான் நான்

பூனாவுக்குக் கிளம்பினேன்.. மற்றபடி நீங்க எதையும் இமாஜின் பண்ணிக்க வேண்டாம்.."

"இமாஜின்..? யு மீன்.. 'கற்பனை..?'"

"ஆஹா.. உங்களுக்கு இங்கிலிஷ் தெரியாது பாருங்க.. என்னிடம் விளக்கம் கேட்கறிங்க.. போவிங்களா..?"

அவனிடம் பேசும் போது எப்படிப் பேசுவாளோ.. அப்படிப் பேசிவிட்டு அவசரமாக நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்.. அவன் இமைக்காமல் அவளையே பார்த்ததில் அவளுக்கு லஜ்ஜையாகி விட்டது..

"மாற்றிக்க முடியலையில்ல..?" மென்மையாக வினவினான்..

பின்னலை முன்னால் இழுத்து அதன் நுனியைப் பிரிப்பதும், பின்னுவதுமாக இமைகள் படபடக்க அவள் நின்றிருந்த கோலம் ரவிவர்மாவின் ஓவியத்தைப் போலவே இருப்பதாக அவனது இதயம் ஜொள்ளியது..

"எதுக்காக நீ மாறனும் ப்ரீதி.. என்னிடம் எப்படிப் பேசிப் பழகினாயோ.. அப்படியே இருக்க வேண்டியதுதானே..? திடிர்ன்னு ஏன் முகம் திருப்பின..? உன் அத்தைக்காகவும், ஆதவனுக்காகவும்ன்னு சொல்லாதே.. உனக்கு விருப்பமில்லாத எதையும் உன்மீது திணிக்க முடியாது.. அதற்கு நீ அலோவ் பண்ண மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்.."

'எப்படி..?'

ஆச்சரியத்துடன் விழி மலர அவனைப் பார்த்தாள் ப்ரீதி.. அவளது குணாதிசியத்தைப் பிட்டுப்பிட்டு வைக்கிறான்.. அவள் மனதின் விருப்பு வெறுப்புகளைத் தெள்ளத் தெளிவாகச் சொல்கிறான்.. யார் இவன்..? கந்தவர்னா.. யட்சனா.. இல்லை அவளைக் காக்க வந்த ரட்சகனா..?

"பூனாவுக்குப் போனால் நான் உன்னைத் தேடி அங்கே வர மாட்டேனா..? இங்கே உன் அத்தை குடும்பம் இருக்கிறது.. அவர்கள் முன்னால் உன்னை அப்ரோச் பண்ணுவதுதான் எனக்கு கஷ்டம்.. பூனாவில் அப்படியில்லை.. அங்கே நீ

சுதந்திரப்பறவை.. உன் பின்னால் ரோமியோ போல.. ஃபாலோ பண்ணி உன் மனதை ஜெயிப்பது வெகு சுலபம்.."

'ரோமியோவா.. இவனா..?'

அவனறியாமல் அடிப்பார்வையில் அவனை நோட்டமிட்டாள் ப்ரீதி.. ரோமியோ வேடம் அவனுக்குப் பொருந்தி வரவில்லை.. மாறாக வாளேந்தும் வீரனாக புரவியில் ஆரோகணித்து.. ஆக்ரோசமாக சண்டையிடும் போர்வீரன்தான் பொருந்தி வந்தான்..

"என் மனதை ஜெயிப்பது அத்தனை சுலபமில்லை மிஸ்டர் சித்தார்த்தன்.."

"ஆல்ரெடி.. நான் உன் மனதை ஜெயிச்சாச்சு மிஸ் ப்ரீதி.. யு நோ.. என் மனதை ஜெயிக்கிறதும் அத்தனை சுலபமில்லை.. இந்த வட்டாரத்தில் என்னைத் தெரியாதவர்கள் யாருமில்லை.. என் முன்னால் நின்று பேசக்கூட யோசிப்பார்கள்.. நீ என்னடாவென்றால் மிஸ்டர் சித்தார்த்தன்னு எனக்குப் பெயரை வைத்தவளைப் போல அழுத்தம் திருத்தமாகச் சொல்கிற... நான் அதை ரசித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.. இதிலிருந்தே நான் உன்னை என் மனதில் எந்த இடத்தில் வைத்திருக்கிறேன் என்பதை நீ புரிந்து கொள் கண்ணம்மா.."

'கண்ணம்மாவா..?'

அவள் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.. தாபத்துடன் அவளைப் பார்த்தவன் அவளருகே வர ஒரு எட்டு வைத்தான்..

"சித்தார்த்தா.."

தொண்டைமானின் குரல் கேட்டது.. வேகமாக அங்கிருந்து சென்று விட்டான்.. அங்கிருந்த மர பெஞ்சில் தளர்ந்து உட்கார்ந்த ப்ரீதி தலையைப் பிடித்துக் கொண்டாள்.. ஏனோ கண்ணீர் பெருகியது..

"கண்ணன் என்னை கண்டு கொண்டான்..

கையிரண்டில் அள்ளிக் கொண்டான்..

பொன்னழகு மேனியென்றான்..

பூச்சரங்கள் சூடத் தந்தான்..

கண்திறந்து பார்த்தேன்.. கண்ணன் அங்கு இல்லை..

கண்ணீர் பெருகியதே.."

மனதில் பாடல் ஒலித்தது.. பாறையாய் கனத்த மனதுடன் கண்மூடி அமர்ந்திருந்தவளின் தோளில் சில்லென ஓர்கரம் படிந்தது.. திடுக்கிட்டு நிமிர்ந்தாள்..

"ஏய்ய்.. இங்கே உட்கார்ந்துக்கிட்டு என்ன பண்ற..?" ஆர்த்தி அவள் தோளை உலுக்கி எழுப்பினாள்..

"ச்சும்மா.."

"சும்மா உட்கார நல்ல இடம் பார்த்த போ.. வால்பாறை வட்டாரத்தில எப்போதும் மழை பெய்துக்கிட்டே இருக்கும்.. மலைக் காத்து ஊசியாய் உடம்பைத் துளைக்கும்.. இப்படி பனியிலும் மழையிலும் நனைந்துக்கிட்டு இருந்தா உன் உடம்பு தாங்குமா..? நீயும் எதையாவது இழுத்து விட்டுக்காதே.. வா.. வா.. வீட்டுக்குள் போகலாம்."

ஆர்த்தியுடன் ப்ரீதி வீட்டுக்குள் போனபோது சித்தார்த்தன் ஹாலில் தொண்டைமானுடன் பேசிக் கொண்டிருந்தான்.. அவனது பார்வை வாசல் மீதே இருந்தது.. ப்ரீதியைக் கண்டதும் அவனது விழிகளில் தெரிந்த ரகசிய பளபளப்பில் இவளது உடலில் ஜிவ்வென்ற ஓர் உணர்வு உண்டானது.. அவனது பார்வையை நேர்கொண்டு பார்க்க முடியாமல் வேறு பக்கம் பார்த்தபடி மாடியேறி விட்டாள்.. அவளது முதுகைத் துளைத்த அவனது ரேசர் பார்வையை அவளால் உணர முடிந்தது..

பூனாவுக்கும் ஓட முடியாது.. அவளது குடும்பம் கொல்கத்தாவுக்குப் போயிருக்கும்.. இன்னும் இரண்டு வாரம் அவள் கானவயலில் இருந்துதான் ஆக வேண்டும்..

யோசித்து யோசித்து தலைவலி வந்ததுதான் மிச்சம்.. அவளுக்கு எந்த வழியும் புலப்படவில்லை.. மாற்றுடையை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனாள்.. கொதிக்கும் வெந்நீர் ஷவரில் கொட்ட தலை நனைய நின்றவளுக்கு அவன் முத்தம் கொடுத்த மணித்துளிகள் நினைவுக்கு வந்து தொலைத்தன.. தலையை உலுக்கி அந்த நினைவைத் துரத்த முற்பட்டாலும் அது மறையவில்லை..

ஒரு கட்டத்தில் அந்த நினைவோடு அவள் ஒன்றிப் போனாள்..

உடைமாற்றி இறங்கி வந்தவளை விழுங்கி விடுவதைப் போல பார்த்து வைத்தான் சித்தார்த்தன்.. தொண்டைமானும் பக்கத்தில் நிற்கிறார் என்பதில் முகத்தை இறுக்கமாக்கிக் கொண்டாள் ப்ரீதி.. அவரைக் கண்டாலே அவளுக்குப் பிடிக்கவில்லை.. அதை கண்டு கொண்ட சித்தார்த்தன் ஏன் என்பதைப் போல புருவங்களை உயர்த்தி அவளை அரள வைத்தான்..

'பேசாம இருந்து தொலைடா.. இந்தக் கிழவர் எதையாச்சும் சொல்லி வைக்கப் போகிறார்.. இன்னுமாடா இங்கே மீட்டிங் போட்டுக்கிட்டு இருக்கீங்க.. மத்தவங்க ஃப்ரீயா இருந்துவிடக் கூடாதுங்கிறதில நீயும் இந்த மனிதரும் கண்ணும் கருத்துமா இருக்கிங்கடா.. எப்போதும் மாடி ஹாலில்தான மீட்டிங் போடுவீங்க.. இன்றைக்கு என்ன கீழேயே ஸ்டார்ட் பண்ணிட்டிங்க..? அவ்வளவு நல்ல எண்ணம்..'

வெட்டும் பார்வையுடன் அவள் டைனிங் ஹாலுக்குப் போனாள்.. அவளைத் தொடர்ந்த சித்தார்த்தனின் பார்வையில் முகம் சுளித்தார் தொண்டைமான்.. ப்ரீதி கூசிப் போனாள்..

'இவனால்தானே இந்த நிலைமை..'

வெட்டவா, குத்தவா என்பதைப் போல அவள் வெகுண்டு பார்த்ததில் சித்தார்த்தன் மறுபடியும் புருவங்களை உயர்த்தி அவளை சோதித்து வைத்தான்.. அதை ப்ரீதி பார்த்ததைப் போலவே தொண்டைமானும் பார்த்து வைத்தார்..

"சித்தார்த்தா.."

அவர் போட்ட அதட்டலில் 'வாங்குப் பெறுடா மச்சான்..' என்று எதையும் கண்டு கொள்ளாதவளைப் போல ப்ரீதி நகர்ந்து விட்டாள்..

"உன்னிடம் ஏற்கனெவே சொல்லியிருக்கிறேன் சித்தார்த்தா.."

அவர் பேச்சு டைனிங்ஹாலில் இருந்த ப்ரீதியின் காதுகளில் விழுந்து வைத்தது..

'நல்லா ஞாபகப் படுத்துங்க ஓல்டுமேன்..' என்று இங்கு அவள் மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்..

"உன் உயரம் என்னவென்று உனக்குத் தெரியாதா..?"

'எனக்கும் தெரியும் ஓல்டுமேன்.. ஆறடிக்கும் மேல் ஆதவன் அத்தானைவிட உயரமாக நெடுநெடுன்னு வளர்ந்திருக்கான்.. ஹப்பா.. என்ன உயரம்.. என்ன உயரம்..'

"உன் லெவலை விட்டு இறங்காதே சித்தார்த்தா.."

'ஆமாண்டா.. மரத்து மேலே ஏறி உட்கார்ந்துக்க.. அதுதான் சரியா இருக்கும்.. ஓல்டுமேன் சொல்கிறதைக் கேளுடா..'

சித்தார்த்தன் தாழ்ந்த குரலில் எதையோ முணுமுணுக்க.. தொண்டைமானின் முகம் கடுமையானது.. தன் குரலை அவரும் தாழ்த்திக் கொண்டதில் சப்தம் போடாதே என்று சித்தார்த்தன் அவரை கடிந்து கொண்டிருக்க வேண்டும் என்று யூகித்தாள் ப்ரீதி.. சீற்றத்துடன் அவர் எதையோ பேச.. சித்தார்த்தன் அவரைவிடச் சீற்றமாக பதில் சொல்லிவிட்டு தடதடவென மாடிப்படிகளில் ஏறிப் போய் விட்டான்.. தீப்பந்தம் போல ஜொலிக்கும் கண்களோடு தொண்டைமான் டைனிங்ஹால் பக்கம் திரும்பியதில் நடுநடுங்கிப் போன ப்ரீதி ஆர்த்தியின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து தப்பித்தாள்..

"என்னடி..?" ஆர்த்திக்குப் புரியவில்லை..

"அந்த ஓல்டு மேன் முறைக்கிறார் ஆர்த்தி.. எனக்கு பயமா இருக்கு.."

ஆர்த்தி திரும்பிப் பார்த்து விட்டு கடுகடுவென்ற முகத்துடன்..

"அவர் அப்படித்தாண்டி.. எங்களைக் கண்டாலே அவருக்கு ஆகாது.. நீ என் மாமன் மகளில்ல.. அதுதான் முறைக்கிறார்.. வெளிப்படையா எதுவும் பேச மாட்டார்.. பயப்படாதே.." என்று சமாதானப் படுத்தினாள்..

இருந்தாலும் ப்ரீதிக்குப் பயமாகத்தான் இருந்தது.. மாடிக்குச் செல்லும்போது ஹாலில் தொண்டைமான்

இருக்கிறாரா என்று மறைந்து நின்று பார்த்தபடி பூனையைப் போலப் போனாள்..

"யாரைப் பார்த்து இப்படிப் பயப்படற..?"

காதோரம் ஒலித்த குரலில் ஆனந்தம் கொண்டாள்.. அதை வெளிக்காட்டி விடாமல் சர்வ ஜாக்கிரதையாக..

"பயமா..? எனக்கா..? ஹ.." என்றபடி திரும்பினாள்..

"நம்பிட்டேன்.." புன்சிரிப்புடன் கைகளை மடித்துக் கட்டியபடி நின்றிருந்தான் சித்தார்த்தன்..

'பெரிய விவேகானந்தன்னு மனசுக்குள் நினைப்பு.. எதுக்கெடுத்தாலும் இந்த போஸ்தானா...? படவா ராஸ்கல்.. எந்த போஸ் கொடுத்தாலும் அழகாய் இருந்து தொலைக்கிறான்..'

அவனை பார்வையால் அவள் அளவெடுக்க..

"மாப்பிள்ளை பார்க்கிறயா..?" என்று கேட்டு வைத்தான் அவன்..

"நினைப்புத்தான்.."

"யெஸ் மை டியர்.. உன் நினைப்புத்தான்.."

"பக்கத்தில் பெரியவர் இல்லாத தைரியமா..?"

"எந்தப் பெரியவர்..?"

"எதுக்கு வம்பு..? அவர் பெயரை நான் மாற்றிச் சொல்லி விடுவேன்.. நீங்க உடனே எப்போதும் நான் இதுபோல பொறுமையாக விளக்கம் சொல்லிக்கிட்டு இருக்க மாட்டேன்னு எண்ணையில போட்ட அப்பம் போலக் குதிப்பீங்க.. தேவையா எனக்கு..?"

"ஓ.. அவரைச் சொல்கிறாயா..?"

"அவரேதான்.. எனகூடப் பேசாதீங்க.."

"ஏன்..? என்னை உனக்குப் பிடிக்கலையா..?"

ஆழ்ந்த குரலில் அவன் கேட்டான்.. உள்ளம் படபடக்க அவனை நிமிர்ந்து பார்த்தாள் ப்ரீதி.. அலைபாயும் சிகையோடு அவளைக் கவர்ந்து இழுக்கும் காந்தப் பார்வையோடு இமைசிட்டி அவளை மயக்கினான் அந்த மாயவன்..

'இவனை எனக்குப் பிடிக்காதா..?'

பிடித்திருந்தது.. அவனை அவளுக்குப் பிடித்திருந்தது.. அவன் யார் என்று தெரியாமலே.. அவனுக்கும் அவளுடைய அத்தை குடும்பத்திற்கும் பகையிருக்கிறது என்று தெரிந்திருந்தும் அவளுக்கு அவனை மிகவும் பிடித்திருந்தது..

# 18

**யுகங்கள் பல கடந்து**
**உனக்காக நான்**
**பிறந்து வந்திருக்கிறேன் என் காதலனே..!**

"ஆசையக் காத்தில தூது விட்டு.."

இனிமையான பெண்குரல்.. நடுவில் தீ மூட்டி சுற்றிலும் இளம் பெண்கள் கை கோர்த்து வட்ட வடிவமாக நெருப்பைச் சுற்றி ஆடி வந்ததைப் பார்க்கப் பார்க்க அதிசயமாக இருந்தது ப்ரீதிக்கு.. அது புதுவிதமான அனுபவமாக இருந்தது.. அடர்ந்த காடு என்பதினால் குளிர் அதிகமாக இருந்தது.. அவள் அணிந்திருந்த ஸ்வெட்டரையும் போர்த்தியிருந்த சால்வையையும் தாண்டி குளிர் அவளைத் தீண்டியதில் வெடவெடக்க ஆரம்பித்திருந்தாள்..

"கம்பளியைப் போத்திக்கங்க ஐயா.. அம்மாவுக்கு குளிரு தாங்கல.."

பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் கனத்த கம்பளியொன்றை நீட்டினார்.. அவர்தான் அந்தக் கூட்டத்திற்குத் தலைவர் போல.. கூட்டத்தினர் அவருக்கு மரியாதை கொடுத்து கைகட்டி வாய் பொத்த.. அவரோ சித்தார்த்தனுக்கு மரியாதை கொடுத்துக் கை கட்டி வாய் பொத்தினார்..

"ஏ குள்ளா.. ராசா வந்திருக்காரு.. ஆட்டம், பாட்டத்துக்கு மேளத்தைக் கொட்டு.."

அவர் ஆணையிட்டதில் கூட்டத்தைச் சேர்ந்த இளம் பெண்கள் நடுவில் தீ மூட்டி.. அதைச் சுற்றிவந்து ஆட ஆரம்பித்தார்கள்.. அவர்களில் ஒரு பெண்.. பார்க்க வெகு அழகாக இருந்தாள.. பெரிய கருவிழிகளுடன் சித்தார்த்தனையே ஏக்கத்துடன் பார்த்தபடி பாடியதைப் போல இருந்தது.. அது ப்ரீதிக்குப் பிடிக்கவில்லை..

'அவ எதுக்காக இவனையே பார்க்கிறா..?'

அவளுக்குத்தான் இந்த சந்தேகம்.. சித்தார்த்தன் ப்ரீதியைத்தவிர எவரையும் கவனித்ததாகவே தெரிய வில்லை.. குளிரில் வெடவெடத்துக் கொண்டிருந்தவளுக்குக் கம்பளியைப் போர்த்து விட்டு அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.. ஒரே கம்பளியை இருவருக்குமாக அவன் போர்த்தியிருந்ததில் அவர்களின் நெருக்கம் மற்றவர்களின் பார்வையில் படவில்லை..

ப்ரீதியை தன் மடியில் அமர்த்தியிருந்தான் சித்தார்த்தன்.. பெரிய கம்பளி இருவரையும் போர்த்தியிருக்க அவனது கைகள் அவளது தோள்களைத் தழுவி இறுக்கி வயிற்றில் படிந்திருந்தன.. அவளுடைய கூந்தல் வாசத்தை அவன் முகர.. அவனது மூச்சுக் காற்றில் அவளது கன்னங்கள் சூடாகின.. ப்ரீதிக்கு தன்னுணர்வு மறந்தது.. வானில் பறப்பதைப் போலவே இருந்தது..

குளிருக்கு இதமாக அவனது உடல் சூடு அவளுக்கு உஷ்ணத்தைக் கொடுக்க விலக முடியாமல் விலக விரும்பாமல் அவனுக்குள் புதைந்து விட்டாள் ப்ரீதி.. அவனது நெருக்கம் தட்டியெழுப்பி விட்ட உணர்வலைகள் தீயென எழுந்து அவளைப் பொசுக்கின.. கண்மூடிக் கிறங்கி அவன் மீது சரிந்திருந்தாள் ப்ரீதி.. அதை அவன் உணர்ந்தான்.. மற்றவர்கள் உணரவில்லை.. கம்பளிக்குள் நடந்த ஆலிங்கனத்தை அவர்கள் அறிய முடியவில்லை..

அவன் மடியில் புதைந்து அவனது கைகளுக்குள் சிறைபட்டிருக்கும் அந்த நிலைமை நீண்டு கொண்டே இருக்க வேண்டும் என்று அவள் மனம் விரும்பியது.. அந்த நடனம் முடியக் கூடாது.. அவளும் சித்தார்த்தனும்

கம்பளியை விட்டு வெளியே வரக்கூடாது.. அவர்கள் அரண்மனைக்குத் திரும்பக் கூடாது.. அந்த ஆரண்யத்திலேயே இருந்து விடவேண்டும்.. அவன் மடிமீது புதைந்து.. அவன் மார்பில் முகம் பதித்து.. இப்படியே பிணைந்திருக்க வேண்டும்.. அது முடியுமா..?

"ஆசையைக் காத்தில தூது விட்டு..

ஆடிய பூவில் வாடை பட்டு..

சேதியைக் கேட்டொரு ஜாடை தொட்டு..

பாடுது பாட்டு ஒன்னு - குயில்

கேட்குது பாட்ட நின்னு.."

குளிரைச் சுமந்து வந்த பாடலில் குளிர் நிரம்ப அவனை இறுக்கிக் கொண்டாள் ப்ரீதி.. அவனது கரங்கள் இன்னும் ஆழமாகப் பதிந்ததில் இதமான இன்ப இம்சையொன்று நூதனமாக அவளைத் தாக்கியது.. உணர்வுகளின் வீச்சைத் தாங்க முடியாதவளாக ப்ரீதி அவனுடன் ஒன்றிக் கொண்டாள்.. அதில் அவனது கரங்கள் இறுகிப் பரவி முன்னேறின.. தாபத்துடன் சித்தார்த்தனின் சூடான இதழ்கள் அவளது செவி மடல்களில் படிந்தன.. அவளது கூந்தலில் பூவாசத்தை உணர்ந்தான்..

"வாசம்.. பூவாசம்.. வாலிப காலத்து நேசம்..

மாசம்.. தைமாசம்.. மல்லிகைப் பூ மணம் வீசும்..

நேசத்தில.. வந்த வாசத்தில..

நெஞ்சம் பாடுது.. சோடியத் தேடுது..

பிஞ்சும் வாடுது வாடையிலே..

கொஞ்சம் ஜாடையைப்

பேசுது பார்வையும்

சொந்தம் தேடுது மேடையிலே..

ஆசையைக் காத்தில தூது விட்டு.."

ப்ரீதியை இழுத்து ஏதோ ஓர் குளிர் நதியில் தள்ளி விட்டது பாடல்.. அவள் உருகிப் பனி போல் ஓடிக் கொண்டிருந்தாள்.. சித்தார்த்தன் எது செய்தாலும் சம்மதம் என்று அவனிடம் தஞ்சமடையும் நிலையில் தொய்திருந்தாள்.. தாள முடியாத

தாபத்தை அந்தப் பாடல் அவளுக்குள் உற்பத்தி செய்ய ஏக்கம் கொண்டாள் ப்ரீதி.. அவன் வேண்டும் என்று அவளது உடலும் மனமும் தேடிய தேடலில் மனம் துடித்தாள்..

"தேனு.. பூந்தேனு.. தேன்துளி கேட்டது நானு..

மானு.. பொன்மானு.. தேயிலை தோட்டத்து மானு..

ஓடிவர.. உன்னைத் தேடிவர..

தாழம்பூவில.. தாவுற காத்தில..

தாகம் ஏறுது ஆசையிலே..

பார்க்கும் போது ஏக்கம் தீரல..

தேகம் வாடுது.. பேசையில..

ஆசையைக் காத்தில தூது விட்டு.."

பாடல் தொடர்ந்து கொண்டிருந்தது.. அனல் மூச்சு அவளைச் சுட்டது.. அவளது முடிகோதி.. தோள் தடவி.. அவளது எழும்புகளை நொறுக்கி விடுபவனைப் போல இறுக்கிக் கொண்டவனைத் தடுக்க முடியாமல் அவனிடம் சரணடைந்திருந்தாள் அவள்.. கண்மூடி மனம் கிறங்க அவனது சிருங்காரத்தில் லயித்திருந்தாள்.. குழைந்து அவனுடன் ஒன்றியிருந்தவளின் தோள் வளைவில் முகம் பதித்தான் சித்தார்த்தன்.. முடியவே கூடாது என்று அவர்கள் விரும்பிய நடனம் முடிவுக்கு வந்து விட்டது.. விலக மனமில்லாமல் இருவரும் விலகி எழுந்தார்கள்.. கம்பளியை மடித்துக் கூட்டத்தின் தலைவரிடம் கொடுத்து விட்டு ப்ரீதியின் தோள் மீது கைபோட்டு அணைத்தபடி நடக்க ஆரம்பித்தான் சித்தார்த்தன்..

"ராணி எந்த ஊருங்கோ..?"

அவர் யாரையோ கேட்கிறார் என்று நினைத்தபடி காட்டை வேடிக்கை பார்த்தாள் ப்ரீதி.. சித்தார்த்தனின் பார்வை மயிலிறகைப் போல அவள் மனதை வருடியதில் சிலிர்த்துப் போனவளாக அவன் முகம் பார்த்தாள்..

"இவ வட இந்தியாவில இருந்து வந்திருக்கிறா.."

"அப்படிங்களா..? அம்மணி தமிழ் பேசுவாகளா..?"

"அதெல்லாம் வெளுத்துக் கட்டுவா.."

"ராசாவுக்குச் சொந்தமோ.."

"சொந்தமாகப் போகிறவ.. இப்போதைக்கு ஆதவனின் அம்மாவுக்குத்தான் இவள் சொந்தம்.. அவங்க அண்ணன் மகள்.."

சித்தார்த்தன் சொன்ன பதிலில் அந்த மலைவாசி இனத் தலைவரின் முகம் படுபயங்கரமாக மாறியது..

"ராசா.." என்று அவர் ஏதோ சொல்ல ஆரம்பிக்க.. சித்தார்த்தன் சைகை செய்து அதைத் தடுத்து விட்டான்..

ப்ரீதிக்குப் பயமாக இருந்தது.. ஆதவனுக்கும் சித்தார்த்தனுக்கும் பகை என்றால் அவள் என்ன செய்வாள்..? அந்த மலைவாசி இனத்தின் தலைவர் அவளை விரோதியைப் போலப் பார்க்கிறாரே..

வெகுதூரம் வந்த பின்பும் ப்ரீதியின் நடுக்கம் நின்ற பாடாக இல்லை.. வழியில் இருந்த அருவியில் அவளை முகம் கழுவச் சொல்லி அருகிலிருந்த பாறையில் உட்கார வைத்தான் சித்தார்த்தன்.. இப்போதும் அவன் மடி மீதுதான்.. கம்பளியைப் போர்த்தி மறைத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் அங்கே தனிமை அவர்களைச் சூழ்ந்திருந்தது..

"ஆக்சுவலாய் நீங்க யார்..?" தவிப்புடன் அவள் கேட்டாள்..

"சித்தார்த்தன்.." உல்லாசமாக அவன் நகைத்தான்..

"ம்ப்ச்.. இதுதானே வேண்டாம்ங்கிறது.." சிணுங்கினாள் ப்ரீதி..

"எது வேண்டாம்..?" அவளது இதழ்தேடிக் கிறக்கத்துடன் குனிந்தான் அவன்..

"சித்தார்த்.." தடுமாறிப் பிணைந்தாள் ப்ரீதி..

அவனைத் தடுக்க முடியவில்லை.. தடுக்கவும் தோன்றவில்லை.. இது எதில் போய் முடியப் போகிறதோ என்ற பயம் அவளை அச்சுறுத்தியது.. அவன் யார்..? அவனைப் பெற்றவர்கள் எங்கே..? ஏன் அவன் விசாகாவின் குடும்பத்துடன் வசிக்கிறான்..? அவர்கள் இவனுக்கு அடங்கியவர்களாக இருக்கிறார்களே.. ஏன்..? அவர்களை

விட இவனுக்குத்தான் சகலவிதமான அதிகாரங்களும் இருக்கின்றனவே.. அது எப்படி..?

கேள்விகள் அவளைச் சூழ்ந்திருக்க.. அவற்றை மறந்து அவனுடன் ஒட்டி உறவாடத் துடித்தது அவளது மனம்..

"என்னடி யோசனை..?" அவளது கன்னம் தட்டினான் சித்தார்த்தன்..

"'டீ'யா..?"

"ஆமாண்டி.. ஏன்.. நான் உன்னை வாடி, போடின்னு கூப்பிடக் கூடாதா..? அந்த உரிமை எனக்கு இல்லையா..?"

"அந்த உரிமை எனக்கு இருக்குமா..?"

ப்ரீதி அழுது விட்டாள்.. நெற்றியில் கோடுகள் விழ சித்தார்த்தன் விலகி அவளது முகத்தைத் திருப்பி விழிகளுக்குள் உற்றுப் பார்த்து அதட்டினான்..

"என்மேல் நம்பிக்கை இல்லையா..?"

"தெரியலை சித்தார்த்.." அவள் விசும்பினாள்..

"பைத்தியம்.. என்னைச் சித்தார்த்துன்னு பெயர் சொல்லிக் கூப்பிடும் உரிமை உனக்கு இருக்கிறதே.. அதிலிருந்தே உன் உரிமையின் லெவல் என்ன என்பது உனக்குத் தெரியலையா..?"

ப்ரீதி விழி விரிய அவனைப் பார்த்தாள்.. அவன் விழிகளில் உண்மை இருந்தது..

"நீங்க யார்ன்னு சொல்ல மாட்டேங்கறிங்களே.." குழந்தையைப் போல குறைபட்டாள்..

"சித்தார்த்தன்னு சொல்லிட்டேனே.. அது போதாதா..?"

"போதாதே.. அரண்மனையில் இருக்கும் அந்தப் பெரியவரும் சரி.. இந்த மலைவாசிப் பெரியவரும் சரி.. உங்களை பெரிய இடத்தில் வைத்துப் பேசறாங்க.. அவர் உங்களின் உயரத்துக்கு என்னைப் போல சாதாரணப் பெண்ணுடன் பேசுவது கூடத் தவறுன்னு உங்களைக் கண்டிக்கிறார்.. இவர் என்னடாவென்றால் நான் விசாகா அத்தையின் அண்ணன் மகள்ன்னு தெரிந்ததும் கத்தியை

எடுத்துக் குத்தி விடுவார் போல முறைக்கிறார்.. இதில் நீங்க காதல் சொல்கிறீங்க.. எனக்குப் பயமா இருக்கே.."

சித்தார்த்தன் சிந்தனையுடன் அவளைப் பார்த்தான்..

"தாத்தா என்னிடம் பேசியதை நீ கேட்டு விட்டாயா..?"

"தாத்தான்னா.. சொந்த தாத்தாவா..?"

"ம்ம்ம்.. அவர் என் தாத்தாதான்.. அம்மாவின் அப்பா.."

"உங்களுக்கு அம்மா இருக்காங்களா..?"

"அம்மா இல்லாம யாரும் இந்த உலகத்திற்கு வந்திருக்க முடியாதுடி.. என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற அம்மா இப்போது இல்லை.."

"சித்தார்த்..?"

"யெஸ்.. அவங்க இறந்துட்டாங்க.."

"அப்பா.."

சித்தார்த்தனின் விழிகள் தீப்பிழம்பாக கனன்றதில் பயந்து போனாள்..

"சொல்ல விரும்பலைன்னா விட்டு விடுங்க.." என்றாள்..

"தாத்தா அப்படித்தான் பேசுவார் ப்ரீதி.. அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.."

"எப்படி எடுத்துக் கொள்ளாமல் இருப்பது..? உங்கள் தாத்தா பேசிய பேச்சு என் சுயமரியாதையை பாதிக்கிறதே.. உங்களிடம் பேசவே கூடாதுன்னு நினைத்தேன்.."

"ஓ.. அதனாலதான் என் காரில் ஏற மாட்டேன்னு சொன்னாயா..?"

"ம்ம்ம்..."

"இது தெரியாம நான் எதையெதையோ நினைத்துக் குழம்பிப் போய் விட்டேன்டி.."

"நான் உங்களை அவாய்டு பண்ணியது இந்த ரீசனுக்காகத்தான்.. இது தெரியாமா அத்தையும், அத்தானும் சந்தோசம் கொண்டாடினாங்க.. வெறுத்துப் போய் பூனாவுக்குக் கிளம்ப டிசைட் பண்ணினேன்..

அத்தான் மேல எனக்கு விருப்பமில்லைன்னு அப்பாவிடம் சொல்லி விட்டேன்.."

"என் ப்ரீதி.."

ஆசையுடன் அவளைக் கட்டிக் கொண்ட சித்தார்த்தன்..

"வேறு யார் மீது உனக்கு விருப்பம்..?" என்று கண்சிமிட்டினான்.. ப்ரீதி அவன் மார்பில் குத்தினாள்..

"தாத்தாவைச் சமாளிப்பது என் பொறுப்பு.. பெரியவர்.. எனக்கென்று இருக்கும் ஒரே சொந்தம் அவர்தான்.. அதனால்தான் அவர் பேசுவதைக் கண்டிக்காமல் சிரித்தபடி தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறேன்.. எனக்கு நீதான் வேண்டும்ன்னு நான் சொல்லி விட்டால் அவர் மறுத்துப் பேச மாட்டார்.. ஏன்னா.. அவருக்கு இருக்கிற ஒரே சொந்தம் நான் மட்டும்தான்.."

ப்ரீதிக்குத் துயரமாக இருந்தது.. அவளது மனம் கவர்ந்தவனுக்கும் அவனுடைய தாத்தாவிற்கும் சொந்தமென்று சொல்லிக்கொள்ள ஒருவருக்கொருவர் மட்டும்தான் இருக்கிறார்களா..?

"நானில்லையா..?" கண்ணீருடன் கேட்டாள்..

"ப்ரீதி.." உணர்ச்சிப் பெருக்குடன் அவளது கன்னம் தடவினான் சித்தார்த்தன்..

"உங்க தாத்தாவுக்கு பேத்தியாக நானிருப்பேன் சித்தார்த்.."

"எனக்கு யாராக இருப்பாய் ப்ரீதி..?"

குழந்தை போலக் கேட்டவனின் முடிகோதி மார்போடு அவனை சேர்த்தணைத்து முடிகோதி அவள் பாடினாள்..

"காதல் வந்தால் சேயாவேன்..

கருணை வந்தால் தாயாவேன்..

கண்ணா.. உந்தன் நிழலாவேன்..

உனக்கென நான் வாழ்வேன்.."

'கவர்க்கல்!' எப்போதும் பனி படர்ந்திருக்கும் வனப் பிரதேசம்.. அங்கே.. அவனும் அவளும் ஒருவரிடம் ஒருவர் மனதைச் சொன்னார்கள்..

# 19

## நான் நீயாக.. நீ நானாக..
## வாழ்ந்திருப்போம் இவ்வுலகில்..
## வாழ்ந்திடவா.. என் மன்னவனே..!

'கவர்க்கல்..'

எப்போதும் பனி படர்ந்திருக்கும் மலைபிரதேசம்.. பனிச்சறுக்கு விளையாடலாமா என்று குறும்பாக கேட்ட ப்ரீதி அந்த இடத்தை நேரில் பார்த்தபோது வாயடைத்துப் போனவளாக கன்னங்களில் கைகளை வைத்து பிரமித்து நின்று விட்டாள்.. எதிரே வரும் ஆள்கள் கூட தெரியாத அளவுக்கு பனிப்புகை அடர்ந்திருந்தது.. ப்ரீதிக்கு 'உயர்ந்த மனிதன்' திரைப்படத்தில் வாணிஸ்ரீ 'நாளை இந்த வேளை பார்த்து ஓடிவா நிலா..' என்று பனிப்புகையின் ஊடே பாடியபடி வந்து மறைந்து போகும் காட்சி நினைவுக்கு வந்தது.. அதை சித்தார்த்தனிடம் பகிர்ந்து கொண்ட போது..

"அது ரொம்ப பழைய படமாச்சே.. பிளாக் அண்ட் வொயிட் ஃபிலிமில்ல..?" என்று கேட்டான்..

"ஆமாம்.. என் பேரண்ட்ஸ் பழைய பாடல்களை விரும்பிக் கேட்பாங்க.." என்றாள் ப்ரீதி..

"இங்கேயும் அதே கதைதான்.. அம்மாவுக்குப் பழைய பாட்டுன்னா உயிர்.." சித்தார்த்தனின் குரல் கரகரத்தது..

'அம்மாவின் நினைவு வந்து விட்டது போல..' ப்ரீதி நெகிழ்ந்தாள்..

"அப்பாவுக்கு பழைய பாட்டு பிடிக்காதா..?" இதமாக வினவினாள்..

ப்ரீதியின் கேள்வியில் முகம் மாறினான் சித்தார்த்தன்.. அவளை உற்றுப் பார்த்தவனின் பார்வையில் ஏதோ இருந்தது.. குழம்பிப் போனவளாக..

"என்ன..?" என்றாள்..

"ஒன்றுமில்லை.." பட்டுக் கத்தரித்த பதில்..

அவன் தன்னுடைய அப்பாவைப் பற்றிப் பேசப் பிரியப்படவில்லை என்பதில் ப்ரீதி சங்கடம் கொண்டாள்.. இன்னும் எண்ணி பத்தே நாள்கள்தான்.. அவள் பூனாவுக்குக் கிளம்ப வேண்டும்.. கங்காதரனிடம் அவளுடைய காதலைப் பற்றிச் சொல்ல வேண்டும்.. அப்போது சித்தார்த்தனைப் பற்றிய முழுமையான விவரங்களை அவள் சொல்ல வேண்டாமா..?

"உங்க அப்பா எங்கேயிருக்கிறார்..?"

மறுபடியும் ஓர் மர்மப் பார்வை.. ப்ரீதியினால் தாங்க முடியவில்லை.. அவளது நிலையை அவன் புரிந்து கொள்ளவே மாட்டானா..?

"நெஞ்சில் குடியிருக்கும்..

அன்பருக்கு நானிருக்கும்..

நிலைமை என்னவென்று தெரியுமா..?

நினைவை புரிந்து கொள்ள முடியுமா..?"

கன்னக் குரலில் பாடினாள்.. அவன் காதலுடன் அவளை அணைத்துக் கொண்டான்.. கன்னத்தில் முத்தமிட்டான்.. ப்ரீதியின் உடல் நடுங்கினாலும் அவள் விலகவில்லை.. மறுபடியும் இதுபோல சித்தார்த்தனுடன் தனித்திருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமோ, கிடைக்காதோ.. யாருக்குத் தெரியும்..? விசாகா மருத்துவமனையில் இருந்தபோது அவளைப் பார்க்கப் போகும் சாக்கில் சித்தார்த்தனுடன் ப்ரீதியால் ஊர் சுற்ற முடிந்தது.. ப்ரீதி பூனாவுக்குத் திரும்புவது இரண்டு வாரங்களுக்குத் தள்ளிப் போடப்பட்டு விட்டது என்பதை ஆதவன் அறிந்து கொண்ட மறுநிமிடமே விசாகாவிற்குத் தூக்க மாத்திரையிடமிருந்து விடுதலை கிடைத்து விட்டது.. அவள் வீடு திரும்பி விட்டாள்.. ப்ரீதியால் முன்போல போக்குக் காட்டிவிட்டு சித்தார்த்தனுடன் ஊரைச் சுற்ற முடியவில்லை.. இதில் வேறு ஆதவன் தன்னுடன் ஊரைச் சுற்றிப் பார்க்க வரும்படி ப்ரீதியை வற்புறுத்திக் கொண்டிருந்தான்.. இருக்கும் இம்சைகளிலேயே இதுதான் ப்ரீதிக்கு பெருத்த இம்சையாக இருந்தது.. வீட்டில் இருந்தால்தானே இவன் வெளியே வா என்று கூப்பிடுவான் என்று ப்ரீதி தன்னந்தனியாக உலாவக் கிளம்பி விட்டாள்..

நூறடிதான் போயிருப்பாள்.. பின்னால் அவளுக்குப் பழக்கமான கார் ஹாரன் சப்தம் கேட்டு விட்டது..

'வந்துட்டான்..' அவள் மனம் குதியாட்டம் போட்டது.. அவளுக்குத் தெரியும்.. அவள் வீட்டை விட்டு வெளியில் வந்தால் சித்தார்த்தன் தொடர்ந்து வந்து விடுவான் என்பது.

"ஏறிக்க.." கார்க்கதவை திறந்து விட்டான் அவன்..

"உங்க காரில் நான் ஏறினா கலவரம் வந்து விடும் சார்.." விளையாட்டாக அவள் மறுத்தாள்..

"எத்தனை கலவரத்தைப் பார்த்திருப்பேன்..? நான் பார்க்காத கலவரமா..? உன் அத்தை மகனெல்லாம் ஒரு ஆள்.. அவன் செய்கிற கலவரத்துக்கு பயந்து உன்னை விட்டுக் கொடுக்கப் போகிறேன்.. ஆளைப் பாரு.."

"ஓ.. ஆளைப் பார்க்காமத்தான் ஃபாலோ பண்றீங்களா..?"

"என்னை ஃபாலோ பண்ண ஏகப்பட்ட பெண்கள் கியூ கணக்கில் காத்துக்கிட்டு இருக்காங்க அம்மணி.."

"அப்படிங்களா மச்சான்.. அதில யாராவது ஒருத்தரை கன்சிடர் பண்ணியிருக்கலாமுங்களே.."

"என்னத்தைச் செய்கிறது..? இந்த மனசு சொன்னபடி கேட்க மாட்டேங்குதே.."

"சொன்னபடி கேட்காமல் என்ன பண்ணுச்சாம்..?"

"பூனாக்காரி பின்னால் போகுதே.."

"ஓ.."

"அடங்கறியா..?"

"அடங்கி..?"

"காரில் ஏறு.."

"ஏறலைன்னா..?"

"ஏறலைன்னா.."

அவளிடம் பேசியபடியே இமைக்கும் பொழுதுக்குள் காரை விட்டு இறங்கிச் சுற்றி வந்த சித்தார்த்தன் அவளை அலேக்காகத் தூக்கிக் காரில் போட்டு விட்டான்..

'முரடன்..' அவனது முரட்டுத்தனத்தில் லயித்தாள் ப்ரீதி.. எங்கே போகிறோம் என்று அவள் கேட்டபோது பனி படர்ந்த மலைப்பகுதி என்றான்.. எப்போது திரும்புவோம் என்று கேட்டதற்கு திரும்பும்போது திரும்புவோம் என்று இமை சிமிட்டினான்.. அவனது அடாவடியில் அவள் கரைந்து போனாள்.. அரண்மனையில் அவளைக் காணாமல் தேடுவார்களே.. சித்தார்த்தனுடன் அவள் திரும்பினால் பிரளயமே வெடிக்குமே என்று பயமாக இருந்தாலும் காரைத் திருப்பச் சொல்ல மனமில்லை அவளுக்கு.. வருவது வரட்டும் என்று துணிந்து விட்டாள்.. அவள் மனது சித்தார்த்தனின் மீது லயித்து விட்டதை உணர்ந்து கொண்டபின் எதற்காக பயப்பட வேண்டும்..? ஆமாம், அப்படித்தான் என்று சொல்லி விட வேண்டியதுதானே.. விசாகா காதல் திருமணம் செய்து கொண்டவள்தானே.. பூனாவுக்கு படிக்க வந்தார் மாறன்.. ஒரே வகுப்பில் சேர்ந்து படித்தாள் விசாகா.. காதல் என்று வந்து நின்றாள்.. கங்காதரன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாராம்.. அடித்துக் கூடப் பார்த்து விட்டேன்.. உன் அத்தை கேட்கவில்லை.. கல்யாணம் பண்ணிக் கொண்டால் இவரைத்தான் பண்ணிக் கொள்வேன் என்று ஒற்றைக்காலில் நின்று மாறனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாள்.. அவள் கதி என்னவாக ஆயிற்று என்று பார்த்தாயா என்று கேட்பார்.. அப்பா சொல்வதும் நியாயம்தானே என்று ப்ரீதிக்குத் தோன்றும்.. ஆதவனுக்குப் பதினைந்து வயதான போது தான் மாறன் தன் குடும்பத்தை கானவயலுக்கு அழைத்துக் கொண்டார்.. அதுவரை விசாகா தன் பிள்ளைகளுடன் அண்ணனின் நிழலில்தானே வாழ வேண்டியிருந்தது..?

'அந்த நிலை எனக்கு வந்து விடக்கூடாது..'

இன்று எப்படியும் சித்தார்த்தனிடம் அவனைப் பற்றிய விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள் ப்ரீதி.. அத்தையின் வாழ்க்கையைப் போல அவள் வாழ்க்கை ஆகி விடக் கூடாதுதான்.. அப்படி ஆனாலும் பரவாயில்லை.. சித்தார்த்தனின் நினைவிலேயே வாழ்ந்து விடலாம் என்று

இப்போது தோன்றுகிறதே.. இதுதான் காதல் செய்த மாயமா..?

"உன் நிலைமைக்கு என்னடி..? நானிருக்கேனில்ல.." காதலுடன் அவளது கன்னத்தில் தன் கன்னத்தைத் தேய்த்தான் சித்தார்த்தன்..

தீப்பிடித்த உணர்வுகளைச் சமன் செய்ய போராடினாள் ப்ரீதி.. அவனுக்கென்ன.. தொட்டு விடுகிறான்.. சுட்டெரிக்கும் உணர்வுகள் குளிர் காய அழைத்துக் தொலைக்கின்றனவே..

வண்பாடுபட்டிப் போராடி அவனிடமிருந்து தன்னைப் பியித்துக் கொள்ளாத குறையாக பிரிந்து நின்றாள் ப்ரீதி..

"ஏன்..?" உறுமினான் அவன்..

"எனக்கு உங்களைப் பத்தித் தெரியனும் சித்தார்த்.." பிடிவாதமாக அறிவுறுத்தினாள் ப்ரீதி..

அவன் தீர்க்கமாக அவளைப் பார்த்தான்.. தீட்சண்யம் மிக்க அவனது பார்வை சுட்டபோதும் பிடிவாதமாக அவனது பார்வையை எதிர் கொண்டு அசையாமல் நின்றாள் அவள்..

"பிடிவாதமா..?" கடினமான குரலில் கேட்டான்..

"சில விசயங்களில் பெண்கள் பிடிவாதமா இருந்துதான் தீரனும்.."

"உன்னை ஏமாற்றி விடுவேன்னு நினைக்கிறயா..? என்னைப் பார்த்தால் உனக்கு ஏமாற்றுக்காரனைப் போல இருக்கிறதா..?"

சித்தார்த்தனின் உக்கிரத்தில் அவளது பிடிவாதம் கொஞ்சம்கூட குறையவில்லை.. அவளையே இமைக்காமல் பார்த்தவன்..

"எதற்கு இந்தப் பிடிவாதம்..?" என்று எரிந்து விழுந்தான்..

"என் அத்தையின் வாழ்க்கையைப் போல என் வாழ்க்கையும் ஆகிவிடக் கூடாது சித்தார்த்.."

தனது நிலையை அவள் சொல்ல ஆரம்பிப்பதற்குள்..

"என்ன சொன்ன..?" என்று கண்சிவந்து விட்டான் சித்தார்த்தன்..

"உன் அத்தையின் வாழ்க்கைக்கு என்ன குறை..? உயிருக்குயிராய் காதலித்த காதல் கணவர்.."

"சித்தார்த்.. நான் அப்பாவிடம் உங்களைப் பற்றிச் சொல்லனும்..?"

சித்தார்த்தன் கடகடவெனச் சிரித்தான்.. ப்ரீதி பயந்து போனாள்.. கலைந்த தலையும், சிவந்த கண்களுமாக அவன் உரத்துச் சிரித்த சிரிப்பு.. பனி மேகம் மூடியிருந்த மலை முகடுகளில் எதிரொலித்து அவளது அச்சத்தை அதிகப் படுத்தியது..

"இப்படி சிரிக்காதீங்க.. பயமா இருக்கு.." என்று அவள் வேண்டிக் கேட்டுக் கொண்ட பின்னால்தான் சிரிப்பதை நிறுத்தினான்..

"ஏன் சிரிக்கறீங்க..?"

"உன் அப்பாவிடம் என்னைப் பற்றிச் சொல்லனும்னு சொன்னியே.. அதில் சிரிப்பு வந்து விட்டது.."

"இதில் சிரிக்க என்ன இருக்கு..?"

"நிறைய இருக்குடி.. உனக்குத்தான் நான் யார்ன்னு தெரியாது.. உன் அப்பாவுக்குத் தெரியும்.. நான் யார்..? என் பூர்விகம் என்ன..? என் அப்பா, அம்மா யார்.. இப்படி எல்லா விவரங்களும் அவருக்குத் தெரியும்.."

"என் அப்பாவுக்கா..?"

"உன் அம்மாவுக்கும் தெரியும்.."

"ஆர் யு ஷ்யூர்.."

"ஏய்ய்.. தெரியும்டி.. சித்தார்த்தனைக் காதலிக்கிறன்னு மட்டும் சொல்லு.. மத்தப் பஞ்சாயத்தை எல்லாம் அவரே ஆரம்பிப்பார்.."

"எப்படி சித்தார்த்..?"

"அது அப்படித்தான்.. நீயும் நானும் ஒன்று சேர போராட வேண்டியிருக்கும் ப்ரீதி.. பட், ஒன் திங்.. எதற்காகவும், யாருக்காகவும் நான் உன்னை விட்டுக் கொடுக்கவே மாட்டேன்.. நீ எனக்கு வேண்டும் ப்ரீதி.. உன்னுடன் நான் வாழனும்.."

அவனது கரங்கள் ஆக்டோபஸாக அவளை வளைத்து இழுத்துக் கபளீகரம் செய்ய முற்பட்டபோது அவள் அதை தடுக்கவில்லை.. அவளுக்கான அவனது தேடலில் கர்வம் கொண்டாள்.. காணக் கிடைக்காத ஆண்மகன் அவளைத் தேடுகிறான்... அவள்தான் அவனுக்கு வேண்டும் என்று வேட்கை கொள்கிறான்.. ப்ரீதிக்கு உலகமே மறந்து போனது..

"வருவதை எதிர் கொள்வோம்.. இந்த நொடியில் எல்லாத்தையும் மறடி.. உன்னையும், என்னையும் பற்றி மட்டும் நினைடி.. உனக்கு நான்.. எனக்கு நீ.. நமக்கு இந்த மலைபிரதேசம்.. குளிர் நிரம்பிய இந்த காட்டுக்குள் கனப்பாக என் அருகில்வா.."

"சித்தார்த்.."

தாள முடியாத தவிப்புடன் முணுமுணுத்தாள் ப்ரீதி.. அத்து மீறிய அந்த அராஜகக்காரனின் அணைப்பு அவளது எழும்புகளை நொறுக்கியது.. குளிருக்கு கனப்பாக அவளை அருகில் அழைத்தவன் அவளுக்குக் கனப்பானான்.. அவளது இதழ் தேடிக் குனிந்தவனுக்கு தன் இதழ்களைத் தந்து அடைக்கலமானாள் அந்த மாது..

மெலிதான வெண்மை நிறத்துடன் கூடிய பனிப்புகை அவர்களைச் சூழ மேகத்தில் மிதக்கும் கந்தர்வக் கன்னிகையைப் போல உணர்ந்தாள் ப்ரீதி.. கந்தவர்னின் அணைப்புக்குள் இருந்தால் கந்தர்வக் கன்னிகையாக ஆகித்தானே தீர வேண்டும்.. பட்டப் பகலில் காரிருளின் கும்மிருட்டு கானகத்தை நிறைத்தது.. அவளுக்கு அச்சமாக இல்லை.. ஆரண்யத்தின் அரசன் அணைத்துக் கொண்டிருக்கும் போது காரிருள் அவளை பயமுறுத்துமா..?

சித்தார்த்தனின் சூடான இதழ்கள் அவளது முகம் முழுவதும் படிந்து உஷ்ணமூட்டின.. கண்மூடிக் கிறங்கிக் கிளர்ந்து அவனுடன் ஒன்றிக் கொண்டாள் ப்ரீதி..

அவளது அடைக்கலத்தில் சித்தார்த்தனின் மனம் நிறைந்திருக்க வேண்டும்.. அவளை விடுவித்து கலைந்திருந்த அவளது கூந்தலை நீவி விட்டுக் கன்னத்தில்

தட்டினான்.. காதலுடன் பார்த்தவளை போதையுடன் பார்த்தான்..

"இன்னும் கொஞ்ச நேரம் இங்கே நின்றிருந்தால் போதும்.. நான் உன்னை ஆண்டு விடுவேண்டி.. டேன்ஜரான நேரம் இது.. வா.. போகலாம்.."

ப்ரீதிக்கும் பெருமையாக இருந்தது.. அவளது காதலன்தான் எப்பேற்பட்டவன்.. அவளுடைய தனிமையைப் பயன்படுத்திக் கொண்டான் என்று அவள் குற்றம் சாட்டினாள்.. இன்றோ அவன் என்ன செய்தாலும் கேள்வி கேட்க யாருமில்லாத கானகத்தின் காரிருள்.. பனிப்புகை சூழ்ந்த தனிமை.. அவன் அவளை விட்டு விலகி 'வா.. போகலாம்..' என்று அழைக்கிறான்..

"இங்கு வரும் எந்த மனிதரும் இந்த இடத்தை, இந்த வாழ்வை, இந்தப் பனியை, இந்தக் குளிரை, இந்த மழையை, இந்த மலைத்தொடரை, இந்த அருவிகளை, இந்த செடி கொடிகளை விட்டுப் போக நினைப்பதேயில்லை.. அவர்களது வேர் வேற இடத்தில் இருக்கும்.. வேறு வழியில்லாம போவாங்க.. வேரில்லாதவங்க.. இங்கே வேரூன்றி வாழ ஆரம்பித்து விடுவாங்க.. வால்பாறை வட்டாரம் முழுவதும் வந்தேறிகள்தான் அதிகம் இருக்கிறாங்கடி.. நோயாளிகள் குறைவு.. இயற்கை தரும் சுத்தமான நீரும், காற்றும் நோயை அண்ட விடுவதில்லை தெரியுமா.."

ப்ரீதியின் தோள்மீது கைபோட்டு இறுக்கிக் கதை சொல்லியபடி நடந்தான் அவன்.. அவனுடைய தோள்மீது தலைசாய்த்து அவனுடைய விரல்களுடன் விரல்களைப் பிணைத்து ஊம் கொட்டியபடி கூட நடந்தாள் அவள்.. ஆரண்யத்தில் நடப்பதைப் போலவே இல்லை.. வாழ்க்கைப் பாதையில்.. அவன் தோள் சாய்ந்து, விரல்கள் கோர்த்து நடப்பதைப் போலவே இருந்தது..

"இங்கிருக்கும் மக்களோட வாழ்வாதாரம் தேயிலைத் தோட்டங்கள்தான்.. இயற்கையோடு இயற்கையாக அவ்வளவு இயல்பாய் தங்களைப் பின்னிப் பிணைச்சுக்கிட்டவங்க இவங்க.. அழகான மனசுக்குச்

சொந்தக்காரங்கடி.. காதல் கல்யாணங்கள்தான் இங்கே அதிகம்.. பொங்கலைக் கொண்டாடுவாங்க.. 'ஃபுட்பால்' விளையாட்டுன்னா இவங்களுக்கு உயிர்.. தீவிர ரசிகர் கூட்டம்.. இங்கே இருக்கு.. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ஃபுட்பால் விளையாட்டு வீரன் இருப்பான்.. தமிழ் மணக்கும் ஊர்டி இந்த ஊர்.. கில்லி, பச்சைக்குதிரை, கண்ணாமூச்சி, சாட் பூட் திரின்னு இன்றைய தலைமுறை மறந்து போன விளையாட்டுகளை இவங்க விளையாடிக்கிட்டு இருக்கிறாங்க.. கம்யூட்டர் அழிக்க முடியாத விளையாட்டுக்கள்டி இவங்க விளையாட்டு.. கிரிக்கெட்டைத் தாண்டிய விளையாட்டு.."

சித்தார்த்தன் சொல்லச் சொல்ல.. ப்ரீதிக்கு பூனாவுக்குத் திரும்பிப் போகாமல் அந்த ஊரிலேயே இருந்து விடவேண்டும் போல இருந்தது..

# 20

## உனைப் பார்க்கும் நொடிகளிலே
## உயிர்த்தெழுகிறேன் காதலனே..!
## உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு..?

ப்ரீதியின் வேர் தமிழகத்தில் இருந்தது.. கங்காதரனின் பெற்றோரும், பார்கவியின் பெற்றோரும் வேலைக்காக வட மாநிலங்களுக்குச் சென்று அங்கே நிலை கொண்டவர்கள்.. சித்தார்த்தன் அப்படியில்லை.. கானவயலின் வேரில் நிலை கொண்டவனாக இருந்தான்.. அந்த மலை பிரதேசத்தை நேசித்தான்.. கானகம் அவனது தாய் மடியென்றான்.. மேற்கு தொடர்ச்சி மலைகளைத் 'தோழர்கள்' என்றான்.. பனி அவனது உடன்பிறப்பு.. மழை அவனது குடியிருப்பு..

"இது வற்றாத ஜீவ நீரூற்று ப்ரீதி.. வந்தோரை வாழ வைக்கும் பூமி.. பகை இங்கே இல்லை.. போட்டி, பொறாமை இங்கு இல்லை.. காதல் கல்யாணம்தான் அதிகம்.. ஜாதி, மதங்களைக் கடந்த சொந்தம் இங்கே இருக்குடி.. ஊரும், உறவும், உண்மையும், அகமும், அன்பும், அறமும் செழித்து

இருக்கிற இந்த பிரதேசத்தில வாழ்வது கொடுப்பினைடி.. அப்படியொரு வாழ்க்கையை என்னுடன் வாழ வருவாயா..?"

இரு கரம் விரித்து அவன் அழைத்த அழைப்பில் நெக்குருகிப் போனாள் ப்ரீதி.. அவனுடன் வாழாத வாழ்வென்ன வாழ்வு..? எங்கு சென்றாலும் இந்த மலை பிரதேசத்திலும், இதன் ஆரண்யத்திலும் அவள் கால் பதித்த நினைவுகள் தொடராமல் இருக்குமா..? தூக்கத்திலும் வந்து சுகம் தருமே..

தொட்டும் தொடாத சித்தார்த்தனின் ஆலிங்கனம் அவளுக்குப் புதிது.. நினைத்தாலே இனிமை தரும் ஞாபகங்கள் அவளுக்குப் புதிது.. ஆளைக் குழுக்கும் இந்த இன்ப அதிர்வுகள் அவளுக்குப் புதிது.. காலைப் பனியில் விடிந்தும் விடியாததைப் போன்ற மெலிதான சூரிய வெளிச்சத்தில் எதிரில் வருபவரை இனம் காண முடியாத பனிப்புகையில் நடைபயில்வது அவளுக்குப் புதிது.. மனம் முழுவதும் நிரம்பித் தவிக்க வைக்கும் உணர்வலைகள் அவளுக்குப் புதிது.. கனவுகள் அளிக்கும் அவனது குறும்பும் ஆளுமையும் அவளுக்குப் புதிது..

அன்றுதான் பிறந்தவளைப் போல அனைத்தையும் புதிதாக உணர்ந்தாள் ப்ரீதி.. அவனது கரங்களுக்குள் பாய்ந்தவளை இறுக்கமாக அவன் தழுவிக் கொண்ட வேகத்தில் தன் எல்லையற்ற காதலை உணர்த்தினான் சித்தார்த்தன்... அவனது அணைப்பினில் அடங்கியிருந்தவளுக்கு விரல் நீட்டிச் சுற்றுப் புறத்தைச் சுட்டிக்காட்டினான்..

உயரமான மலை விளிம்பில் அவர்கள் நின்றிருந்தார்கள்.. கீழே கட்டம் கட்டி அளவெடுத்தது போல பசுமையாக தேயிலைச் செடிகளின் பாத்திகள்.. வாழும் போதே சொர்க்கத்தை உணர்த்தும் குளிர் நிரம்பிய பனிப் பொழிவு.. எப்போது வேண்டுமானாலும் மழை பொழியும் கார் மேகங்கள் சூழ்ந்த மலை முகடுகள்.. மிதமான வானிலை..

மலைச்சாரலின் பனியில் மழைச்சாரலின் தூறலில் நனையும் குளிர்ச்சி எப்படிப்பட்ட இன்பமான நடுக்கத்தைத் தரும் என்பதை சிலிர்ப்புடன் உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தாள் ப்ரீதி..

"பார்.. இது காடுகள் சூழ்ந்த ஊர்.. வஞ்சம் சூழ்ந்த உலகுக்கும் இதற்கும் எந்தவிதமான தொடர்புமில்லை.. இங்கு வாழ வரும் மக்கள் இதன் சூழலை நேசிப்பவர்களாக இருப்பார்கள்.. பிடித்தத்துடன் இங்கே வாழ ஆரம்பிப்பார்கள்.. அந்தப் பிடித்தம் உன் மனதில் இருக்கிறதா ப்ரீதி..?"

"பிடித்தம் இல்லாமல்தான் உங்களுடன் சேர்ந்து ஊர் சுற்றிக் கொண்டு இருக்கிறேனா..?"

"இப்போது இருக்கும் இதே மனநிலை எப்போதும் மாறாமல் இருக்குமாடி..?"

"மாறாது சித்தார்த்.. என் காதல்மீது சந்தேகப் படறிங்களா..?"

"வாழ்வின் நிர்பந்தங்கள்மீது சந்தேகப்படுகிறேன்.. நிர்பந்தத்தினால் கிடைத்த வாழ்வு வேண்டாம்ன்னுதான் என் அம்மா தன் உயிரைத் தானே குறைத்துக்கிட்டு தெய்வமாகிட்டாங்க.. அவங்க மகன் நான்.. என் காதல் கூட உனக்கு நிர்பந்தமாகி விடக் கூடாது.."

'ஏன் இப்படிச் சொல்கிறான்..?'

ப்ரீதிக்குப் புரியவில்லை.. அவன்தான் புரியாத புதிராக இருந்து தொலைக்கிறானே.. ஆனாலும் புதிர் போன்ற அவனைத்தானே ப்ரீதிக்குப் பிடித்துத் தொலைத்திருக்கிறது.

ப்ரீதியை இறுக்கியபடி மலை முகடுகளை வெறித்துக் கொண்டிருந்தவனின் முகத்தில் தெரிந்த தீவிரம் அவளை பாதித்தது.. அவனது புருவச் சுளிப்புகளை விரல் தடவி நீவி நீக்கி.. அவன் தலை கோதி அரவணைக்க விரும்பினாள்.. நினைத்ததை செய்தாள்.. ஒரு குழந்தை போல அவளது விரல் நீவலுக்கு முகம் கொடுத்து தலைமுடியை அவளிடம் ஒப்புக் கொடுத்தவனின் தேடலில் அவள் உருகிப் போனாள்..

"சித்தார்த்.."

அருகிலிருந்த பாறையில் அமர்ந்து அவள் கைநீட்ட.. மறுபேச்சில்லாமல் விழிகள் மின்ன அவள்மடியில் படுத்துக்

கொண்டான் அவன்.. அவனது கழுத்தை வளைத்த அவளது கரத்தைப் பிடித்து முகத்தில் தேய்த்து அவளது விரல்களில் முத்தமிட்டான்.. ப்ரீதி அவனுடைய முடி கோதியபடி கதை கேட்க.. அவன் தன் பேச்சைத் தொடர்ந்தான்..

"காடுகளின் அருகில் இருக்கும் ஊர்களில் ஆள்கள் நிறைந்திருக்கிறார்கள் ப்ரீதி.. ஆள்கள் நிறைந்திருக்கும் ஊர்களின் பக்கத்தில் இருக்கும் காடுகளில் வாத்துக்கள், மயில்கள், புறாக்கள், பெயர் தெரியாத பறவைகள், கரடிகள், புலிகள், சிங்கங்கள், யானைகள், மான்கள், குரங்குகள், சிறுத்தைகள், முள்ளம் பன்றிகள்ன்னு விலங்குகளும் பறவைகளும் நிறைந்திருக்கின்றன ப்ரீதி.. இதுபோல எங்கும் நீ பார்த்திருக்கிறாயோ என்னவோ.. எனக்கு என் ஊர் பெரிது.."

"எனக்கும் உங்க ஊர் பெரிதுதான் சித்தார்த்.."

"ஆதவனுக்கு இந்த ஊரில் பிடிமானமில்லாமல் போகலாம்.. நான் அவனில்லை.."

இதைச் சொல்வது அவன்தானா என்று வியப்புடன் அவனைப் பார்த்த ப்ரீதி உதட்டை வளைத்துச் சிரித்தாள்.. எவராலும் அணுக முடியாத இரும்பு மனிதனைப் போன்ற ஒருவன்.. ஊரையே காவல் காக்கும் காவல் தெய்வம் போன்றவன்.. ஊரை ஏமாற்றிப் பிழைக்கும் ஒருவனின் வாயிலிருந்து வரும் வசனமான 'நான் அவனில்லை..' என்ற வார்த்தைகளைச் சொல்கிறான்..

'இது விசித்திரம்தான்..' அவளது சிரிப்பு விரிந்தது..

அண்ணாந்து அவளது முகத்தைப் பார்த்தபடி இருந்த சித்தார்த்தனின் முகம் விகசித்தது.. அவளது சிரிப்பு அவனை கொள்ளை கொண்டது.. ஆசையுடன் அவளைப் பார்த்தான்.. பனியில் நனைந்த மலரைப் போன்ற அவளது சிரிப்பு அவனை மயக்கியது.. விரல்களால் அவளது இதழ்களைச் சுண்டினான்..

"ஸ்ஆ.. வலிக்குது சித்தார்த்.." அவள் பொய்யாக சிணுங்கினாள்..

"சித்தார்த்தா..? நீ என்ன எனக்குப் பெயர் வைத்தாயா..?" அவன் அவளது மூக்கை நிமிண்டினான்..

"உங்களுக்கு முன்னால் பிறந்திருந்தால்தானே பெயர் வைத்திருக்க முடியும்..? பெயர் வைக்கிறது எதுக்காம்..? கூப்பிடத்தானே.."

"என் தாத்தாவின் முன்னால் இப்படி நீ கூப்பிட்டிருக்கனும்.. ஆடித் தீர்த்திருப்பார்.."

"சொல்லாதீங்க.. அவரை நினைச்சுப் பார்த்தாலே பயமாய் இருக்கு.."

"உன் ஆளிருக்க பயமேன்..?"

அவளது கன்னம் தட்டினான் அவன்.. ப்ரீதிக்கு உலகமே மறந்து போனது.. அவனும் அவளும் மட்டுமே இருந்த அந்த இடம் மட்டுமே நினைவில் இருந்தது.. உச்சியிலிருந்து பார்த்தால் சரிவில் மரங்களின் அடர்த்தியின் மறைவில் தெரியும் வீடுகளும்.. பசுமையின் மத்தியில் வெந்நிற ரிப்பன்களைப் போல வளைந்து நெளிந்து செல்லும் ஆறுகளும்.. ஆங்காங்கே மலை முகடுகளில் சாரல், நீர்ப்புகையாய் பொங்கி எழும்ப வெள்ளிப்பனியுருகி வீழ்வதைப் போலக் கொட்டிக் கொண்டிருந்த அருவிகளும் அவளை எங்கோ அழைத்துச் சென்றன..

இயற்கை அழகு தரும் போதையிலிருந்து தெளிவது என்பது அத்தனை சுலபமானதல்ல.. மனம் மயக்குவது காதல் மட்டுமல்ல.. கானகமும்தான்.. வாழ்வின் சூட்சுமங்களையும் சூழ்ச்சிகளையும் பற்றிய சிந்தனையின்றி இயற்கையின் அழகில் லயித்து அந்நொடிகளில் சிலிர்ப்பதைத் ததும்பத் ததும்பப் பருகி மகிழ்ந்தாள் அவள்.. இயற்கையின் அற்புத ஆலாபனைகளிலிருந்து வெளிப்படும் ஸ்வரங்களின் லயம் ஆன்மாவை ஆட் கொள்பவை..

மனமெங்கும் வியாபித்திருந்த பரவச உணர்வை என்னவென்று விவரிப்பது.. வார்த்தைகளால் சொல்ல இயலாத வர்ண ஜாலங்கள் அல்லவா அவை.. உணர்வில் திளைப்பவை.. உணர்வில் கலப்பவை..

அரண்மனைக்குத் திரும்ப வேண்டும் என்ற நினைவில்லாமல் இருந்தவர்களைச் சுற்றிக் கவிந்தது இருள்.. போயாக வேண்டும் என்ற ஏக்கத்துடன் அவனும்,

அவளும் எழுந்து கொண்டார்கள்.. காரின் வெளிச்ச வெள்ளம் மலைப்பாதையில் பாய கார் சீரான வேகத்தில் அரண்மனையை நோக்கி விரைந்தது.. அவனது தோள் சாய்ந்த ப்ரீதி இமைகளை மூடினாள்.. நாள் முழுவதும் காட்டுக்குள் அலைந்த அலைச்சலின் அசதி.. அதீத காதலினால் உண்டான இன்ப அயர்வு.. அப்படியே தூங்கி விட்டாள் போல.. 'டம்.. டம்..' என்ற தட்டல் சப்தத்தில் இமைகளைத் திறந்து பார்த்தாள்..

ஆதவன்தான் காரின் ஜன்னல் கதவைத் தட்டிக் கொண்டிருந்தான்.. சித்தார்த்தனின் தோள்மீது சாய்ந்திருந்தவள் ஆதவன் அதை பார்த்து விட்டானே என்ற பதட்டம் சிறிதுமின்றி வெகு நிதானமாக விலகி அமர்ந்ததில் ஆதவனின் சினம் அதிகரித்தது..

கதவைத் தட்டாதே என்ற அர்த்தத்தில் கண்டிப்பான முக பாவத்துடன் விரலை ஆட்டி எச்சரித்தான் சித்தார்த்தன்.. ஆதவனின் முகம் அவமானத்தில் சிறுத்தது.. அவன் கண்ணாடி கதவைத் தட்டுவதை நிறுத்தி விட்டு தள்ளி நின்றான்.. விசாகாவும் ஆர்த்தியும் அரண்மனையின் நீண்ட படிக்கட்டுகளில் நின்றிருந்தார்கள்.. கார் பக்கத்தில் வரவில்லை.. மாறன் அங்கு இல்லை..

'வழக்கம் போல ஹால் சோபாவில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருப்பாராயிருக்கும்..' ஆர்த்தி நினைத்துக் கொண்டாள்..

எப்படித்தான் ஒரு மனிதரால் தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளின் பாதிப்புகள் இல்லாமல் துறவியைப் போல பற்றற்ற நிலையுடன் இருக்க முடிகிறதோ..

'தொண்டைமான் இல்லாமல் இருந்தால் நல்லாயிருக்கும்..'

அவள் நினைத்து முடிப்பதற்குள் 'வந்தேன் பார்..' என்று அவர் அரண்மனையிலிருந்து வெளிப்பட்டு மேல்படியில் நிற்க... அவளையுமறியாமல் ப்ரீதி சித்தார்த்தனின் கையைப் பற்றினாள்.. அதைப் பார்த்து விட்ட ஆதவன் கொதித்துப் போனான்..

"ம்ப்ச்.. நானிருக்கேனில்ல.. டோன்ட் அஃப்ரைடு.." சித்தார்த்தனின் கை அவளது கையை அழுத்தியது..

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவள் காரை விட்டு இறங்கினாள்.. அதற்காகவே காத்திருந்த ஆதவன்..

"எங்கே போன..?" என்று சீறினான்..

"அதை போர்டிகோவில் நின்றுதான் கேட்பாயா..? வாசலில் செக்யூரிட்டி இருக்கிறான்.. போர்டிகோவில் டிரைவர் நின்றிருக்கிறான்.. வேலையாள்களின் முன்னால் வீட்டு விவரங்களைப் பேசக் கூடாதுங்கிற அறிவு உனக்கு வேண்டாமா..? எத்தனை தடவை சொன்னாலும் உன் புத்தியில் இது ஏறவே ஏறாதா..?" பதிலுக்கு சீறிய சித்தார்த்தன் ப்ரீதியின் பக்கம் திரும்பி..

"நீ உள்ளே போ.." என்று உத்தரவிட்டான்..

ஆதவனுக்குப் பதில் சொல்லாமல் சித்தார்த்தனின் உத்தரவுக்குக் கீழ்படிந்த ப்ரீதி வேகமாக படிகளில் ஏறினாள்.. விசாகாவின் முகத்தில் கடுமையென்றால் கடுமை.. அப்படியொரு கடுமை விரவியிருந்தது.. அன்பும், அமைதியுமான விசாகாவின் முகத்தைத்தான் ப்ரீதி பார்த்திருக்கிறாள்.. ஆத்திரமே உருவான விசாகாவை அவள் அன்றுதான் பார்க்கிறாள்..

என்னதான் இருந்தாலும் ப்ரீதி விசாகாவின் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருக்கிறாள்.. உடல்நிலை சரியில்லாத விசாகாவிடம் சொல்லாமல்.. அவளுக்குத் தெரியாமல் ப்ரீதி சித்தார்த்தனுடன் நாள் முழுவதும் ஊர் சுற்றிப் பார்த்து விட்டு இருட்டியபின்னர் வீடு திரும்புவது தவறுதானே..

"அத்தை.." தயக்கத்துடன் அழைத்தாள்..

விசாகா விர்ரென்று உள்ளே போய் விட்டாள்.. ப்ரீதிக்கு முகத்தில் அடித்ததைப் போல இருந்தாலும் ஒருவகையில் விசாகா சென்று விட்டது விடுதலையுணர்வைத் தந்தது..

'அடுத்தது ஆர்த்தி.. இவளிடம் என்னத்தைச் சொல்ல..?'

அவள் கைகளைப் பிசைய ஆரம்பித்தாள்..

"ஆர்த்தி.."

"நீ ரெஸ்பான்ஸிபிள் பெர்சன்னு நினைத்தேனே ப்ரீதி.. அதைப் பொய்யாக்கிட்டியே.."

"இல்லைடி.."

"வேண்டாம் ப்ரீதி.. உன் விளக்கம் எதுவும் எனக்கு வேண்டாம்.. எப்ப எங்களிடம் சொல்லாமல் உன் விருப்பப்படி நீ நடக்க ஆரம்பிச்சிட்டியோ.. இனி உன்னிடம் பேசுவது வேஸ்ட்.."

ஆர்த்தியும் வேகமாகப் போய்விட ப்ரீதிக்கு அழுகையழுகையாக வந்தது.. இதையெல்லாம் அவள் எதிர்பார்த்திருந்தாலும் நேரில் அனுபவிக்கும் போது மனம் வலிக்கிறதே..

தொய்ந்து போனவளாக படியேறியவள் தொண்டை மானின் அக்கினி பார்வையில் கிடுகிடுத்துப் போனாள்.. அவர் எதையோ பேச வாய் திறப்பதற்குள், சித்தார்த்தன்..

"தாத்தா.." என்று அதட்டி விட்டான்..

"சித்தார்த்.. நீ யார் என்பதை மறந்து விட்டாயா..?"

"நான் யார்ன்னு இவளுக்கும் தெரியாது தாத்தா.."

"நீ.. உயரத்தில் இருப்பவன் சித்தார்த்தன்.."

"இவள் என் காதலி.. என் உயரத்துக்கு இவளைத் தூக்கி நிறுத்தி விட்டால் எல்லாம் சரியாகி விடும்.. நாம் இதைப் பற்றி மாடிக்குப் போய் பேசலாமா..?"

சித்தார்த்தன் கை பிடியாய் தொண்டைமானை இழுத்துக் கொண்டு போய் விட்டான். ஊசிக்குளிர் உடலைத் தாக்க படியிலேயே நின்று விட்ட ப்ரீதிக்கு கண்ணைக் கட்டியது.. இனி அவள் எதையெல்லாம் எதிர்கொள்ள வேண்டியிருக்குமோ..

# 21

## கானகத்தின் காவலனே..! உன்
## காலடியில் இந்தப் புள்ளிமான்..!
## விலக்கம் ஏனடா..? நீ விளக்கம் சொல்லடா..

"அப்பா..!"

இமைகொட்டி விழித்தாள் ப்ரீதி.. அறைவாசலில் கங்காதரன் நின்று கொண்டிருப்பது உண்மையா..?

பிரமையா..? என்ற சந்தேகத்தில் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.. வலித்தது..

'இது உண்மைதான்..'

தாயைக் கண்ட கன்றாக அவளது கண்களில் இருந்து கண்ணீர் உடைப்பெடுத்தது.. உதடுகள் துடிக்க நின்றிருந்தவளைப் பார்த்து கங்காதரனின் விரிந்த கைகள் 'வா, மகளே..' என்று அழைத்தன.. தேம்பலுடன் தந்தையின் தோள் சாய்ந்தாள்.. மகளை சமாதானப் படுத்தியபடி அறைக்குள் வந்தார் கங்காதரன்.. இன்னமும் அவளது தந்தை கானவயல் அரண்மனைக்கு வந்திருக்கிறார் என்பதை ப்ரீதியால் நம்பவே முடியவில்லை..

விசாகா மாறனைப் பின்தொடர்ந்து கிளம்பியபோது தடுத்தார்.. அவரை மீறிப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு கணவரைப் பின் தொடர்ந்து வந்து விட்டாள் விசாகா.. கங்காதரன் தங்கையைப் பார்க்க என்று அவளிருந்த இடத்தில் கால் பதிக்கவேயில்லை..

ஏன் என்று பலமுறை ப்ரீதி வினவியிருக்கிறாள்..

"அத்தையோட வாழ்க்கைப்பா.. அவங்க மாமாவோடு தான் இருக்கனும்னு டிசைட் பண்ணினா நீங்க அப்ஜெக்ட் பண்ணக் கூடாதுப்பா.. இந்த கோபத்தை மனதில் வைத்துக்கிட்டு அவங்க வீட்டுக்கு நீங்க போய் வராம இருக்கலாமா..?" ப்ரீதி வாதாடுவாள்..

அப்போது கங்காதரன் சிரிப்பாரே ஓர் சிரிப்பு.. அந்தச் சிரிப்புக்கான அர்த்தம் என்னவென்று இதுநாள்வரை ப்ரீதிக்குத் தெரியாது..

"அவள் வீடா..? அது விசாகாவின் வீடா..?"

அவரது சிரிப்புக்குப் பொருள் தெரியாததைப் போல கோபமான அந்தக் கேள்விக்கும் அவளுக்குப் பொருள் விளங்கவில்லை.. இதுபற்றி தாய்க்கு ஏதேனும் தகவல் தெரியக் கூடுமோ என்று அவளை அணுகினால்..

"படி.. இல்லேன்னா வேற வேலை ஏதாச்சும் இருந்தா அதைப் பாரு.. தேவையில்லாம தொண தொணக்காதே.." என்று மகளை அதட்டி விடுவாள் பார்கவி..

பிரசாத் இதைப்பற்றியெல்லாம் கவலைப்பட மாட்டான்.. அவனுக்கு தேவை ஆர்த்தி மட்டும்தான்.. அவள் அவனுடன் மணிக்கணக்கில் செல்போனில் பேசுகிறாள்.. வருடா வருடம் பூனாவுக்கு வந்து போகிறாள்.. அது போதாதா..?

"டேய் அண்ணா.. நீ ஆர்த்தியை மேரேஜ் பண்ணிக்கப் போகிறதான..?"

"அதிலென்ன சந்தேகம் உனக்கு..?"

"அப்ப அப்பா எதுக்காக அவ வீட்டுக்கு போகிறதில்லைன்னு கேட்கலாமில்ல..?"

"அது எதுக்கு நமக்கு..?"

"இப்படியாடா பேசுவ..?"

"ப்ரீதி.. ஆர்த்தியே நம் வீட்டுக்கு வாழ வந்திருவா.. அத்தை வீட்டுக் கதையைப் பேசி நமக்கு ஆகப் போகிறதென்ன..?"

விடை தெரியாத கேள்வியாக.. விசாகாவின் வீட்டிற்கு கங்காதரன் செல்லாதது ப்ரீதியின் மனதில் சுழன்று கொண்டிருக்க.. கங்காதரன் மகளுக்காக விசாகாவின் வீட்டுப் படியை மிதித்திருக்கிறார்..

'எனக்காகவா..'

ப்ரீதி அப்பா செல்லம்.. அவள் எதைக் கேட்டாலும் மறுக்காமல் வாங்கிக் கொடுத்து விடும் அன்புத் தந்தை அவர்.. இப்போது சித்தார்த்தனைக் கேட்கப் போகிறாள்.. மறுக்காமல் அவள் கேட்கும் சம்மதத்தைத் தருவாரா..?

முதல்நாள் முழுவதும் சித்தார்த்தனுடன் ஊரைச் சுற்றி விட்டு வீடு திரும்பியவளை விசாகாவும் அவளது பிள்ளைகளும் புறக்கணித்தார்கள்.. பேசவில்லை.. மாறன் மட்டும் பேப்பரைத் தூக்கிப் போட்டு விட்டு..

"சாப்பிட வாம்மா.." என்று அழைத்தார்..

"பசிக்கலை மாமா.." என்று சொல்லி விட்டு மாடியேறி அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறைக்குப் போய் விட்டாள் ப்ரீதி..

குளித்து நைட்டிக்கு மாறி படுக்கையில் உட்கார்ந்த போது தனிமைப் படுத்தப்பட்டு விட்ட சோகம் அவளைக் கலங்க

வைத்தது.. விசாகா அழைத்துத்தானே அங்கே வந்தாள்.. இப்போது அவளே பேச மறுக்கிறாள் எனும்போது ப்ரீதி என்ன அந்த அரண்மனையில் வேண்டாத விருந்தாளியா..?

பொங்கி வந்த அழுகையில் அவள் கரைந்து கொண்டிருந்த போது அறையின் காலிங்பெல் அலறியது.. கதவைத் திறந்தாள்.. 'ஹி..ஹி..' என்று சிரிக்காமல் தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு வனிதாமணி நின்றிருந்தாள்.. கையில் மூடப்பட்ட பெரியதட்டு.. கண்களில் கருணைப் பார்வை..

"என்ன வனிதா..?"

"ராத்திரி டிபன்ம்மா.. பெரியய்யா கொடுத்து விட்டாங்க.."

மாறன் அனுப்பி வைத்திருக்கிறார்.. விசாகாவோ, ஆர்த்தியோ அதை அனுப்பி வைக்கவில்லை என்பதில் ப்ரீதி மனம் உடைந்தாள்..

"பசியில்லை வனிதா.. எனக்கு டிபன் வேண்டாம்.." தீனமாகச் சொன்னாள் ப்ரீதி..

"எப்படிப் பசியில்லாமல் போகும்..? வழியை விடுங்க சொல்றேன்.." வனிதா ப்ரீதியை விலக்கி விட்டு உள்ளே நுழைந்தாள்..

"வேண்டாம்ன்னு சொல்கிறேனில்ல.." அதட்ட முயன்று தோற்றாள் ப்ரீதி..

"யாருக்காக வயிறைக் காயப் போடறிங்கம்மா..? காட்டைச் சுற்றிப் பார்க்கப் போயிருக்கீக.. செம பசியாயிருக்கும்.. பனிக் காத்தில நாலு எட்டு நடந்துட்டு வந்தாலே வயிறு கபகபன்னு எரியும்.. நீங்க நாளு பூரா நடந்துட்டு வந்து சாப்பிடாம படுப்பீகளா..? தூக்கம் வராதும்மா.." வனிதாமணி வாதிட்டாள்..

"இங்க என்ன நடக்குது..?" அறைவாசலில் குரல் கேட்டது..

'சித்தார்த்..' அவசரமாக தலை நிமிர்ந்தாள் ப்ரீதி..

அவனைக் கண்டவுடன் அவளது கண்கள் கலங்குவதைப் பார்த்தபடி உள்ளே வந்தான் சித்தார்த்தன்.. அதுவரை அவள் இருந்த அறைக்கு அவன் வந்ததில்லை.. அவனைக் கண்டதும் எழுந்து நின்றாள் வனிதாமணி.. கைகட்டி வாய்

பொத்தாத குறைதான்... ப்ரீதிக்கு காட்டுவாசிகளின் கூட்டத் தலைவன் அவனைப் பார்த்து..

'ராசா..' என்று அழைத்தது நினைவிற்கு வந்தது..

'இவன் யார்..? விசாகாவின் குடும்பத்துக்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்..?'

மனதில் எழுந்த கேள்விக்கு விடை கிடைக்கவில்லை..

"அம்மா சாப்பிட மாட்டேங்கிறாக அய்யா.." வனிதா முறையிட்டாள்..

சித்தார்த்தனின் தீர்க்கமான பார்வை அவளை துளைத்தது.. குற்றவாளியைப் பார்ப்பதைப் போலப் பார்க்கிறானே என்று துவண்டு போனாள் ப்ரீதி.. அவளென்ன மத்தளமா..? இரண்டு பக்கமும் இடி கிடைக்கிறதே..

"ஏன்..? அத்தை மகனுக்குத் துரோகம் பண்ணிட்டாங்கன்னு வருத்தப்பட்டு பட்டினி கிடக்கிறாங்களா..?"

அவனது கேள்வியில் துடித்துப் போனவள் வனிதாமணியின் கையிலிருந்த தட்டைப் பிடுங்கி நின்ற வாக்கில் அசுர வேகத்தில் சாப்பிட்டு முடித்தாள்.. அவனது கண்களில் திருப்தி வந்ததை அவள் கவனிக்கவில்லை.. காலி தட்டை வனிதா மணியின் கையில் கொடுத்துவிட்டு..

"மனதில் வருத்தம் வருகிறதுக்கு ஆயிரம் காரணம் இருக்கலாம் வனிதாமணி.. என்னன்னு தெரியாமக்கூட மனது வருத்தப்படலாம்.. எதையும் புரிஞ்சுக்காம வாய் இருக்குன்னு அபாண்டமா எதையும் பேசக்கூடாது.." என்று உதடுகள் துடிக்கச் சொன்னாள்..

சித்தார்த்தன் அசையாமல் நின்று அவளை ஒர் பார்வை பார்த்துவிட்டு..

"தூங்கு.. காலையில் பேசிக்கலாம்.." என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்..

'அவ்வளவுதானா..?' சோர்ந்து போய் கண்களை மூடிக் கொண்டாள் ப்ரீதி..

அவன் கைகளில் அடங்கி அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டால் நிம்மதியாக இருக்கும் என்று மனம் அரற்றியது.. ஆள்களின் மத்தியில் இருந்தும் அவள்

உணரும் தனிமையினை அவன் உணராமல் போனானே என்று மனம் மருகினாள் ப்ரீதி..

"கதவைத் தாழ் போட்டுக்கங்க அம்மா.."

வனிதாமணி போன பின்பு கதவைத் தாழிட்டு விட்டு வந்து படுக்கையில் விழுந்தவளுக்கு அழுகை குமுறிக் கொண்டு வந்தது.. வேண்டாத விருந்தாளியாக அவள் தள்ளி வைக்கப்பட்டு விட்ட துயரம் அவள் மனதைப் பிழிந்தது.. அவள் விருப்பத்திற்கு இதுதான் தண்டனையா..? புறக்கணிப்பை விட கொடிய தண்டனை ஏதுமில்லை..

உடனடியாக பூனாவுக்குக் கிளம்பி விட வேண்டும் என்று அவளது உள்ளம் துடித்தது.. அவள் எங்கு சென்றாலும் சித்தார்த்தன் அவளைத் தேடி வருவான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவளிடம் இருந்தது.. தவிரவும், அவள் பூனாவுக்குப் போய்த்தானே ஆக வேண்டும்.. பெற்றவர்களின் சம்மதமில்லாமல் அவள் சித்தார்த்தனை மணந்து கொள்ள முடியுமா..? அவளது காதலைப் பற்றியும், அவள் சித்தார்த்தனைத்தான் திருமணம் செய்து கொள்வாள் என்று அவள் எடுத்திருக்கும் முடிவைப் பற்றியும் பெற்றவர்களிடம் சொல்லித்தான் தீரவேண்டும்..

அவள் பூனாவுக்குக் கிளம்பிவிட முடியாமல் அவளது குடும்பம் கொல்கத்தாவிற்குச் சென்றிருக்கிறதே.. அந்த வார இறுதியில்தானே அவர்கள் பூனாவுக்குத் திரும்புவார்கள்..

விடிய விடிய தூக்கமில்லாமல் அவள் அழுது கரைந்தாள்.. விடியலில் காலிங் பெல் அலறியது.. கதவைத் திறந்தால் கங்காதரன் நின்று கொண்டிருக்கிறார்..

"அப்பா.."

அடக்கி வைத்திருந்த அழுகையை வெளிப்படுத்தித் தேம்பினாள் ப்ரீதி.. மகளை சோபாவில் உட்கார வைத்துப் பக்கத்தில் உட்கார்ந்தவர் மகளின் தலையைத் தடவிக் கொடுத்தார்.. அழுது முடிந்து தந்தையை ஏறிட்டுப் பார்த்த ப்ரீதி..

"நீங்க கல்கத்தாவில் இருப்பீங்கன்னு நினைத்தேன்ப்பா.." என்றாள்..

"அங்கிருந்துதான் பிளைட் பிடித்து வந்திருக்கிறேன் ப்ரீதி.." அமைதியாகச் சொன்னார் கங்காதரன்..

"மாமா வீட்டு பங்சன்..?"

"அம்மாவும் பிரசாத்தும் அங்கேதானே இருக்கிறாங்க.. அவங்க அட்டெண்ட் பண்ணிக்குவாங்க.."

"ஆனால் அப்பா.. அது இம்பார்ட்டண்ட் பங்சனாச்சே.."

"அதைவிட.. ஏன்.. எதையும்விட.. நீ எனக்கு இம்பார்ட்டண்ட் ப்ரீதி.. உனக்கு அடுத்துத்தான் மத்ததெல்லாம்.."

"அப்பா.."

ப்ரீதி நெகிழ்ந்து போனாள்.. யாருமற்று தனித்துப் போயிருந்த துயரம் அவள் மனதை விட்டு அகன்றிருந்தது.. அவளுடைய அப்பா வந்து விட்டார்.. அவருக்கு மகள்தான் முக்கியம்.. அவளது விருப்பம்தான் முக்கியம்.. விசாகாவின் குடும்பம் அவளை விரல் நீட்டிக் குற்றம் சொல்வதை அவர் அனுமதிக்க மாட்டார்..

"உங்ககிட்ட நான் பேசனும்ப்பா.. நிறையப் பேசனும்.. பட்.. நீங்க இப்பத்தான் வந்திருக்கீங்க.. ரெஸ்ட் எடுத்துட்டு, குளித்து பிரஷ்அப் ஆகி, பிரேக்பாஸ்ட் முடித்தவுடன் பேசறேனே.."

"தேவையில்லை ப்ரீதி.. நான் இங்கே விருந்தாட வரவில்லை.. வால்பாறையில் ரூம் போட்டிருக்கிறேன்.. அங்கே குளித்து பிரேக்பாஸ்ட் முடித்து விட்டுத்தான் இங்கே வந்தேன்.. நீ சொல்ல வேண்டியதைச் சொல்.."

"அப்பா.."

அவளுக்காகத் தான் கங்காதரன் வந்திருக்கிறார்.. விசாகாவின் வீட்டில் கை நனைக்கக்கூட அவர் விரும்பவில்லை என்பதில் இனம் தெரியாத வகையில் அவளது மனம் நிறைந்தது..

"நீங்க எப்படிப்பா இங்க..?"

"விசாகா போன் பண்ணினாள்.."

"எப்ப..?"

"நேற்றுக் காலையில்.."

"ஓ.."

ப்ரீதி சித்தார்த்தனுடன் காரில் ஏறி கிளம்பியவுடனே இந்தப் பக்கம் கங்காதரனுக்குப் போன் போய் விட்டது போல..

"அப்பா.. அது வந்து.. நான்.. இங்கே.."

கங்காதரன் குறுக்கிடவில்லை.. தடுமாறும் மகளைப் பேச விட்டு அமைதியாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்..

"சித்தார்த்தன்னு உங்களிடம் சொன்னேனில்ல.." ப்ரீதி திக்கித் திணறினாள்..

"அவர் யார்ன்னு உனக்குத் தெரியுமா..?" நிதானமாக கேட்டார் கங்காதரன்..

ஆதவனை அவன் இவன் என்று பேசுபவர், சித்தார்த்தனை அவர் என்று குறிப்பிட்டதை ப்ரீதி கவனித்தாள்.. ஏன்..? அவளுக்குப் புரியவில்லை..

"தெரியாதுப்பா, அத்தை, ஆர்த்தின்னு யாரிடம் கேட்டாலும் சொல்ல மாட்டேங்கிறாங்க.. சித்தார்த்தன்.. இங்கே... அத்தையின் அரண்மனையில்தான் தங்கியிருக்கிறார்.."

"என்ன சொன்ன..?"

கங்காதரன் உரத்த குரலில் கோபத்துடன் சிரித்தார்.. ப்ரீதி பயந்து போனாள்.. கங்காதரனுக்கு கோபம் வந்து விட்டதே.. ஏற்கனெவே இன்று சொன்னதைப் போல ப்ரீதி சொன்னபோது அன்றும் இப்படித்தான் சிரித்தார்..

"அப்பா..?" நடுக்கத்துடன் அழைத்தாள்..

"சித்தார்த்தன் ஒன்றும் உன் அத்தையின் அரண்மனையில் தங்கியிருக்கலை.. உன் அத்தைதான் தன் பிள்ளைகளோடு சித்தார்த்தனின் அரண்மனையில் தங்கியிருக்கிறா.. இதை முதலில் தெரிந்து கொள்.. இது சித்தார்த்தனின் அரண்மனை..!!"

"என்னது..?..!.."

ப்ரீதி விழி விரித்தாள்.. இது என்ன புதுக்கதை..! அவள் அறியாத கதையில் அவளறியாமலே ஓர் அங்கமாகி

விட்டாள் என்பதை கங்காதரன் சொல்லிக் கொண்டிருந்தார்..

"கானவயல் ராஜ வம்சத்தில் பிறந்தவர் ராஜா தொண்டைமான்.."

"யார்..? அந்தப் பெரியவரா..?"

"அவர் சித்தார்த்தனின் அம்மாவைப் பெற்ற தாத்தா.."

"இதைச் சொல்லியிருக்கிறார்.."

"தொண்டைமானுக்கு ஒரே மகள்.. சாருலதா.. ராணி சாருலதா தேவி..! இதைச் சொல்லியிருக்கிறாரா..?"

"இல்லையேப்பா.."

"எஸ்டேட்.. கோயம்பத்தூரில் மில்.. பொள்ளாச்சியில் தென்னந்தோப்புகள்.. பால் பண்ணைகள்.. ஹைதராபாத்தில் ஐ.டி கம்பெனி.. மும்பையில் ஷாப்பிங் மால்.. இன்னும் உலகம் முழுவதும் பல பிஸினெஸ்கள்ன்னு கங்கு கரையில்லாத.. சொத்துக்களுக்குச் சொந்தக்காரர் சித்தார்த்தன்.. ராணி சாருலதா தேவியின் ஒரே மகன்.. இதையாவது அவர் சொல்லியிருக்கிறாரா..?"

"இல்லையேப்பா... அவர் இவ்வளவு பெரிய கோடிஸ்வரர்.. ராஜ வம்சத்தில் பிறந்தவர்ன்னு என்னிடம் சொன்னதே இல்லைப்பா.. எனக்குத் தெரியவே தெரியாதே.."

ப்ரீதியின் அகன்ற விழிகளில் அச்சம் நிரம்பியது.. அவளுக்கு சித்தார்த்தன் எட்டாக்கனியா..? உச்சாணிக் கொம்பா..?

"ஆனால் அப்பா.. அத்தையின் ஃபேமிலி ஏன் இங்கே இருக்கிறது..?"

"ஏன்னா.. உன் அத்தையை கல்யாணம் பண்ணிக்கிட்ட மாறன் இங்கே இருக்கிறாரே.. அதனால் தான்..?"

"மாமாவும்தான் ஏன் இங்கே இருக்கனும்..?"

"ஏன்னா.. அவர் ராணி சாருலதா தேவியையும் கல்யாணம் பண்ணிக்கிட்டாரே.. அதனால்தான்.."

"அப்பா..???!!!..."

# 22

## நின்னைச் சரணடைந்தவளுக்கு
## நிழல் தராமல், நீ புறக்கணிப்பதில்
## நியாயம் உள்ளதோ..? சொல்..

கானவயல்..! மேற்கு தொடர்ச்சி மலைச் சாரலில் உள்ள அழகான ஊர்..! காடும்.. காடு சார்ந்த இடமும்தான் கானவயல்..! ஐந்திணைகளை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று தமிழ் இலக்கியம் வரையறுத்திருக்கிறது. குறிஞ்சித் திணை மலையும், மலை சார்ந்த இடமும்.. முல்லைத் திணை காடும், காடு சார்ந்த இடமும்.. மருதமானது வயலும் வாழ்வும்.. நெய்தல் கடலோடும் காவியம்.. பாலை மணல்வெளி..

இதில் குறிஞ்சித்திணையும் முல்லைத் திணையும் சேர்ந்து இருந்தால் எப்படியிருக்கும் என்பதை நம் கண் முன் காட்டுவதுதான் கானவயல்..! மேற்கு தொடர்ச்சி மலைகளின் மீது அடர்ந்திருக்கும் 'அட்டகட்டி' காடு.. அதைத் தொடர்ந்து கானவயல்..!

கானவயலின் ராஜவம்சத்தில் வந்த கோடிஸ்வரர் தொண்டைமான்..! மலைப்பிரதேசத்தின் பளிங்கு மாளிகை, அவரது பரம்பரை அரண்மனை..! தேயிலை, காபித் தோட்டங்கள், காய்கறிகள், ஏலக்காய், மிளகு என்று பணம் கொழிக்கும் விளைபொருள்களை கொண்ட எஸ்டேட்.. கோயம்பத்தூரில் மில்.. பொள்ளாச்சியில் தென்னந்தோப்புகள், பால்பண்ணைகள்.. என்று அள்ள அள்ளக் குறையாத செல்வச் செழிப்புடன் வாழ்பவர்.. அவருக்கு ஒரே மகள்.. சாருலதா..! ராணி சாருலதா தேவி..!

சாருலதா வெளிநாட்டில் படித்தவள்.. அழகி.. தந்தையின் சொத்துக்களை நிர்வகிப்பதில் கெட்டிக்காரி..

தொண்டைமானின் மனைவி ரூபலதா.. ஜெய்ப்பூர் ராஜவம்சத்தில் பிறந்தவள்.. சாருலதா தாயின் சாயலில் இருந்தாள்.. குணத்திலும் அப்படியே இருந்திருக்கலாம்.. ரூபலதா சாமான்யர்களிடம் பேச மாட்டாள்.. ராஜவம்சம்

என்ற கர்வம் அவளது நடையுடை பாவனைகளில் பிரதிபலிக்கும்.. கோடிஸ்வரி என்ற மமதை அவளது ஒவ்வொரு வார்த்தையிலும் தெறிக்கும்.. தாயைப் போன்ற கர்வமும், மமதையும் இல்லாமல் தொழிலாளர்களின் நலன் பேணி இன்முகம் காட்டிப் பழகும் சாருலதாவின் மனதை ஒரு சாதாரண தொழிலாளியின் மகன் கவர்ந்து விட்டான்..

மாறனின் பெற்றோர் சாருலதாவின் எஸ்டேட்டில் தேயிலை பறிக்கும் வேலையை செய்து வந்தார்கள்.. எஸ்டேட் தொழிலாளர்களுக்காக கட்டித் தரப்பட்டிருந்த லைன் வீடுகளில் ஒன்றில்தான் குடியிருந்தார்கள்... மாறன் சிறுவயதிலிருந்தே படிப்பில் கெட்டிக்காரன்... தொண்டைமானின் உதவியோடு கோயம்பத்தூரில் பள்ளியில் சேர்ந்து ஹாஸ்டலில் தங்கிப் படித்து வந்தான்.. கல்லூரிப் படிப்பிற்கு அவனுக்கு அரசின் உதவித் தொகை கிடைத்து விட்டது.. என்ஜினியரிங் படிப்பை முடித்தவன் பூனாவில் பகுதி நேர வேலையொன்றை தேடிக் கொண்டு எம்.பி.ஏ படிக்க ஆரம்பித்தான்..

இது எதுவும் சாருலதாவிற்குத் தெரியாது.. அவள் ஊட்டி கான்வெண்டின் ஹாஸ்டலில் தங்கிப் படித்தவள்.. வெளிநாட்டில் கல்லூரிப் படிப்பை முடித்து கானவயலுக்குத் திரும்பியவள் தந்தையின் தொழில்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.. அப்படி அவள் எஸ்டேட்டிற்கு சென்ற போதுதான் மாறனை சந்தித்தாள்..

ஆறடி உயரம்.. மாநிறம்.. ஆளை ஈர்க்கும் கம்பீரம்.. என்று மாறன் முதல் பார்வையிலேயே சாருலதாவை வசீகரித்து விட்டான்.. தேயிலைத் தொழிலாளிகளின் மத்தியில் வித்தியாசமாகத் தெரிந்தவனுடன் பேசிப் பழகும் ஆர்வம் சாருலதாவுக்கு உண்டானது.. அவனும் 'ராணியம்மா' அவர்களுக்கு படியளக்கும் 'முதலாளி' என்ற மரியாதையுடன் சாருலதாவிடம் பேசினான்.. அவனது நிதானம்.. பொறுமை.. அந்த மலைபிரதேசத்துடன் பொருந்திப் போகாத அறிவார்ந்த பேச்சு என்று அனைத்து குணாதிசியங்களும் சாருலதாவைக் கவர்ந்துவிட.. அவள் மாறன்மீது காதல் கொண்டாள்..

சாருலதாவைப் பெற்றவர்கள் அதிர்ந்து போனார்கள்.. ராணி ரூபலதா தேவியினால் அதை ஜீரணிக்கவே முடியவில்லை.. மகளிடம் கெஞ்சினாள்..

"நான் ஜெய்ப்பூர் ராஜ வம்சத்தில் பிறந்தவள் சாரு.. உனக்காக என் அண்ணன் மகன் காத்திருக்கிறான்.. அவனது நிறத்துக்கும், அழகுக்கும் முன்னால் இந்தத் தொழிலாளியின் மகனால் நிற்கக்கூட முடியுமா..? அவன் கோடிஸ்வரன்.. இவன் பரம ஏழை.. பணம், பணத்தோடுதான் சேர வேண்டும் சாரு.. அதுதான் மரியாதையான வாழ்வைக் கொடுக்கும்.. ராஜ வம்சத்தில் பிறந்துவிட்டு உன் உயரத்திலிருந்து கீழே இறங்க நினைக்காதே மகளே..! அது உனக்கு நிம்மதியைத் தராது.."

சாருலதா தாயின் வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்கவில்லை.. ரூபலதா கணவரிடம் முறையிட்டாள்.. தொண்டைமான் மகளின் மீது மட்டற்ற பாசம் கொண்டவர்.. அதே சமயம் பாரம்பர்யம் காப்பாற்றப்பட வேண்டும் என்று நினைப்பவர்..

ஆனமட்டும் மகளிடம் போராடிப் பார்த்தார்.. தந்தையின் பேச்சுக்கு மௌனமாக இருந்த சாருலதா அன்று இரவு தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டாள்.. இரண்டு நாள்கள் தீவிர சிகிச்சை பிரிவில் இரவு பகலாக போராடி சிகிச்சையளித்து மருத்துவர்கள் அவளது உயிரை மீட்டுக் கொடுத்தார்கள்..

"எனக்கு மாறன் வேண்டும் அப்பா.."

சாருலதாவின் பிடிவாதம் வென்றது.. ரூபலதா மகளிடம் முகம் கொடுத்துப் பேசாமல் இறுகிப் போனாள்.. எஸ்டேட் பங்களாவுக்கு மாறனின் பெற்றோரை வரவழைத்த தொண்டைமான் மாறனின் தங்கைகள் இருவருக்கும் மாப்பிள்ளை பார்த்துத் திருமணம் செய்து வைப்பதாகவும்.. அவர்கள் கானவயல் எஸ்டேட்டை விட்டுக் கோயம்பத்தூரில் அவர் வாங்கிக் கொடுக்கும் பங்களாவுக்கு குடி பெயர்ந்து விட வேண்டும் என்றும் கட்டளையிட்டார்..

"உனக்கு ஜவுளிக்கடை வைத்துக் கெடுக்கறேன்... என் சம்பந்தி என் எஸ்டேட்டில் வேலை செய்கிறவனா இருக்கக்

கூடாது.."

கரும்பு தின்னக் கூலி கேட்பார்களா..? ஒரே நாளில் வாழ்வு உச்சத்துக்குப் போய்விட மாறனின் பெற்றோர் ஆனந்தமாக அதற்கு சம்மதித்தார்கள்.. பூனாவிலிருந்து வந்த மாறனுக்கு விவரம் தெரிய.. அவன் அதிர்ச்சியானான்..

"என்னைக் கேட்காமல் சம்மதம் சொல்லிட்டிங்களா..?"

இந்த ஒரு கேள்வியைத்தான் அவன் கேட்டான்.. அவனைப் பெற்றவர்களும்.. கூடப் பிறந்த தங்கைகளும் அவனை உலுக்கு உலுக்கென்று உலுக்கி விட்டார்கள்..

தலைநாளில் பிறந்த மகன்.. தன்னை மட்டும் பேணிக் கொண்டு தனித்து இருக்கிறான்.. பெற்றவர்களும், கூடப் பிறந்த தங்கைகளும் பனியிலும், மழையிலும் நனைந்து தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கிறார்கள்.. படித்து முடித்தவன் ஏதேனும் ஓர் வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்றுவான் என்று பார்த்தால்.. அவன் மேலே மேலே படித்துக் கொண்டே இருக்கிறானே தவிர.. குடும்பத்தை நினைத்தும் பார்க்கவில்லை.. பெற்றவர்களைத்தான் நினைக்க வேண்டாம்.. அவர்கள் வயோதிகர்கள்.. வாழ்ந்து முடித்தவர்கள்.. தங்கைகளை நினைத்துப் பார்த்தானா..? அவர்கள் வாழ வேண்டிய பருவத்தில் இருக்கிறார்களே.. அவர்களின் திருமணத்திற்கு என்ன சேர்த்து வைத்திருக்கிறான்..? கடவுள் போல முதலாளி ஓர் வழி காட்டியிருக்கிறார்.. கனவிலும் நினைக்காத வாழ்வு அவனுடைய தங்கைகளுக்கு கிடைக்கப் போகிறது.. காலம் முழுவதும் தேயிலைச் செடிகள் உடல் முழுவதும் குத்த வேலை செய்த வயோதிகர்கள் கடைசிக் காலத்திலாவது நிம்மதியாக உண்டு, உறங்கி வாழ வரம் கிடைத்திருக்கிறது.. அதை அவன் எப்படி கேள்வி கேட்கலாம்..?

குடும்பம் கொதித்த கொதிப்பில் மாறன் அடங்கிப் போனான்.. வாராது வந்த வாழ்வை இழக்க அவனைப் பெற்றவர்களும்.. தங்கைகளும் தயாராக இல்லை.. ஒன்று மாறன் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள வேண்டும்.. இல்லையென்றால் அவனது குடும்பம்

மொத்தமும் விசம் அருந்தித் தற்கொலை செய்து கொள்ளும் என்று முடிவாகச் சொல்லி விட்டார்கள்.. எதிர்பாராமல் கிடைத்த வாழ்வை இழக்க நேரிட்டால் அவர்கள் எந்த எல்லைக்கும் போவார்கள் என்பது உறுதியாகத் தெரிந்த பின்னால் மாறனால் வாய் திறந்து பேச முடியுமா..?

மாறன் ராணி சாருலதா தேவியின் கணவனானான்.. அவனுடைய தங்கைகள் குன்னூர், பொள்ளாச்சி என்று பெரிய இடங்களில் திருமணமாகிச் சென்று விட்டார்கள்.. அவனைப் பெற்றவர்கள் கோயம்பத்தூர் பங்களாவுக்கு குடி பெயர்ந்தார்கள்.. மாறனுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் யாதொரு தொடர்பும் இருக்கக்கூடாது.. மாதம் ஓர்முறை அவன் பெற்றவர்களைப் பார்க்க போய் வரலாம்.. ஆனால் அவர்கள் அரண்மனைக்கு வரக்கூடாது.. அவனுடைய தங்கைகளுக்கான சீர்வரிசையை திருமணத்தின் போதே தொண்டைமான் செய்து விட்டார்.. அவர்கள் தாய் வீட்டில் சீராட வேண்டுமென்றால் கோயம்பத்தூருக்குத்தான் போக வேண்டும்.. கானவயல் அரண்மனைப் பக்கம் வந்துவிடக் கூடாது என்று நிபந்தனைகள் போடப்பட்டன.. அவை எல்லாம் நியாயம்தானே என்று மலர்ந்த முகத்துடன் ஏற்றுக் கொண்டு மாறனைப் பெற்றவர்களும், தங்கைகளும் ஒதுங்கிக் கொண்டார்கள்.. தன்னை விற்கப்பட்ட ஒரு பொருளாக மாறன் நினைக்கத் தொடங்கினார்..

சாருலதா சந்தோசமாக இருந்தாள்.. மாறனின் நிதானமும் அமைதியும் அவளுக்குப் பிடித்திருந்தாலும் கலகலப்பில்லாத அவரது சுபாவம் அவளை பாதிக்கத்தான் செய்தது... அவள் அவர்மீது காட்டிய காதலில் துளியளவு கூட பதிலுக்கு அவரிடமிருந்து அவளுக்குக் கிடைக்கவேயில்லை.. அது சித்தார்த்தன் பிறந்த பின்பும் தொடர்ந்தது..

மாதம் ஓர்முறை கோயம்பத்தூரில் இருக்கும் பெற்றவர்களைப் பார்ப்பதற்காக மாறன் சென்று விடுவார்.. திரும்பி வர ஒரு வாரமாகும்.. தொண்டைமானின் சொத்துக்களை நிர்வகிக்கும் வேலைப்பளுவில் சாருலதா

அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டாள்.. சித்தார்த்தனுக்குப் பத்து வயதான போது சாருலதா ஹைதராபாத்தில் ஐ.டி கம்பெனி ஒன்றைத் தொடங்க முடிவு செய்தாள்..

"நம்ம பரம்பரை கான வயலில் காலூன்றியிருந்தாலும் இந்த எல்லைக்குள் மட்டும் தேங்கி நின்று விடக் கூடாதுப்பா.. இப்ப ஐ.டி கம்பெனிகளுக்கு நல்ல பியூச்சர் இருக்கு.. அந்த ஃபீல்டில் இறங்கனும்னு ஆசைப்படறேன்ப்பா.."

மகள் சொல்வதற்கு தொண்டைமான் என்று மறுப்புச் சொல்லியிருக்கிறார்..? வழக்கப்படி அவர் தலையாட்ட சாருலதா ஹைதராபாத்துக்கும் கானவயலுக்குமாக வானில் பறந்து தன் கனவை சாதித்தாள்..

பிரம்மாண்டமாக ஐ.டி கம்பெனியின் திறப்பு விழாவை நடத்தினார்கள்... சாருலதா கணக்கிட்டதை விட கம்பெனியில் அதிக லாபம் கிடைத்ததில் அவள் கம்பெனியின் கிளைகளை வெளிநாடுகளில் நிறுவினாள்.. அதன் விளைவாக அவள் வெளிநாடுகளுக்கு அடிக்கடி பயணமாக.. சித்தார்த்தன் ஊட்டி கான்வென்டில் சேர்க்கப் பட்டான்..

சாருலதா வெளிநாட்டில் படித்தவள் என்பதினால் தனித்துப் பயணம் செய்யத் தயங்கவில்லை.. மாறன் அவளுடன் செல்வதைத் தவிர்த்ததைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவுமில்லை.. கால்களில் சக்கரம் கட்டிக் கொள்ளாத குறையாக அவள் சுற்றிக் கொண்டிருந்தபோதுதான் அந்தச் செய்தி அவளது செவிகளில் விழுந்தது..

சாருலதா வெளிநாடு போயிருக்கும் சமயங்களில் மாறன் கானவயிலில் இருப்பதில்லை.. அவர் கோயம்பத்தூருக்கும் செல்வதில்லை.. வேறு எங்கோ சென்று விடுகிறார்..

"அவர் எங்கே போகிறார் அம்மா..?"

அவள் ரூபலதாவிடம் கேட்ட போது அவள் உக்கிரமாக முறைத்தாள்..

"உன் ஹஸ்பெண்டைப் பற்றி என்னிடம் எதுவும் கேட்காதே சாரு.. எனக்கு நல்ல, நல்ல வார்த்தைகளாக வாயில் வந்து

விடும்.. இதற்குத்தான் தகுதி பார்த்து மேரேஜ் பண்ணிக்கனும் என்கிறது.. இப்போது பார்.. குடிசையில இருந்தவனை கோபுரத்தில உட்கார வைத்த.. அதன் அருமை அவனுக்குத் தெரியுதா..?"

ரூபலதா எப்போதும் மாறனுக்கு மரியாதை கொடுத்துப் பேச மாட்டாள்.. தொண்டைமானாவது மகளின் முகத்திற்காக மாறனிடம் பேசுவார்.. ரூபலதா அந்த அரண்மனையில் மாறன் என்ற மனிதர் இருப்பதாகவே நினைக்க மாட்டாள்.. அவளுக்கு சாருலதாவும், சித்தார்த்தனும் மட்டுமே முக்கியம்.. அவன், இவன் என்றுதான் மருமகனைப் பேசுவாள்..

"அம்மா.. நான் என்ன கேட்கிறேன்.. நீங்க எதைப் பேசறிங்க.."

"என்னிடம் அவனைப் பற்றிக் கேள்வி கேட்டால் இப்படித்தான் பதில் வரும் சாரு.. ஜெய்ப்பூரின் மகாராணியாய் இருக்க வேண்டியவள்.. இப்படி இரண்டாம் தாரமாய் எவனோ ஒரு கூலித் தொழிலாளியின் மகனை மேரேஜ் பண்ணிக்கிட்டு இப்படி நிற்கிற.."

ரூபலதா போட்டு உடைத்து விட்டாள்.. தொண்டைமான் கெட்டிக்காரரர்.. எதை வைத்து எதை சாதிக்கலாம் என்ற நுட்பம் அறிந்தவர்.. ஒருவரின் கண்பார்வையை வைத்தே அவரது செயல்பாடுகளும், குணாதிசியமும் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை படு நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்து விடுவார்.. அப்படிப்பட்டவர் மாறன் எங்கே போகிறார்.. திரும்பி வரும்போது இனம் விளங்காத ஓர் சந்தோசத்தை முகத்தில் பிரதிபலிக்கிறாரே.. அது ஏன் என்பதை கண்டு பிடித்திருக்க மாட்டாரா..

மாறன் மாதா மாதம் கோயம்பத்தூருக்குப் போய் வந்ததாகச் சொல்லி விட்டு வேறு எங்கோ சென்று வருகிறாரோ என்ற சந்தேகம் எழுந்த போது மாறனை கண்காணித்தார்.. மாறன் பூனாவில் இருந்த அவரது நண்பரின் வீட்டுக்குப் போவதாகப் போக்குக் காட்டியதில் அப்படித்தானோ என்று விட்டு விட்டார்.. சித்தார்த்தனுக்குப் பத்து வயதாகும்வரை மாறன் மாதம் ஓர்முறை மட்டுமே

கானவயலை விட்டுச் சென்றார்.. ஆறே நாள்களில் திரும்பி வந்தார்.. சித்தார்த்தனுக்குப் பத்து வயதானது.. அவன் ஊட்டி கான்வென்டில் சேர்க்கப்பட்டான்.. சாருலதா வெளிநாட்டுக்குப் பறந்தாள்.. மாறன் மாதக் கணக்கில் பூனாவில் தங்கத் தொடங்கினார்..

மருமகன் எங்கேயென்று தொண்டைமான் தேட ஆரம்பிக்க அவருக்கு அதிர்ச்சி தரும் உண்மைகள் தெரிய வந்தன.. எதற்கும் அதிராத தொண்டைமான் அந்த உண்மைகளில் அதிர்ந்து ரூபலதாவிடம் தஞ்சமடைந்தார்..

"நீ சொல்வதைக் கேட்டிருக்கனும் ரூபா.. நம் உயரத்திலிருந்து இறங்கியிருக்கக் கூடாது.. சாரு ஆசைப்படுகிறாள்ன்னு ஏற்கனெவே கல்யாணம் ஆன ஒருவனை சாருலதாவுக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டேனே.. என் மகள் இளைய தாரமா..?"

# 23

**நிலைமாறும் இவ்வுலகில்..**
**நீ மட்டும் வேண்டும்..**
**நிழலாக உனைத் தொடரும்..**
**நிலை மட்டும் வேண்டும்..**

"அப்பா.."

கேட்டுக் கொண்டிருந்த உண்மைகளில் ஸ்தம்பித்துப் போனாள் ப்ரீதி.. அவளுடைய சித்தார்த்தன் அவளது அத்தையின் கணவரின் மகனா..?

கங்காதரன் உணர்ச்சிப் பிழம்பாக இருந்தார்.. தங்கையின் கடந்த கால வாழ்க்கைக் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தவரிடம் ஆத்திரம் மட்டுமே மிகுதியாக இருந்தது.. அவர் விசாகாவின் பக்கமிருந்த துயரத்தையும் நியாயத்தையும் மட்டுமே பேசினார்.. சாருலதாவின் குமுறலை அவர் கோடிட்டுக்கூடக் காட்டவில்லை..

"சாருலதா ராணியாக இருக்கலாம்.. விசாகாவை நான் இளவரசியைப் போலதானே வளர்த்தேன்..? அவளுடைய

வாழ்க்கையைப் பற்றி எனக்கு ஆயிரம் கனவுகள் இருந்தன.. விசாகா படிக்கப் போனாள்.. கூடப் படித்த மாறனுடன் காதல் என்று வந்து நின்றாள்.. அவர் மலைவாழ்கிராமவாசியின் மகனாக இருந்தார்.. குடும்பத்துடன் பெண் கேட்டு வர அவர் தயாராக இல்லை.. அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள்.. கல்யாணம் ஆகாத இரண்டு தங்கைகள் இருக்கும்போது எனக்கு முதலில் கல்யாணம் செய்து வைக்க மாட்டார்கள்னு சொன்னார்.. விசாகா காத்திருக்கத் தயாராக இல்லை.. மாறன் மீது அப்படியொரு வெறித்தனமான காதல்.. யார் சொல்வதையும் கேட்காமல் மாறனை வற்புறுத்தினாள்.. என்னிடம் அழுது பிடிவாதம் பிடித்தாள்.. நானும் வேறு வழியில்லாமல்தான் கோவிலில் அவர்களுக்குக் கல்யாணம் பண்ணி வைத்தேன்.. கொஞ்சநாள் விசாகா பூனாவிலேயே இருக்கட்டும்.. நான் கான வயலுக்குப் போய் சமயம் பார்த்து என் குடும்பத்துக்கு விவரம் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்னு சொல்லிட்டுப் போனவர் அங்கே அவருக்கு ராணி சாருலதா தேவியுடன் கல்யாணம் ஆகி விட்டதுங்கிற விவரத்தோட வந்து நின்றார்.. நான் கொதிச்சேன்.. என் தங்கையைக் கல்யாணம் பண்ணினவர் எப்படி இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம்னு அவரின் சட்டையைப் பிடித்தேன்.. போலிஸில் கம்ப்ளெயிண்ட் கொடுத்து அவருக்கு தண்டனை வாங்கித்தரப் போறேன்னு புறப்பட்டேன்.. விசாகா என் காலைப்பிடித்து அழுதா.. மாறனோ நீங்க என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்கிறேன்னு நிற்கிறார்.. அவர் நினைத்திருந்தா பூனாவுக்கு வராமல் இருந்திருக்கலாம்.. நாம தேடிப் போனாலும் தொண்டைமானின் மருமகனின் நிழலைக்கூட நெருங்க முடியுமா..? அவர் தன்னை ஒப்புக் கொடுக்கத்தானே வந்திருக்கிறார்ன்னு விசாகா கேட்டா... அவர் சூழ்நிலைக்கைதி.. நான்தானே அவரை கல்யாணம் செய்துக்கச் சொல்லி வற்புறுத்தினேன்னு கதறினா.."

"அப்புறம்..?"

"வேறு என்ன செய்து தொலைக்க..? விசாகா நம்ம வீட்டிலேயே இருந்தா.. மாறன் மாதம் ஒருதடவை வந்து

போனார்.. ஆதவனும் ஆர்த்தியும் பிறந்தாங்க.. ஆதவனுக்குப் பதினைந்து வயதான போது.. சாருலதா சாகக்கிடக்கிறாள்.. கடைசியாக உன்னுடன் பேசனும் என்கிறாள்.. உன்னையும் பிள்ளைகளையும் கானவயலுக்கு அழைத்து வந்துவிடும்படி அனுமதி கொடுத்து விட்டாள்ன்னு மாறன் வந்து நின்றார்.. அவருக்கே அந்த அரண்மனையில் உரிமையில்லை.. உனக்கு என்ன உரிமையிருக்கப் போகிறது..? போகாதேன்னு நான் தடுத்தேன்.. உன் வாழ்வை நீ வாழ இன்னொரு பெண் அனுமதி கொடுப்பதான்னு கேட்டேன்.. என்னிடம் இருந்த தன்மான உணர்ச்சி என் தங்கையிடம் இல்லாமல் போய் விட்டது.. அவளுக்கு மாறன் சொல்வதுதான் வேதவாக்கு.. இத்தனை காலமாக பிறந்த வீட்டில் இருந்ததை விடவா தன்மான குறைவு வந்து விடப் போகிறதுன்னு கேட்டு விட்டு மாறனுடன் கிளம்பி இங்கே வந்து விட்டாள்.. இந்த அரண்மனை மாறனுக்குச் சொந்தமானதில்லை.. ராணி சாருலதா தேவிக்குச் சொந்தமானது.. இங்கே நான் எப்படி தங்கை வீடென்று உரிமை கொண்டாடி வந்து போக முடியும்..? உரிமையில்லாத இடத்தில் உரிமையில்லாத வாழ்வை விசாகா வாழலாம்.. அது அவள் முடிவு.. அவள் வாழ்வு.. நான் அப்படியில்லையே.. என்னால் இந்த அரண்மனையை என் தங்கை வீடென்று சொந்தம் கொண்டாட முடியாது ப்ரீதி.."

"என்னாலும் சொந்தம் கொண்டாட முடியாது மாமா.."

அறைவாசலில் ஆதவனின் குரல் கேட்டது.. கனல் கக்கிய விழிகளுடன் ப்ரீதியை சுட்டுப் பொசுக்கியபடி உள்ளே வந்தான் ஆதவன்.. அவன் மாடிப்பக்கம் வந்ததே இல்லை.. மாறன், விசாகா, ஆதவன், ஆர்த்தியென்று அவர்கள் தனித்துப் பிரிந்திருந்ததை ப்ரீதியால் அப்போது தான் உணர முடிந்தது.. அவர்களின் அறைகள் தரைத் தளத்தில்தான் இருந்தன.. முதல்நாள் ப்ரீதிக்கு அறையைக் காட்டக் கூட வந்த ஆர்த்தி அதன்பின் மாடிக்கு வரவில்லை..

'இதையெல்லாமா நுணுக்கமா நோட்டிஸ் பண்ண முடியும்..?'

இப்படி ஒரு கதை இருக்குமென்றே அறியாதவள் ப்ரீதி.. இயல்பாக விருந்தாட வந்தவள்.. அவளைப் போய்

ஆதவனின் சொத்தைக் கொள்ளையடித்து விட்டதைப் போல உக்கிரமாக ஆதவன் முறைத்துக் கொண்டிருந்தான்..

"உட்கார் ஆதவா.."

"உங்க வார்த்தைக்காக உட்காருகிறேன் மாமா.. நீங்க வந்திருக்கிறதால மாடிக்கு வந்திருக்கிறேன்.. இல்லேன்னா இங்கே கால்கூட வைக்க மாட்டேன்.. நான் உங்க மருமகன் மாமா.. உங்களிடம் இருக்கும் ரோசமும் கோபமும் அப்படியே எள்ளளவும் குறையாமல் என்னிடம் இருக்கிறது.."

"ஓ.."

இப்போது அறைவாசலில் கேட்டது சித்தார்த்தனின் எள்ளல் குரல்.. ப்ரீதி உள்ளம் துள்ளப் பார்த்தாள்.. அதை கண்டு கொண்ட மின்னல் சித்தார்த்தனிடமும்.. காட்டம் ஆதவனிடமும் வந்தன..

"நீ ரோசக்காரனா..? அவ்வளவு ரோசமிருக்கிறவன் இந்த அரண்மனையிலேயே கால் வைத்திருக்கக் கூடாது.. படிக்க ஃபாரின் போயிருக்கக் கூடாது.. அங்கே வேலை பார்த்துக்கிட்டே படிக்காமல் மாதா மாதம் லட்சக்கணக்கில் பணம் கேட்டிருக்கக் கூடாது.. ஃபாரின் கார் வாங்கியிருக்கக் கூடாது.. பூனாவில் கம்பெனி ஆரம்பிக்க கோடிக்கணக்கில் பணம் கேட்டிருக்கக் கூடாது.. இதெல்லாம் யார் வீட்டுப் பணம்..? உன் அப்பா வீட்டுப் பணமா..?"

நிதானமாக அடியெடுத்து வைத்து வந்த சித்தார்த்தன் ஆதவனின் சிறுத்துப் போன முகத்தின் முன்னால் குனிந்து விரல் சொடுக்கி..

"என் அம்மாவோட பணம்.. எனக்கு மட்டும் உரிமையான.. சொந்தமான பணம்.. பரம்பரைப் பணம்.." என்றான்..

ஆதவனின் விழிகளில் ரணவேதனை தெரிந்தது.. அவன் இமைகளை மூடிக்கொள்ள.. கங்காதரனின் முகம் ஜிவுஜிவுத்தது..

"மிஸ்டர் சித்தார்த்தன்.. இது உங்களுடைய அரண்மனையாக இருக்கலாம்.. பட்.. என் மகள் தங்கியிருக்கிற ரூமில் அத்துமீறி நீங்கள் உள்ளே வருவது

அநாகரிகம்.. நாங்க எங்க குடும்ப விவரங்களைப் பேசிக் கொண்டிருக்கிறோம்.. ப்ளீஸ்.. நீங்க வெளியே போகிறிங்களா..?" அறை வாசலை நோக்கி கைகாட்டி விட்டார்..

ப்ரீதியே அதை எதிர்பார்க்கவில்லை.. ஒரு நொடியில் ஆதவனின் இமைகள் திறந்தன.. அவனது விழிகளில் இருந்த ரண வேதனை மறைந்து திமிர் வந்திருந்தது.. அதே நொடியில் சித்தார்த்தனின் விழிகளில் சீற்றம் வந்தது.. அவன் ப்ரீதியை உறுத்துப் பார்த்தான்.. ப்ரீதி வாய் திறந்து பேசுவதற்குள் வேகமாக வெளியே போய்விட்டான்..

"அப்பா.. என்ன இது..?" ப்ரீதி பதறினாள்..

"கண்ட்ரோல் யுவர் ஷெல்ஃப் ப்ரீதி.. என் கண் முன்னால் என் தங்கையின் மகனை இழிவாகப் பேசுகிறார்.. கேட்டுக் கொண்டு என்னை சும்மா இருக்கச் சொல்கிறாயா..?"

"அதற்காக..? அவருடைய அரண்மனையிலேயே அவரை வெளியே போகச் சொல்வீங்களாப்பா..? இது அநியாயம்.."

"எனக்கு இதுதான் நியாயம்.. அவருடைய அரண்மனையில் எதற்காக அவருடைய அப்பாவின் இன்னொரு குடும்பத்தை தங்க வைத்திருக்கிறார்..? இப்படிச் சொல்லிக் காட்டவா..?"

கங்காதரன் கேட்டதும் நியாயமாகத்தான் தோன்றியது.. அவர் அவருடைய தங்கையின் பக்கம் நின்று பேசுகிறார்.. ப்ரீதி நிற்க வேண்டியது சித்தார்த்தனின் பக்கம் அல்லவா.. அந்த நியாயத்தை அவள் எப்படிச் சொல்லுவாள்..?

"இப்படிச் சொல்லிக் காட்டனும் என்பதற்காகத்தானே மாமா இவனுடைய அம்மா சாகப் போகிறாங்கன்னு எங்களை இங்கே வர வைத்தாங்க.. கட்டிப் போட்டு அடிக்கிறான் மாமா.. இவங்க பக்கம் தப்பை வைத்துக்கிட்டு எங்களுக்குத் தண்டனை கொடுக்கிறான்.. அவனுடைய அம்மா என் அம்மாவின் வாழ்வைப் பறித்தாங்க.. இவன் எங்களைக் கைதியாக்கி சாட்டையால் அடிக்கிறான்.."

ஆதவன் எடுத்துச் சொல்லிய விதத்தில் கங்காதரனின் முகத்தசைகள் துடித்தன.. அவரது கண்கள் சிவப்பதைக் கவலையுடன் பார்த்தாள் ப்ரீதி.. சித்தார்த்தனின் மீதான

அவரது துவேசத்திற்கு ஆதவன் தூபம் போட்டுக் கொண்டிருக்கிறானே.. இது நீடிக்கக் கூடாதே..

"அத்தை மாமாவுடன் வாழாமலா நீங்களும் ஆர்த்தியும் பிறந்தீங்க அத்தான்.." என்று கேட்டு விட்டாள்..

ஆதவன் பல்லைக் கடித்தான்.. இதே கேள்வியை சித்தார்த்தன் பலமுறை கேட்டிருக்கிறான்..

"மாமா அத்தையிடம் உண்மையை மறைக்கலை.. சித்தார்த்தனிடம் அம்மாவிடம்தான் உண்மையை மறைத்திருக்கிறார்.. அத்தை என்ன தண்டனையைக் கொடுத்தாலும் ஏத்துக்கிறேன்னு சரணடைந்தவர் சித்தார்த்தனின் அம்மாவிடமும் சரணடைந்திருக்கலாமே.. ஏன் அதைச் செய்யலை..? தொண்டைமான் தாத்தா உண்மையைத் துப்பறிந்து கண்டு பிடித்தார்... இல்லாவிட்டால் கடைசிவரை மாமா அவங்களுக்கு உண்மையைச் சொல்லியிருக்க மாட்டார்.."

"எப்படிச் சொல்லுவார்..? அப்பாவைக் கட்டாயப் படுத்திக் கல்யாணம் செய்துக்கிட்டவங்கதானே அவங்க.. கோடிஸ்வரங்க... கொன்று புதைத்திருவாங்கன்னு உண்மையை மறைத்திருப்பார்.."

"சாருலதா ஆண்ட்டியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி மாமாவின் குடும்பம்தான் அவரைக் கட்டாயப் படுத்தியிருக்கு.. ஆண்ட்டியின் அம்மாவுக்கு மாமாவைக் கொஞ்சம் கூடப் பிடிக்கல.. கல்யாண ஏற்பாடுகளை தடுத்திருக்காங்க.. தன் குடும்பத்திற்குத் தெரியாமல் தொண்டைமான் தாத்தாவிடம் அவருக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்கிற உண்மையை மாமா சொல்லியிருக்கலாமே.. அவரை எது தடுத்தது அப்பா..? குடும்பம் தற்கொலை செய்து கொள்ளும்ன்னு தயங்கினார்ன்னு சொல்வதெல்லாம் சும்மா.. சப்பைக் கட்டு.. இரண்டு தங்கைகள் அண்ணன் படித்து வேலைக்குப் போய் தங்களுக்குக் கல்யாணம் செய்து வைப்பார்ன்னு காத்திருந்தபோது அவர்களைப் பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்படாமல் சுயநலமாக தான் மட்டும் முதலில்

கல்யாணம் செய்து கொண்ட மாமாவுக்கு இதைச் சொல்ல வாய் வரவில்லையா..?"

கங்காதரனே திகைத்துப் போனார்.. மகள் யோசித்த அளவுக்குக்கூட அவர் ஏன் யோசிக்கவில்லை..? தங்கை பாசம் அவரது கண்களை மறைத்து விட்டதா..?

கங்காதரனின் தடுமாற்றத்தை ஆதவன் கண்டு கொண்டான்.. தாய் மாமனின் மனம் தடுமாறுவதில் அவனுக்கு உடன்பாடில்லை.. அவரை சிந்திக்க வைக்கும் கேள்விகளைக் கேட்ட ஆர்த்தியின் மீது சினம் வந்தது..

"சித்தார்த்தனிடம் மயங்கி விட்டாய் ப்ரீதி.. அதற்காக என் அப்பாவின் இக்கட்டான நிலையைப் புரிந்து கொள்ளாமல் பழி போடுகிறாய்.. குடும்பம் தற்கொலை பண்ணிக்கும் என்கிற பயம் இருக்கிறப்ப ஒரு மனிதனால் என்ன செய்ய முடியும்..? அப்பா தன் குடும்பத்துக்குக் கட்டுப்படுவார் என்கிற நிச்சயத்தில்தானே அவரது ஏழ்மையைப் பயன்படுத்திக்கிட்டு இந்த தொண்டைமான் அவர் மகளை என் அப்பாவின் தலையில் கட்டினார்..?"

ஆதவன் பேசியதை கங்காதரனாலேயே சகித்துக் கொள்ள முடியவில்லை.. ப்ரீதி கொதித்துப் போனாள்..

"ஆமாம் அத்தான்.. சாருலதா ஆண்ட்டி தெருவில் நின்றிருந்தாங்க.. உங்க அப்பா அவங்களுக்கு வாழ்க்கைக் கொடுத்துக் காப்பாற்றினார்.. இதைச் சொல்ல உங்களுக்கு வாய் வருதே.. மாமா கெட்டிக்காரரர்.. இவர்தான் சாருலதா ஆண்ட்டியின் தலையில் விழுந்து தன் தேவைகளை நிறைவேற்றிக்கிட்டார்.. தங்கைகளுக்கு பெரிய இடங்களில் கல்யாணம்.. தாய், தகப்பனுக்கு சொத்து, கார், பங்களான்னு நினைத்துப் பார்க்க முடியாத பணக்கார வாழ்க்கை.. ஏற்றுக் கொள்ள கசக்கிறதா..? தாலிகட்டிய பெண்டாட்டிக்கு உண்மையாய் இருக்கனும்ங்கிற அவசியம் என்ன..? ஆசைக்கு அத்தை.. ஆஸ்திக்கு சாருலதா ஆண்ட்டி.. இரண்டு பெண்களுக்கும் துரோகம் செய்கிறோம்.. அவங்க வாழ்க்கையில் விளையாடுகிறோம்ங்கிற குற்றஉணர்ச்சி கொஞ்சம் கூட இல்லை.. அவரால் நிம்மதியாக வாழ முடிந்திருக்கிறது..

பழியானது யாருடைய நிம்மதி..? வஞ்சிக்கப் பட்டது ஓர் மகாராணி.. அத்தான்.. அதைப் பத்தி நினைத்துக் கூடப் பார்க்காம அபாண்டமாய் பேசறிங்களே.. ஒன்றை நினைவில் வைத்துக்கங்க.. மாமாவுக்கு இன்னொரு குடும்பம் இருக்கிறதுன்னு தெரிந்தவுடன் சித்தார்த்தனின் அம்மா உயிரை விட்டுட்டாங்க.."

"அதைப் போல என் அம்மாவும் சாகலைன்னு உனக்கு வருத்தமாக இருக்கிறதா..? கேட்டுக்கங்க மாமா.. அண்ணன் மகள்ன்னு என் அம்மா பாசத்தைக் கொட்டினதுக்கு உங்க மகள் பதிலுக்கு எப்படியெல்லாம் பேசுகிறாள்ன்னு பாருங்க.."

ஆதவன் தாய் மாமனுக்கு எடுத்துக் கொடுத்தான்.. கங்காதரனுக்கும் மனதுக்கு கஷ்டமாக இருந்தது.. விசாகா இறக்கவில்லை என்ற ரீதியில் மகள் பேசுவதாகத்தான் அவர் எடுத்துக் கொண்டார்..

"என்னம்மா பேசற நீ.. என் தங்கை எதற்குச் சாகனும்..?" கோபத்துடன் ஆட்சேபித்தார்..

"நான் அந்த அர்த்தத்தில் சொல்லலைப்பா.. இன்னொரு பெண் மாமா வாழ்க்கையில் இருப்பதை சாருலதா ஆண்ட்டிக்கு கல்யாணத்திற்கு முன்னாடியே தெரியப் படுத்தியிருந்தா அவங்க மாமா இருக்கிற திசைப்பக்கம் கூடத் திரும்பிப் பார்த்திருக்க மாட்டாங்க.. அதைத்தான் இப்படிச் சொன்னேன்.."

'ஆம்' எனும் விதமாய் கங்காதரன் தலையை ஆட்டி வைத்ததில் ஆதவனுக்கு வேகு, வேகு என வந்தது..

"அப்படின்னா.. இன்னொரு பெண் எங்க அப்பாவின் வாழ்க்கையில் வந்து விட்டதைத் தெரிந்தவுடன் என் அம்மா, அப்பாவின் வாழ்க்கையிலிருந்து விலகியிருக்கனும்னு சொல்கிறயா..?" என்று பிடித்துக் கொண்டான்..

"விலகனும்னு இல்லை.. துரோகம் செய்து விட்டக் கணவரை விலக்கி வைத்திருக்கலாம்... அப்பாவும் அதைத்தானே சொன்னார்.. எனக்குத் தெரிந்து அப்பா மாமாவிடம் முகம் கொடுத்துப் பேசியதே இல்லை.. அத்தை அப்படி இருந்திருக்கலாமே.. ஏன் மாமாவுடன் குடும்பம்

நடத்தினாங்க..? சாருலதா ஆண்ட்டி இறந்த பின் அவங்க அரண்மனைக்கே பிள்ளைகளுடன் வந்து தங்கி விட்டாங்களே.. இப்ப உங்க குடும்பம் அனுபவித்துக்கிட்டு இருக்கிற அரண்மனை வாழ்வு மாமா உங்களுக்குத் தந்ததில்லையே.. சாருலதா ஆண்ட்டி கொடுத்த வாழ்க்கைதானே.. அத்தை நினைத்திருந்தா இது வேண்டாம்.. சாருலதாவே போன பின்பு உங்களுக்கும்

இந்த அரண்மனைக்கும் என்ன சம்பந்தம்.. வாங்க.. நாம் பூனாவுக்குப் போய் பிழைத்துக் கொள்ளலாம்ன்னு மாமாவைக் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கலாமே..? அப்பாவும் அதைத்தானே விரும்பினார்..?"

"இப்போது நான் அதைத்தானே செய்யப் போகிறேன்.. ஆர்த்தியும் பூனாவுக்குத்தானே வரப் போகிறா..?"

"நீங்க இரண்டு பேரும் வெளியேறுகிற லட்சணத்தைப் பற்றி வெளியில் சொல்லி விடாதீங்க.. சிரிக்கப் போகிறாங்க.. உரிமையில்லாத இடத்தில் இருக்கக் கூடாதுன்னா நீங்க வெளியேறுகிறீங்க..? உங்களுக்கு இந்தக் காட்டுப் பகுதி பிடிக்கவில்லை.. சிட்டி லைஃபை விரும்புகிறீங்க.. அதனால் கோடிக் கணக்கில் சித்தார்த்தனிடம் பணத்தை வாங்கி.. அதில் உங்க பெயரில் கம்பெனியை ஆரம்பித்துக்கிட்டு வெளியேறுகிறதா இருக்கீங்க.. ஆர்த்தி மட்டும் என்ன..? சீர்வரிசை இல்லாமல் வந்து விடுவாளா..? இதெல்லாம் யாருடைய பணம்..?"

நாக்கைப் பிடுங்கிக் கொள்வதைப் போல நல்ல நல்ல கேள்விகளைப் ப்ரீதி கேட்டு வைத்ததில் ஆதவனின் முகம் பயங்கரமாக மாறியது..

# 24

**கரடு முரடானது இந்த பிரதேசமல்ல..**
**பொய்முகம் கொண்ட மனிதர்களின் மனம்**
**சுயநலம் நிரம்பிய அவர்களின் குணம்..**

ஊசிக்குளிர் உடல் துளைக்க மலைச்சாரலில் நனைந்தபடி மொட்டை மாடியில் அசையாமல் நின்றிருந்தான்

சித்தார்த்தன்.. எப்படி அவனால் இந்தக் குளிரையையும், மழையையும் தாங்கிக் கொண்டு நிற்க முடிகிறது என்று வெடவெடத்தாள் ப்ரீதி.. ஸ்வெட்டரையும் தாண்டி அவளது உடலை குளிர் துளைக்கிறது.. சால்வையைக் கொண்டு தலையைச் சுற்றி மூடினாள்.. எஸ்கிமோ போல தன்னை உணர்ந்தாள்.. அவனருகில் சென்று அவன் முதுகைத் தொட்டாள்.. திரும்பியவனின் கண்கள் சிவந்திருந்தன..

"போய் விடு.." உருமினான்..

"நான் என்ன செய்தேன்..?" தீனமான குரலில் கேட்டாள் ப்ரீதி..

"அதைத்தான் நானும் கேட்கிறேன்.. நீ என்ன செய்த..? உன் அத்தை மகனுக்கு பரிந்து கொண்டு உன் அப்பா என் அரண்மனையிலிருக்கும் அறையை விட்டு என்னை வெளியே போகச் சொல்கிறார்.. நீ பார்த்துக்கிட்டு பேசாமல்தானே இருந்த..? என்ன செய்த..?"

"எதுவும் செய்யலைன்னு உங்களுக்குத் தெரியுமா..? அப்பா அப்படி பிஹேவ் பண்ணுவார்ன்னு நான் எக்ஸ்பெக்ட் பண்ணவே இல்லை.. ஸ்டன் ஆகிட்டேன்.. நீங்க ஏன் உங்களைப் பற்றி என்னிடம் சொல்லவே இல்லை.."

"ஏன் சொல்லனும்...? உன் அத்தைதானே உன்னிடம் சொல்லனும்..? அவங்க ஹஸ்பெண்ட் வாழ்ந்த இரட்டை வாழ்க்கையைப் பற்றி அவங்களுக்குத் தெரியுமில்ல.. அவங்க ஏன் உன்னிடம் சொல்லலை..? உன் அத்தை மகன்.. அத்தான்.. அழகு ஆதவன்.. அவன் ஏன் உன்னிடம் சொல்லலை..? நேர்மையின் திருவுருவம் ஆர்த்தி.. அவ ஏன் உன்னிடம் சொல்லலை..? உன் அத்தையின் ஹஸ்பெண்ட் மாறன் எனப்படும் மகாத்மா.. அவர் ஏன் உன்னிடம் சொல்லலை..? உன்னை இங்கே விருந்தாட அனுப்பி வைத்த உன் அப்பாவும் அம்மாவும் ஏன் உன்னிடம் சொல்லலை..? உன்னைச் சேர்ந்தவங்க உன்னிடம் சொல்லாத உண்மையை நான் ஏன் சொல்லனும்..?"

"ஏனா..? எனக்கு உங்களைப் பற்றித் தெரிய வேண்டாமா..?"

"ஏன் தெரியனும்..? நீ யார்..? நான் யார்..?"

"சித்தார்த்தன்..!"

ப்ரீதி பதைத்தாள்.. அவளுடைய சித்தார்த்தனின் ஒட்டாத குரல் அவளை உலுக்கியது... அவனுக்காக தகப்பனையே தூக்கியெறிந்து பேசிவிட்டு வந்திருந்தவளின் இதயம் துடித்தது.. அவன் யாரோ.. அவள் யாரோவா..? அவனுக்கு அவள் யாரோதானா..? எதுவுமே இல்லையா..?

"மாமா.. உங்க பெண் உங்க தங்கையையும், தங்கை பிள்ளைகளையும்.. அவங்க வாழ்கிற வாழ்க்கையையும் அவமதித்துப் பேசுகிறா.. நீங்க அதைக் கேட்டுக்கிட்டு இருக்கீங்களே.."

ஆதவன் கங்காதரனை உசுப்பி விட்டானே.. அவரும் மகளைக் கோபித்துக் கொண்டாரே...

"இது சரியில்லை ப்ரீதி.. மாறன் இருக்கும் இடத்தில் விசாகாவும் அவளோட பிள்ளைகளும் இருக்காங்க.. இதை நீ குறைவாய் பேசுவதா..?"

"அப்பா.. சித்தார்த்தனின் நிழலில் இருந்துக்கிட்டே இவங்கதான் அவரைக் குறைவாய் பேசறாங்க.. விரோதியைப் போல நினைக்கிறாங்க.."

"அது அவங்க குடும்ப விசயம் ப்ரீதி.. நமக்கு என்ன வந்தது..? நீ உன் திங்ஸை பேக் பண்ணி ரெடியாகு.. நாம் கிளம்பனும்.."

"கிளம்பனுமா..? எங்கே..?"

"இப்போதைக்கு நான் ரூம் போட்டிருக்கிற ரிசார்ட்டுக்குப் போறோம்.. நாளைக்குக் காலையிலே பிளைட் பிடிச்சு பூனாவுக்கு போறோம்.."

"இல்லைப்பா.. நான் வரமாட்டேன்.."

"ப்ரீதி.."

மகளின் மறுப்பில் கோபமாக புருவங்களை நெரித்தார் கங்காதரன்.. இதுவரை ப்ரீதி தந்தையின் கட்டளையை மீறியதில்லை.. அவரும் மகளிடம் கட்டளையிட்டதில்லை என்பதை அப்போது மறந்து போனார்.. தனக்குப் பிடிக்காத ஒன்றை அவள் நாசுக்காக மறுத்து விடுவாள்.. அடுத்து கங்காதரன் அதைப்பற்றிய பேச்சையே எடுக்க மாட்டார்.. ஆதவனின் விசயத்திலும் அப்படித்தான் நடந்தது..

"அப்பா.. நீங்க என்னை ஃபோர்ஸ் பண்ணியதில்லை.. என்னால் ஆதவன் அத்தானை மேரேஜ் பண்ணிக்க முடியாது.."

ஆதவனை முன்னால் வைத்துக் கொண்டே ப்ரீதி இதைச் சொல்ல.. ஆதவனின் முகம் சிறுத்துப் போனது.. அவன் சினத்துடன் கங்காதரனைப் பார்த்தான்..

"ஐ ஆம் ஸாரி ஆதவா.." என்று அவர் அவன் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டார்..

எதிர்பார்த்ததுதான் என்றாலும் ஆதவனின் மனதுக்குள் ஏமாற்றம் சூழ்ந்தது.. அவனிடம் சித்தார்த்தன் கொடுத்த அந்தஸ்து இருந்தது.. சித்தார்த்தனால் கிடைக்கப் போகும் கம்பெனி அவனது ஒட்டு மொத்த அடையாளத்தையும் மாற்றிவிடும்.. வால்பாறை வட்டாரத்திலிருந்தால்

அவன் சித்தார்த்தனின் தயவில் வாழ்கிறான் என்ற உண்மையைச் சுட்டிக்காட்டி ஏளனமாகப் பேசுவார்கள்.. பூனாவுக்குப் போய்விட்டால் அவன் அந்த ஊரின் கோடிஸ்வரர்களில் ஒருவனாகி விடுவான்.. அவன் பிறந்து வளர்ந்த ஊர்.. அங்கே கோடிஸ்வரனாக வாழ்வதில் ஆதவனுக்கு ஓர் சந்தோசம்.. ப்ரீதி மனைவியாகக் கிடைத்தால் சரி.. இல்லையென்றால் அவனுக்கு இணையான (?) மேல்தட்டு வர்க்கத்தில் அழகான ஓர் பெண்ணை மணம் முடித்து இன்னும் தன் வாழ்வை வளம் படுத்திக் கொள்ளலாம் என்ற எதிர்காலத்திட்டம் அவன் மனதில் இருந்தது.. ப்ரீதியின் மீது ஒன்றும் அவனுக்குக் காவியக் காதல் இல்லையே..

சித்தார்த்தன் ப்ரீதியின் மீது ஈடுபாட்டைக் காட்டும் வரை ஆதவன் அலட்சியமாகத்தான் இருந்தான்.. எப்போது ப்ரீதியை சித்தார்த்தன் விரும்புகிறான் என்று ஆதவனுக்குத் தோன்ற ஆரம்பித்ததோ.. அப்போதே அவன் மனதிலிருந்த வஞ்சகம் விழித்துக் கொண்டது.. அவனுடைய தாய்மாமன் மகளை சித்தார்த்தன் மணந்து கொள்வதா..? ஆதவன் அதற்கு விடவே மாட்டான்.. ஒன்று, சித்தார்த்தனின் கண் முன்னே ஆதவன் ப்ரீதியை மணந்து கொண்டு சித்தார்த்தனை வென்று காட்ட வேண்டும்...

இல்லையென்றால் ஆதவனுக்குக் கிடைக்காத ப்ரீதி சித்தார்த்தனுக்கும் கிடைக்கக் கூடாது..

"என் கணவரை அவ பறித்துக்கிட்டா.. முறைப்படி முதல்தாரம் நான்தான்.. ஆனா.. மறைவா வாழ்க்கை நடத்துகிறவளின் வீட்டிற்கு வந்து போவதைப் போல என் கணவரை என் வீட்டுக்கு வந்து போக வைத்தா.. இப்ப அவ மகன் என் மகனோட முறைப் பெண்ணை பறித்துக்கப் பார்க்கிறான்.. இதையெல்லாம் தாங்கிக்கிட்டு இன்னும் நான் உயிரோடு இருக்கனுமா..?"

கங்காதரனிடம் போனில் விசாகா கதறிய கதறலில் அவர் மைத்துனன் வீட்டு விசேத்தையும் பொருட்படுத்தாமல் கொல்கத்தாவிலிருந்து கிளம்பி வால்பாறைக்கு வந்து சேர்ந்து விட்டார்..

"விசாகா மீது எனக்கு அளவு கடந்த பாசமிருக்கு ஆதவா.. அதேபாசம் என் மகளின் மீதும் எனக்கு இருக்கு.. அவள் பூனாவிலேயே உன்மீது பிரியமில்லைன்னு சொல்லிட்டா.. பேசிப் பழகிப் பாருன்னு நான்தான் இங்கே அனுப்பி வைத்தேன்.. இப்போதும் அதையேதான் சொல்கிறா.. ஸோ.. ப்ரீதியை கல்யாணம் பண்ணிக் கொள்ளனும் என்கிற எண்ணத்தை மறந்துவிடு.."

"ஆகட்டும் மாமா.." வாதாடாமல் ஒப்புக் கொண்டான் ஆதவன்..

பிடிக்கவில்லை என்பதை முகத்துக்கு நேரே சொல்லி விட்ட ஒருத்தியை மணந்து கொள்வதை விட கொடுமை வேறு எதுவும் இல்லை.. அந்தக் கொடுமை அவனுக்கு எதற்கு..? நரியே.. சீச்சீ.. இந்தப் பழம் புளிக்கும் என்று சொல்லி பின்வாங்கவில்லையா..? அவன் வேறு.. நரி வேறா..?

"ஆனால் ப்ரீதி.. நீ என்னுடன் கிளம்பியே ஆக வேண்டும்.."

"அப்பா.. நான்.. சித்தார்த்தனை..." ப்ரீதி தவியாய் தவித்தாள்..

அவளால் சித்தார்த்தனைப் பிரிந்து ஒரு எட்டுக்கூட எடுத்து வைக்க முடியாது.. இதை எப்படி அவள் கங்காதரனுக்குப் புரிய வைப்பாள்..?

"லுக் ப்ரீதி.. நீ என்ன சொல்ல நினைக்கிறேன்னு அப்பாவுக்குப் புரியுது.. உன் உணர்வுகளுக்கு நான் மதிப்புக் கொடுத்தேனா இல்லையா..? ஆதவனுக்கு 'நோ' சொல்லிட்டேனா இல்லையா..? அதுபோல.. நீயும் என் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்துத்தான் ஆகனும்.. நீ ஆதவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டாம்.. அதே சமயம்.. சித்தார்த்தனையும் நீ கல்யாணம் பண்ணிக்கனும்னு நினைக்கக் கூடாது.. சித்தார்த்தனைத் தவிர வேறு யாரை நீ கை காட்டினாலும் தடை சொல்லாமல் அவருக்கே உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறேன்."

"அதுதான் ஏன்..? சித்தார்த்தர் ரொம்ப நல்லவர் அப்பா.."

"இல்லைன்னு யார் சொன்னது..? பட்.. அவர் என் தங்கையின் கணவருக்கு மகனாகப் பிறந்து விட்டாரே.."

"அதில் அவருடைய தவறென்ன இருக்கிறது..? இன்னும் சொல்லப் போனால் அவருடைய அம்மாவின் மீதோ, தாத்தாவின் மீதோ தவறு சொல்லிவிட முடியுமா..? குடும்பத்துக்குத் தெரியாமல் காதலித்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை மறந்து கல்யாணமும் பண்ணிக் கொண்ட மாமாவின் மீதுதானே மொத்த தவறும் இருக்கிறது..?"

"அவையெல்லாம் எனக்குத் தேவையில்லாத விசயங்கள்.. எனக்குத் தேவை விசாகாவின் பக்கம் இருக்கிற நியாயம் மட்டும்தான்.."

"சித்தார்த்தனின் பக்கம் யார் நிற்பது அப்பா..? அவர் பக்கமிருக்கிற நியாயத்தை யார் சொல்வது..?"

"அவருக்கென்ன..? பரம்பரை கோடிஸ்வரர்.. ராஜவம்சம் வேறு.. அவர் பக்கம் நிற்க ஆயிரம் பேர் இருப்பார்கள்.."

"அந்த ஆயிரத்தில் ஒருத்தியாக நானும் நிற்பேன் அப்பா.. அந்தப் பரம்பரை கோடிஸ்வரரின் பெயரைச் சொல்லித்தான் உங்கள் தங்கை மகன் ராஜவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.. படிக்க ஃபாரின்.. ஓட்ட ஃபாரின் கார்.. கம்பெனி ஆரம்பிக்க கோடிக்கணக்கில் பணம்.. இதற்கெல்லாம் சித்தார்த்தன் வேண்டும்..

இவருடைய தாய் மாமன் மகளை மேரேஜ் பண்ணிக்கொள்ள மட்டும் சித்தார்த்தன் வேண்டாமா..? இவரும் ஆர்த்தியும் என்ன சித்தார்த்தனின் சொத்து சுகத்திற்கு பிறந்தார்களா..? அவருடைய நேர்மையில்லாத அப்பாவிற்குப் பிறந்திருக்கிறார்கள்.. உங்கள் தங்கை சித்தார்த்தனனின் அப்பாவுக்கு முதல் மனைவி என்பதற்காக.. சித்தார்த்தனிடம் கூலி வாங்கிக் கொண்டிருக்காங்களா..?"

"ப்ரீதி.."

"எதுக்குப்பா உங்களுக்கு கோபம் வருது..? எந்த உரிமையில் அவங்க இந்த அரண்மனையில் ராணி மாதிரி வாழ்கிறாங்க..? அவங்க ஹஸ்பெண்டை சாருலதா ஆண்ட்டிக்கு விற்ற உரிமையில்தானே வாழ்கிறாங்க..?"

"வாயை மூடு.."

"மாட்டேன்.. ஒவ்வொரு முறை அத்தையைப் பார்க்க வரும் போதும் மாமா வைர நகைகளாக வாங்கிக் கொண்டு வருவாரே.. எங்கிருந்து அந்தப் பணம் வந்ததுன்னு அத்தைக்குத் தெரியும்தானே.. அதை வாங்கிப் போட்டுக் கொள்ள அவங்களுக்கு உடம்பு கூசலை.. மாமா கொட்டிக் கொடுத்த பணம் சாருலதா ஆண்ட்டியின் பணம்ன்னு தெரிந்தும் அதை கைகுளிர செலவளிக்க அவங்களுக்கு கை கூசலை.. ச்சே.."

"சொல்லிக்கிட்டே இருக்கேன்.. நீ பேசிக்கிட்டே போற.."

கங்காதரன் ஆத்திரத்துடன் மகளை அடித்து விட்டார்.. வலி தாங்காமல் கன்னத்தைப் பிடித்துக் கொண்ட ப்ரீதியின் அதிர்ந்த தோற்றத்தில் கங்காதரனின் மனதில் குற்றஉணர்வு எழுந்தது.. இது அப்பாதானா என்று அடையாளம் பார்ப்பதைப் போல மகள் பார்த்து வைத்ததில் ஏதோ கூற முயன்றார்..

"கண்ணம்மா.." கண்கலங்க ஏதோ கூற முயன்றார்..

"வேண்டாம்ப்பா.." கை உயர்த்தி தடுத்து விட்டாள் ப்ரீதி..

"ஏம்ப்பா அடிச்சீங்க..? ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபம் வருது...? அத்தை உங்களோட தங்கை

என்கிறதினாலதானே.. அப்ப நான் உங்களுக்கு இரண்டாம் பட்சமா அப்பா..? என்மேல் உங்களுக்குப் பாசமில்லையா..?"

"பாசமிருக்கிறதினாலதானே என் தங்கை மகனுக்கு உன்னைப் பெண் கொடுக்க மறுத்துவிட்டேன்.. உனக்கு சித்தார்த்தன் வேண்டாம்ன்னு மட்டும்தானே.. சொல்கிறேன்.. மற்றபடி எதில் உன்னிடம் ஃபார்சியலிட்டி காட்டினேன்..?"

"அத்தையின் காதலை அங்கீகரித்து அவங்க விருப்பப்படி மேரேஜ் பண்ணி வைத்தீங்களேப்பா.. என் காதலை நீங்க அங்கீகரிக்கலையே.. ஏன்ப்பா..? மாறன் மாமாவைப் போல சித்தார்த்தன் ஒன்றும் நேர்மையில்லாத வரில்லையே அப்பா.. ஒன்றை நினைத்து அதிலேயே நிலைத்து நிற்கும் குணம்ப்பா.. அவரோட பணத்தை வைத்து உங்க தங்கை மகன் சிட்டியிலே கம்பெனி ஆரம்பித்து சிட்டி லைஃபை வாழனும்னு நினைக்கிறார்ப்பா.. அவரோ.. கோயம்பத்தூரில் மில், ஹைதராபாத்தில் ஐ.டி கம்பெனி, மும்பையில் ஷாப்பிங் மால், இன்னும் உலகம் முழுதும் பல பிஸினெஸ்கள்ன்னு இருந்தும் இந்த வால்பாறை கானவயலின் காட்டைத்தான் தன் வேரா நினைக்கிறார் அப்பா.. இந்த காடு வேறு, அவர் வேறுன்னு இல்லைங்கிறார்.. அவரோட பிரின்சிபல்ஸ் என்னை இம்ப்ரெஸ் பண்ணுதுப்பா.. அவரோட பேக்ரவுண்டைப் பற்றி ஒருவார்த்தை.. ஒரேயொரு வார்த்தைகூடச் சொன்னதில்லை.. அவரைப் போல யாரிருக்கிறாங்க..? இருந்தும் என் காதலை நீங்க அங்கீகரிக்கலை.. ஏன்னா.. சித்தார்த்தன் உங்க தங்கைக்கும், தங்கை பிள்ளைகளுக்கும் வேண்டாதவர்.. அதுதானே அப்பா..?"

ப்ரீதி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் கங்காதரன் சங்கடம் கொண்டார்.. மகள் சொல்வதுதான் உண்மை என்பதில் அவரால் உடனடியாக பதில் சொல்லமுடியவில்லை.. அதில் ஆதவன் சீற்றம் கொண்டான்..

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்னங்கிற..?" என்ற அவனது கோபத்திற்கு..

"சித்தார்த்தன் வேண்டாதவர்ன்னா அவர் கொடுக்கிற பணமும், பெயரும் மட்டும் உங்களுக்கு வேண்டுமா அத்தான்..? கானவயலை விட்டுக் கையும் காலோடு வெளியேறி உங்கள் சொந்தக்காலில் நின்று உழைத்துப் பிழைக்கலாமே அத்தான்.. அதுதானே சுயமரியாதை..?" என்ற ப்ரீதியின் பதிலடி கிடைத்தது..

"மாமா.." ஆதவனாலும் பதில் சொல்ல முடியாமல் போய்விட்டது..

அவன் கங்காதரனை உதவிக்கு அழைக்க.. இதனால்தானே வாய்மூடி நிற்கின்றேன்..? பெரிய இவனாட்டம் பேசப் போனாயல்லவா..? அனுபவி.. என்று அவர் கடும் தனலாக தங்கை மகனை முறைத்தார்..

"காதலிக்கவும்.. அதில் பிடிவாதமாக நிற்கவும் உங்க தங்கைக்கு உரிமை இருக்குன்னா.. எனக்கும் அந்த உரிமை இருக்குப்பா.. நான் சித்தார்த்தனைத்தான் மேரேஜ் பண்ணிக்குவேன்.. அதை உறுதி பண்ணிக்காம இந்த கானவயலை விட்டு நகரமாட்டேன்.." கோபமாக அறிவித்து விட்டு அறையை விட்டு வெளியேறி விட்டாள் ப்ரீதி.. தடுக்க முயன்ற ஆதவனை..

"வேண்டாம் ஆதவா.. அவளை விட்டுவிடு.." என்ற கங்காதரனின் குரல் தடுத்து நிறுத்தி விட்டது..

அறையை விட்டு வெளியேறிய ப்ரீதி.. அரண்மனை முழுதும் சித்தார்த்தனைத் தேடினாள்.. எங்கும் அவன் இல்லையென்பதில் தோட்டத்திற்குப் போனாள்.. அங்கும் அவன் இல்லை..

"அம்மா.. ஹி..ஹி.." என்றபடி வனிதாமணி வந்தாள்..

"உங்க சித்தார்த்தன் அய்யா இருந்தால் ஊரைச் சுற்றிப் பார்க்கக் கூப்பிட்டுக்கொண்டு போவார்ன்னு பார்த்தா அவர் தனியே எஸ்கேப் ஆகிட்டாரே.." வனிதாமணியின் வாயைப் பிடுங்குவதை அவள் உணர்ந்து விடாமல் இயல்பாக பேசுவதைப் போல அவளது வாயைக் கிளறினாள்..

சித்தார்த்தன் எங்கே என்று வெளிப்படையாக கேட்க முடியாது.. வனிதாமணி வெகுளி.. ப்ரீதி அம்மா,

சித்தார்த்தன் ஐயா எங்கே போனார்ன்னு கேட்டாங்க என்று அரண்மனை முழுதும் பரப்பி விடுவாள்.. ஆதலால் இவ்விதமாகத் தூண்டிலை வீசி விட்டுக் காத்திருந்தாள்.. மீன் வகையாக சிக்கி விட்டது..

"அய்யா மொட்டைமாடியில நின்றுக்கிட்டு இருக்காரும்மா.. இப்பத்தான் சூடா டீ கொண்டு போய் கொடுத்தேன்.. உங்களுக்கும் கொண்டாந்தேன்.."

வனிதாமணி நீட்டிய டீயை வாங்கி ஒரே மூச்சில் குடித்து விட்டு மாடிப்படிகளில் தாவினாள்.. அசையாமல் நின்றிருந்தவனின் மனம் அசைந்துவிடாதா என்ற ஏக்கத்துடன் அவனருகே சென்றாள்.. அவனோ..

'யார்.. நீ..?' என்று முள்ளாகக் குத்தினான்..

"நான் யாரா..? உங்களைக் காதலிக்கிறவள்.. போதுமா..? ஐ லவ் யு.. இதை என் கண்களில் சொல்லி வந்தேன்.. வாய் விட்டும் சொல்லி விட்டேன்.. என் மனதில் உங்கள் மேல் காதல் வந்தப்ப எனக்கு உங்கள் பெயர் மட்டும்தான் தெரியும்.. இந்த அரண்மனையில் நீங்க தங்கியிருக்கீங்கன்னு மட்டும்தான் நினைத்தேன்.. உங்க உயரத்தைப் பற்றித் தெரியாது சித்தார்த்.. நான் உங்க ஸ்டேடஸிற்காக காதல் சொல்கிறேன்னு நினைத்து விட்டிங்களா..?" ப்ரீதி தழுதழுத்தாள்..

"முட்டாள்.." அவளது முகத்தை இறுக்கிப் பற்றிச் சீறினான் சித்தார்த்தன்..

ப்ரீதியின் கன்னத் தசை வலித்தது.. ஆனால் மனம் முழுவதும் சந்தோசம் நிரம்பியது.. அவனது கோபத்திற்கான காரணம் அவள் மனதில் இனிப்பை நிரப்பியது.. ப்ரீதியின் விழிகள் அவனை காதலுடன் பார்த்தன..

"உனக்குத் தெரியுமா..? என் உயரத்தைப் பற்றி மட்டும் பேசுகிறாயே.. என் மனதில் நிரம்பியிருக்கும் வேதனையைப் பற்றி உனக்குத் தெரியுமா..? கேட்டவருக்கு இல்லைன்னு சொல்லாமல் அள்ளி வழங்கற வள்ளல்தான் நான்.. எனக்கான நிம்மதியைத் தேடுகிறேன்.. கொடுப்பதற்கு யாருமில்லை என்பது உனக்குத்

தெரியுமா..? ஸ்டேட்டஸாம்.. ஸ்டேட்டஸ்.. இந்த ஸ்டேட்டஸை வைத்து என்ன பண்ண..? பணமிருந்தால் மட்டும் போதாதுடி.. கொஞ்சம் வஞ்சகமும் சூதும் இருக்கனும்.. அப்படியிருந்திருந்தா என் அம்மா தான் காதலிக்கிறவன் நல்லவனா, ஏமாற்றுக்காரனான்னு முதலில் விசாரிக்கச் சொல்லியிருப்பாங்க.. எங்க பாட்டி அதைத்தானே சொன்னாங்க.. யாரும் கேட்கலையே.. அம்மாவின் காதலை அவங்க எதிர்த்த ஒரு காரணத்துக்காகவே அவங்க சொல்கிற எதையும் காதில் போட்டுக்கலையே.."

சித்தார்த்தனின் கரம் துடித்தது.. ப்ரீதி அவனது கைகளை இறுக்கிப் பற்றி அதில் முகம் பதிக்க முனைந்தாள்.. அவன் கைகளை உருவிக் கொண்டதில் அதிர்ச்சியாகி அவனை இறைஞ்சலுடன் கெஞ்சுதலாகப் பார்த்தாள்..

சித்தார்த்தன் அவளிடமிருந்து விலகி நின்று வானைப் பார்த்தான்..

"தாத்தா விசாரித்தார்.. கானவயலில் மாறனா.. அவன் தங்கக்கம்பியாச்சேன்னு செர்டிபிகேட் கொடுத்தாங்க.. பூனாவுக்கு இந்த மனிதர் படிக்கப் போனார்ன்னுதான் எல்லோரையும் போல தாத்தாவும் நினைத்து விட்டார்.. அம்மாவை இவர் கையில் பிடித்துக் கொடுத்து விட்டார்.."

மாறனை சித்தார்த்தன் அப்பா என்று அழைக்கவில்லை என்பதை கவனித்தாள் ப்ரீதி.. அவரைப் பற்றிப் பேசியவனின் குரலில் வெறுப்பு விரவியிருந்தது..

"எனக்குப் பதினைந்து வயதாகும்வரை ஃபேமிலியில் சந்தோசம் நிறைய இருந்தது.. இந்த மனிதரை அப்பான்னு கூப்பிட்டேன்.. பாசம் காட்டினேன்.. இவரும் அதற்குத் தகுந்தாற்போலதான் இருந்தார்.. இவருடைய இரட்டை வேடம் ஓர்நாள் வெளிப்பட்டபோது என் அம்மா வாழ்க்கையில் தோற்றுப் போன அதிர்ச்சியைத் தாங்க முடியாம மரணப் படுக்கையில் விழுந்துட்டாங்க.. படிப்பு.. அழகு.. பணம்ன்னு எல்லாத்திலயும் நம்பர் ஒன்னா இருந்தவங்க தன் ஹஸ்பெண்டுக்கு தான் நம்பர் 'டூ' வொய்ப்ன்னு தெரிந்த போது டைஜெஸ்ட் பண்ணிக்க முடியலை.. நான் அப்ப ஊட்டி காண்வென்டில் படித்துக்கிட்டு

இருந்தேன்.. தாத்தா என்னைக் கூப்பிட வந்தார்.. என்னன்னு சொல்லலை.. இங்கே வந்து பார்த்தா அம்மா தன்னோட கடைசி நிமிடங்களில இருக்காங்க.. என்னைப் பார்த்ததும் கையைப் பிடித்துக்கிட்டு.. 'சித்தார்த்'துன்னு கதறி அழுகிறாங்க.. அவருக்கு ஏற்கனெவே கல்யாணம் ஆகி விட்டதாம்டா.. அதை மறைத்து என்னைக் கல்யாணம் பண்ணியிருக்கிறார்.. உன் வயதில் அந்த வொய்புக்கு ஒரு மகன் இருக்கிறானாம்.. அவனுக்கு ஒரு தங்கையும் இருக்கிறாளாம்.. இதற்கு அர்த்தம் என்ன தெரியுமாடா.. என்னுடன் குடும்பம் நடத்திய காலகட்டத்தில் அவளுடனும் குடும்பம் நடத்தியிருக்கிறார்.. இதில் அவளை மட்டுமே காதலித்து என்னுடன் கடமைக்குக் குடும்பம் நடத்தியிருக்கிறார்.. அதன் அடையாளம்தான் அந்தப் பையனுக்குத் தங்கை இருப்பது.. இதுதான் அம்மா கடைசியாய் என்னிடம் பேசியது.."

சித்தார்த்தனின் புருவச் சுளிப்பில் ப்ரீதியின் உயிர் துடித்தது..

# 25

**அன்பு என்பது ஆலகால விசம்..!**
**தகுதியற்றவரின் மீது அதைவைத்தால்**
**அன்பு வைத்தவரை அது அழிக்கும்..**

"காற்றில்.. எந்தன் கீதம்..

காணாத ஒன்றைத் தேடுதே.."

கொட்டும் மழையில் நனைந்தபடி பாடிக் கொண்டிருந்தாள் ப்ரீதி.. வெறும் மழையல்ல.. குளிர் மழை.. அடர் இருட்டுடன் கூடிய தொடர்மழை.. அடர்ந்த வனம் மாலைப் பொழுதை கும்மிருட்டாகக் காட்டிக் கொண்டிருந்தது.. பனி படர்ந்த மரங்களும் செடிகளும் கொடிகளும் அச்சுறுத்தாவிட்டாலும் மனதுக்குள் ஓர்வித பயத்தை உண்டாக்கும் வகையில்தான் இருந்தன..

அது 'சின்கோனா..!' வால்பாறையின் சிரபுஞ்சி..! எப்போதும் மழை கொட்டிக் கொண்டிருக்கும் மலைப்பகுதி.. அந்தப் பிரதேசத்தை சித்தார்த்தனுடன் பார்வையிட வந்தபோது மழையில் நனைந்து வெடவெடத்துப் போனாள்.. சித்தார்த்தன் ஒரே கம்பளிக்குள் அவளை இழுத்துக் கொண்டான் என்பது வேறு விசயம்.. அந்த நினைவு இன்று வந்து தொண்டைக் குழியில் பந்து போல உருண்டது..

"காற்றில்.. எந்தன் கீதம்..

காணாத ஒன்றைத் தேடுதே..

அலை போலே.. நினைவாக..

சில்லென்று வீசும் மாலைநேரக்

காற்றில்.. எந்தன் கீதம்

காணாத ஒன்றைத் தேடுதே.."

கொட்டும் மழைத் தாரைகளின் ஊடே அவளது விழிகள் காணக் கிடைக்காத அவளது காதலனைத் தேடின.. அவன் அவளை 'போ..' என்று சொல்லி விட்டானே.. அவளது முகம் பார்க்கும் விருப்பமின்றி முகத்தைத் திருப்பிக் கொண்டானே..

"என் அம்மா சொன்னாங்கடி.. இங்கே இருக்கிறது என் கணவர் இல்லை சித்து.. விசாகாவின் கணவர்.. அவளை வரச்சொல்லி அவளுடைய கணவனை அவளிடம் ஒப்படைத்து விடு.. கொடுத்துப் பழகிய பரம்பரையில் பிறந்தவள் நான்.. இன்னொருத்தி கொடுத்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தேன்னு இத்தனை நாளாய் எனக்குத் தெரியாது.. அதற்கு விலையாக அவளுடைய பிள்ளைகளுக்கு படிப்பு, பணம், தொழில்ன்னு செய்து ஈடு கட்டிவிடு.. அவர்கள் இந்த அரண்மனையில் இருந்து விட்டுப் போகட்டும்.. உன்னுடன் உன் அப்பா இருக்க வேண்டுமானால் அவருடன் அவருடைய குடும்பம் இருக்க வேண்டும்தானேன்னு சொன்னாங்க.. இப்படிப்பட்ட அப்பா எனக்கு வேண்டாம்.. அந்த மனிதரை என் வாயால் அப்பான்னு கூப்பிட மாட்டேன்னு சொன்னேன்.. அம்மா

விரக்தியா சிரிச்சாங்க பாரு ஒரு சிரிப்பு.. அந்தச் சிரிப்பை என் ஆயுளுக்கும் மறக்க மாட்டேன்.."

சித்தார்த்தனின் துடிப்பில் ப்ரீதியும் துடித்துப் போனதை ஏன் அவன் உணரவில்லை.. எதிரியைப் பார்ப்பதைப் போல அவளைப் பார்த்தானே..

"எங்க அம்மா ராணிடி.. அவங்களோட கணவர் வேறு ஒருத்திக்கும் கணவர்ன்னு தெரிஞ்சவுடனே உயிரை விட்டுட்டாங்க.. உன் அத்தை..? என்ன செஞ்சாங்க..? இன்னொருத்திக்கும் தாலியைக் கட்டிக் குடும்பம் நடத்தின கணவரை ஏத்துக்கிட்டாங்க.. மாதா மாதம் வந்து போகும் கணவரை சந்தோசமா தன் பக்கம் இழுத்துக்கிட்டாங்க.. அவர் 'வா'ன்னு கூப்பிட்டவுடன் கானவயலுக்குப் பிள்ளைகளுடன் வந்து இந்த அரண்மனையை சொந்தம் கொண்டாடி செட்டிலாகிட்டாங்க.. அவங்களும் சரி.. ஆதவன், ஆர்த்தியும் சரி.. ஒரு நொடியாவது இந்த வாழ்க்கை அவங்களுக்குச் சொந்தமானதான்னு நினைத்துப் பார்த்திருப்பாங்களா..?

இது என்ன அவங்க அப்பா, பாட்டன் வீட்டுச் சொத்தா..? என் அம்மாவின் சொத்துக்கள்டி.. இதை அவங்க சொந்தம் கொண்டாடலாம்.. உன்னை நான் சொந்தம் கொண்டாடக் கூடாதா..?"

'ஏன் கூடாது..?' ப்ரீதியின் மனம் வலித்தது..

"ஆக்சுவலா உன் அத்தைக்கு யார் மேல கோபம் வரனும்..? யார் மேல பகை வரனும்..? யார் அவங்களுக்குத் துரோகம் செய்தது..? அவங்க மேலேதானே கோபமும் பகையும் வரனும்..? உன் அத்தை அதைச் செய்ய மாட்டாங்க.. அவங்க கழுத்தை அறுத்து நம்பிக்கைத் துரோகம் செய்த மிஸ்டர் மாறன் மேல பிரியத்தைக் கொட்டுவாங்க.. என்னவோ அவங்க சொத்து சுகத்தைப் பறித்துக் கொண்டதைப் போல என்னிடம் பகையைக் காட்டுவாங்க.. அவங்க பிள்ளைகள் அவங்களைத் தாண்டி இருக்காங்க.. என் தயவில் வாழ்கிறார்கள் என்ற எண்ணமே அவர்களுக்கு இல்லை.. அவங்க கேட்கும் போதெல்லாம் நான் படியளக்க

வேண்டும்.. இல்லைன்னா என் முதுகுக்குப் பின்னால் பேசுவாங்க.. கொடுத்துக் கிடுத்து வைத்திருக்காங்களா..?"

"ப்ளீஸ்.. கூல்டவுன் சித்தார்த்.. நாம் நம்மைப் பற்றிப் பேசுவோம்.."

"உன்னிடம் பேச எனக்கு என்ன இருக்கிறது..?"

சித்தார்த்தன் கேட்ட கேள்வியில்.. அவனது ஒட்டாத பார்வையில் விக்கித்துப் போனாள் ப்ரீதி.. அவன்தான் அவளுக்கு எல்லாமும் என்று கங்காதரனிடம் அறிவித்து விட்டு வந்திருக்கிறாள்.. ஆதவனைத் துச்சமாகப் பேசி தூக்கி எறிந்து விட்டு வந்திருக்கிறாள்.. சித்தார்த்தனோ உனக்கும் எனக்கும் இடையில் என்ன இருக்கிறது என்று கேட்கிறான்..

"எதுவுமே இல்லையா..?"

கலங்கிய அவளது விழிகளைச் சந்தித்தவனின் பார்வை ஓர்நொடி அவள் முகத்தில் நிலைத்து நின்றது.. இதோ அவளை இழுத்து அணைத்துக் கொள்ளப் போகிறான்.. நெற்றியில் முத்தமிடப் போகிறான்.. நீயின்றி நானில்லையடி என்று இறுக்கி எழும்புகளை நொறுக்கப் போகிறான் என்றெல்லாம் கற்பனை செய்து எதிர்பார்ப்பில் மனம் படபடக்க அவள் நின்றிருக்க.. அவன் பார்வையை விலக்கிக் கொண்டு வேறு திக்கில் பார்த்தபடி..

"எதுவும் இல்லை.." என்றான்..

"அது எப்படி இல்லாமல் போகும்..?" ப்ரீதி வெகுண்டாள்..

முதல்நாள் முழுவதும் அவளுடன் அவன் கழித்த சூடான பொழுதுகள் அவன் நினைவில் எப்படி இல்லாமல் போகும்..? அவனது மூச்சுக்காற்றின் வெப்ப மூச்சு அவளது மேனியெங்கும் படிந்த நொடிகள் அவன் நினைவில் எப்படி இல்லாமல் போகும்..? பனி பொழியும் குளிர் மழையில் வெடவெடத்து நின்றவளை தன் உடல்மீது அப்பிக் கொண்டு உஷ்ணத்தை அவளுடலுக்குத் தந்து அவளை அவன் குளிர் காய வைத்த நிகழ்வுகள் அவன் நினைவில் எப்படி இல்லாமல் போகும்..?

"எத்தனையோ என் வாழ்வில் இல்லாமல் போயிருக்கிறது.. எனக்கு மட்டும் சொந்தம்ன்னு நான் நினைத்த அப்பா.. என் வாழ்வில் கடைசிவரை முடிகோதும் என் அம்மா.. கௌரவமாய் நிமிர்ந்து நின்ற என் பாட்டின்னு நான் நேசித்தவர்கள் எல்லாம் என்னை விட்டுப் போயிட்டாங்க.."

"உங்க அப்பா உங்களை விட்டுப் போகலை சித்தார்த்.."

"ம்ப்ச்.. இங்கே இருக்கிற மாறனை என் அப்பான்னு நான் நினைக்கலை.. அந்த மனிதர் என் பிறப்புக்குச் சொந்தக்காரராக இருக்கலாம்.. எனக்குச் சொந்தமாக முடியாது.. பாட்டி அம்மா மேல உயிராய் இருந்தவங்க.. அம்மா போனதும் இவங்களும் போயிட்டாங்க.. அவங்களைச் சொல்லிக் குற்றமில்லை.. அவங்களுக்கு அவங்க மகள் மேல பாசம்.. என் அம்மாவுக்குத்தான் என்மேல பாசமில்லாமப் போயிருச்சு.. இப்ப எனக்குன்னு இருக்கிறசொந்தம் என் தாத்தா மட்டும்தான்.."

"நான் இருக்கிறேனே சித்தார்த்.. நானும் இருக்கிறேனே.."

"யார் நீ..? விசாகாவின் அண்ணன் மகள்.. ஆதவனின் தாய்மாமன் மகள்.. எனக்கு நீ யார்..? எதுவுமேயில்லை.. உன் அத்தையும், அத்தை பிள்ளைகளும் என் அரண்மiயில் இருந்து கொண்டே எனக்கு எதிரா வேலை செய்கிறாங்கன்னா உன் அப்பா அவங்களோட உறவுங்கிறதை அப்படியே ஃப்ரூவ் பண்றார்.. என் அரண்மனையில் உட்கார்ந்து கொண்டே என்னை வெளியே போகச் சொல்கிறார்.. உன் அப்பா என்கிறதுக்காக பொறுமையாய் வந்து விட்டேன்.. ஆதவனுக்கு மாடியில் கால் வைக்கும் தைரியத்தை நான் தந்ததில்லை.. இன்றைக்கு அவனை முன்னால் வைத்துக் கொண்டு உன் அப்பா ஆர்டர் போடுகிறார்.. இதெல்லாம் யாராலே.. உன்னாலே.. உன்மேல் நான் வைத்த ஆசையினாலே.. சும்மாவா சொன்னான் புத்தன்.. ஆசைதான் துன்பத்துக்கான அடிப்படைக் காரணம்ன்னு.. அந்த சித்தார்த்தன் சொன்னதை இந்த சித்தார்த்தன் தெரிந்துக்காம போயிட்டேண்டி.."

"ஐ லவ் யு சித்தார்த்தன்.."

மன்றாடினாள் ப்ரீதி.. அந்தக் குரலில் மனம் அசைந்ததோ என்னவோ.. ஓர் நொடி அவளைத் தின்று விடுவதைப் போல பார்த்து விட்டு மறுநொடியில் விரோதியைப் போல வெறித்துப் பார்த்து..

"போய் விடு.." என்று கர்ஜித்தான் அவன்..

"போகிறேன்.. உங்களை விட்டோ.. இந்த கானயவலை விட்டோ போக மாட்டேன்.. இந்த இடத்தை விட்டுப் போகிறேன்.. வால் பாறையின் சிரபுஞ்சின்னு நீங்க எனக்கு அடையாளம் காட்டிய சின்கோனா காட்டுக்குள் போகிறேன்.. மழையில் நனைந்து பனியில் விறைந்து அங்கேயே நான் செத்தாலும் சாவேனே தவிர.. நீங்கள் என் காதலை ஏற்றுக்கிட்டுக் கூப்பிட வராமல் காட்டை விட்டு வரமாட்டேன்.. உங்க அம்மாவும், பாட்டியும் உங்களை விட்டுப் போயிருக்கலாம்.. உங்க அப்பா இருந்தும் இல்லாதவரா ஆகியிருக்கலாம்.. நான் உங்களை விட்டுப் போக மாட்டேன்.. இருந்தும் இல்லாதவளா ஆக மாட்டேன்.. இது சத்தியம்.."

ப்ரீதி சித்தார்த்தனைத் திரும்பியும் பார்க்காமல் விடுவிடு எனப் படிகளில் இறங்கி போர்டிகோவுக்கு வந்தாள்.. சமையலுக்குத் தேவையான காய்கறி, மளிகைப் பொருள்களை வாங்க கார் குழலியை ஏற்றிக் கொண்டு கார் கிளம்பிக் கொண்டிருந்தது.. இவளும் அந்தக் காரில் ஏறிக் கொண்டாள்..

"அம்மாவிடம் சொல்லிட்டிங்களாம்மா..?"

முதல்நாள் நடந்த சண்டையை நினைத்துத் தயங்கியபடி கேட்ட வண்டாற்குழலியிடம் தலையை மட்டும் அசைத்து வைத்தவள் வழியில் காரை நிறுத்தி இறங்கிக் கொண்டாள்..

"நானும் துணைக்கு வர்றேம்மா.." இறங்கப் போன வண்டாற்குழலியை..

"நீ காலாகாலத்தில் காய் வாங்கிட்டுப் போனால்தானே சமைக்க முடியும்..? என்னுடன் காட்டைச் சுற்ற வந்து விட்டா சமையலை யார் கவனிக்கிறது..?" என்று தடுத்து விட்டு சரிவில் நடந்து விட்டாள்..

"சீக்கிரமா வண்டியை விடுய்யா.. இந்தம்மா காட்டுக்குள்ள போகிற சங்கதிய வீட்டில சொல்லனும்.." காய் வாங்காமல் வண்டாற்குழலி அரண்மனைக்குத் திரும்பி விட்டாள்..

தேயிலைச் செடிகளின் இடையே நடந்து கொண்டிருந்த ப்ரீதிக்கு அழுகை அழுகையாக வந்தது.. இந்த தேயிலைச் செடிகளை சித்தார்த்தன்தான் அவளுக்கு அறிமுகப் படுத்தினான்..

"இங்கிருக்கும் நிலப்பரப்பு.. தேயிலை வளர்வதற்கான நிலப்பரப்பு.. தேயிலைக்கு நீர் தேங்கக் கூடாது.. அதே சமயம் தொடர்ந்து நீர் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.. வால்பாறையில் எப்போதும் மழை பெய்து கொண்டே இருக்கும்.."

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்போல இருந்தது.. உலகம் சுற்றும் தொழிலதிபன்.. ஹைதராபாத்தில் கம்ப்யூட்டர் கம்பெனி நடத்துபவன்.. மும்பையில் ஷாப்பிங் மால் வைத்திருப்பவன்.. அந்தமலை பிரதேசத்தின் கானகத்தையும் அதில் விளையும் பயிர்களையும் நேசிக்கிறான்.. அவற்றைப் பற்றி அடி முதல் நுனி வரை அறிந்து வைத்திருக்கிறான்..

தேயிலைச் செடிகள் மரங்களைப் போல உயர்ந்து வளர்ந்திருந்தன.. அதனூடே நடந்தவளை மறைத்தன.. விட்டால் வானைத் தொடும் அளவிற்கு வளர்ந்து விடும் போல என்று ப்ரீதி சொன்ன போது..

"அதற்காகத்தான்.. ஆறு மாதத்திற்கு ஓர்முறை 'கவாத்து'ன்னு சொல்லப்படற இலையின் முனையை ஒரே சீராக செதுக்கி விடும் வேலை நடக்கும்.." என்று குழந்தைக்குச் சொல்வதைப் போலச் சொன்னான்..

'அந்த பிரியம் இப்போது எங்கே போய்விட்டது..?'

ப்ரீதியின் விழிகளில் வழிந்த கண்ணீர் மழைத் தாரைகளோடு தாரையாக கலந்து காணாமல் போனது.. அதுபோல சித்தார்த்தனின் மனதிலிருந்த பிரியமும் காணாமல் போய் விடுமோ என்று பயந்தாள் ப்ரீதி.. அப்படிப் போய் விட்டால் அவள் பிழைத்திருப்பதில் அர்த்தம்

ஏதுமில்லை.. அவளது வாழ்வின் அர்த்தம் அவன்தான்.. அவன் மட்டும்தான்..

கானகத்தின் அடர் இருள் அவளை உள்வாங்கியதைப் போல உணர்ந்தாள்.. மீட்டு ஒளி கொடுக்கும் ரட்சகனாய் அவன் வருவானா..? பெரிய மரமொன்றில் சாய்ந்து சரிந்தவளின் மீது மரத்தின் இலைகளில் தேங்கியிருந்த மழைநீர் கொட்டிக் கொண்டே இருந்தது.. வானில் மின்னல் வெட்ட.. தூரத்தில் இடி முழக்கம்.. சுழன்றடிக்கும் பெருங்காற்று.. அடர்ந்த கானகத்தின் இருளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டு காற்றில் கரைந்து கீதம் பாடி அவனைத் தேடும் பாடலுடன் அவள்..

"எங்கெங்கும் இன்பம் அது

கோலம் போட..

என்னுள்ளே ஒரு வீணை

ராகம் தேட..

அன்புள்ள நெஞ்சைக் காணாதோ..

ஆனந்த ராகம் பாடாதோ.."

அவளுள் பொங்கியெழுந்த ஏக்கம் பாடலில் ஒலிக்க.. 'திக், திக்' என அடித்துக் கொள்ளும் இதயத்துடன் தீனமாகப் பாடினாள் ப்ரீதி.. அவன் வருவானா என்று நெஞ்சம் பதறிக் கொண்டே இருந்தது..

"கண்கள் எங்கும்.. நெஞ்சின் பாவம்..

மேலும் ஏற்றும்..

காற்றில்.. எந்தன் கீதம்..

காணாத ஒன்றைத் தேடுதே.."

சின்கோனாவின் குளிர்மழை ஆளை உறையச் செய்வது.. பனியும், மழையும் சேர்ந்து பொழிந்தால் மனித உடல் தாங்குமா..? அதிலும் ப்ரீதி அந்தப் பிரதேசத்தின் தட்ப வெப்பநிலைக்குப் பழக்கப்படாதவள்.. பூனாவில் பிறந்து வளர்ந்தவள்.. அவளால் வால் பாறையின் குளிரையே தாங்க முடியாது.. சின்கோனாவின் குளிர் மழையை எப்படித் தாங்குவாள்..?

ஸ்வெட்டரையும் மீறித் தாக்கிய குளிர் அவளைச் சுருளச் செய்தது.. ப்ரீதி மரத்தின் வேரில் சுருண்டு முடங்கினாள்.. தாங்க முடியாத குளிர் அவளைத் தாக்கியது.. மனம் பலவீனமானது.. பயம் அதிகரித்தது.. எது நடந்தாலும் அந்த இடத்திலேயே மடிய வேண்டும்.. எக்காரணம் கொண்டும் அரண்மனைக்குத் திரும்பி விடக் கூடாது என்ற அசைக்க முடியாத வைராக்கியம் மட்டும் அவள் மனதில் வேரூன்றியிருந்தது..

"நில்லென்று சொன்னால் மனம்

நின்றால் போதும்..

நீங்காத நெஞ்சில் அலை

ஓய்ந்தால் போதும்.."

கட்டுக்கடங்காத குதிரைக்கு கடிவாளமிட்டு விட முடியுமா..? நில் என்று அவள் சொன்னால் மனம் நின்று விடுமா..? சித்தார்த்தன் வேண்டும் என அவளது உடலும் மனமும் தேடித் தவித்ததை சொல்லில் வடித்து விடத்தான் முடியுமா..?

"மௌனத்தின் ராகம் கேளாதே..

மௌனத்தில் தாளம் போடாதோ..

வாழும்.. காலம்.. யாவும்.. இங்கே..

நெஞ்சம் தேடும்..

காற்றில்.. எந்தன் கீதம்..

காணாத ஒன்றைத் தேடுதே.."

தேடுதலுடன் விழி மூடினாள் ப்ரீதி.. அவ்வளவுதான்.. இனி முடியாது என்று இமைமூடி ஆழ்ந்த மயக்கத்துக்குள் அவள் போய்க் கொண்டிருந்த போது அவளது இடைபற்றி தூக்கியது வலிமையான கரமொன்று.. அனிச்சையாகத் திமிறி கண்விழித்தாள்..

"விடு.. விடு.. என்னை.."

"விடமுடியாதுடி.."

குனிந்து அவளது இதழோடு இதழ் பதித்து முரட்டு முத்தமிட்டவனை உணர்ந்து கொண்ட ப்ரீதி.. அழுகையும் விம்மலுமாக அவனது முடிபற்றி உலுக்கினாள்..

"ராஸ்கல்..! 'போ' ன்னு சொல்லிட்டு.. ஏண்டா தேடி வந்த..?"

சித்தார்த்தனின் முகம் விகசித்தது.. அவளது கோபத்தை மிகவும் ரசித்து உரத்த குரலில் சிரித்தான்..

"வராமல் எப்படிடீ இருக்க முடியும்..?"

"நான் வேண்டாம்ன்னு சொன்னவன்தானேடா நீ..?"

"நான் வேண்டும்ன்னு கேட்டவதானேடி நீ..?"

"அதுக்கு..?"

"என்னை உனக்குக் கொடுக்கத்தான் வந்திருக்கிறேன்.. எடுத்துக்க.."

கொட்டும் மழையில் அவளை ஆரத்தழுவி தன்னை அவன் ஒப்புக் கொடுத்த அந்தப் பொழுதில்.. காரிருள் குவிந்திருந்த ஆரண்யம் அவளை அச்சுறுத்தவில்லை.. நீண்ட கோடாய் வானில் வெட்டிய மின்னல் அவளை விழி மூடச் செய்யவில்லை.. தூரத்து இடிமுழக்கம் அவளது உடலை நடுங்க வைக்கவில்லை..

அனைத்தையும் சாட்சியாக வைத்து அவனை தழுவிக் கொண்டாள் ப்ரீதி.. ஆவேசமான அவளது ஆலிங்கனம் அவனைப் பிய்த்துத் தின்றது.. சந்தோசமாக அவளது பிரியத்துக்கு உணவானான் சித்தார்த்தன்.. ஆசை துன்பத்துக்கு மட்டும் காரணமாகாது.. இன்பத்துக்கும் வழி வகுக்கும் என்று போதிமரம் காணாத அந்த புத்தன் தனக்குள் சொல்லிக் கொண்டான்..

# 26

## சுந்தர காண்டத்தை விட சுந்தரமானது..
## ஆரண்ய காண்டம் அழகானது..

"அதுதான் புலிப்பள்ளத்தாக்கு.."

சித்தார்த்தன் சுட்டிக் காட்ட  அவன் தோள் வளைவில் கைகோர்த்து.. தலைசாய்த்து.. என அவன் மீது படர்ந்து சரிந்திருந்த ப்ரீதி ஒப்புக்கு எட்டிப் பார்த்து விட்டுக் கிடுகிடு

பள்ளத்தாக்கில் பயந்து போனவளாக அவனை அப்பிக் கொண்டாள்..

அவனுக்கு அதுதான் வேண்டும்.. வால்பாறையின் மலைப் பகுதியில் அவள் பார்க்காத இடங்களுக்கு அழைத்துச் சென்றுச் சுற்றிக் காட்டி.. அவள் பயந்து அவனுடன் ஒட்டிக் கொள்ளும் சுகத்தை அனுபவிக்கும் சுகத்திற்கு ஈரேழு உலகங்களையும் எழுதி வைத்து விடலாமே..

இதை அவளிடம் சொன்ன போது..

"நினைப்புத்தான்.." என்று நொடித்தாள்..

"கண்டு பிடிச்சுட்டியே.. கள்ளிடி நீ.. இருபத்திநாலு மணி நேரமும் உன் நினைப்புத்தாண்டி.." கள்ளூரும் பார்வை பார்த்தான் அவன்..

"சான்ஸ் கிடைச்சாப் போதுமே.. ஜொள்ளுவிட ஆரம்பிச்சுருவீங்களே.. நான் இந்த நினைப்பைச் சொல்லலைங்க மச்சான்.."

கொங்கு தமிழில் அவள் பேச போதையேறியது அவனுக்கு..

"வேற எந்த நினப்பச் சொன்னீக அம்மணி..?" என்று கொஞ்சினான்..

"என்ற மச்சான் கானவயல் ஜமின் மட்டும்தானுங்க.. ஈரோழு லோகத்துக்கும் ராஜா இல்லைங் மச்சான்.."

"அட.. அம்மணி அதச் சொல்றீகளாக்கும்.."

"ஆமாங்.. மச்சான்.."

அவள் உதட்டைச் சுழித்து அவனை சரசமாகப் பார்த்த பார்வையில் உடல் சூடேற அவன் ஒரு மார்க்கமாக அவளைப் பார்த்த வேட்கைப் பார்வையில் அரண்டு போனவளைப் போல நடித்தவள்.. இமைகளைக் கொட்டி..

"அப்புடிப் பாக்காதீங்க மச்சான்.." என்றாள்..

"என்ற பொஞ்சாதிய நான் பார்க்காம வேற எவன் பார்ப்பான்டி..?"

"எவனும் கிட்டக்கூட வரமாட்டானுங்க.. இந்த ப்ரீதி சித்தார்த்தனோட பொஞ்சாதியாகி மாசம் ஒன்று ஓடிப் போயிருச்சில்லங்க.. இந்த சுத்து வட்டாரத்தையே கலக்கி

கல்யாணம் வைச்சு.. என்ற மச்சான், என்ற கழுத்தில் தாலி கட்டியிருக்கீங்க.. உலகம் முழுசும் தெரிஞ்ச சங்கதியிங்க இது.. சித்தார்த்தனோட பொஞ்சாதிய ஏறெடுத்தும் பாக்கற தில்லு யாருக்கு இருங்குங்க மச்சான்..?"

"உன்ற புருசனுக்கு இருக்குது அம்மணி.."

சித்தார்த்தன் வேட்கையுடன் அவளைத் தொட்டுக் கட்டிக் கொண்டான்.. உரிமையான தழுவல் அது.. அவள் அவனது மனைவி.. ஆதவனை வேண்டாம் என்று மறுத்து விட்டு சித்தார்த்தனைக் காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டவள்.. அதில் சித்தார்த்தனின் மனதிலிருந்த ஆறாத மனரணம் ஆறி விட்டது..

குளிர் மழையில் விறைத்துப் போயிருந்தவளைச் சித்தார்த்தன் தூக்கிக் கொண்டு வந்தபோது

நன்றாக இருந்தவள்.. அரண்மனைக்குள் வந்ததும் குளிர் காய்ச்சலில் விழுந்த விட்டாள்.. ஜன்னியில் அரற்றிக் கொண்டிருந்தவளின் மீது விசாகாவும், ஆதவனும் குற்றப் பத்திரிக்கை வாசித்துக் கொண்டிருக்க.. சித்தார்த்தன் எதையும் கண்டு கொள்ளாமல் மருத்துவர்களை அரண்மனைக்கே வரவழைத்த வேகத்தில் கங்காதரன் யோசிக்க ஆரம்பித்தார்.. இதுபோன்ற கவனிப்பு மாறனிடமிருந்து விசாகாவிற்குக் கிடைத்ததில்லை.. ஏன்.. ஆதித்தனும் மாறனின் பிம்பமாக இருந்தான்.. காய்ச்சல் வேகத்தில் கண் திறக்காமல் கிடந்த மகளிடம் தங்கை காட்டிய துவேசம் அவரை பாதித்தது.. அவரின் கோபத்தையும், ஆட்சேபனையையும் பொருட்படுத்தாமல் சித்தார்த்தன் ப்ரீதியின் பக்கத்திலேயே இரவு முழுவதும் கண்விழித்து உட்கார்ந்திருந்தது அவரை யோசிக்க வைத்தது.. ப்ரீதி குணமானதும் சித்தார்த்தன் தொண்டைமானை அழைத்துக் கொண்டு வந்து கங்காதரனிடம் பெண் கேட்க வைத்தான்..

"அன்றைக்கு என் மகள் செய்த தவறை என் பேரனும் செய்கிறான்.. தடுக்க முடியலை.. என்ன ஒன்று.. என் பெண் தவறான ஒருத்தனை தன் வாழ்க்கைத் துணையா தேர்ந்தெடுத்துட்டா.. என் பேரன் அப்படியில்லை.. சிறப்பான

ஒரு பெண்ணை தன் வாழ்க்கைத் துணையா தேர்ந்தெடுத்திருக்கிறான்.. நானே சல்லடை போட்டுத் தேடினாலும்.. என் பேரன் மீது இவ்வளவு பிரியத்தைக் காண்பிக்கிற பெண்ணைத் தேர்ந்தெடுத்திருக்க முடியாது.. உங்க பெண்ணை என் பேரனுக்குக் கொடுங்க.. வாய் வார்த்தைக்காக இல்லாமல் நிஜமாகவே அவள் இந்த அரண்மனையின் மகாராணியாக இருப்பாள்.. என்ன சொல்கிறீங்க..?"

கங்காதரன் என்ன சொல்வார்..? தொண்டைமான் பேச்சை ஆரம்பித்த விதம் தலைக்கனமானதாக இருந்தாலும்.. அவர் பேச்சை முடித்த விதம் அருமையானதாக இருந்தது.. ப்ரீதி சித்தார்த்தனின் மீது உயிரையே வைத்திருக்கும் போது அவர் மறுக்க முடியுமா..?

"அதற்கென்னங்க.. கொல்கத்தாவிலிருந்து என் வொய்பையும் மகனையும் நேரே இங்கே வந்து விடச் சொல்கிறேன்.. நீங்க குறிக்கும் முகூர்த்தத்தில் கல்யாணம் நடக்கட்டும்.." என்று சொல்லி விட்டார்..

ஆதவனால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.. கங்காதரன் சித்தார்த்தனுக்குப் பெண் கொடுக்க மறுத்து விடுவார் என்று வெகு உறுதியாக அவன் நம்பியிருந்தான்.. மகளின் விருப்பம்.. அது இது என்று ஆதவனுக்கு வேண்டுமானால் மறுப்புச் சொல்லலாம்.. ஆனால் நிச்சயமாக சித்தார்த்தனுக்குச் சம்மதம் சொல்ல மாட்டார் என்று நினைத்திருந்தான்.. அவனது நம்பிக்கையிலும், நினைவிலும் மண் விழுந்து விட்டது.. கங்காதரன் மகளை சித்தார்த்தனுக்கு மணம் முடித்து வைக்கக் கிளம்பி விட்டார்.. இந்த படுதோல்வியை ஆதவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை..

"அம்மா.."

விசாகாவை முடுக்கி விட்டான்.. அவள் கண்களில் அணை கட்டியிருந்த கண்ணீரை திறந்து விட்டு ஜலதரங்க கச்சேரியை நடத்தினாள்.. விக்கி விக்கி அவள் அழுது நினைவுபடுத்திய பாசமலர் கதைகளை புறம் தள்ளிய

கங்காதரன் அவரது முடிவில் எவ்வித மாற்றமுமில்லை என்று அறிவித்து விட்டார்..

அதற்குப் பின்னால் நடந்ததுதான் நன்றி கெட்டதனத்தின் உச்சகட்டம்.. திருமணத்தில் தானும், தன் பிள்ளைகளும் கலந்து கொள்ள மாட்டோம் என்று விசாகா அறிவித்து விட்டாள்.. மாறன் கலந்து கொள்வது அவரது விருப்பம் என்று சொல்லி விட்டாள்..

"தேவையில்லை.." ஒற்றை வார்த்தையில் அவரை ஒதுக்கி வைத்து விட்டான் சித்தார்த்தன்..

"என் அம்மாவும், பாட்டியுமே இல்லை.. மத்தவங்க இருந்தா என்ன.. போனால் என்ன.. என் கல்யாணத்தில் பெத்தவங்க நிற்க வேண்டிய இடத்தில் என்னோட ஒன்று விட்ட சித்தப்பாவும், சித்தியும் நிற்பாங்க.. நாத்தனார் முடிச்சை அவங்களோட பெண் போடுவா.."

"இல்லை மாப்பிள்ளை.."

சித்தார்த்தனை முதல் முறையாக 'மாப்பிள்ளை' என்று உரிமையுடன் அழைத்தார் கங்காதரன்.. அதில் சித்தார்த்தனின் விழிகள் மின்னின.. ப்ரீதி ஆனந்தப் பரவசப்பட்டுப் போனாள்..

"உங்க சித்தப்பாவும், சித்தியும் பெத்தவங்களா கல்யாணத்தில் நிற்கட்டும்.. அதில் எனக்கு ஆட்சேபணையில்லை.. என் தங்கையும் அவளோட கணவரும் நின்றா உங்க அம்மாவின் ஆத்மா சாந்தியடையாது.. ஆனா.. நாத்தனார் முடிச்சை ஆர்த்திதான் போடனும்.. அவ என் வீட்டுக்கு மருமகளாய் வரப் போகிறவ.. ப்ரீதியும், அவளும் ஒருவர் முகத்தில் ஒருவர் விழித்துத்தான் ஆகனும்.. பிரசாத்தை கல்யாணம் பண்ணிக்கனும்ங்கிறனும் என்கிற எண்ணமிருந்தா ஆர்த்தி கல்யாணத்தில் கலந்துக்கிட்டு நாத்தனார் முடிச்சைப் போடட்டும்.. இல்லை.. அம்மா, அண்ணன் பேச்சைக் கேட்டுக்கிட்டு தள்ளி நிற்கிறதா இருந்தா பிரசாத்தை மறந்து விடட்டும்.." கங்காதரன் உறுதிபட தெரிவித்து விட்டார்..

"பிரசாத் இல்லைன்னா என்ன..? உனக்கு அவனைவிட பெட்டரா ஆயிரம் மாப்பிள்ளைகளைப் பார்ப்பேன்.. நீ கை காட்டு.. நான் உன் கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன்.." ஆதவன் குதித்தான்..

"எப்படி நடத்தி வைப்ப அண்ணா..? சித்து அண்ணன் பணத்திலதான நடத்தி வைப்ப.." நிதானமாக ஆர்த்தி கேட்டபோது ஆதவனுக்கு முகத்தை எங்கே வைத்துக் கொள்வது என்று தெரியவில்லை..

'சபாஷ் ஆர்த்தி..' ப்ரீதிக்கு கைதட்ட வேண்டும் போல இருந்தது..

அவளது நியாயவாதியான தோழி மீண்டு விட்டாள்.. சித்தார்த்தனிடம் பாரபட்சம் காட்டிய ஆர்த்தி நேர்வழிக்குத் திரும்பி விட்டாள்.. ப்ரீதி ஆர்த்தியைக் கட்டிக் கொண்டாள்..

"நீ என் தங்கை ஆர்த்தி.."

"சித்து அண்ணாவுக்கும் நான் தங்கை.. அதை மறந்து விட்டாயா..?" ஆர்த்தியும் நினைவுறுத்தினாள்..

"நம்மை மனிதர்களாகவே இவன் நினைத்ததில்லை.."

"அதை நாம் கண்டு கொண்டதே இல்லை.. அண்ணாவோட செல்வத்தில் வாழ்ந்துக்கிட்டு இருக்கோம்.. நீயும் நானும் உடுத்திக்கிட்டு இருக்கிற டிரஸ்.. சாப்பிட்ட, சாப்பிடும் சாப்பாடு.. இருக்கும் அரண்மனை.. படித்த படிப்பு.. ஆளுக்கொரு கார்.. உன் பெயரிலும், என் பெயரிலும், ஏன் அம்மா பெயரில் கூட வாங்கப் பட்டிருக்கிற சொத்துக்கள்.. நீ தொழில் தொடங்கப் போகிறதுக்கான பணம்.. என் கல்யாணத்துக்கான தாய் வீட்டுச் சீதனம்.. இத்தனையும் அண்ணன் நமக்குக் கொடுத்தது.. இதையெல்லாம் எந்த உரிமையில் அனுபவித்துக்கிட்டு இருக்கோம் அண்ணா..? எனக்குத்தான் விவரம் தெரியாது.. எட்டு வயது குழந்தை.. உனக்கு பதினைந்து வயது.. இங்கே வர மாட்டேன்னு நீ சொல்லியிருக்கலாமே.. என்னையும் கைபிடியில் நிறுத்தியிருக்கலாமே.. நாம கான வயலுக்கு வராமல் பூனாவிலேயே இருந்திருந்தால் மாமா நம்மை வளர்க்க மாட்டேன்னு சொல்லியிருப்பாரா..? ரோசக்காரன்தானே நீ..? ஏன் வந்த..? இதெல்லாம் நம் அப்பாவோட சொத்து

சுகமில்லைன்னு தெரிந்தும் எந்த உரிமையில் ராஜ வாழ்க்கை வாழ ஆரம்பித்த..?"

ஆர்த்தியின் கேள்விகளில் முகம் சிறுத்துப் போன ஆதித்தன் பிரசாத்தின் மீது இருக்கும் மோகம் ஆர்த்தியின் கண்களை மறைக்கிறது.. பெற்ற தாயையும், உடன் பிறந்த அண்ணனையும் அவமானப்படுத்தத் துணிந்து விட்டாள் என்று ஆர்த்தியைத் தூற்றினான்.. விசாகா மகளுக்கு சாபங்களை அள்ளி வழங்கினாள்.. எத்தனை துவேசத்தை மனதில் வைத்துக் கொண்டு சித்தார்த்தனின் அரண்மனையில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்திருக்கிறாள் என்பதில் ப்ரீதிக்கு அருவெறுப்பாக இருந்தது.. அவள் நேசித்த அத்தையா இவள்..? பிரியத்தைக் கொட்டிய அத்தையா இவள்..? கள்ளம் கபடமில்லாத.. சூது வாது தெரியாத பச்சை மண் என்று தங்கையைப் பற்றிச் சொல்லி கங்காதரன் கண் கலங்குவாரே.. அந்த மாசில்லாத மாணிக்கமா இவள்..?

சித்தார்த்தனின் திருமண நிகழ்வுகளில் பங்கெடுத்துக் கொள்ள மாட்டோம் என்று புறக்கணித்து விசாகாவும், ஆதவனும் பெங்களூருக்குக் கிளம்பி விட்டார்கள்.. ஆதவன் பூனாவில் ஆரம்பிப்பதாக இருந்த கம்பெனியை பெங்களூரில் ஆரம்பிக்கப் போகிறானாம்.. அதற்காக ஒரு வாரத்துக்கு முன்புதான் கம்பெனிக்கான கட்டிடத்தையும்.. ஒர் பங்களாவையும் விலைபேசி முடித்துப் பத்திரப் பதிவு செய்திருக்கிறானாம்.. என்னவோ தன் வீட்டுப் பணம்

போல கெத்தாக அவன் முகத்தை வைத்துக் கொண்ட பேசியதில்..

"எவர் வீட்டுப் பணம்..?" என்று கேட்டு விட்டாள் ஆர்த்தி..

"விடு ஆர்த்தி.." சித்தார்த்தன் தடுத்து விட்டான்..

"இல்லை அண்ணா.. இந்த அரண்மனைக்குள் ரணகளம் நடந்துக்கிட்டு இருக்கு.. ப்ரீதி வந்த நாள் முதல்.. இந்த நாள் வரை தினமும் போராட்டத்தை உண்டு பண்ணிக்கிட்டு இருக்கான் இவன்.. இந்தப் பக்கம் உங்களுக்கு எதிரா உங்க அரண்மனைக்குள்ளேயே சூழ்ச்சி, போராட்டம்.. இன்னொரு பக்கம் கோடிக்கணக்கில் உங்களிடமே பணம் வாங்கி

இவன் பெயரில் பெங்களூரில் சொத்துக்களை வாங்கிக் கொள்வது.. என்னவொரு நன்றி கெட்டத்தனம்..!"

நீ சொன்னால் சொல்லிக்கொள்.. எனக்கொன்று மில்லை என்று ஆதவனும், விசாகாவும் பெங்களூருக்கு மூட்டை கட்டி விட்டார்கள்.. இனி கானவயல் அரண்மனைக்கும் அவர்களுக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை என்று அவள் சொன்னபோது ஆர்த்தி கேலியாக சிரித்தாள்..

"வாங்க வேண்டியதையெல்லாம் வாங்கிக்கிட்ட பின்னால் இந்த அரண்மனையில் உங்களுக்கென்னம்மா வேலை..?"

விசாகா மகளை முறைத்தாள்.. மாறன் எப்போதும் போல விசாகாவைப் பின்தொடர்ந்தார்.. அதில் விசாகா ஓர் வெற்றிப் பார்வையை சித்தார்த்தனின் மீது செழுத்தினாள்.. அதைக் கவனித்துப் பல்லைக் கடித்த ப்ரீதி.. சித்தார்த்தனுடன் ஒட்டி நின்று அவனது கரத்தை வளைத்துத் தோளில் தலை சாய்த்தாள்.. இப்போது சித்தார்த்தன் ஆதவனை ஓர் பார்வை பார்த்தான்.. ஆதவனின் முகம் விழுந்து விட்டது.. விசாகாவிற்கு முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்வது என்றே தெரியவில்லை..

பெற்றவர்களும்.. கூடப் பிறந்தவனும் செய்த நன்றி கெட்டதனத்திற்கு ஈடு செய்வதைப் போல ஆர்த்தி அரண்மனையிலேயே இருந்தாள்.. திருமணம் முடிந்ததும் பெங்களூருக்குப் போய் விடுவாளா என்ற கேள்விக்கு 'இல்லை' என்று தலையசைத்தாள்..

"நானை வளர்ந்ததும், படித்ததும் சித்தார்த்தன் அண்ணாவின் பணத்தில் தான்.. இருந்ததும் இருப்பதும் அவருடைய அரண்மனையில்தான்.. மாற்றாந்தாயின் மகள்தான் நான்.. வேறு வேறு தாயின் வயிற்றில் பிறந்தாலும் மாறனின் பிள்ளைகள்தானே நாங்கள்.. பெங்களூருக்குப் போவேன்.. விருந்தாளியாக.. எனக்குத் தாய்வீடு கானவயல் அரண்மனைதான்.. தாய், தகப்பன்.. ப்ரீதியும் சித்தார்த்தன் அண்ணாவும்தான்.."

ஆர்த்தி தெளிவாகச் சொல்லி விட்டாள்... அவள் எங்கிருந்தாலும் அவளுக்குச் செய்ய வேண்டிய

சீர்வரிசையை சித்தார்த்தன் செய்வான் என்று அவளுக்குத் தெரியும்.. ஆதவனுக்குக் கொடுத்ததைப் போல அவள் பெயரிலும் சொத்துக்களை வாங்கிக் கொடுப்பான் என்றும் அவளுக்குத் தெரியும்.. ஏற்கனெவே அவள் பெயரில் சொத்துக்களை வாங்கிக் கொடுத்திருப்பவன்தானே..

இருந்தும் ஆர்த்தி கானவயலில் தேங்கி நின்றாள்.. மாற்றாந்தாயின் மகனாக இருந்தாலும்.. வெறுப்புடன் ஒதுங்கியிருந்தாலும்.. தன் தகப்பனுக்குப் பிறந்து விட்டாள் என்பதற்காக தமையனின் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் தன் செல்வத்திலிருந்து சிறிதளவைக் கொடுத்த நன்றிக் கடனுக்காக கடைசிவரை அவன் தரும் நிழல் மட்டுமே தன் தாய்வீடு என்று நின்று விட்டாள்..

சித்தார்த்தனின் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது.. ஜெய்ப்பூர் ராஜ வம்சத்தினர் சாருலதாதேவியின் தாய் தந்த சீதனமாக வைரங்களை பரிசளித்துத் திருமணத்தை நடத்திக் கொடுக்க வந்து நின்றார்கள்.. ஆதவனுக்குப் பெண் கொடுக்க முடியவில்லையே என்ற வருத்தம் கங்காதரனின் மனதில் ஓர் ஓரமாக இருந்தது.. பார்கவிக்கும், பிரசாத்திற்கும் அந்த துளியளவு எண்ணம்

கூட இல்லை.. சித்தார்த்தனை அவர்களுக்கே மிகவும் பிடித்திருந்தது..

தேநிலவிற்குக் கிளம்புவதற்கு முன்னால் ஆர்த்தி, பிரசாத்தின் திருமணத்தை நடத்தி வைத்து விட்டான் சித்தார்த்தன்..

"கல்யாண வயசில் தங்கை இருக்கிறப்ப நான் ஹனிமூன் கொண்டாடக் கிளம்பிப் போனால் நன்றாகத்தான் இருக்கும்.." என்றான்..

ஆதவன் இதைச் சொல்வானா என்ற நினைவில்..

"அண்ணா.." என்று அவன் பாதம் பணிந்தாள் ஆர்த்தி.

தடுத்துத் தூக்கித் தன் தோளில் சாய்த்துக் கொண்டவனின் மனதில் பாசம் கொப்பளித்தது.. அத்தனை காலமாக அந்த அரண்மனையில்தான் ஆர்த்தி வளர்ந்தாள்.. 'அண்ணா' என்று பாசமாக அழைத்ததில்லை..

'இவ வந்தா.. என் வறண்டு கிடந்த வாழ்வில் பாச நீருற்றிப் பயிராக்கி விட்டுட்டா..' ப்ரீதியை காதலுடன் பார்த்தான்..

பிரசாந்தையும், ஆர்த்தியையும் சுவிட்சர்லாந்திற்கு தேநிலவு கொண்டாட அனுப்பி வைத்து விட்டு.. ப்ரீதியிடம்..

"இப்பச் சொல்லுடி.. நாம ஹனிமூனைக் கொண்டாட எங்கே போகலாம்..? வெர்ல்டு டூர் போகலாமா..?" என்று காதலுடன் கேட்டான்..

ப்ரீதி அவனை நெருங்கி அப்பிக் கொண்டு அவன் விரலோடு விரல் பிணைத்தாள்..

"நமக்குக் கல்யாணமானவுடன் அடுத்த முகூர்த்தத்திலேயே அண்ணா, ஆர்த்திக்குக் கல்யாணம் பிக்ஸ் பண்ணிட்டிங்க.. இருபது நாளாச்சு.. இன்னும் பத்து நாள் இங்கேயே சுற்றி வரலாம்.. அதுக்கப்புறம் உலகத்தைச் சுற்றப் போகலாம்.."

"ஏண்டி..?"

"இந்தக் காட்டில்தான் உங்களை முதன் முதலா பார்த்தேன்.. இந்தக் காடுதான் உங்களையும் என்னையும் சேர்த்து வைத்தது.. உரிமையில்லாதவளா உங்களுடன் சுற்றி வந்த இந்தக் காட்டை.. உரிமையுள்ளவளா... உங்க வொஃய்பா உங்களுடன் சுற்றிப் பார்க்கனும்னு ஆசைப்படறேன் சித்து.."

அவளது விருப்பப்படி அவர்கள் ஊரைச் சுற்றி வந்தார்க்ள.. அதன்பின் உலகைச் சுற்றி வரக் கிளம்பிய போது மலைப்பாதையின் சரிவில் தெரிந்த கானகத்தை அவள் பார்த்தாள்.. அது மரங்களின் கிளைகளை அசைத்து வாழ்த்துச் சொல்வதைப் போல இருந்தது..

ஆரண்யம்தான் எவ்வளவு அழகானது..! அருவிகளையும், ஆறுகளையும் உள்ளடக்கியது.. பறவைகளுக்கும்.. விலங்குகளுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் அடைக்கலம் கொடுப்பது.. நம் வாழ்வும் ஓர்வகையில் ஆரண்யம்தான்.. ரசிக்கத் தெரிந்தால்.. நம் வாழ்வு இனிக்கும்..

- முற்றும் -